*கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!*

# இராப்போஜனம்

**மலவிளை**
**ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை**
**வெளியீடு**

**இராப்போஜனம் குறித்ததான இவ் அரிய புத்தகம் உங்களுக்கு மிக ஆசீர்வாதமாக அமைந்து தேவனுடைய ராஜ்யமாகிய பரலோகராஜ்யம் செல்ல ஏற்றதாக அமைவதாக.**

**Copyright ©** ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை
தலைமை இடம் : மலவிளை
**ADHI PENTHEC0STHE SATHYA SABHAI**
**Headquarters : Malavilai**
**BEGINNING PENTECOSTAL TRUTH CHURCH**
**Headquarters : Malavilai**

**Address :**

Malavilai Jeba Veedu
House of Prayer - Malavilai
Adhi Penthecosthe Sathya Sabhai
Beginning Pentecostal Truth Church
Adhi Penthecosthe Sathya Sabhai Malavilai Salai
Cheruppalur P.O., PIN - 629 161
Kanniyakumari District, Tamil Nadu, India.

**Edition : 2024**
**BPTCBN 2024 - 01**

Websites : www.bptchurch.org
E-mail : spiritual@bptchurch.org
Youtube : BPT Church, Malavilai OFFICIAL
Facebook : BPT CHURCH, MALAVILAI
Contact No : +91 9443016450

## இப் புத்தகத்தைப் பற்றி . . .

“இராப்போஜனப் பண்டிகை” என்பது கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டாடுகிற, கிறிஸ்தவ பண்டிகைகள் எல்லாவற்றை விட மேலானதும், பாக்கியமான ஆசீர்வாதத்திற்கேற்றதுமான ஒரு பண்டிகை ஆகும். மனந்திரும்பி பாவத்திலிருந்து விடுதலையாகிய பாவமன்னிப்பையும், இரட்சிப்பையும், பரிசுத்தமாகுதலையும் பெற்று, பிதா, குமாரன், பரிசுத்தஆவி நாமத்தில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்ற சபையாரே இதை ஆசரிக்கத் தகுதியானவர்கள்.

இந்த இராப்போஜனத்தைக் கர்த்தர் கற்பித்த மாதிரியின்படியேயும், வேதவசன ஆதாரங்களின்படியேயும் ஆசரிப்பது மகா ஆசீர்வாதத்திற்கேற்றதாகும். மற்றபடி பெயருக்காக மட்டும், இராப்போஜனம் என்றோ, திருவிருந்து என்றோ ஒன்றை வைத்துக்கொண்டு, வேதசத்தியத்திற்கு மாறாக ஆசரிப்பது பிரயோஜனமில்லாததாகும்.

இந்தக் கடைசிநாட்களில் தேவபக்தியை ஆதாயத் தொழிலென்று எண்ணுகிற அநேகரால், கர்த்தருடைய வேதசத்தியத்தின்படியான காரியங்கள் புரட்டப்பட்டு, தங்கள் சுய இச்சைகளுக்கேற்றபடி மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த அசத்தியமான காரியங்கள் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, யாவரும் வேதசத்தியத்தை அறிந்துகொள்ளும் வகையில் இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

உண்மையான “இராப்போஜன பண்டிகை” குறித்து எழுதப்பட்டுள்ள ஆழமான சத்தியங்கள் நிறைந்த அற்புதக் கருத்துகள், ஆவிக்குரிய போஜனமாக, ஆத்துமாவுக்கு விருந்தளித்து, பரலோகராஜ்யத்தின் சந்தோஷத்தை இந்த உலகத்திலேயே அநுபவிக்க வைக்கிறது.

யாவரும் படித்துப் பயனடைவீர்! இராப்போஜன பண்டிகையை உண்மையாய் ஆசரித்து பரலோக பாக்கியம் பெறுவீர்!

*கர்த்தருக்கு ஸ்தோத்திரம் !*

## பொருளடக்கம்


முகவுரை VII

**1. இராப்போஜனம்** 1

1. மனுஷர்கள் கர்த்தரோடு ஐக்கியப்பட வேண்டியதின் அவசியம். 1

2. மனுஷர்கள் கர்த்தரோடு ஐக்கியமாகும்படியான அழைப்பு. 2

3. மனுஷர்கள் தேவனோடு பூரணமான ஐக்கிய முடையவர்களாய் காணப்பட தேவையானவை. 2

3.1. இயேசுகிறிஸ்துவின் ஜீவனோடுள்ள ஐக்கியம். 2

3.2. இயேசுகிறிஸ்துவின் ஆவியோடுள்ள ஐக்கியம். 3

3.3. இயேசுகிறிஸ்துவின் ஆத்துமாவோடுள்ள ஐக்கியம். 3

3.4. இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமுள்ள ஐக்கியம். 4

4. ஆதி சபையார் உறுதியாய் தரித்திருந்த அநுபவங்கள். 9

4.1. அப்போஸ்தலருடைய உபதேசம். 9

4.2. அப்போஸ்தலருடைய உபதேசத்தின்படி சபையாரில் காணப்பட வேண்டியதான குணாதிசயங்கள். 13

4.3. அந்நியோந்நிய ஐக்கியம் 17

4.4. புருஷன் மனைவி ஐக்கியம். 19

4.5. ஜெபம்பண்ணுவதில் உறுதியாய் தரித்திருப்பது. 20

4.6. அப்பம் பிட்குதல் 22

**2. இராப்போஜனம் பண்ணுகிறவர்களுக்கு தேவையான ஆவிக்குரிய அநுபவங்கள்**

1. பூரணமான விசுவாசம். 24

1.1. நோவாவின் விசுவாசம். 25

| | | |
|---|---|---|
| 1.2. | விசுவாசத்தை விட்டு வழிவிலக செய்யும் உலகசிநேகம். | 27 |
| 1.3. | கண்டு விசுவாசிப்பது விசுவாசம் அல்ல. | 30 |
| 1.4. | சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் விசுவாசம். | 33 |
| 1.5. | தானியேலின் விசுவாசம். | 34 |
| 1.6. | ஆபிரகாம் மற்றும் எசேக்கியா ராஜாவின் விசுவாசம்; | 36 |
| 1.7. | யோபுவின் விசுவாசம். | 37 |
| 2. பூரணமான மனத்தாழ்மை. | | 43 |
| 2.1. | இயேசுகிறிஸ்துவின் தாழ்மை. | 43 |
| 2.2. | பணிந்த சிந்தைக்கு மாதிரியான உண்மையான ஒரு சம்பவம். | 44 |
| 2.3. | கர்த்தருடைய அப்போஸ்தலர்களின் தாழ்மை. | 45 |
| 2.4. | ஆயக்காரனின் தாழ்மை. | 46 |
| 2.5. | தாழ்மைக்கு எடுத்துக்காட்டான ஒரு சரித்திரம். | 47 |
| 2.6. | யோனத்தானின் தாழ்மை. | 48 |
| 2.7. | அப்போஸ்தலனாகிய பேதுருவின் மனத்தாழ்மை. | 48 |
| 2.8. | தங்களைத் தாழ்த்தினதினால் தப்புவிக்கப் பட்டவர்கள். | 49 |
| 2.9. | மனத்தாழ்மைக்கு மாறான பெருமையான எண்ணத்தின் விளைவுகள். | 52 |
| 2.10. | அகந்தையினால் வந்த விளைவு. | 53 |
| 3. பூரணமான பரிசுத்தம். | | 54 |
| 3.1. | ஆசாரியன்(தேவ ஊழியககாரன்) எப்படி இருக்க வேண்டும்? | 57 |
| 3.2. | பரிசுத்தவான் எப்படி காணப்பட வேண்டும்? | 59 |
| 3.3. | பரிசுத்தமாகுதலைப் பெற்றுக்கொள்வது எப்படி? | 63 |
| 3.4. | பரிசுத்தத்தை நாம் ஏன் செந்தமாக்கிக் கொள்ள வேண்டும்? | 65 |

4. பூரணமான கீழ்ப்படிதல். 66

4.1. கீழ்ப்படிதல் என்றால் என்ன? 67

4.2. ஆபிரகாமின் கீழ்ப்படிதல். 68

4.3. மோசேயின் கீழ்ப்படிதல். 68

4.4. யோசுவாவின் கீழ்ப்படிதல். 70

4.5. எசேக்கியா ராஜாவின் கீழ்ப்படிதல். 70

4.6. பவுல் அப்போஸ்தலரின் கீழ்ப்படிதல். 72

4.7. நோவாவின் கீழ்ப்படிதல். 73

4.8. எதற்காக நாம் கீழ்ப்படிய வேண்டும். 76

4.9. கீழ்ப்படிதலுக்கான வழிகள். 78

4.10. நாம் ஏன் கீழ்ப்படிய வேண்டும். 79

4.11. கீழ்ப்படியாமையின் விளைவுகள். 80

5. பூரணமான உண்மையுடையவர்கள். 82

5.1. யாரால் உண்மையாயிருக்க முடியும்? 82

5.2. தேவனுடைய பார்வையில் ஏன் உண்மையுள்ள வர்களாயிருக்கவேண்டும்? 85

5.3. என்னென்ன காரியங்களில் உண்மையுள்ளவர் களாயிருக்கவேண்டும்? 90

5.4. நாம் எப்படி உண்மையுள்ளவர்களாயிருக்க முடியும்? 95

6. பூரணமான அன்பு. 102

6.1. நாம் தேவனை அன்பு செய்வது எப்படி? 105

6.2. நன்றியுணர்வோடு தேவனை ஸ்தோத்திரித்தல். 106

6.3. காலையில் தேவனுடைய பிரசன்னத்தை தேடுதல். 107

6.4. வேதத்தை தியானித்தல். 108

7. பூரணமான ஐக்கியம். 118

7.1. தேவனோடு பூரணமான ஐக்கியம். 119

7.2. மனுஷர்கள் தேவனோடு ஐக்கியமாயிருப்ப தெப்படி? 120

7.3. கர்த்தருடைய ஊழியக்காரர்களோடு பூரணமான ஐக்கியம். 121

7.4. ஒருவரோடொருவர் பூரணமான ஐக்கியம். 125

7.5. பூரணமான ஐக்கியமுடையவர்களாய் காணப்பட அவசியமானவை. 129

7.6. ஐக்கியமாய் ஜீவிப்பதற்கு தடையானவை. 133

7.7. பரிசுத்தவான்கள் யாரோடு ஐக்கியமாயிருக்கக் கூடாது. 135

8. பூரணமான தேவ சித்தம். 137

8.1. தேவசித்தத்தை அறிந்து கொள்வது எப்படி? 147

8.2. தேவசித்தத்தை நிறைவேற்றுவது எப்படி? 148

8.3. கிறிஸ்தவர்களாகிய நம்மைக் குறித்த தேவ சித்தம் என்ன? 151

8.4. தேவசித்தம் செய்கிறதினால் வரும் ஆசீர்வாதங்கள். 153

9. பூரணமான ஜெப ஜீவியம். 154

9.1. தேவன் எப்படிப்பட்டவர்? 155

9.2. தேவனிடம் எப்படி கேட்க வேண்டும்? 156

9.3. நம்முடைய ஜெபம் கேட்கப்படும்படியான நிபந்தனைகள். 158

9.4. ஜெபத்திற்கு தடை வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்? 162

9.5. கர்த்தரிடம் வருந்திக் கேட்பது. 162

9.6. கர்த்தரிடம் போராடி ஜெபம்பண்ணுவது. 164

9.7. பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணுவது. 165

9.8. நாம் ஏன் முழங்காலில் நின்று ஜெபம்பண்ண வேண்டும்? 165

9.9. அதிகாலை ஜெபம். 167

10. பூரணமான நற்சாட்சியின் ஜீவியம். 169
10.1. இயேசுகிறிஸ்துவைக் குறித்த நற்சாட்சி. 170
10.2. யோபுவைக் குறித்த நற்சாட்சி. 172
10.3. ரூத்தைக் குறித்த நற்சாட்சி. 173
10.4. தீமோத்தேயுவைக் குறித்த நற்சாட்சி. 174
10.5. தேமேத்திரியுவைக் குறித்த நற்சாட்சி. 175
10.6. எப்பாப்பிராவைக் குறித்த நற்சாட்சி. 176
10.7. கொர்நேலியுவைக் குறித்த நற்சாட்சி. 177
10.8. நற்சாட்சி உடையவர்களாய் காணப்பட எப்படி ஜீவிக்கவேண்டும்? 178
10.9. நற்சாட்சியின் ஜீவியம் ஏன் நமக்கு தேவை? 191
**3. புதிய ஏற்பாடு பஸ்கா மற்றும் பழைய ஏற்பாடு பஸ்கா** 195
1. பழைய ஏற்பாட்டு பஸ்கா 197
1.1. இஸ்ரவேலர் பஸ்காவை புசித்த விதம். 199
1.2 பஸ்காவை ஆசரித்ததின் மூலம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு உண்டான ஐந்து வகையான ஆசீர்வாதங்கள். 204
2. புதிய ஏற்பாட்டு பஸ்காவாகிய இராப்போஜனப் பண்டிகை. 205
2.1. இராப்போஜனம் பண்ணுகிறதினால் உண்டாகும் ஐந்து வகையான ஆசீர்வாதங்கள். 206
3. இராப்போஜனப் பண்டிகை எப்படி கொண்டாட வேண்டும்? 208
3.1. பாதம் கழுவுதல். 209
3.2. இராப்போஜனத்தை ஆசரிக்க வேண்டிய விதம். 210
3.3. யார் இந்த இராப்போஜனத்தை ஆசரிக்கலாம்? 212
3.4. இராப்போஜனம் பண்ணுகிறவர்களுக்குத் தேவையான விருத்தசேதனங்கள். 213
3.5. இராப்போஜனப் பண்டிகையை இரவில் ஆசரிக்க வேண்டும். 216
3.6. யாரை நினைவுகூருவதாக இந்த பண்டிகை ஆசரிக்கப்படுகிறது. 219

**4. இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியில்லாதவர்கள்.**

1. அந்நிய புத்திரன். 221
2. கூலியாள். 221
3. விருத்தசேதனமில்லாதவர்கள். 222

**5. இராப்போஜனத்தை அசட்டைப்பண்ணாதீர்கள்** 224

**6. தசமபாகம் காணிக்கை செலுத்துவது.** 229

1. தசமபாகம் செலுத்தாமல் இருப்பது தேவனை வஞ்சிப்பது. 230
2. தசமபாகம் செலுத்தியதால் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு சாட்சி. 231
3. முதற்பலன்கள் கர்த்தருடையது. 232
4. எசேக்கியா ராஜாவின் காணிக்கை. 234
5. யாருடைய காணிக்கை அங்கிகரிக்கப்படும். 235

*கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!*

**முகவுரை:**

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

உலகத்தில் வாழும் சகல மனுமக்களுடைய இகபர நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும், "இராப்போஜனம்" என்னும் பெயர் கொண்ட இவ் அரிய புத்தகம், கர்த்தருடைய மகா பெரிதான கிருபையினால் எழுதப்பட்டிருக்கிறது.

"இராப்போஜனம்" என்பது மிகவும் விசேஷமான, ஆசீர்வாதத்திற்கேதுவான ஒரு காரியமாகும். இந்தப் புஸ்தகத்தில் உண்மையான இராப்போஜனம் என்றால் என்ன? அந்தப் பண்டிகையை நாம் எப்படி ஆசரிக்கவேண்டும்? அதை ஆசரிக்கத் தகுதியானவர்கள் யார்? அதற்காக என்னென்ன அநுபவங்கள் தேவை? தகுதியான அநுபவத்தோடு இராப்போஜன பண்டிகையை ஆசரிப்பதினால் வரும் ஆசீர்வாதங்கள் என்ன? தகுதியில்லாமல் ஆசரிப்பதினால் வரும் அபாக்கியங்கள் என்ன? அதை எப்போது ஆசரிக்க வேண்டும்?, பழைய ஏற்பாட்டின் பஸ்காவை எப்போது ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார்? அதன்படி இஸ்ரவேல் ஜனங்கள் ஆசரித்ததால் அவர்களுக்கு உண்டான விடுதலைகளும் ஆசீர்வாதங்களும் என்ன? புதிய ஏற்பாட்டின் காலத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இராப்போஜனத்தை எப்போது ஆசரித்தார்? எப்படி எப்படி ஆசரித்தார்? அதன்பின் புதிய ஏற்பாட்டின் காலத்திலுள்ள பிரதானமான ஊழியக்காரராகிய பவுல் அப்போஸ்தலர் எப்போது இராப்போஜனத்தை ஆசரித்தார்? இக்காலத்தில் கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையாராகிய நாங்கள் அதை எப்படி ஆசரிக்கிறோம்? எப்படி ஆசரிப்பதுதான் உண்மையான இராப்போஜனம் ஆகும் என்றதான காரியங்கள், பரிசுத்த வேதாகமத்திலுள்ள வசனங்களின் ஆதாரங்களுடன் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகத்தை வாசிப்போர், கேட்போர் மற்றும் இந்த உண்மையான சத்தியங்களை ஏற்றுக்கொண்டு, இதன்படி நடப்போர் யாவர்மேலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக.

இவண்,<br>
உலகின்கண் வாழும் சகல மனுமக்களின்<br>
சரீர ஆத்மீக சுகநலன்களையும் ஆசீர்வாதங்களையும்<br>
விரும்பும் கர்த்தரின் ஊழியன்.

*கர்த்தருக்கு ஸ்தோத்திரம் !*

# இராப்போஜனம்

இராப்போஜனம் என்பது இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருடைய சபையார் என்ற நிலைமைக்குள் வந்ததான கர்த்தருடைய ஜனங்கள் ஒன்றான மெய் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு ஏக ஐக்கியமான அநுபவத்தோடு ஜீவிக்க வழிவகுக்கும் வகையில் இயேசு இந்த உலகத்தில் வந்து பாடுபட்டு மரிக்கும் முந்தின நாள் இரவு அவரால் ஏற்படுத்தப்பட்ட மகா மகிமையான ஒரு ஏற்பாடாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகா மகிமையான ஜீவனோடும் அவருடைய மகா மகிமையான ஆவியோடும் அவருடைய மகா மகிமையான ஆத்துமாவோடும் ஐக்கியமுடையவர்களாய் காணப்படுகிறதான இரட்சிக்கப்பட்டதான சபையாராகிய தேவனுடைய ஜனங்கள் இந்த இராப்போஜனத்தின் மூலமாக அவருடைய மகா பரிசுத்தமுள்ள மாம்சத்தோடும் அவருடைய மகா பரிசுத்தமுள்ள இரத்தத்தோடுமுள்ள ஐக்கியத்தை அடைந்து அவரோடு ஏக ஐக்கியமான அனுபவத்தை சொந்தமாக்கிக் கொள்கிறார்கள்.

### 1. மனுஷர்கள் கர்த்தரோடு ஐக்கியப்படவேண்டியதன் அவசியம்:

ஆதி மனுஷனாகிய ஆதாமும் ஏவாளும் கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்டபோது, கர்த்தராகிய தேவனோடு ஏக ஐக்கியமான அநுபவத்தோடு காணப்பட்டார்கள். அவரை முகமுகமாய் தரிசித்து அவரோடு உறவாடும் பாக்கியமுடையவர்களாய் காணப்பட்டார்கள். அவர்கள் மீறுதலாகிய பாவத்திற்குட்பட்டு, தெய்வீக ஜீவனை இழந்த போது, கர்த்தராகிய தேவனோடுள்ள ஐக்கியம் அவர்களைவிட்டு எடுபட்டுப்போயிற்று. அவர்கள் நிமித்தமாக அவர்களுடைய பின்சந்ததிகளாகிய சகல ஜனங்களும் தேவனோடுள்ள ஐக்கியம் அற்றவர்களாக, பாவிகளாகவே பிறந்து பாவிகளாகவே வாழ்கிறவர்களாக மாறிப்போனார்கள். மனுஷர்கள் இவ்விதமாகவே காணப்பட்டு தேவனோடு ஐக்கியமற்றவர்களாக தெய்வீக ஆசீர்வாதங்களுக்குத் தூரமானவர்களாகவே காணப்பட்டால் முடிவிலே சாத்தானுக்கும் அவன் தூதர்களுக்குமாய் ஆயத்தப்படுத்தப்

பட்டிருக்கிறதான மிகவும் நிர்ப்பந்தமான நரகமும் நியாயத்தீர்ப்புமே இவர்களுக்கும் பங்காகக் கிடைக்கும். எனவே, இவர்கள் கர்த்தரோடு மறுபடியுமாக ஐக்கியப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## 2. மனுஷர்கள் கர்த்தரோடு ஐக்கியமாகும்படியான அழைப்பு:

கர்த்தராகிய தேவன் மகா பரிசுத்தர்; ஆகையால் பாவியாகிய எந்த மனுஷனும் அவரோடு ஐக்கியமாயிருக்க முடியாது. ஆகவே, நம்மை அவரோடு ஐக்கியப்படுத்தும்படியாக தேவ குமாரனாகிய கிறிஸ்துவாக இந்த உலகத்தில் வந்து, நமக்காக பாடுபட்டு மரித்து, அவரது இரத்தப்புண்ணியத்தினாலே நாம் அவரோடு சேரும் சிலாக்கியத்தை ஏற்படுத்தி, நம்மை அவரோடு ஐக்கியப்படுத்தும்படியாக அழைத்துக்கொண்டே இருக்கிறார். நாம் அவருடைய அழைப்பின் சத்தத்திற்கு செவிகொடுத்து அவரிடம் வருவோமானால் நம்மையும் அவரோடு ஐக்கியப்படுத்துவதற்கு அவர் உண்மையுள்ள தேவனாக இருக்கிறார்.

> *தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். (I கொரிந்தியர் 1 : 9)*

## 3. மனுஷர்கள் தேவனோடு பூரணமான ஐக்கியமுடையவர்களாய் காணப்பட தேவையானவை:

மனுஷர்கள் கர்த்தராகிய தேவனோடு பூரணமான ஐக்கியமுடையவர்களாய் காணப்பட வேண்டுமானால், ஐந்துவிதமான ஐக்கியங்கள் தேவையாகக் காணப்படுகிறது. இவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகா மகிமையான ஜீவனோடும், மகா மகிமையான ஆவியோடும், மகா மகிமையான ஆத்துமாவோடும், அவரது மகா பரிசுத்த மாம்சத்தோடும், மகா பரிசுத்த இரத்தத்தோடும் ஏக ஐக்கியத்தை அடைந்துகொள்ளவேண்டும்.

### 3.1. இயேசுகிறிஸ்துவின் ஜீவனோடுள்ள ஐக்கியம்:

மனுஷர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவனோடு ஐக்கியமாகக் காணப்படவேண்டுமானால் முதலாவது பாவத்திலிருந்து

மனந்திரும்பி பூரணமான விடுதலையின் அநுபவமாகிய இரட்சிப்பின் அநுபவத்தைச் சொந்தமாக்க வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலிருக்கிற நித்தியமான ஜீவனைப் பெற்றுக்கொள்வதால், அவருடைய ஜீவனோடு ஐக்கியமாகும் அநுபவம் உண்டாகிறது.

> *ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். (யோவான் 17 : 3).*

## 3.2. இயேசுகிறிஸ்துவின் ஆவியோடுள்ள ஐக்கியம்:

இரட்சிக்கப்பட்டதான ஜனங்கள் கர்த்தருடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டு, ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ளும்போது, தேவனுக்குள் இருந்த ஆவியே இவர்களுக்குக் கொடுக்கப்பட்டபடியினால், இவர்களுக்குள் இருக்கிற பரிசுத்த ஆவிக்கும் தேவனுக்குள் இருக்கிறதான தேவ ஆவியாகிய பரிசுத்த ஆவியானவருக்கும் ஏகமான ஒரு ஐக்கியம் உண்டாகிறது.

> *மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். (ரோமர் 8 : 14).*

## 3.3. இயேசுகிறிஸ்துவின் ஆத்துமாவோடுள்ள ஐக்கியம்:

மனுஷர்கள், உள்ளான மனுஷன் புறம்பான மனுஷன் என்று இரண்டு ஆளத்துவத்தை உடையவர்கள். உள்ளான மனுஷனாகிய ஆத்துமா பாவத்திலிருந்து பூரணமாய் விடுவிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டு, மரணத்துக்கேதுவான சகல நிலைமையிலிருந்தும் பூரணமான விடுதலையைப் பெற்று, பரிபூரணமான ஜீவனுக்கும் அழியாமைக்கும் ஏதுவான நிலைமையோடு காணப்படும்போது, தேவனுடைய ஆத்துமாவோடு பரிபூரணமான ஐக்கியத்தை அடைந்துகொள்ளுகிறார்கள். இவர்களுக்குள் இருக்கிறதான ஆத்துமாவுக்கும் இயேசுகிறிஸ்துவின் ஆத்துமாவுக்கும் சரியான ஒரு ஐக்கியமுண்டாகிறது.

*எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது.*
*(II கொரிந்தியர் 4 : 16).*

## 3.4. இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமுள்ள ஐக்கியம்:

இன்னும் இவர்கள் இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமுள்ள ஐக்கியத்தையும் அடைந்துகொண்டால் மாத்திரமே அவரோடு பூரணமான ஐக்கியமுடையவர்களாய் காணப்பட முடியும். இவ்விதமான ஐக்கியத்தை இராப்போஜனம்பண்ணுவதன் மூலமாக தேவன் கொடுக்கிறவராக இருக்கிறார்.

*நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.*
*(I கொரிந்தியர் 10 : 16,17).*

ஏராளமான கோதுமை மணிகள் சேர்ந்து ஒரே அப்பமாக மாறுகிறதுபோல ஏராளமான ஜனங்கள் சேர்ந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் திரு சரீரமாக மாறுகிறார்கள். அதுபோல ஏராளமான ஜனங்களாகக் காணப்படுகிற இவர்கள் ஒரே சரீரமாகவும் மாறுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் திரு சரீரத்திற்குத்தான் சபை என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார். (I தெசலோனிக்கேயர் 5 : 24).*

தேவன் நம்மை அழைத்த அழைப்பின்படியே செய்ய வல்லமையும் அதிகாரமுமுடையவராகக் காணப்படுகிறார். ஆகவே பூரணமான கீழ்ப்படிதலோடும், விசுவாசத்தோடும் காணப்பட்டு இயேசு கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றுள்ளதான வாஞ்சையோடு காணப்படுகிறவர்கள் இந்த

பாக்கியமான அநுபவத்தைப் பெற்றுக்கொள்வார்கள், மற்றவர்கள் பெற்றுக்கொள்ளுவதில்லை. இவ்விதமான ஐக்கியமான அநுபவத்தோடு காணப்பட அதற்கேற்ற ஒரு பரிசுத்தத்தையும் அடைந்துகொள்ள வேண்டும்.

> *ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம் வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.*
> *(I பேதுரு 4 : 2).*

மனுஷருடைய இச்சையே பாவத்தை பிறப்பிக்கும். பாவங்களை விட்டு ஓய்ந்து, தேவனுடைய சித்தத்தின்படி பிழைக்கிறவர்கள் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்கமாட்டார்கள். இவ்விதமான அநுபவத்தை அடைந்தவர்களே இந்தப் பரிபூரணமான ஐக்கியத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள பாத்திரவான்களாக, தகுதியுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். இராப்போஜனத்தின் மூலமாக இவ்விதமான ஏகமான ஒரு ஐக்கியம் இவர்களுக்கு கிடைக்கிறது.

இராப்போஜன ஆராதனையின்போது கர்த்தர் அப்பத்தை அவரது பரிசுத்த சரீரமாகவும், இரசத்தை அவரது பரிசுத்த இரத்தமாகவும் மாற்றி ஆசீர்வதித்துக் கொடுக்கிறார். இந்த அப்பம் மெய்யான போஜனமாகும். இந்த ரசம் மெய்யான பானமாகும். மெய்யான போஜனமாகிய கிறிஸ்துவின் மாம்சத்தையும், மெய்யான பானமாகிய கிறிஸ்துவின் இரத்தத்தையும் போஜனபானம் பண்ணுகிறவர்கள் பூரணம் பரிபூரணம் சம்பூரணமான தெய்வீக ஜீவனைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இவர்கள் கடைசி நாளில் கர்த்தரால் எழுப்பப்படுவதற்கேற்ற ஆயத்தத்தை அடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுவதற்கேற்ற பரிசுத்தவான்களாய் காணப்படுகிறார்கள். அபாத்திரமாய் (தகுதி இல்லாமல்) போஜனபானம் பண்ணுகிறவர்கள் கர்த்தருடைய மகா பரிசுத்த சரீரத்தையும், மகா பரிசுத்த இரத்தத்தையும் குறித்து நிதானித்து அறியாததினால் தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்

பண்ணுகிறார்கள். ஆகவே, எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, கர்த்தருக்கேற்ற பரிசுத்தத்தை அடைந்து போஜனபானம் பண்ண வேண்டும். அபாத்திரமாய் (தகுதியில்லாமல்) போஜனபானம் பண்ணினதினால் அநேகர் பலவீனரும், தீரா வியாதியுள்ளவர்களுமாய் மாறினார்கள். அநேகர் நித்திரையும் அடைந்தார்கள்.

> *இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.*
>
> *(I கொரிந்தியர் 11 : 27 - 30).*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கொலைச் செய்யப்படும்படியாக யூதாஸால் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே சீஷருடனே முதலாவதாக பழைய ஏற்பாட்டின் பஸ்காவை நிறைவேற்றி முடித்து, புதிய ஏற்பாட்டின் பஸ்காவாகிய இராப்போஜனத்தை ஸ்தாபித்தார். அப்பொழுது அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிய்த்து, தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் இதை வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். பின்பு அவர் இரசத்தினாலாகிய பாத்திரத்தையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்து: நீங்களெல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது; நீங்கள் இதை பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள். நீங்கள் இந்த அப்பத்தை

புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும்அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்றார். (I கொரிந்தியர் 11 : 23-26).

*ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார். அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான். வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.*

*(யோவான் 6 : 48 - 58).*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து இறங்கிவந்த ஜீவ அப்பம். எல்லா வானங்களுக்கும் மேலான பரிசுத்த வானத்தில்,

தேவலோகத்தில் மகா மகிமையான சிங்காசனத்தில் தேவன் வீற்றிருக்கிறார். அங்கிருந்து ஜீவ அப்பமாக உலகத்தில் வெளிப்பட்டார். உண்மையான இராப்போஜனம் என்றால் அப்பத்தை அவருடைய மகா பரிசுத்தமான மாம்சமாகவும், ரசத்தை அவருடைய மகா பரிசுத்தமான இரத்தமாகவும் மாற்றுகிறார். இக்காலத்திலும் கர்த்தருடைய சபையில் கர்த்தர் அப்படியே செய்கிறார். அவருடைய மாம்சத்தை புசித்து, அவருடைய இரத்தத்தை பானம் பண்ணுகிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டாகிறது.

> *நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10 : 10).*

பரிபூரணமான ஜீவன் கர்த்தருடைய இராப்போஜனத்தினால் உண்டாகிறது. நித்திய ஜீவனின் பரிபூரணம் கிடைக்கிறது. அடுத்தபடியாக, கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன் என்று சொல்லியிருக்கிறார். இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாயிருக் கிறார்கள்.

> *முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். (வெளிப்படுத்தல் 20 : 6).*

முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெற ஏற்ற அனுபவம் இந்த இராப்போஜனத்தினால் உண்டாகிறது. முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கில்லாதவர்கள் இரண்டாம் உயிர்த்தெழுதலில் உயிர்த்தெழுந்து நியாயந்தீர்க்கப்படுவார்கள். ஆயிர வருட அரசாட்சியும், பரலோக ராஜ்ஜியமும் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களுக்குத்தான் சொந்தமானது. இவர்கள் பரலோக ராஜ்யத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட சதாகாலமும் பிழைத்திருப்பார்கள்.

> *என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். (யோவான் 6 : 56).*

தேவனுக்குத் தூரமாய் காணப்பட்ட மனுஷர்களுக்கு இராப்போஜனத்தின் மூலம் தேவனோடு ஐக்கியமான அநுபவம் உண்டாகிறது; இவர்கள் தேவனுக்குள் நிலைத்திருக்கும் அநுபவமும் தேவன் மனுஷர்களுக்குள் நிலைத்திருக்கும் அநுபவமும் உண்டாகிறது. இதன் மூலம் தேவனுக்கும் மனுஷர்களுக்கும் பூரணமான ஒரு ஐக்கியம் உண்டாகிறது.

*வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார். (யோவான் 6 : 58).*

இவர்கள் சதாகாலமும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடுகூட பரலோகத்தில் பிழைத்திருப்பார்கள்.

## 4. ஆதி சபையார் உறுதியாய் தரித்திருந்த அநுபவங்கள்:

*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.*

*(அப்போஸ்தலர் 2 : 42).*

ஆதி சபையார் அப்போஸ்தலருடைய உபதேசம், அந்நியோந்நிய ஐக்கியம், அப்பம் பிட்குதல், ஜெபம்பண்ணுதல் ஆகிய நான்கு காரியங்களில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து சபையார் என்ற நிலைமையில் வருகிறதான இக்காலத்தில் காணப்படுகிறதான ஜனங்களும் இவைகளில் உறுதியாய்த் தரித்திருப்பது அவசியமாய்க் காணப்படுகிறது. அப்போஸ்தலருடைய உபதேசம், அந்நியோந்நிய ஐக்கியம் அதாவது ஒருவரோடொருவர் உள்ள ஐக்கியம்; ஜெபம்பண்ணுதல் ஆகிய மூன்று காரியங்களிலும் உறுதியாய்த் தரித்திருப்பவர்கள் மாத்திரமே அப்பம் பிட்குதலாகிய இராப்போஜனம் பண்ணுவதிலும் உறுதியாய்த் தரித்திருக்க தகுதியானவர்கள்.

### 4.1. அப்போஸ்தலருடைய உபதேசம்:

அப்போஸ்தலருடைய உபதேசம் என்றால் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையிலான சகல காரியங்களும் அடங்கினவைகள்.

பவுல் அப்போஸ்தலரின் நிருபங்களில் பழைய ஏற்பாட்டின் அநேக காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையிலான கர்த்தருடைய வேதம் இரகசியம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

> *இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. (எபேசியர் 3 : 6).*

பழைய ஏற்பாட்டின் காலத்தில் காணப்பட்ட ஜனங்கள் கர்த்தருடைய கட்டளையாகிய எழுத்தின்படி(நியாயப்பிரமாணத்தின்படி) நடந்தார்கள். அக்காலத்தில் அவர்களுக்கு அதுதான் முடியும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வந்து பாடுபட்டு மரிக்கிறதுவரையிலும் அவர்கள் ஆவிக்குரிய பிரமாணமாகிய அந்த இரகசியத்தின்படி நடந்துகொள்ள முடியாது. ஏனென்றால் அவர்கள் மாம்சத்துக்குட்பட்டவர் களாயிருந்தார்கள். அவர்கள் ஆவிக்குட்பட்டவர்களல்ல; இரட்சிக்கப் பட்டவர்களல்ல. இப்பொழுதோ ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையிலான சகல இரகசியங்களையும் தேவன் தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தி அறிவிக்கிறார், கற்றுக்கொடுக்கிறார். அப்போஸ்தலர்கள் என்பவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள். அப்போஸ்தலருடைய உபதேசம் என்றால் மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, இரட்சிப்பு, குணப்படுதல், மறுபிறப்பு. இதுதான் மூல உபதேசம். இதற்கப்புறமாக மறுபடியும் பிறந்தவர்கள் வளரும்படியாக பால், போஜனம், பலமான ஆகாரம், ஆரோக்கியமான உபதேசம் போன்ற ஆகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, இரட்சிப்பு, குணப்படுதல், மறுபிறப்பு என்ற ஐந்து அநுபவங்கள் சேர்ந்ததே இரட்சிப்பு என்னப்படுகிறது. மறுபடியும் பிறந்தவர்கள் வளரும்படியாக, அப்போஸ்தலருடைய உபதேசம் கொடுக்கப்படுகிறது. ஆவிக்குரிய ஜீவியத்தில் குழந்தை என்ற நிலைமையில் உள்ளவர்களுக்கு பால் போன்ற உபதேசமும், ஆவிக்குரிய ஜீவியத்தில் இளமைப்பருவத்தை அடைந்தவர்களுக்கு போஜனமாகிய உபதேசமும், ஆவிக்குரிய ஜீவியத்தில் புருஷன் என்ற அநுபவத்தை அடைந்தவர்களுக்கு பலமான

ஆகாரமாகிய உபதேசமும், பூரணபுருஷனுக்கு ஆரோக்கியமான உபதேசமும் கொடுக்கப்படுகிறது.

*மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. (I கொரிந்தியர் 3 : 1, 2).*

*நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக் கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். (I கொரிந்தியர் 13 : 11).*

ஆதிசபையில் காணப்பட்ட ஊழியக்காரர்கள் மறுபடியும் பிறந்து ஆவிக்குரிய குழந்தையாக இருந்து, பிறகு வளர்ந்து, இளமைப்பருவத்தை அடைந்து புருஷன் என்ற பருவத்தை அடைந்தார்கள். அடுத்தபடி பூரணபுருஷனாகும் அநுபவத்தை அடைந்தார்கள். ஆகையினால் தான் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ இரகசியத்தை மற்றவர்களுக்குச் சாட்சியாக அறிவித்தார்கள்.

*காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். (எபிரெயர் 5 : 12 - 14).*

*ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, (II தீமோத்தேயு 4 : 3).*

ஆரோக்கியமான உபதேசம் பூரணபுருஷனுக்குரியது. இவையெல்லாம் அப்போஸ்தல உபதேசம்.

*மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களா யிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களா யிருக்கும்படியாக அப்படிச் செய்தார். (எபேசியர் 4 : 11 - 15)*

சபையார் பூரணபுருஷனாகும் வரைக்கும் வளர வேண்டும். ஆவிக்குரிய வளர்ச்சியைக் கெடுக்கிறதான சகல துர்க்குணங்களையும் ஒழித்துவிட்டு, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருக்கிறவர்கள் வளர்ச்சியடைவார்கள். (Iபேதுரு 2:2,3).

## 4.2. அப்போஸ்தலருடைய உபதேசத்தின்படி சபையாரில் காணப்பட வேண்டியதான குணாதிசயங்கள்:

*நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1 பேதுரு 2 : 24).*

பாவத்திற்கு மரித்த ஒரு அநுபவம் தேவை.

மத்தேயு 5: 33-37. சத்தியம்பண்ணக்கூடாது, உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லை என்றும் சொல்லவேண்டும்.

மத்தேயு 5: 39. மன்னிக்கும் சிந்தை வேண்டும்; தீமை செய்தவர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.

*மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். (மத்தேயு 6 : 14, 15).*

நாம் மற்றவர்களுடைய குற்றங்களை மன்னியாதிருந்தால் நாம் செய்த பாவங்களும் மன்னிக்கப்படவில்லை என்பதாகும். நாம் எந்த அளவினால் அளக்கிறோமோ அந்த அளவினால் நமக்கும் அளக்கப்படும்.

*ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். (கொலோசெயர் 3 : 12 - 14).*

இரக்ககுணம், தயவு, மனத்தாழ்மை வேண்டும். சாந்தகுணம், நீடியபொறுமை இவைகளை நாம் நம் வஸ்திரங்களைத் தரித்துக்கொள்வதுபோல எப்பொழுதும் தரித்துக்கொண்டிருக்கவேண்டும்.

கொலோசெயர் 3:9,10,12,14

பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட வேண்டும். ஒருவருக்கொருவர் மன்னிக்கும் சிந்தையுடைவர்களாக காணப்பட வேண்டும்.

> *எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.(யோவான் 20 : 23).*

அப்போஸ்தலனாகிய ஊழியக்காரருக்கு மன்னிக்கவும், மன்னியாதிருக்கவும் அதிகாரமுண்டு.

> *எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும். (I பேதுரு 4 : 8).*

நாம் ஊக்கமான அன்புடையவர்களாய்க் காணப்படும்போது நம்முடைய பாவங்கள் கர்த்தரால் மன்னிக்கப்பட்டு, அப்படியே மூடப்பட்டுப்போகும். அன்பு இல்லாதவர்களுடைய பாவங்கள் கர்த்தருடைய பார்வையில் காணப்பட்டுக்கொண்டே இருக்கும். பாவங்கள் மூடப்பட்டவர்களைத்தான் கர்த்தர் என் மகனே! என் மகளே! என்று அழைக்கிறார். அவர்களுடைய பாவங்களை இனி நினையாமலும் இருப்பேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

> *கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. (I தீமோத்தேயு 1 : 5).*

அன்பு என்பது சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலுமிருந்து உண்டாகும். இவ்விதமான அநுபவங்களை நாம் அடைந்துகொண்டால் தேவனுக்குப்

பிரியமானவர்களாகவும், இயேசுகிறிஸ்துவின் திரு சரீரத்தின் அவயவங்களாகவும் காணப்படலாம். இராப்போஜனத்தில் பங்குபெறுவதற்கேற்ற அநுபவம் இதுவாகும்.

*தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான். சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக்கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத்தேயு 10 : 41, 42).*

கர்த்தருடைய ஊழியக்காரரில் ஒருவரை ஏற்றுக்கொள்ளுகிறவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், அவரை அனுப்பினவராகிய பிதாவாகிய தேவனையும் ஏற்றுக்கொள்ளுகிறான்.

*அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிற படியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். (எபேசியர் 4 : 25 - 27).*

பொய்யைக் களைந்துவிட்டு, சத்தியவானாக இந்த உலகத்தில் காணப்படவேண்டும். ஒருவருக்கொருவர் கோபம் ஏற்பட்டதுண்டானால் சூரியன் அஸ்தமிக்குமுன் ஒப்புரவாகவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பிசாசுக்கு இடமுண்டாகும். பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுவதற்கேற்ற எந்த ஒரு கிரியையும், எந்த துர்க்குணங்களும் காணப்படக்கூடாது.

*நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய*

*மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களா யிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக.*
*(ரோமர் 15 : 5, 6).*

விசுவாசிகள் ஆயிரக்கணக்கானவர்களாய் காணப்பட்டாலும் ஒரே மனம் ஒரே வாயுடையவர்களாய் காணப்படவேண்டும். தேவனுக்கு மகிமையாக சத்தியமானதைப் பேசும் வாயும், நாவும் உடையவர்களாகக் காணப்படும்போதும், கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களாகக் காணப்படும்போதும் இவர்கள் ஒரே மனமும் ஒரே வாயுமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஒவ்வொருவரும் மற்றவர்களைக் குறித்த மேன்மையான எண்ணத்தோடு காணப்பட்டால் அவர்களைக் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்; மற்றவர்களை அற்பமாக எண்ணினால், அது கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கு தடையானது மட்டுமல்ல, நியாயத்தீர்ப்புக்கேதுவான பாவமுமாகும். இரட்சிக்கப்படாதவர்களாகிய ஜனங்களுக்குள்ளே கர்த்தருடைய ஜனங்கள் குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாய் விளங்கவேண்டுமானால், முறுமுறுப்பும் தர்க்கிப்பும் கூடாது. தர்க்கமும் வாக்குவாதமுமுடையவர்களாய் காணப்படுவார்களானால் ஆத்துமாக்களை இடறப்பண்ணி, நியாயத்தீர்ப்புக்கேதுவானவர்களாய் இருப்பார்கள். ஒரு ஆவிக்குரியவன் மூலமாக ஒரு ஆத்துமா இடறிப்போகுமானால், அவன் கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்தில் தள்ளிவிடுவது அவனுக்கு லேசான காரியம்; இதைப்பார்க்கிலும் அதிகமான நியாயத்தீர்ப்பு அவனுக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

*உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும். (யாக்கோபு 1: 26).*

நாவை அடக்காதவர்கள் தங்களை தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லுகிறதினால், தங்களைத் தாங்களே வஞ்சித்து, தேவகோபத்திற்கேதுவானவர்களாய் காணப்படுகிறார்கள்.

*நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. (யாக்கோபு 1 : 4).*

பூரண பொறுமை ஒருவனுக்குள் காணப்படுமானால் அவன் ஆவிக்குரிய அநுபவங்கள் அத்தனையும் அடைந்து, யாதொரு குறைவுமில்லாதவனாய் காணப்படுவான்; பொறுமை இல்லாதவர்கள் தேவசித்தம் செய்கிறவர்களல்ல. அவர்கள் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ள எவ்வித தகுதியும் இல்லாதவர்கள்.

Iதீமோத்தேயு 6:9-11

பண ஆசைக்கும், விக்கிரக ஆராதனைக்கும் விலகி ஓட வேண்டும். இவ்விதமாக அப்போஸ்தலருடைய உபதேசத்தில் சொல்லப்பட்டிருக்கும் குணநலன்களை உடையவர்கள் மாத்திரமே இராப்போஜனத்தில் பங்குபெறத் தகுதியானவர்கள்.

### 4.3. அந்நியோந்நிய ஐக்கியம்:

அந்நியோந்நியம் என்றால் ஒரே மனம், ஒரே வாய், ஒரே சிந்தை என்ற அநுபவம். ஒருவருக்கொருவர் எந்த பிரிவினையும் காணப்படக்கூடாது. ஒரே சரீரத்திலுள்ள அவயவங்களில் பிரிவினை காணப்படாதது போல, இவர்களும் காணப்பட வேண்டும்.

*நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். (I கொரிந்தியர் 12 : 27 ).*

*நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களா யிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக.*

*(ரோமர் 15 : 5, 6).*

எபேசியர் 4:1-3; பிலிப்பியர் 2:2,3; ரோமர் 12:9-11.

மிகுந்த மனத்தாழ்மை உடையவர்களாகவும், சாந்தமுடையவர்களாகவும், ஒருவருக்கொருவர் நீடிய பொறுமையுடையவர்களாகவும் காணப்பட வேண்டும். அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டுடையவர்களாகவும் காணப்பட்டால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளலாம். தங்களில் இருக்கும் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தாதபடி ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ள வேண்டுமானால், ஒரே சரீரத்தின் அவயவங்கள் என்ற அனுபவத்தோடு காணப்பட வேண்டும். ஒருவரையொருவர் தங்களிலும் மேலானவர்களாக எண்ணவேண்டும். மாயமற்ற அன்புடைய வர்களாகவும் கனம்பண்ணுகிறதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுகிறவர்களாகவும் காணப்படவேண்டும். இவ்விதமாக அந்நியோந்நிய ஐக்கியத்தில் உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும்.

> *தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்.*
> *(1 கொரிந்தியர் 12 : 28).*

கர்த்தருடைய சபைக்குக் கர்த்தர் மூன்று அடையாளங்களைக் கொடுத்திருக்கிறார். 1) பற்பல பாஷைகள், 2)குணமாக்கும் வரங்கள், 3) அடையாளங்களும் அற்புதங்களும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களையும் சுமந்தார்.

> *உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள்*

*குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.*

*(யாக்கோபு 5 : 14 - 16).*

கர்த்தருடைய ஜனங்களுக்குக் கர்த்தரே பரிகாரியாக இருக்கிறார். ஆகவே சபையார் யாருக்காவது நோயோ வியாதியோ அல்லது மரணம் தான் சம்பவிக்கக்கூடிய சூழ்நிலை வந்தாலும் வேறு பரிகாரங்களையோ பரிகாரியையோ தேடக்கூடாது. இந்த அநுபவத்தை விட்டுக்கொண்டு வேறு பரிகாரத்தைத் தேடுகிறவர்கள் கர்த்தருடைய சபையாரோ, விசுவாசிகளோ அல்ல. இவர்கள் விசுவாசத்தை மறுதலித்து விசுவாசத்திற்கு துரோகம்பண்ணுகிறவர்கள். இவர்கள் இராப்போஜனத்தில் பங்கு பெற தகுதியுடையவர்கள் அல்ல.

## 4.4. புருஷன் மனைவி ஐக்கியம்:

புருஷன்-மனைவி ஒருவருக்கொருவர் ஏக ஐக்கியமுடையவர்களாக காணப்பட வேண்டும்.

*அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். (1 பேதுரு 3 : 1, 2).*

மனைவியானவள் சகல காரியத்திலும் தேவனுக்குப் பின்பு தன் சொந்தப் புருஷனையே சார்ந்து, அவனில் அன்புகூர்ந்து காணப்பட வேண்டும். அதுபோல புருஷனும் தன் சொந்த மனைவியில் அன்பு கூர்ந்து, அவளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து, அவளை வழிநடத்த வேண்டும். இவ்விதமாகக் காணப்படும்போது அவர்களது ஜெபத்திற்குத் தடை ஏற்படுகிறதில்லை. குடும்ப வாழ்க்கை மிகவும் ஆசீர்வாதமாகக் காணப்படும்.

தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.

*நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து, கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள்; ஆகையால், அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக்கொள்ளவுமாட்டார். ஏன் என்று கேட்கிறீர்கள்; கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம்பண்ணினாயே. (மல்கியா 2 : 13, 14).*

அநேகர் தங்கள் மனைவிக்குத் துரோகம்பண்ணுகிறார்கள். அவள்அவனுக்குத் தோழியாகவும் உடன்படிக்கையின் மனைவியுமாக இருக்கிறாள். தேவனிடத்தில் உடன்படிக்கைபண்ணியே அவளை மனைவியாக எடுத்துக்கொண்டான். அவனுடன் பசியானாலும், கஷ்டமானாலும் எல்லாம் அநுபவித்து, அவனுக்கு ஆதரவாக சகல காரியத்திலேயும் இருக்கும்படியாக தேவனால் கொடுக்கப்பட்டவள். அவளுக்கு துரோகம் செய்யும்போது கர்த்தர் இவர்களுக்குச் சாட்சியாக இருக்கிறார். தன் மனைவிக்குத் துரோகம் செய்தால் கர்த்தர் அவனைத் தப்பவிடமாட்டார். இப்படிப்பட்டவர்களுடைய காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார்.

## 4.5. ஜெபம்பண்ணுவதில் உறுதியாய் தரித்திருப்பது:

ஜெபம்பண்ணாத எவனும் நரகத்துக்கோ, நியாயத்தீர்ப்புக்கோ தப்பமுடியாது.

*நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோமர் 12 : 12).*

*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள். (கொலோசெயர் 4 : 2).*

*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.*

*(I தெசலோனிக்கேயர் 5 : 17).*

*நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். (I தீமோத்தேயு 2 : 1, 2).*

இவ்விதமான அநுபவத்தோடு காணப்படுகிறவர்களே அப்பம் பிட்குதலாகிய இராப்போஜனம் பண்ணத் தகுதியானவர்கள்.

*ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார். (லூக்கா 21 : 36).*

இவ்விதமான அநுபவத்தோடு காணப்பட்ட ஆதி சபையார் பரிசுத்த ஆவியினால் அதிகமதிகமாய் நிறைக்கப்பட்டு அளவிடமுடியாத சந்தோஷத்தோடு காணப்பட்டார்கள்.

*நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று. (I தெசலோனிக்கேயர் 1 : 6 - 8).*

*நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து, எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம். (I தெசலோனிக்கேயர் 1 : 3, 4).*

ஆதி சபையார் பூரணமான ஜெபஜீவியமுடையவர்களாய் காணப்பட்டதால் அவர்கள் விசுவாசமும், அன்பும் மிகவும் பெருகியது.

*ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள். (I தெசலோனிக்கேயர் 5 : 11).*

இவ்விதமான அநுபவத்தோடு ஆதி சபையில் காணப்பட்ட விசுவாசிகளாகிய பரிசுத்தவான்கள் காணப்பட்டார்கள்.

## 4.6. அப்பம் பிட்குதல்:

*அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, (அப்போஸ்தலர் 2 : 46).*

ஆதிசபையார் வீடுகள்தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனபானம்பண்ணினார்கள். ஆனந்தத்தின்மேல் ஆனந்தம், சந்தோஷத்தின்மேல் சந்தோஷம், கபடமில்லாத இருதயம், ஒருவருக்கொருவர் ஏக ஐக்கியமான அநுபவத்தோடு ஒரே சரீரத்தின் அவயவங்களாகக் காணப்பட்டார்கள். இப்படிப்பட்ட அநுபவத்தோடு காணப்படுகிறவர்கள் தான் அப்பம் பிட்க ஏற்ற ஆயத்தமானவர்கள்.

*இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில்*

*அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்;*
*அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.*
*(1 கொரிந்தியர் 11 : 27 - 30).*

எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம்பண்ண வேண்டும். சோதித்தறிந்து என்றால் கொடுக்கப்படுகிற உபதேசத்தைக் கருத்தாய் கேட்டு, விழிப்போடும் ஜெபத்தோடும் இருந்து, உபதேசத்தின்படி தங்களுக்குள் அநுபவம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து கண்டுபிடிப்பதே சோதித்து அறிந்துகொள்வதாகும். அவ்விதமாய் நிதானித்து அறிந்து, இந்த இராப்போஜனத்தில் பங்கு பெறுகிறவர்கள் பாக்கியவான்களா யிருப்பார்கள். இந்த இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியுடைய வர்களாய் காணப்படவேண்டுமானால் கீழ் குறிப்பிட்டிருக்கும் ஆவிக்குரிய அனுபவங்களை உடையவர்களாய் இருக்க வேண்டும்.

## ௨. இராப்போஜனம் பண்ணுகிறவர்களுக்கு தேவையான ஆவிக்குரிய அனுபவங்கள்

### 1. பூரணமான விசுவாசம்:

கிறிஸ்தவ வாழ்க்கைக்கு விசுவாசம் மிகவும் அஸ்திபாரமாகக் காணப்படுகிறது. ஆவிக்குரிய ஜீவியம் விசுவாசத்தினாலே தான் ஆரம்பமாகிறது. விசுவாசம் என்றால் உறுதியான நம்பிக்கை ஆகும்.

விசுவாசம் என்பது:

- தேவனை குறித்ததான விசுவாசம்.
- அவருடைய வார்த்தையைக் குறித்ததான விசுவாசம்.
- முதலாம் உயிர்த்தெழுதலைக் குறித்ததான விசுவாசம்.
- ஆயிரவருட அரசாட்சியைக் குறித்ததான விசுவாசம்.
- பரலோகராஜ்யத்தைக் குறித்ததான விசுவாசம்.
- அவருடைய வருகையைக் குறித்ததான விசுவாசம்.
- இயேசுகிறிஸ்து பாவிகளை நியாயந்தீர்த்து, நரகத்திலே தள்ளுவார் என்ற விசுவாசம்.

*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.*
*(எபிரெயர் 11 : 1).*

*விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளி யானான். (எபிரெயர் 11 : 7).*

இந்த வசனத்தில் நோவா என்றதான ஒரு மனுஷனைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

## 1.1. நோவாவின் விசுவாசம்:

தேவன் நோவாவிடம் பூமியில் மாம்சமான யாவரும் தங்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பூமி கொடுமையினால் நிறைந்திருக்கிறது. ஆகவே, வானத்தின் கீழே ஜீவ சுவாசமுள்ள சகல மாம்ச ஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம். ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். ஆகவே, நீ கொப்பேர் மரத்தால் ஒரு பேழையை உண்டாக்கி, அதில் நீயும் உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசியுங்கள் என்று எச்சரித்தார்.

அதை நோவா அப்படியே நம்பினார், விசுவாசித்தார். அதுவரையிலும் நோவா மழையையே கண்டதில்லை. தேவன் சொன்னதை நோவா விசுவாசித்து, பேழையை உண்டுபண்ணினார். அந்தப் பேழையை உண்டுபண்ண 120 வருஷம் ஆனது. அந்த 120 வருஷமும் நோவா மனுஷருடைய பாவத்தினால் தேவன் உலகத்தை ஜலப்பிரளயத்தை வருஷிக்கப்பண்ணி அழிக்கப்போகிறார். நீங்கள் பாவங்களையும் பாவ வழிகளையும் விட்டு விலகுங்கள் என்று பிரசங்கம் பண்ணினார். அந்த ஜனங்கள் யாருமே அதை விசுவாசிக்கவில்லை. நோவாவின் குடும்பத்தினர் மட்டும் அவனுடைய பிரசங்கத்தை நம்பி, விசுவாசித்து பேழையைக் கட்டுவதற்கு உதவிசெய்து, பேழைக்குள் பிரவேசித்தார்கள்.

> *இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.*
>
> *(II பேதுரு 3 : 7).*

அக்காலத்தில், தேவன் நோவாவைக்கொண்டு ஜனங்களை எச்சரித்ததுபோல, இக்காலத்திலும் கர்த்தருடைய ஊழியக்காரர்களைக் கொண்டு அக்கினியால் இந்த பூமியை அழிப்பேன் என்று எச்சரிக்கிறார். அதற்குத் தப்பும்படியாக தேவனிடம் மனந்திரும்பவேண்டும் என்றும் பேசுகிறார். நம்முடைய விசுவாசம் இந்த வேத வசனத்தின்மீது

இருக்கிறதா? நோவாவின் காலத்தில் பேழைக்குள் பிரவேசித்தவர்கள் அழிவுக்குத் தப்பினார்கள். இக்காலத்திலும் கர்த்தரால் அறிவிக்கப்படுகிற கர்த்தருடைய சுவிசேஷத்தை விசுவாசித்து, அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்கிற பரிசுத்தவான்கள் அவரோடு கூட எடுத்துக்கொள்ளப்படுவார்கள். எந்தச் சேதமும் இல்லாமல் தேவனால் தப்புவிக்கப்படுவார்கள். இதை அறிந்தும் நாம் தேவனுடைய வருகைக்கேற்ற ஆயத்தமாய் இருக்கிறோமா? இல்லாவிட்டால் நமக்கும் நோவாவின் காலத்தில் காணப்பட்ட ஜனங்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

*நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான். (ஆதியாகமம் 6 : 22).*

*ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24 : 14).*

நோவாவிடம் தேவன் சொன்னபடி, அவர் எல்லாவற்றையும் செய்து முடித்தார். நோவா 2 காரியங்களைச் செய்தார்.

♦ பேழையைக் கட்டி முடித்தார்.

♦ அந்த 120 வருஷமும் ஜனங்களைப் பார்க்கும்போதெல்லாம் அவர்களுக்கு தேவனுடைய சுவிசேஷத்தைச் சொல்லி எச்சரித்தார்.

இக்காலத்தில் காணப்படுகிற நம் மேலும் ஒரு கடமை வைக்கப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது, உலகத்தின் முடிவு இருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் சுவிசேஷம் எவ்வளவு முக்கியமானது. நாம் சுவிசேஷத்திற்கு எவ்வளவு பயப்பட வேண்டும். சுவிசேஷத்தின்படி என்னுடைய ஜீவியம் இருக்கிறதா என்று நாம் எவ்வளவாய் நம்மை சீர்படுத்திக்கொள்ள கடன்பட்டவர்களாயிருக்கிறோம் என்பதை யாவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

## 1.2. விசுவாசத்தை விட்டு வழி விலகச் செய்யும் உலகசிநேகம்:

லோத்தின் நாட்களில் கர்த்தர் 2 தூதர்களை அனுப்பி, லோத்தை எச்சரித்தார்.

> *கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள். அவன் தாமதித்துக் கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.*
>
> *(ஆதியாகமம் 19 : 15 - 17).*

தேவதூதர்கள் லோத்திடம் நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப் போகிறோம்: இந்த ஜனங்களுடைய கூக்குரல் கர்த்தருடைய சமூகத்தில் பெரிதாயிருக்கிறது: இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார். ஆகவே அந்த ஜனங்களோடு கூட நீங்களும் அழிக்கப்பட்டுப் போகாதபடிக்கு, நீயும் உன் மனைவியும் உன் இரண்டு பிள்ளைகளுமாக இந்த இடத்தை விட்டு வெளியே போகிறதற்கு துரிதப்படுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், லோத்து அந்த எச்சரிப்பின் வார்த்தையைக் கேட்டும் தயக்கத்தோடும் தாமதித்துக்கொண்டும் காணப்பட்டார். நமக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. நாம் அதினுடைய ஆழத்தையும் அவசரத்தையும் முக்கியத்துவத்தையும் உணராதவர்களாயிருக்கிறோம். ஆகவே தான் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் நிலைநிற்க முடியாமல் விழுந்துகொண்டே போகிறார்கள்.

லோத்திடம் தேவதூதர்கள் எச்சரித்தபோது லோத்து தேவதூதர்கள் தானே சொல்லுகிறார்கள் என்று நினைத்து தாமதித்தார். ஆனால் தேவதூதர்களுக்கு தங்களால் அறிவிக்கப்பட்ட வார்த்தை எப்படிப்பட்டதென்றும், அதற்கு தாமதம் காண்பிக்கிறவர்கள் நிச்சயமாகவே அந்த அக்கினிக்கு இரையாகிப் போவார்கள் என்றும் தெரிந்திருந்தது. ஆகவே, தங்களால் அறிவிக்கப்பட்ட தேவ எச்சரிப்பை லோத்தும் அவன் குடும்பத்தாரும் அறியாமலிருந்தும் அவர்கள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் வெளியே விட்டார்கள். மேலும் கர்த்தர் லோத்திடம், நீ அழியாதபடிக்கு பின்னிட்டு பாராமல் ஓடிப்போ என்று சொன்னார்.

*அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்த பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார். அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள். (ஆதியாகமம் 19 : 24 - 26).*

தனக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தை தேவனுடைய வார்த்தை என்ற உணர்வில்லாததால் லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். தனக்கு கொடுக்கப்பட்டதான தேவ எச்சரிப்பின் படி தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்றதான உணர்வு அவளுக்கு இல்லை. தான் அதுவரையிலும் அனுபவித்துக் கொண்டிருந்ததான உலக இன்பங்களை குறித்ததான இச்சை அவளைப் பின்னிட்டுப் பார்க்க வைத்தது. ஆகவே, அவளுடைய நிலைமை பரிதாபமாய் ஆனது.

*உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. (I யோவான் 2 : 15).*

அநேகர் விசுவாச ஜீவியத்தை விட்டு பின்வாங்கிப் போகக் காரணம் அவர்களுக்குள் காணப்படுகிற உலக சிநேகமே. உலகத்திற்குரியதான காரியங்களுக்காக அதிகமாகப் பிரயாசப்படுவதால் ஜெபம்பண்ண

வேண்டிய வேளைகளில் ஜெபம்பண்ணத் தவறிவிடுகிறார்கள். ஜெப ஜீவியம் குறைவுபடும்போது விசுவாச ஜீவியம் தகர்ந்துபோகிறது. ஆவியின் கனிகளில் ஒன்றுதான் விசுவாசம். நாம் ஆவிக்குரிய காரியங்களை விட்டுவிட்டு உலகத்திற்குரியவைகளுக்காகவும், மாம்சத்திற்குரியவைகளுக்காகவும் கவலைப்படும்போது ஆவிக்குரிய ஜீவியமாகிய விசுவாச ஜீவியத்தில் நாம் எப்படி நிலைநிற்க முடியும்?

அநேகர் விசுவாசத்தை மறுதலிக்கிறதற்கான ஒரு காரணம், கர்த்தரால் அறிவிக்கப்படக்கூடிய வார்த்தையை சாதாரணமான ஒரு வார்த்தையென்று நினைத்து தாமதித்துக்கொண்டே காணப்பட்டதான லோத்தைப் போன்றதான மனநிலை; இன்னும், கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து பயமற்று அதை மீறினாலும் என்ன என்று மனத்துணிச்சலுடன் மீறி, திரும்பிப் பார்க்கக்கூடிய லோத்தின் மனைவியைப் போன்றதான நிலைமை. இதனால் விசுவாச ஜீவியத்தை விட்டு வழி விலகி விசுவாசி என்றதான நிலைமையற்று எல்லாராலும் இகழப்படக்கூடிய நிலைமைக்குள் வந்து விடுகிறார்கள். இதற்குப் பிரதானமான காரணம் உலக ஆசையே.

எண்ணாகமம் 22; 23; 24 அதிகாரங்கள் வாசிக்கவும்.

பிலேயாம் என்ற தீர்க்கதரிசி முதலாவது கர்த்தரை நோக்கி கூப்பிடும்போது, அவனுக்கு இரங்கி உடனுக்குடன் பதில் கொடுக்கிறார். ஆண்டவரோடுகூட இருந்த அவன், பாலாக் என்ற ராஜா அவனிடம் தன்னுடைய அதிபதிகளை அனுப்பி, நீர் கேட்பவை எல்லாவற்றையும் ராஜா உமக்குத் தருவார். உம்மை மிகவும் கனம்பண்ணுவார். நீர் வந்து, இஸ்ரவேல் ஜனங்களை சபித்தால் மட்டும் போதும் என்று கூப்பிட்டதும் பிலேயாமுக்கு சாதாரணமான ஓர் மனுஷனாகிய என்னை ஒரு பெரிய ராஜாவின் அதிபதிகள் தேடி வர வேண்டுமானால் நான் எவ்வளவு உயர்ந்தவன்; அவர்கள் கேட்கிறதை நான் செய்தால் இன்னும் பெரியவனாகலாமே என்ற எண்ணம் வந்தது. இன்னும் பண ஆசையும் அவனுக்குள் உண்டானது. ஆகவே, தேவன் மேலுள்ள விசுவாசத்தை அப்படியே மறுதலித்தான். பண ஆசையினால் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்க வேண்டுமென்று நினைத்தான். ஆனால் கர்த்தர் அதை ஆசீர்வாதமாக மாற்றினார். அவன் கூலியினிமித்தமாக இஸ்ரவேல்

ஜனங்களுக்கு விரோதமாக வஞ்சனையான காரியத்தைச் செய்தான். ஆகவே அவன் முடிவு பரிதாபமானது.

### 1.3. கண்டு விசுவாசிப்பது விசுவாசம் அல்ல:

அநேகருடைய வாழ்க்கையில் கர்த்தர் ஏராளமான அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்திருந்தும் அவை எல்லாவற்றையும் உடனே மறந்து சந்தேகப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

> *அதற்குப்பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலிமரத்தின்கீழ் உட்கார்ந்தார்; அப்பொழுது அவனுடைய குமாரன் கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான். கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக் கொடுத்தாரே என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடே கூட இருப்பேன்; ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார். அப்பொழுது அவன்: உம்முடைய கண்களில் இப்பொழுதும் எனக்குத் தயை கிடைத்ததானால் என்னோடே*

*பேசுகிறவர் தேவரீர்தான் என்று எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டும். நான் உம்மிடத்திற்கு என் காணிக்கையைக் கொண்டுவந்து, உமக்கு முன்பாக வைக்குமளவும், இவ்விடம் விட்டுப் போகாதிருப்பீராக என்றான்; அதற்கு அவர்: நீ திரும்பிவருமட்டும் நான் இருப்பேன் என்றார். உடனே கிதியோன் உள்ளே போய், ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும் ஒரு மரக்கால் மாவிலே புளிப்பில்லாத அப்பங்களையும் ஆயத்தப்படுத்தி, இறைச்சியை ஒரு கூடையில் வைத்து, ஆணத்தை ஒரு கிண்ணத்தில் வார்த்து, அதை வெளியே கர்வாலிமரத்தின்கீழிருக்கிற அவரிடத்தில் கொண்டுவந்து வைத்தான். அப்பொழுது தேவனுடைய தூதனானவர் அவனை நோக்கி: நீ இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் எடுத்து, இந்தக் கற்பாறையின்மேல் வைத்து ஆணத்தை ஊற்று என்றார். அவன் அப்படியே செய்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது; கர்த்தரின் தூதனோவென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார். (நியாயாதிபதிகள் 6 : 11- 21).*

கர்த்தர் கிதியோனிடம் முகமுகமாய்த் தரிசனமாகி, நான் உன்னுடனே இருக்கிறேன், உன்னை அனுப்புகிறேன் என்று சொல்லியும் கிதியோன் ஆண்டவரே, என்னோடு பேசுகிறவர் நீர்தான் என்றால் எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டும் என்றான். அவன் கேட்டுக் கொண்டதின்படியே அவன் கற்பாறையின் மேல் வைத்த அப்பத்தையும் இறைச்சியையும் அக்கினி வந்து பட்சித்துப் போட்டது. கர்த்தரே இதைச் செய்தார் என்று நிரூபணம் ஆன பின்பு சந்தேகத்தினால் மீண்டும் இரண்டு முறை சோதித்தான்.

*அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: தேவரீர் சொன்னபடி என் கையினாலே இஸ்ரவேலை இரட்சிக்கவேண்டுமானால், இதோ, நான் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போடுகிறேன்; பனிதோலின்மேல்மாத்திரம்*

*பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருந்தால், அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என் கையினால் இரட்சிப்பீர் என்று அதினாலே அறிவேன் என்றான். அப்படியே ஆயிற்று. அவன் மறுநாள் காலமே எழுந்திருந்து, தோலைக் கசக்கி, அதிலிருந்த பனிநீரை ஒரு கிண்ணம் நிறையப் பிழிந்தான். அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: நான் இன்னும் ஒருவிசை மாத்திரம் பேசுகிறேன், உமது கோபம் என்மேல் மூளாதிருப்பதாக; தோலினாலே நான் இன்னும் ஒருவிசை சோதனை பண்ணட்டும்; தோல்மாத்திரம் காய்ந்திருக்கவும் பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் கட்டளையிடும் என்றான். அப்படியே தேவன் அன்று ராத்திரி செய்தார்; தோல் மாத்திரம் காய்ந்திருந்து, பூமியெங்கும் பனி பெய்திருந்தது.*

*(நியாயாதிபதிகள் 6 : 36 - 40).*

நம்முடைய வாழ்க்கையிலும் கர்த்தர் நம்மை சிநேகித்து அவரே மெய்தேவன் என்றும் அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்யக்கூடிய வல்லமையுடையவர் என்றும் நாம் அறிந்து கொள்ளும்படியாக அநேக நன்மைகளை கர்த்தர் செய்தும் கர்த்தரை யதார்த்தமாக விசுவாசிக்கிறதான அனுபவம் இல்லாமல் அவரை சோதிக்கிறவர்களாகவும், பரீட்சித்துப்பார்க்கிறவர்களாகவும் காணப்படுகிறோம்.

அநேகர் எனக்கு கர்த்தர் இந்த நன்மையைச் செய்தால் தான் கர்த்தரை நம்புவேன் என்று அவரிடம் பேரம்பேசுகிறவர்களாகக் காணப்படுகிறார்கள்.

*மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான்.*

*(யோவான் 20 : 25).*

தோமாவிடம் மற்ற சீஷர்கள் கர்த்தரைக் கண்டோம் என்று சொன்னபிறகும்; நான் காணாமல் நம்பமாட்டேன்; தொட்டுப் பார்த்தபிறகு

தான் நம்புவேன், எனக்கு ஆணியைப் பற்றித் தெரியும், அது நீளமாகவும் இருக்கும். என்னுடைய விரல் அந்த காயப்பட்ட இடத்தினுள் போகும். ஆகவே, நான் என் தேவனை என் கண்களால் பார்த்து, அவருடைய கையிலுள்ள காயத்தில் என் விரலைப் போட்டால் தான் நம்புவேன். அவருடைய விலாவில் ஈட்டியினால் குத்தப்பட்ட காயத்தில் என் கையைப் போட முடியும். ஆகவே, அந்த காயத்தில் என் கையைப் போட்டால் தான் நம்புவேன், நான் கண்டால் மாத்திரம் தான் விசுவாசிக்கக் கூடியவன் என்று சொன்னார். இயேசு அவரிடம் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்களே பாக்கியவான்கள் என்றார்.

நாம் எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தரை விசுவாசிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

### 1.4. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் விசுவாசம்:

> *தானியேல் ராஜாவை வேண்டிக் கொண்டதின்பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்துக் காரியங்களை விசாரிக்கும்படி வைத்தான்; தானியேலோவென்றால் ராஜாவின் கொலு மண்டபத்தில் இருந்தான்.*
>
> *நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள். (தானியேல் 2 : 49; 3 : 17, 18).*

தானியேல் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற நான்கு வாலிபர்களும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரால் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டு, அந்த ராஜாவின் கட்டுப்பாட்டுக்குள் காணப்பட்டார்கள். தானியேலின் மூலமாக சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்கு மாகாணங்களை ஆளுகை செய்யும் ஆளுநர் பதவி கிடைத்தது. அப்படியிருக்க, நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையை

வணங்கும்படியாகவும், அதை வணங்காவிட்டால் எரிகிற அக்கினிச் சூளைக்குள் போடப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் மாத்திரம் பொற்சிலையை வணங்காத காரியம் ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டபோது ராஜா அவர்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டான். அவர்கள் ராஜ சமூகத்தில் வந்து நின்றபோது, ராஜா அவர்களிடம் தான் பண்ணி வைத்த பொற்சிலையை பணிந்துகொள்ளும்படியும், அதைப் பணிந்துகொள்ளாவிடில் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையில் போடப்படுவீர்கள், உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார்? என்றும் சொன்னான். அப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவிடம்: நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அவரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. அவர் ஜீவனோடிருக்கிறார். இந்த அக்கினிச் சூளைக்கு எங்களைத் தப்புவிக்க அவரால் கூடும். ஒருவேளை அவர் எங்களை அக்கினிக்கு ஒப்புக்கொடுத்தாலும் நாங்கள் இந்தச் சிலையை வணங்கமாட்டோம் என்று கர்த்தரிடத்தில் உறுதியான விசுவாசத்தோடு காணப்பட்டார்கள். ஆகவே, அவர்கள் கர்த்தரால் காப்பாற்றப்பட்டார்கள்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுக்கு உயர்ந்த பதவியும், செல்வாக்கும், சுகபோகமான வாழ்கையும் இருந்தபோதும், இவையெல்லாவற்றையும் அவர்கள் அற்பமாக எண்ணினார்கள். தேவனே இந்த பதவியையும் செல்வாக்கையும் தந்தார். ஆகவே, எக்காரணத்தினாலும் என் தேவனை மறக்கக் கூடாது என்ற உறுதியோடு காணப்பட்டார்கள்.

அநேகர் நோய், வியாதி வந்ததும் கொஞ்சம் ஜெபம்பண்ணிப் பார்ப்பார்கள். தங்களுக்கு உடனே விடுதலை கிடைக்காததும் தாங்கள் அதுவரையிலும் விசுவாசித்துப் பிழைத்த கர்த்தரை மறுதலிக்கிறவர்களாய் மாறிப் போகிறார்கள்.

### 1.5. தானியேலின் விசுவாசம்:

*எவனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்தத் தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி யாதொரு காரியத்தைக் குறித்து*

*விண்ணப்பம்பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்ய வேண்டுமென்று ராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், மந்திரிமார்களும், தலைவர்களும் ஆலோசனைபண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் இப்போதும் ராஜாவே, மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படியே, அந்தத் தாக்கீது மாற்றப்படாதபடி நீர் அதைக் கட்டளையிட்டு, அதற்குக் கையெழுத்து வைக்கவேண்டும் என்றார்கள். அப்படியே ராஜாவாகிய தரியு அந்தக் கட்டளைப்பத்திரத்துக்குக் கையெழுத்து வைத்தான். தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான். (தானியேல் 6 : 7 - 10).*

சாலொமோன் ராஜா எருசலேமில் தேவாலயத்தைக் கட்டி பிரதிஷ்டை பண்ணின அன்று கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, உம்முடைய ஜனங்கள் அந்நிய தேசங்களில் சிறைபிடிக்கப்பட்டுப் போய், அங்கிருந்து இந்த தேவாலயம் இருக்கிறதான திசையை நோக்கி யார்யார் ஜெபம்பண்ணுகிறார்களோ அந்த ஜெபத்தை நீர் கேட்க வேண்டுமென்று ஜெபம்பண்ணினார். அது யூதர்களுக்கு அப்படியே பதிந்துவிட்டது. ஆகவே தான் யூதர்கள் எருசலேம் தேவாலயம் இருக்கிறதான திசையை நோக்கி ஜெபம்பண்ணுவது வழக்கமாயிருந்தது. தானியேல், தான் அவ்வாறு ஜெபம்பண்ணினால் தனக்கு வரப்போகிற ஆபத்தை அறிந்திருந்தும் அந்த ஜன்னலை திறக்காமல் ஜெபம்பண்ணலாம் என்று பார்க்கவில்லை. தன்னைச் சுற்றிலும் சத்துருக்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்தபோதும் தானியேல், அடிமையாக இருந்த என்னை என் தேவன் 50 வருஷமாக கவர்னராக இருக்கச் செய்தார், 75 வருஷமாக உயிரோடு இருக்கச்

செய்திருக்கிறார். இனிமேலும் அவருடைய சித்தம் எனக்குப் போதும் என்று எண்ணி, தான் அதற்கு முன்னால் ஜெபம்பண்ணின வழக்கத்தின்படியே எருசலேமுக்கு நேராகப் பலகணிகளைத் திறந்து வைத்துக்கொண்டு ஜெபம்பண்ணினார்.

தானியேல் உயர்ந்த பதவியில் இருந்தாலும் தினமும் 3 வேளை ஜெபம்பண்ணினதினால் தான் கர்த்தரிடத்தில் பூரணமாண விசுவாசத்தோடு காணப்பட்டார். ஆகவே, அடிமையாக இருந்த என்னை இவ்வளவு பெரிய பதவியில் வைத்திருக்கிற தேவனை மறுதலிக்கமாட்டேன் என்று எண்ணி தன்னுடைய சரீரத்தை சிங்கத்திற்கு இரையாக ஒப்புக்கொடுத்தார்.

நமக்கு நேராக இப்படிப்பட்ட சோதனைகள் வந்தால் நம்மால் விசுவாசத்தில் உறுதியாயிருக்க இயலுமா? நாம் அந்தப் பதவியையும், நம்முடைய பெயரையும் காப்பாற்ற முயற்சி செய்வோம்; மேலும் 30 நாட்கள் தானே ராஜாவை வணங்க வேண்டும். அந்த 30 நாட்களும் ராஜாவை வணங்கி விட்டு பிறகு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம். கர்த்தர் இரக்கமுடையவர் தானே எல்லாவற்றையும் மன்னித்துவிடுவார் என்று நினைப்போம்.

அநேகர் விசுவாச ஜீவியத்தை விட்டு விழக்காரணம் ஜெபஜீவியம் இல்லை.

### 1.6. ஆபிரகாம் மற்றும் எசேக்கியா ராஜாவின் விசுவாசம்:

ஆபிரகாமை கர்த்தர் சோதித்து, தன்னுடைய ஒரே மகனை தகனபலியாக ஒப்புக் கொடுக்கச் சொன்னபோது, அவர் தனக்குள் காணப்பட்ட பெரிதான விசுவாசத்தினால் உடனே கீழ்ப்படிந்து கர்த்தர் தனக்கு குறித்திருந்த இடத்திற்குப் போய், ஈசாக்கை பலியிடும்படியாக கத்தியை ஓங்கினபோது, கர்த்தர் தடுத்தார்.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா அரசாண்ட பதினாலாம் வருஷத்திலே, அசீரியா ராஜாவாகிய சனகெரிப் எருசலேமை முற்றுகையிட்டு, நீங்கள் பட்டினியால் சாகப்போகிறீர்கள் என்று சொன்னபோது, எசேக்கியா ராஜாவும் யூத ஜனங்களும் கர்த்தரை நோக்கி விசுவாசத்தோடு ஜெபம்பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி அவர்கள் சத்துருக்கள் எல்லாரையும் கொன்று

போட்டார். இவ்விதமாக கர்த்தரை விசுவாசித்ததின் மூலம் கர்த்தர் ஒரு பெரிய கிரியையை நடப்பித்தார்.

## 1.7. யோபுவின் விசுவாசம்:

*ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமா யிருந்தான். அவன் குமாரர், அவனவன் தன்தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள். விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவம்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களி லெல்லாம் செய்துவருவான்.*

*அப்பொழுது யோபு எழுந்திருந்து, தன் சால்வையைக் கிழித்து, தன் தலையைச் சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்து: நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான். இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவு மில்லை. அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள். அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை. அவர் என்னைக்*

*கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன். (யோபு 1 : 1, 4, 5, 20 - 22; 2 : 9, 10; 13 : 15).*

யோபுவைக் குறித்து உத்தமன், நீதிமான், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் என்று கர்த்தரே சாட்சி கொடுத்தார். அவன் கோடீஸ்வரனாகவும் காணப்பட்டான். என்றாலும், ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் உதவி செய்கிறவனாகவும் காணப்பட்டான். அவன் ஒரே நாளிலே தன்னுடைய செல்வங்கள், பிள்ளைகள் எல்லாவற்றையும் இழந்து ஒன்றுமற்றவனாய் மாறினான். அவனுடைய சரீரத்திலுள்ள மாம்சம் பூச்சிகளினாலும், அடைபற்றின புழுதியினாலும் மூடப்பட்டது. தோலெல்லாம் வெடித்து அருவருப்பாயிற்று. அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ, தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று சொன்னாள். அவனுடைய சகோதரர் எல்லாரும் கைவிட்டார்கள். நெருங்கின நண்பர்களும் வெறுத்தார்கள். இப்படிப்பட்ட நிர்ப்பந்தமான சூழ்நிலை நேரிட்ட போதிலும் யோபு தன் வாயினால் தேவனைக் குறை கூறவில்லை. கர்த்தர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நான் நம்பிக்கையாயிருப்பேன் என்ற திட விசுவாசத்தோடு காணப்பட்டார்.

நமக்கும் துன்பமும், நெருக்கமும், கஷ்டமும், வியாகுலமும், வேதனையும் போராட்டமும் பங்காக இருந்தாலும், தேவனே, நீர் போதும். நீர் என்னைக் கொன்று போட்டாலும் உம்மை நம்புவேன்; எனக்குக் கஷ்டமும் நெருக்கமும் வந்தாலும், அவைகளிலிருந்து நீர் என்னை விடுவிப்பீர் என்றதான நம்பிக்கையிலே வாழவேண்டும். அந்த நம்பிக்கை அதிகமாக உண்டாகும்போது விசுவாசத்தின் அளவு அதிகமாகும். நிச்சயமாகவே எனக்கு பரலோகராஜ்யம் கிடைக்கும் என்ற சரியான உறுதி உண்டாகும். அநேகருக்கு ஒரு சின்ன கஷ்டமும் வரக்கூடாது. அவர்கள் நினைத்த காரியம் நடக்க வேண்டும். எப்பொழுதும் சொகுசாக இருக்கவேண்டுமென்றே விரும்புகிறார்கள். அந்த மனநிலை மாற வேண்டும்.

விசுவாசம் என்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். நம்முடைய விசுவாசம் தேங்கிய நிலைமையில் இருக்கக்

கூடாது. அது வளரக்கூடியதாகவும், நிலைநிற்கக் கூடியதாகவும் காணப்பட வேண்டும். மரணமே சம்பவித்தாலும் விசுவாசத்தை மறுதலிக்காத அநுபவத்தோடு காணப்பட வேண்டும். அது தான் ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சி. நாம் ஒவ்வொரு நாளும் தேவனையும் நம்முடைய விசுவாசத்தையும் குறித்து அறிக்கை பண்ணக் கூடியவர்களாகக் காணப்பட வேண்டும்.

ஆதி சபையார் பூரணமான விசுவாசமுடையவர்களாய் காணப்பட்டார்கள்.

> *விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்க ளானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்பு களிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்.*
>
> *(எபிரெயர் 11 : 33 - 39).*

நாமும் ஆதி சபையாரைப்போன்ற விசுவாச ஜீவியம் உடையவர்களாய்க் காணப்பட்டு கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெறவேண்டியது அவசியமாகும்.

*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.*
*(எபிரெயர் 11 : 1).*

தேவன் கண்மூடித்தனமாக எதையாகிலும் நம்புங்கள், விசுவாசியுங்கள் என்ற சொல்லவில்லை. அவரை நம்பத்தக்கதாக எல்லா ஆதாரங்களையும் மனுமக்களுக்கு கொடுத்துவிட்டு அவரை நம்பும்படியாகவும் அறிவித்திருக்கிறார்.

*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. (சங்கீதம் 19 :1 ).*

நாம் காண்கிறதான வானம் என்கிற ஆகாய விரிவும் அதிலுள்ள சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் யாவும் தேவன் ஒருவர் உண்டென்று சாட்சியிட்டுக்கொண்டே இருக்கிறது. இவைகளை மனுஷர்கள் யாராலும் எவ்விதத்திலும் உருவாக்க முடியாது. இவைகளை உருவாக்கின தேவனானவர் மனுஷனையும் முற்றுமுடிய வழிநடத்தக் கூடும்.

*இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவான் 20 : 30, 31).*

கர்த்தரால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பரிசுத்த வேதாகமமும் இயேசுகிறிஸ்துவே மெய்யான தேவன் என்றும், அவர் சர்வ வல்லமையும், சர்வ அதிகாரமுமுடைய தேவன் என்றும், நாம் அவரை நம்பி விசுவாசிக்கும்படியாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவர் செய்த அநேக அற்புதங்கள், அடையாளங்கள், பலத்த செயல்கள்

யாவும் எழுதப்பட்டிருக்கிறது. நாம் அதைப் படிக்கும்போது நமக்கு நேராக சோதனைகள், நெருக்கங்கள் வந்தாலும் கர்த்தருடைய வேத சத்தியங்கள் நமக்குள்ளேயிருந்து கிரியை செய்து, நாம் ஒருபோதும் தேவனை விட்டு விலகாது நம்மைப் பாதுகாக்கும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது அவரை விசுவாசித்ததான ஜனங்கள் மத்தியில் அநேக அற்புத, அடையாளமான பலத்த கிரியைகளைச் செய்தார். இயேசு தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம் பண்ணினபோது ஜனங்கள் அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். ஆகவே, அவர்களது அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கு அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.

*அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சிறு பெண்ணின் தாயாகிய ஒரு ஸ்திரீ அவரைக்குறித்துக் கேள்விப்பட்டு, வந்து அவர் பாதத்தில் விழுந்தாள். அந்த ஸ்திரீ சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீயாயிருந்தாள்; அவள் தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்திவிடவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டாள். இயேசு அவளை நோக்கி: முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும்; பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். அதற்கு அவள்: மெய்தான், ஆண்டவரே, ஆகிலும், மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். அப்பொழுது, அவர்: நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம், பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று என்றார். அவள் தன் வீட்டுக்கு வந்தபொழுது, பிசாசு போய்விட்டதையும், தன் மகள் கட்டிலில் படுத்திருக்கிறதையும் கண்டாள். (மாற்கு 7 : 25 - 30).*

கிரேக்க ஸ்திரீயாகிய அவள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், அவர் அற்புதமாய் சுகமளிக்கிறவர் என்ற செய்தியையும் கேள்விப்பட்டாள். அதைக் கேட்டபோது இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கையும், நம்பிக்கையில் உறுதியும் உண்டானது. அவள் இயேசுகிறிஸ்துவிடம் வந்து தன்னுடைய மகளின் விடுதலைக்காக கூப்பிட்டபோது, அவர் அவளது விசுவாசத்தைச் சோதித்துப் பார்த்தார்.

புறஜாதிகளை யூதர்கள் நாய்கள் என்று சொல்லுகிற ஒரு பழக்கம் இருந்தது. அவளுடைய விசுவாசத்தை ஆண்டவர் சோதித்துப் பார்த்தாரேயல்லாமல், அவளைக் குறையாகச் சொன்னது அல்ல. அவர் எல்லாரையும் ஒன்றுபோல் நேசிக்கிறவர். புறஜாதியாளான அந்த ஸ்திரீ இயேசுகிறிஸ்துவிடம் பூரணமான விசுவாசத்தோடு காணப்பட்டதால், அவர் அவளிடம்: நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம். பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று என்றார்.

அந்த ஸ்திரீயிடம் இருந்ததான விசுவாசம் நம்மிடம் இருக்கிறதா? நாம் ஆண்டவரைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறோம், கேள்விப்பட்டுக்கொண்டே இருக்கிறோம், அவரால் எவ்வளவோ நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். ஆனாலும் ஒரு கஷ்டமும், நெருக்கமும் வரும்போது அவரை மறந்து விசுவாசத்தை விட்டு வழி விலகிப் போகிறோம், கர்த்தரை விசுவாசித்துப் பிழைக்கிற நமக்கு சோதனைகள், போராட்டங்கள் உண்டு. சில வேளைகளில் நாம் கூப்பிடும்போது அதற்கேற்ற பதில் உடனே கிடைக்காமலும் இருக்கலாம். ஆனாலும் நாம் சோர்ந்து போகாமல் இன்னும் அதிகமாய் அதிக ஊக்கத்தோடு ஜெபம்பண்ண வேண்டும். கர்த்தர் நம்மை சோதிக்கும்போது முதலிலே நாம் தோற்றுப் போவோமேயாகில், கடைசிவரை எப்படி நம்மால் நிலைநிற்க முடியும்.

> *உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.*
>
> *(யாக்கோபு 5 : 14 - 16).*

இது தான் கர்த்தருடைய சபைக்கு கர்த்தர் கொடுத்திருக்கிறதான சொஸ்தமாகுதல். இதற்கு மாறான நிலையோடு காணப்படுகிறவர்கள் விசுவாசமுடையவர்கள் அல்ல. இவ்விதமான பூரணமான விசுவாசத்தோடு காணப்படுகிறவர்கள் இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியானவர்கள்.

## 2. பூரணமான மனத்தாழ்மை:

அடுத்தபடியாக இராப்போஜனத்தில் பங்கு பெறுகிறவர்கள் பூரணமான தாழ்மையின் அனுபவமுடையவர்களாய் காணப்பட வேண்டும். பெருமையின் குணத்தினின்று நீங்கலாகி, இயேசுகிறிஸ்துவில் காணப்பட்ட தாழ்மையை அணிந்து உலகத்தில் வாழ்கிறவர்கள், அவ்விதமான தாழ்மையின் சிந்தையோடு பணிந்த சிந்தையோடு காணப்படுகிறவர்கள் மாத்திரமே இராப்போஜனதில் பங்குபெற தகுதியானவர்கள்.

> *மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். (மீகா 6 : 8).*

இந்த வசனத்தில், தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையே கர்த்தர் விரும்புகிறார் என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மனத்தாழ்மை என்றால் நாம் அடுத்தவர்கள் பார்வையில் தாழ்மையுள்ளவர்கள் போல் காட்டிக்கொள்வது அல்ல.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மிகவும் உயர்ந்தவராய் இருந்தும் பாவிகளான நம்மை மீட்கும்படியாக தம்மைத் தாமே தாழ்த்தி, தாழ்மையின் கோலமெடுத்தார். பாவிகளோடு சஞ்சரித்தார்.

தாழ்மை நம்மிடம் இருக்கவேண்டுமானால் சுயம் நம்மை விட்டு அகற்றப்பட்டு போகவேண்டும்.

### 2.1. இயேசுகிறிஸ்துவின் தாழ்மை:

> *அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,*

*தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*

*(பிலிப்பியர் 2 : 6 - 8).*

*ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.*

*(பிலிப்பியர் 2 : 3).*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று சொன்னார். அவர் தாழ்மையான வழியில் தம்முடைய வாழ்க்கையை அமைத்து, நமக்கு மாதிரி காண்பித்தார். தாம் உருவாக்கின மனுஷர்களாகிய தமது சீஷர்களுடைய பாதங்களைக் கழுவினார். நாமும் இப்படிச் செய்யவேண்டுமென்பதாக நமக்கு அறிவித்திருக்கிறார். மாம்சமான எந்த மனுஷனும் தேவனுக்கு முன்பாக பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். நாம் தேவனுக்கு முன்பாக மட்டுமல்ல எந்தவொரு மனுஷனுக்கு முன்பாகவும் பெருமை பாராட்டாத குணங்கள் தான் தாழ்மைக்கு அடையாளம்.

## 2.2. பணிந்த சிந்தனைக்கு மாதிரியான உண்மையான ஒரு சம்பவம்:

மலையாடுகளுக்கு செங்குத்தான இடங்களில் மேல்நோக்கிச் செல்லக்கூடிய பழக்கம் உண்டு. மற்ற ஆடுகளால் அப்படி போக முடியாது. அப்படியிருக்க 2 ஆடுகள் 2 பக்கமாக வந்துகொண்டிருந்தது. மலையின் உச்சி போன்ற இடத்தில் வரும்போது மிகக் குறுகியதான பாதை. அதாவது 2 கால்களை வைத்து நடக்கக்கூடிய இடம் தான் உண்டு. அப்படிப்பட்ட இடத்தில் 2 ஆடுகளும் வந்து சேர்ந்தன. நேர் முன்னால் பார்க்கும்போது நேரே ஒரு சுவர் மாதிரி இருக்கிறது. அதின் மேல் ஏறிப் போகவும் முடியாது; மறுபக்கம் பார்த்தால் பாதாளம் போன்ற குழியாக இருந்தது. 2 ஆடுகளும் திரும்பிப் போகவும் முடியாது. ஏனென்றால் திரும்பிப்போக அதற்கேற்ற இடம் அங்கு இல்லை. இப்படியிருக்க அதில் ஒரு ஆடு வந்த வழியில் அப்படியே படுத்துக் கொண்டது. அப்பொழுது மற்ற ஆடு படுத்திருந்த ஆட்டின் மீது

பலமாக மிதித்து அந்தப் பக்கம் போனது. இப்படியாக 2 ஆடுகளும் தாங்கள் தீர்மானித்திருந்த இடங்களுக்குப் போயின. அந்த 2 ஆடுகளுக்குள்ளும் உனக்கு நான் ஏன் வழி விட வேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால் அதே இடத்தில் தான் நின்று கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில் முட்டி மோதுமேயானால் 2 ஆடுகளும் மடிந்துபோகும். அதுபோல தாழ்மை ஒரு மனுஷனுக்குள் இருக்கும்போது அநேக பிரச்சனைகள் அகற்றப்பட்டுப் போகிறது.

### 2.3. கர்த்தருடைய அப்போஸ்தலர்களின் தாழ்மை:

*வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது. பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன? ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது.*

*(அப்போஸ்தலர் 3 : 7, 12, 15, 16).*

அப்போஸ்தலர்களாகிய பேதுருவும் யோவானும் பிறவிச் சப்பாணியை இயேசுவின் நாமத்தில் நடக்கப்பண்ணினார்கள். ஜனங்கள் இதைப் பார்த்ததும் அப்போஸ்தலர்களை மிகவும் மேலானவர்களாகப் பார்த்தார்கள். அப்பொழுது அவர்கள் நீங்கள் எங்களை விசேஷமானவர்களென்று நோக்கிப் பார்க்கிறதென்ன? நாங்கள் எங்களது சுயபெலத்தினாலே இதைச் செய்யவில்லை. இயேசுவின் நாமமே இவனுக்கு இந்த சர்வாங்க சுகத்தைக் கொடுத்தது என்று சொல்லி கிறிஸ்துவுக்கு சாட்சிகளாகக் காணப்பட்டார்கள்.

*அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். (ரோமர் 12 : 3).*

## 2.4. ஆயக்காரனின் தாழ்மை:

நாம் வேதத்தில் பார்க்கும்போது தாழ்மையை தன்னுடைய வாழ்க்கையில் கடைபிடித்த ஆயக்காரனையும் பெருமையோடு காணப்பட்ட பரிசேயனையும் குறித்து லூக்கா 18:9-14ல் சொல்லப்பட்டுள்ளது.

*அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்: இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு: தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுவான் என்றார்.*

பரிசேயன் தன்னைக் குறித்து பெருமையாக ஜெபம் பண்ணினதினாலும் உபவாசம் பண்ணினதினாலும், கர்த்தருக்கு காணிக்கை செலுத்தினதினாலும் எந்த பிரயோஜனமும்

உண்டாகவில்லை. காரணம் என்னவென்றால்: தன்னைக் குறித்து தான் எண்ண வேண்டியதற்கு மிஞ்சி அவன் எண்ணினான். நான் ஒரு மனுஷன். நான் மண் என்று எண்ணாமற்போனான். ஆகவே, அவனுக்கு ஒரு ஆசீர்வாதமும் கிடைக்கவில்லை.

நம்மில் அநேகருக்கும் தங்களைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சின எண்ணங்கள் இருப்பதால் எவ்வளவோ ஜெபம்பண்ணியும், கண்ணீர் வடித்தும் ஆசீர்வாதங்கள் கிடைக்கவில்லை.

ஆயக்காரன் தன் நிலைமையை உணர்ந்து கொண்டதால் தேவனிடத்திலிருந்து இரக்கத்தைப் பெற்றுக்கொண்டான். நாமும் நம்முடைய நிலைமைக்கு ஏற்றபடியான எண்ணம் உடையவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

## 2.5. தாழ்மைக்கு எடுத்துக்காட்டான ஒரு சரித்திரம்:

1847-ம் ஆண்டு ஜேம்ஸ் சிம்சன் என்பவர் குளோரோஃபாம் என்ற மயக்கமருந்தைக் கண்டுபிடித்தார். இன்னும் அநேக கண்டுபிடிப்புகளையும் கண்டுபிடித்தார். சில வருஷங்கள் கழிந்த பிறகு பத்திரிக்கையாளர்கள் அவரிடம் பேட்டி எடுப்பதற்காகப் போய், அவரிடம் நீங்கள் கண்டுபிடித்ததில் மிக முக்கியமான கண்டுபிடிப்பு என்ன என்று கேட்டார்கள். அவரிடம் கேள்வி கேட்டவர்கள் அவர் கண்டுபிடித்ததில் முக்கியமானது குளோரோஃபாம் என்று அவர் சொல்லுவார் என்று நினைத்தார்கள். ஏனென்றால் அதுவரைக்கும் ஆட்களை சுயநினைவோடு வைத்துக்கொண்டு தான் அறுவை சிகிட்சை செய்வார்கள். அவர் குளோராஃபாமை கண்டுபிடித்த பின்பு இந்த மயக்க மருந்தை வைத்து, ஆட்களை சுய நினைவை இழக்கச் செய்து அறுவை சிகிட்சை செய்து வந்தனர். இந்தப் பெரியதான காரியத்தை கண்டுபிடித்த பின்பும் அவர் பத்திரிக்கையாளர்களிடம், நான் என்னை பாவி என்று கண்டுபிடித்தேன் என்று தாழ்மையாகச் சொன்னார். அவர் தன்னுடைய படிப்பையோ பட்டத்தையோ செல்வாக்கையோ பெரிதாக எண்ணவில்லை. மனுஷனுக்கு மிகவும் முக்கியமானது என்னவென்றால் தான் பாவியா அல்லது பரிசுத்தவானா. நான் இன்று மரித்தால் பரலோகராஜ்யம் போவேனா அல்லது நரகத்திற்கு போவேனா என்பதைக் குறித்து சரியாக அறிந்து கொள்வதாகும். ஆகவே, ஜேம்ஸ்

சிம்சன் தன்னைப் பாவி என்று கண்டுபிடித்தது மிகப் பெரிதான கண்டுபிடிப்பு என்பதாகச் சொன்னார்.

நம்மில் அநேகர் நம்முடைய நிலைமைக்கு மிஞ்சின எண்ணமுடையவர்களாக இருக்கிறோம்.

## 2.6. யோனத்தானின் தாழ்மை:

*நீர் பயப்படவேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டுபிடிக்கமாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்; அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான்.*

*(I சாமுவேல் 23 :17).*

சவுல், தாவீது தனக்குப் பின்பு ராஜ்யபாரத்திற்கு வரக்கூடாதென்ற எண்ணத்தோடு அவனைக் கொலைச் செய்யும்படியாக பிரயாசப்பட்டான். ஆனால் சவுலின் மகனாகிய யோனத்தானோ தாவீதை தேவன் ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருப்பதினால், தகப்பனுக்குப் பின்பு தனக்கு கிடைக்கவேண்டிய ராஜ்யபார விருப்பத்தையே விட்டுவிட்டான். அக்காலத்தில் பரிசுத்தஆவி அருளப்படாதிருந்தும் யோனத்தான் தன்னைக் குறித்து எவ்வளவு மனத்தாழ்மை உடையவனாய் காணப்பட்டான் என்பதை சிந்தித்துப் பாருங்கள். சவுல் தாவீதைக் கொலைச் செய்யத் தேடியும் யோனத்தான் தாவீதிடம், நீ பயப்படாதே, நீ தான் ராஜாவாய் இருப்பாய்: நான் உனக்கு கீழே தான் இருப்பேன் என்று அவனைத் திடப்படுத்தினான். யோனத்தான் தன்னுடைய எண்ணங்களை தேவ சித்தத்திற்குள் அமைத்துக் கொண்டான். தன் நிலைமைக்கு ஏற்றபடி எண்ணினதால் சாட்சியாக ஜீவித்தான்.

## 2.7. அப்போஸ்தலனாகிய பேதுருவின் மனத்தாழ்மை:

*பேதுரு உள்ளே பிரவேசிக்கிறபொழுது, கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவன் பாதத்தில் விழுந்து, பணிந்துகொண்டான். பேதுரு அவனைத் தூக்கியெடுத்து: எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான் என்றான்.*

*(அப்போஸ்தலர் 10 : 25, 26).*

பேதுரு அப்போஸ்தலர் நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியுவின் வீட்டில் போனதும், நூற்றுக்கு அதிபதி அவருடைய பாதத்தில் விழுந்தான். பேதுரு அப்போஸ்தலர் அதை விரும்பவில்லை. கொர்நேலியுவை தூக்கியெடுத்து, எழுந்திரும், நானும் ஒரு மனுஷன் தான் என்றார்.

## 2.8. தங்களைத் தாழ்த்தினதினால் தப்புவிக்கப்பட்டவர்கள்:

*கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்கு உண்டாயிற்று, அவர்: நீ எழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைச் சந்திக்கும்படி போ; இதோ, அவன் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தைச் சொந்தமாய் எடுத்துக்கொள்ள அங்கே போயிருக்கிறான். நீ அவனைப் பார்த்து: நீ கொலை செய்ததும் எடுத்துக்கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார். நீ எனக்குக் கோபம் உண்டாக்கி, இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணினதினிமித்தம், உன்னுடைய குடும்பத்தை நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் குடும்பத்துக்கும், அகியாவின் குமாரனாகிய பாஷாவின் குடும்பத்துக்கும் சமானமாக்குவேன் என்றார் என்று சொன்னான். ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின்மேல் இரட்டைப் போர்த்துக்கொண்டு, உபவாசம்பண்ணி, இரட்டிலே படுத்துத் தாழ்மையாய் நடந்துகொண்டான்.*

*(I இராஜாக்கள் 21 : 17 - 19, 22, 27).*

ஆகாப் ராஜாவின் அரண்மனையின் பக்கத்தில் நாபோத் என்ற ஒரு மனுஷனுடைய திராட்சைத்தோட்டம் இருந்தது. அதை ஆகாப் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளும்படி கேட்டான். அதற்கு நாபோத் இது என்னுடைய பூர்வீக சொத்து, இதை நான் தரமாட்டேன் என்று சொன்னான். ஆகவே அவனுடைய சொத்தை தனக்குச் சொந்தமாக்கும்படியாக ஆகாபின் மனைவியின் யோசனையினால் அவனைக் கல்லெறிந்து கொலைசெய்தார்கள். அதன் பிறகு அந்த

தோட்டத்திற்கு நேராக ஆகாப் ராஜா போகும்போது கர்த்தர் எலியா தீர்க்கதரிசியை ஆகாப் ராஜாவினிடத்தில் அனுப்பி, அவன் செய்த கொலையினிமித்தம் அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் சம்பவிக்கப்போகிறதைக் குறித்துப் பேசினார். அப்பொழுது ஆகாப் தான் செய்த துரோகத்தை உணர்ந்து கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினான். ஆகவே, அவனுடைய மனத்தாழ்மையானது அவனை கொஞ்ச நாட்கள் கூட வாழ வைத்தது.

*எருசலேமிலே என் நாமம் என்றென்றைக்கும் விளங்கும் என்று கர்த்தர் சொன்ன தம்முடைய ஆலயத்திலே பலிபீடங்களைக் கட்டி, கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினான். அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தன் குமாரரைத் தீமிதிக்கப்பண்ணி, நாளும் நிமித்தமும் பார்த்து, பில்லிசூனியங்களை அநுசரித்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்கு மிகுதியும் பொல்லாப்பானதைச் செய்தான். (II நாளாகமம் 33 : 4 - 6).*

மனாசே என்ற ராஜா எருசலேம் தேவாலயத்துப் பிராகாரங்களில் வானசேனைகளுக்கு பலிபீடங்கட்டி கர்த்தர் விரும்பாத அநேக காரியங்களைச் செய்துவந்தான். அவன் கர்த்தருக்குக் கோபம் உண்டாகத்தக்கதாக அநேகம் பொல்லாப்புகளைச் செய்தான். கர்த்தர் மனாசேயோடும் அவனது ஜனங்களோடும் பேசினபோதும் அவருடைய வார்த்தைக்கு அவர்கள் செவிகொடுக்கவில்லை. பின்பு அவன் அசீரியா ராஜாவால் நெருக்கப்பட்டபோது, கர்த்தரை நோக்கிக் கெஞ்சி, தன்னை மிகவும் தாழ்த்தி விண்ணப்பம் பண்ணினான். கர்த்தர் அவனுடைய மனத்தாழ்மையைப் பார்த்து, அவனைத் திரும்பவும் எருசலேமிலுள்ள தன்னுடைய ராஜ்யத்திற்கு வரப்பண்ணினார்.

*நியாயப்பிரமாணத்தின் வார்த்தைளை ராஜா கேட்டபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,*

*இந்த ஸ்தலத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாகத் தேவன் சொன்ன அவருடைய வார்த்தைகளை நீ கேட்கையில்,*

*உன் இருதயம் இளகி, எனக்கு முன்பாக நீ உன்னைத் தாழ்த்தி, எனக்கு முன்பாகப் பணிந்து, உன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, எனக்கு முன்பாக அழுதபடியினால், நானும் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (II நாளாகமம் 34 : 19, 27).*

யோசியா என்பவன் எட்டு வயதில் ராஜாவாகி, ராஜாவாகிய மனாசே எருசலேம் தேவாலயத்தில் செய்திருந்த அருவருப்புகளை அகற்றி, தேவாலயத்தை சுத்திகரித்தான். அப்பொழுது நியாயப்பிரமாண புஸ்தகம் தேவாலயத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது. அதை ராஜாவினிடத்தில் கொண்டுவந்து, சம்பிரதியாகிய சாப்பான் வாசித்தான். அதில் ஜனங்கள் கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போகிறதினால் வருகிற சாபமாகிய காரியங்கள் எழுதப்பட்டிருந்தது. ராஜா அதைக் கேட்டபொழுது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு தன்னைத் தாழ்த்தினான். பின்பு, அந்தப் புஸ்தகத்திலுள்ள காரியங்களை விவரமாய் அறிந்துகொள்கிறதற்காக உல்தாள் என்ற தீர்க்கதரிசியிடம் ஸ்தானாபதிகளை அனுப்பினான். அப்பொழுது அவள் யோசியா ராஜ்யபாரத்திற்கு வரும் முன் யூதா ஜனங்கள் நடப்பித்த அக்கிரமங்களினிமித்தம் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். ஆனாலும் யோசியா கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதினிமித்தம் அவனை விடுவிப்பேன் என்பதாக உல்தாள் தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் அறிவித்தார்.

*தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம். (நீதிமொழிகள் 22 : 4).*

நாம் மனத்தாழ்மை உள்ளவர்களாய் காணப்படுவோமேயானால், ஐசுவரியத்தினாலும், மகிமையினாலும் தேவனுடைய ஜீவனாலும் நிறைக்கப்பட்டவர்களாயிருப்போம்.

*நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார். (சங்கீதம் 103 : 14).*

நாம் நம்மை பெரியவர்களென்று எண்ணலாம். ஆனால் தேவன் நம்மை மண்ணென்று நினைவுகூருகிறார். ஆகவே, நாம் மனத்தாழ்மையை அணிந்துகொள்ளவேண்டும்.

*ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; (கொலோசெயர் 3 : 12).*

நாங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், கர்த்தருடைய சபையார் என்று சொல்லுகிறவர்களுக்குள் இவ்விதமான காரியங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

மனத்தாழ்மையை நாம் வஸ்திரத்தை எப்போதும் அணிந்திருப்பது போல, அணிந்துகொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

*தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள். (செப்பனியா 2 : 3).*

நாம் மனத்தாழ்மையை அணிந்து கொள்வோமானால் தேவ கோபம் உலகம் முழுதும் பற்றியெரிந்தாலும் அதற்கு நாம் தப்புவிக்கப்படுவோம்.

## 2.9. மனத்தாழ்மைக்கு மாறான பெருமையான எண்ணத்தின் விளைவுகள்:

*அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய். (ஏசாயா 14 : 12 - 15).*

மிகவும் விசேஷமாக சிருஷ்டிக்கப்பட்ட தேவதூதன் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணினான். ஆகவே

தள்ளப்பட்டுப் போனான். தன்னுடைய நிலைமையை விட மிஞ்சி எண்ணின தேவதூதனுக்கே இந்த நிலைமை என்றால் நம்முடைய நிலைமை என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

## 2.10. அகந்தையினால் வந்த விளைவு:

1986வது வருஷம் ரஷ்யாவில் நடந்த ஒரு உண்மையான சம்பவம். 2 கப்பல்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அதினால் 100-க்கும் அதிகமான பயணிகள் கடலிலே மூழ்கி உயிரிழக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த விபத்து நடக்கக் காரணம் என்ன என்று 2 கப்பல்களையும் கவனிக்கிற கேப்டன்களிடம் விசாரித்தபோது அவர்கள் சொன்னது: இப்படி 2 கப்பல்களும் நேருக்கு நேர் வந்தபோது 2 பேரும் மாறி மாறி அவனுக்கு நான் ஏன் வழிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்கள். பக்கத்தில் வந்த பின்பும் மாறி மாறி வழி விட்டுத் தருவானென்று மனதில் எண்ணிக்கொண்டார்கள். 2 பேரும் அகந்தையான சிந்தனையோடு காணப்பட்டு, பக்கத்தில் வந்தபின்பு வழி விடும்படியாக பிரயாசப்பட்டுப் பார்த்தும் அவர்களால் இயலாமல் போய், ஏராளமான பயணிகள் உயிரிழந்தார்கள் என்று சொன்னார்கள். பணிந்த சிந்தை இல்லாமல் போனதினால் ஏற்பட்ட விளைவுகளைப் பாருங்கள்.

நம்மில் அநேகரிடத்திலே இப்பொழுது தாழ்மையானது எடுக்கப்பட்டதான நிலைமையோடு காணப்படுகிறது.

எந்த மனுஷனானாலும் தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். ஆகவே யாவரும் கர்த்தருக்கு முன்பாகவும் இன்னும் யார்யாருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்த வேண்டியதோ அவர்களெல்லாருக்கு முன்பாகவும் தங்களைத் தாழ்த்தி அதன் மூலமாக மிகவும் ஆசீர்வதிக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

## 3. பூரணமான பரிசுத்தம்:

இராப்போஜனத்தில் பங்குபெற பூரணமான பரிசுத்தம் தேவையாய் இருக்கிறது.

> *கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன். (லேவியராகமம் 20 : 26).*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்து பரிசுத்த ஆவியானவரை இந்த உலகத்தில் அனுப்பின பிறகுள்ளதான இந்த காலத்தில்கூட பரிசுத்தமாக வாழ்வது என்பது சற்று கடினமான காரியமாக இருக்கிறது. ஆனால் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னே தேவனுடைய ஜனங்கள் பரிசுத்தமாக வாழ்வதையே தேவன் எதிர்பார்த்திருக்கிறார். நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்கள் எனக்கேற்ற பரிசுத்தராயிருங்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அக்காலத்தில் காணப்பட்ட ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது நியாயப்பிரமாணம். ஒருவன் ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றவன் மாறி அடிக்கலாம், அந்த ஜனங்களிடத்தில் அப்பொழுது இருந்த பெலனும் அப்படிப்பட்டதாகத் தான் இருந்தது. ஒரு மனுஷன் பரிசுத்தமாய் நடக்க வேண்டுமானால், இன்ன இன்னபடி தான் நடக்க வேண்டும் என்று கற்பனைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பரிசுத்தமாய் நடக்க வேண்டுமானால் மற்ற ஜனங்களை விட்டு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்கிறவர்களாய்க் காணப்பட வேண்டும். நம்முடைய நடக்கைகளிலும் பரிசுத்தம் விளங்க வேண்டும். நியாயப்பிரமாணத்தின் காலத்திலே தேவன் பரிசுத்தத்தை எதிர்பார்த்திருக்கிறாரென்றால், அவர் இந்த உலகத்தில் வந்து இரத்தஞ்சிந்தி பாடுபட்டு மரித்து பரிசுத்த ஆவியானவராக இந்த உலகத்திலே வெளிப்பட்டதான இந்த காலத்திலே எவ்வளவு அதிகமாய் பரிசுத்தத்தை எதிர்பார்ப்பார் என்பதை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

மனுஷனுடைய நடக்கைகள் பரிசுத்தமாய் இருக்க வேண்டுமானால், அவனுடைய சிந்தனைகள், அவனைப் பரிசுத்தமாய் வழிநடத்த

வேண்டும். அப்படியானால், மனுஷனுடைய நினைவுகளும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும்.

*யூதா ஜனங்கள் துரோகம்பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது; கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள். இப்படிச் செய்கிறவன் எவனோ, அவன் காவல்காக்கிறவனாயினும், உத்தரவு கொடுக்கிறவனாயினும், சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவனாயினும், அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார்.*

*(மல்கியா 2 : 11, 12).*

கர்த்தர் பரிசுத்தத்தை அதிகமாய் சிநேகிக்கிறார். அது மாத்திரமல்ல, பரிசுத்தத்தை உடைய பரிசுத்தவான்களையும் அதிகமாய் சிநேகிக்கிறார். பரிசுத்தமில்லாதவர்களை தேவன் அதிகமாய் வெறுக்கிறார். அப்படியானால், நாம் தேவன் விரும்பக்கூடிய பரிசுத்தத்தை உடையவர்களாய் இருக்கிறோமா அல்லது தேவன் வெறுக்கக்கூடிய பாவத்தை உடையவர்களாய் இருக்கிறோமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். கர்த்தரால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கற்பனைகள், சட்டதிட்டங்களை மீறுவது கர்த்தருடைய பரிசுத்தத்திற்கு குலைச்சல் உண்டாக்குகிற காரியமாகும். அப்படிச் செய்கிறவன் ஜனங்களை காவல்காக்கிற காவல்காரனாய் இருந்தாலும், ஜனங்களை நடத்தக்கூடிய பெரிய அதிகாரியாய் இருந்தாலும், தனக்கு விளைந்த எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்துகிற மனுஷனாக இருந்தாலும் கூட அவன் தண்டிக்கப்படுவான்.

*பின்பு ஆரோனின் குமாரனாகிய நாதாபும் அபியூவும் தன் தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள்*

*கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள். அப்பொழுது மோசே ஆரோனை நோக்கி: என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு; சகல ஜனங்களுக்கும் முன்பாக நான் மகிமைப்படுவேன் என்று கர்த்தர் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்.(லேவியராகமம் 10 : 1- 3).*

ஆசாரியர்கள் கர்த்தருக்கு தூபங்காட்ட வேண்டுமேயானால் பலிபீடத்தில் எப்பொழுதும் அக்கினி இருக்கும். அந்த அக்கினியை எடுக்காமல் வேறு இடத்திலிருந்து அக்கினி எடுத்துக் கொண்டு வந்து, தூபங்காட்டியதால் நாதாப், அபியூ என்னும் ஆரோனின் குமாரர் இருவரும் கர்த்தருடைய சமுகத்தில் செத்துப்போனார்கள். இப்படிப்பட்ட சிறிய காரியத்திற்கும் தேவ கோபம் மூழக்காரணம் என்னவென்றால்: தேவனிடத்தில் சேரும்படியாக அவரால் பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள் கர்த்தருடைய கற்பனைகளை விட்டு விலகும்போது அவர்களைப் பார்க்கிற மற்றும் ஜனங்கள் தேவனையே குறைகூற இடமுண்டாகிறது. இதனால் பரிசுத்தக்குலைச்சல் உண்டாகிறது. நாம் கர்த்தருடைய கற்பனையின்படி செய்யும்போது தேவனுடைய நாமம் மகிமைப்படுகிறது.

*கர்த்தர் மோசேயை நோக்கி: நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார்: அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது,*

*சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது. பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார். (எண்ணாகமம் 20 : 7 - 12).*

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயை அதிகமாய் நெருக்கினதினால், மன வேதனையினால் அவர்களிடம் கோபமடைந்து, அந்த கோபத்தினால் தேவன் கன்மலையைப் பார்த்து பேசச்சொன்ன காரியம் ஞாபகமில்லாமல், இதற்கு முன் கன்மலையை அடித்த ஞாபகத்தில் மோசே கோலை ஓங்கி கன்மலையை அடித்தார். கன்மலையை அடித்தபோது, கர்த்தருடைய கிரியையினால் தண்ணீர் புறப்பட்டு வந்தது. ஆனால் மோசே கர்த்தருடைய வார்த்தையை மீறினதினால் கானானுக்குள் பிரவேசிக்கக் கூடாமற்போயிற்று.

### 3.1. ஆசாரியன்(தேவ ஊழியக்காரன்) எப்படி இருக்க வேண்டும்?

(லேவியராகமம் 21 ம் அதிகாரம் முழுவதும் வாசிக்க)

ஆசாரியர்களுக்கும் பிரத்யேகமான கட்டளைகள் கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்திலுள்ள ஆசாரியர்கள் தகனபலி மற்றும் பலிகளைச் செலுத்துகிறதான ஆசாரியர்கள். அவர்கள் பரிசுத்தமாய் இருக்கவேண்டுமானால் இன்ன இன்னபடி தான் இருக்கவேண்டுமென்று கற்பனை கொடுக்கப் பட்டிருந்தால் நாம் அதை விட எத்தனை மடங்கு அதிகமாய் பரிசுத்தமாக நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், நாம் அந்த தேவனையே சுமக்கக்கூடியவர்கள். நாம் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டுமானால் முதலாவது நாம் தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாய் இருக்கவேண்டும். அப்படியானால் உலக சிநேகம், மாமிசப் பற்று, குடும்பப் பற்று ஆகியவை நமக்குள் இருக்கக் கூடாது. எல்லாக் காரியங்களிலும் எது சரி, எது சரியில்லையென்று புரிந்து செயல்பட்டால் தான் பரிசுத்தம் நமக்குள் இருக்கும்; இல்லாவிட்டால் இருக்காது.

*புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம்விட்டுப் போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்; கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள். (ஏசாயா 52 : 11).*

நாம் ஒரு காரியத்தில் ஈடுபடும்போது நாம் செய்கிற இந்த காரியம் கர்த்தருக்கு பிரியமாக இருக்குமா? இல்லாவிட்டால் அது ஜீவியத்தையே கறைப்படுத்தி பரிசுத்தக்குலைச்சல் உண்டாக்குமா என்பதை சிந்தித்துச் செயல்படவேண்டும். மேலும் ஒவ்வொரு நாட்களிலும் தன்னுடைய ஜீவியத்தை ஆராய்கிறவர்களாகக் காணப்படவேண்டும். இன்று என் ஜீவியம் எப்படி இருந்தது? தேவனுக்கு பிரியமில்லாத காரியம் வந்ததுண்டா என்று பார்க்க வேண்டும். யோபு என்கிற நீதிமான் கர்த்தருக்குள் தன்னை பரிசுத்தமாய்க் காத்துக்கொண்டான். தன் பிள்ளைகள் சேர்ந்து விருந்துபண்ணினாலும் அவர்கள் விருந்துபண்ணுகிற சந்தோஷத்தில் ஏதாவது பாவஞ்செய்திருப்பார் களென்று அதிகாலையில் அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான். ஆகவே, தன்னுடைய சிநேகிதர் தன்னிடம் பல கேள்விகள் கேட்டபோது தன்னுடைய உத்தமத்தில் உறுதியாய் நின்றான். நாமும் நம்முடைய ஜீவியத்தை ஒவ்வொரு நாளும் திரும்பிப் பார்ப்போமோனால், தேவனுக்கு உகந்த ஓர் பாண்டமாக நாம் மாறலாம்.

*தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். (தானியேல் 1 : 8).*

தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் இஸ்ரவேல் தேசத்திலிருந்து அடிமைகளாக பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டவர்கள். சாதாரணமாக அடிமைகளை கடினமான வேலைகள் கொடுத்து கஷ்டப்படுத்துவார்கள். ராஜா எதைச் சொன்னாலும் அவர்கள் கேட்கவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில்

காணப்பட்டவர்களுக்கு ராஜ அரண்மனையில் இருக்கக்கூடிய பாக்கியம் கிடைத்தது. அப்படியிருக்க தானியேல் தீர்க்கதரிசி தனக்கு முன் வைக்கப்பட்ட ராஜபோஜனத்தினால் தன்னை தீட்டுப்படுத்த லாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டார். தானியேல் தீர்க்கதரிசி தனது ஜீவியத்தைக் குறித்து கருத்தாய்க் காணப்பட்டார். ஆகவே அவருடைய ஜீவியத்தில் வீழ்ச்சி என்பதே வரவில்லை. அவர் தினமும் 3 வேளை கர்த்தரிடமாக ஜெபம்பண்ணுகிற அநுபவத்தோடு காணப்பட்டார். ஆகவே பரிசுத்தமாய்த் தன்னை காத்துக்கொண்டார். நம் ஜீவியத்திலும் பரிசுத்தம் உண்டாக வேண்டுமானால் அதற்காக அதிகமாக ஜெபம்பண்ண வேண்டும்.

### 3.2. பரிசுத்தவான் எப்படி காணப்பட வேண்டும்?

*கன்மலையுச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு, குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்; அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்.*

*(எண்ணாகமம் 23 : 9).*

தேவன் ஆபிரகாமை தமக்கென்று தெரிந்துகொண்டு அவன் மூலம் பெரிய ஒரு ஜாதியை உருவாக்கினார். அந்த ஜாதியார் பரிசுத்தமாய் இருக்க வேண்டுமென்றும் விரும்பினார்.

*அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படா திருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப்*

*பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். (II கொரிந்தியர் 6 : 14 - 18).*

அப்படியானால் கர்த்தருடைய ஜனங்கள் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களைச் செய்கிற ஜனங்களோடு கூட்டுறவு வைக்கக் கூடாது. நீதிக்குள் எந்த அநீதியும் இராததுபோல அநீதிக்குள் எந்த நீதியும் இராது. ஒளிக்குள் எந்த இருளும் காணப்படாதது போல இருளுக்குள் எந்த ஒளியும் காணப்படாது. அதுபோல ஒரு மனுஷன் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டுமானால் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களுக்கு விலகியே ஆகவேண்டும். அப்பொழுது தான் நான் உங்களை ஏற்றுக்கொள்வேன் என்பதாகக் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

*திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.*

*(யாக்கோபு 1 : 27)*

உலகத்தால் எந்தவொரு காரணத்தினாலும் நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தில் எந்தவொரு கறையும் ஏற்படாதபடி நம்மை காத்துக்கொள்ள வேண்டும்.

*ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள். (I தீமோத்தேயு 5 : 22).*

மற்றவர்களைப் பிரியப்படுத்தி வாழும்போது தன்னை பரிசுத்தமாய் காத்துக்கொள்ள முடியாது.

*துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், (சங்கீதம் 1 : 1).*

*நீங்கள் தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, ஒலிமுகவாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங்கள்; ஒருவேளை*

*சேனைகளின் தேவனாகிய கர்த்தர் யோசேப்பிலே மீதியானவர்களுக்கு இரங்குவார். (ஆமோஸ் 5 : 15).*

பரிசுத்தமாய் நடக்க பகுத்தறிவும் தேவையாகக் காணப்படுகிறது.

*மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்.*

*(II தெசலோனிக்கேயர் 3 : 6).*

இது கர்த்தருடைய ஜனங்களுக்கு கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைச் செய்து தான் ஆக வேண்டும். சகோதரனாக இருந்தாலும் பேச்சுகள் சரியில்லை, ஒழுங்கற்று இருக்கிறார்களானால் அவர்களை விட்டு விலக வேண்டும்.

*ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். (கொலோசெயர் 3 : 5).*

இச்சை என்றால் ஏராளமான இச்சைகள் இருக்கிறது. மாம்ச இச்சை, ஒரு பொருளைக் குறித்த இச்சை, தூக்கத்தை அதிகமாக விரும்புவதும் இச்சை. இப்படிப்பட்ட இச்சைக்குரிய எந்த காரியங்களாலும் நம்மைத் தீட்டுப்படுத்தாதபடி காத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சரீரம் தேவன் தங்கும் ஆலயம். ஆகவே இச்சைக்குரிய எந்த காரியத்தாலும் நம்மை தீட்டுப்படுத்தலாகாது என்ற எண்ணத்தோடு எந்தெந்த காரியங்கள் நம்மைத் தீட்டுப்படுத்துமோ அவைகளுக்கு விலகி, ஜாக்கிரதையாய்த் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்.

*மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது.*

*(எபேசியர் 5 : 3).*

நாம் எல்லாவற்றையும் அநுபவிக்க வேண்டுமென்றிருப்போமானால் பரிசுத்தம் நமக்குள் இராது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எந்தவொரு பொருளுக்கும் அடிமைப்பட்டவரல்ல. ஆகவே தலை சாய்க்க இடமற்றவராகவே இந்த உலகத்தில் வந்தார்.

*இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,*

*ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோசெயர் 3 : 8, 9, 12, 13).*

பரிசுத்தவான் என்றால் இப்படிப்பட்ட குணங்கள் இருக்க வேண்டும்.

*சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார். (I தெசலோனிக்கேயர் 5 : 23, 24).*

தேவன் ஒருவரால் மட்டுமே நம்மை பரிசுத்தமாய் ஜீவிக்கச் செய்யமுடியும். அவர் மனுஷனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் பரிசுத்தப்படுத்தி, அவரது பரிசுத்த ஆவியினால் நிறைத்து பரிசுத்தமான பாதையில் வழிநடத்துகிறார். நாம் பரிசுத்தமாகுதலைப் பெற்றுக்கொள்ள அதற்காக சில வழிமுறைகளையும் வைத்திருக்கிறார்.

## 3.3. பரிசுத்தமாகுதலை பெற்றுக்கொள்வது எப்படி?

*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (I யோவான் 1 : 9, 7).*

பரிசுத்தமாகுதலை பெற்றுக்கொள்ள முதலாவது நம் பாவங்களை அறிக்கைபண்ண வேண்டும். அவர் நம்முடைய பாவங்களை, அவரது இரத்தத்தினால் கழுவி சுத்திகரித்து பரிசுத்தமாகுதலை நமக்குக் கட்டளையிட ஏற்ற அநுபவத்தோடு, நம்முடைய பாவங்களைக் குறித்ததான மனஸ்தாபத்தோடு, நொறுங்குண்ட இருதயத்தோடு, நருங்குண்ட ஆவியோடு ஜெபம்பண்ண வேண்டும். அவ்விதமாய் நாம் ஜெபம்பண்ணும்போது, அவர் நமக்குச் சமீபமாய் வந்து, நம்மைப் பாவமறக் கழுவி, பரிசுத்தமாகுதலைத் தர வல்லவராயிருக்கிறார்.

*உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம். (யோவான் 17 : 17).*

கர்த்தர் அவரது சத்தியத்தினாலே பரிசுத்தமாக்குகிறவர். அவருடைய வசனம் தான் சத்தியம்.

*அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். (யாக்கோபு 1 : 22).*

கர்த்தருடைய வசனத்தை வாசிக்கிறதினாலுமல்ல, அதை இருதயத்தில் பதிய வைக்கிறதினாலுமல்ல, வாசித்து, இருதயத்தில் பதிய வைத்து, அதை அப்படியே கைக்கொண்டு அவைகளின்படி நடக்கிறதினாலே தான் பரிசுத்தமுண்டாகும். அநேகர் வேதவசனத்தை மனப்பாடம் பண்ணியிருப்பார்கள். ஆனால் அதன்படியான எந்த அநுபவமும் அவர்களில் காணப்படாது. பைபிளில் 10 வசனம்

தெரிந்திருந்தாலும், அந்த 10 வசனத்தின்படி நாம் வாழ்வது தான் பிரதானமானது.

> *இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்.*
> *(ரோமர் 6 : 22).*

பரிசுத்த ஜீவியத்தில் வளர வேண்டுமானால், தன்னை ஆண்டவருக்கு அப்படியே ஒப்புக்கொடுத்து, அவருடைய சித்தத்தை மாத்திரம் செய்ய வேண்டும்.

> *இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிற படியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். (II கொரிந்தியர் 7 : 1).*

பரிசுத்தமாய் ஜீவிக்க தேவபயமும் தேவையாய் காணப்படுகிறது.

> *அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.*
> *(எபிரெயர் 12 : 10).*

பரிசுத்தமாகுதலை சொந்தமாக்க வேண்டுமானால் சிட்சையும் நமக்குத் தேவை. தகப்பன்மார் தங்கள் பிள்ளைகள் நல்லவர்களாய் காணப்பட வேண்டுமென்று கொஞ்சங்காலம் சிட்சிக்கிறார்கள். நம்முடைய தேவனோ நாம் அவரது பரிசுத்தத்தில் பங்குபெற்று, பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று நம்மை சிட்சிக்கிறார். அந்த சிட்சையை அற்பமாக எண்ணாமல், நான் பரலோகராஜ்யம் பிரவேசிக்கும்படியாகவே கர்த்தர் என்னை சிட்சித்திருக்கிறார் என்ற உணர்வோடு. அதைப் பொறுமையாக சகித்து, குற்றங்குறைகளை கண்டுபிடித்து, ஜெபம்பண்ணும்போது பூரணமான பரிசுத்தமாகுதலை சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

### 3.4. பரிசுத்தத்தை நாம் ஏன் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்?

> *கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. (I தீமோத்தேயு 1 : 5).*

ஒரு மனுஷனுக்குள் பரிசுத்தம் இருக்குமானால் அவனுக்குள் சுத்த இருதயம் இருக்கும். ஆவிக்குரிய ஜீவியத்தை விட்டு நம்மை வீழ்த்தக்கூடிய கெட்ட எண்ணங்கள் யாவும் மாறி இருதயம் சுத்தமாகி, நல்ல மனச்சாட்சியும் உண்டாகும்போது எல்லாவற்றிலும் மேலாக அன்பு அவர்களுக்குள் உண்டாகிறது. நாம் பரிசுத்தவான் என்று சொல்லி விட்டு நம்மை மாத்திரம் அன்பு செய்வோமானால் அது அன்பாகாது.

> *ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமா யிருப்பான். (II தீமோத்தேயு 2 : 21).*

சுத்த இருதயமுள்ள ஒரு பரிசுத்தவானாய் மாறினால் மாத்திரம் தான் நம்மால் நற்கிரியைகள் செய்ய முடியும். இல்லாவிடில் செய்ய முடியாது. நற்கிரியை செய்தால் தான் பரலோகராஜ்யத்திலும் பலன் கிடைக்கும். தேவன் நம்மை அவரது கரத்திலெடுத்து உபயோகப்படுத்த வேண்டுமேயானால் பரிசுத்தம் தேவையாய் காணப்படுகிறது.

> *இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். (மத்தேயு 5 : 8).*

பரிசுத்தம் நமக்குள் உண்டானால் இந்த உலகத்திலும் தேவனை தரிசிக்கலாம். அவருடைய ராஜ்யத்திலும் போய், அங்கேயும் அவரை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கிறது.

> *முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும்*

*கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். (வெளி 20 : 6).*

பரிசுத்தவான்களாகிய அவரது ஜனங்கள் மேல் இரண்டாம் மரணமாகிய நரகத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு கூட இந்த உலகத்தையும் 1000 வருஷம் அநுபவிப்பார்கள். அதன் பின்பு சதாகாலமும் பரலோகராஜ்யத்தையும் அநுபவிப்பார்கள்.

### 4. பூரணமான கீழ்ப்படிதல்:

இராப்போஜனத்தில் பங்குபெறத் தேவையான ஒரு முக்கியமான அநுபவம் பூரணமான கீழ்ப்படிதல்.

*நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். (உபாகமம் 10 :1 3).*

கீழ்ப்படிதல் என்றால் தேவனுடைய கற்பனைகளையும், கட்டளைகளையும், பிரமாணங்களையும் கைக்கொள்வதே ஆகும். அதையே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அதுவே நம்முடைய ஆசீர்வாதத்திற்கு ஏதுவானதாகும்.

கீழ்ப்படிதலுக்கு விசுவாசமும், நம்பிக்கையும் தேவையானதாக காணப்படுகிறது. ஒரு மனுஷனுக்கு ஒரு காரியத்தில் விசுவாசமும், நம்பிக்கையுமில்லாமல் இருக்கும்போது அவன் கீழ்ப்படிதலில்லாத வனாகக் காணப்படுகிறான். விசுவாசமும், நம்பிக்கையும் உண்டாகும்போது கீழ்ப்படிதலும் உண்டாகிறது.

நாம் எதற்கெல்லாம் கீழ்ப்படிய வேண்டுமென்றால் தேவனுக்கும், தேவனுடைய வசனத்திற்கும், தேவ ஊழியக்காரர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும். பிள்ளைகள் பெற்றாருக்கும், வாலிபர்கள் முதியோருக்கும், மனைவி புருஷனுக்கும் கீழ்ப்படிய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நன்மையான காரியங்கள் யார் நமக்குச் சொன்னாலும் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். அது நமக்கு நன்மையாக இருக்கும். கீழ்ப்படியாமை

என்பது நம்மிடம் ஒரு காரியத்தை சொல்லுகிறவர்கள் மீது நம்பிக்கை இல்லாததினாலும், சொல்லப்படுகிறதான வார்த்தைகள் மேல் விசுவாசம் இல்லாததினாலும் ஏற்படுகிறது. அநேகர் கீழ்ப்படியாமைக்கு இடங்கொடுத்து, கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதே தெரியாமல் காணப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால்: தேவன் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் விசுவாசம் இல்லாமலிருக்கிறதே ஆகும். இப்படிப்பட்ட எந்த மனுஷனும் கீழ்ப்படியவும் முடியாது. கீழ்ப்படிதலை வளர்த்துக்கொள்ளவும் முடியாது.

### 4.1. கீழ்ப்படிதல் என்றால் என்ன?

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய வாழ்க்கையில் பிதாவானவருக்கு முற்றிலுமாய் கீழ்ப்படிந்தவராய்க் காணப்பட்டார். இயேசு மீன் பிடிக்கிறவர்களாகிய பேதுருவையும், அந்திரேயாவையும், யாக்கோபையும், யோவானையும் அவர்கள் செய்துகொண்டிருந்த வேலையை விட்டு மனுஷர்களைப் பிடிக்கும்படியாக அழைத்தபோது, கர்த்தருடைய அழைப்பிற்கு கீழ்ப்படிந்து உடனே அவருக்குப் பின்சென்றார்கள்.

> *இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான். (யோவான் 4 : 50).*

இயேசு கப்பர்நகூமில் வந்தபோது ராஜாவின் மனுஷன் ஒருவன் மரண அவஸ்தையாயிருந்த தன் மகனை குணமாக்கும்படியாக, தன்னோடு கூட அவர் வர வேண்டுமென்று இயேசுவிடம் வேண்டிக் கொண்டான். இயேசு அவனை நோக்கி: நீ போ, உன் குமாரன் பிழைப்பான் என்று சொன்ன அந்த வார்த்தையை நம்பி, கீழ்ப்படிந்து அவன் போனபோது விடுதலை உண்டானது. இயேசு சொன்னதான அந்த வார்த்தையின் மீது ராஜாவின் மனுஷனுக்கு நம்பிக்கை இல்லாதிருந்தால் அவன் அவரைக் கூப்பிட்டுக்கொண்டே அந்த இடத்தில் காணப்பட்டிருப்பான். அவருடைய வார்த்தை அவனுடைய மகன் குணமடையத்தக்கதாக கிரியை செய்யவும் இடம் உண்டாயிருக்காது.

### 4.2. ஆபிரகாமின் கீழ்ப்படிதல்:

> *விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். (எபிரெயர் 11 : 8).*

ஆபிரகாமிடம் தேவன், அவன் தங்கியிருந்த இடத்தையும், தன் குடும்பத்தையும், தன் இனத்தையும் விட்டு புறப்பட்டுப் போகச் சொன்னபோது கீழ்ப்படிந்து தான் எந்த இடத்திற்குப் போகிறேனென்று கூட தெரியாமல் புறப்பட்டுப் போனார். ஆபிரகாம் அவ்வாறு புறப்பட்டு போகக் காரணம்: தன்னோடு பேசின ஜீவனுள்ள தேவன் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் வைத்திருந்த நம்பிக்கையே ஆகும். ஆபிரகாம் கர்த்தர் நல்லவர் என்றும், அவரை நம்பினோர் வெட்கப்பட்டுப் போனதில்லை என்றும் யதார்த்தமாக விசுவாசித்ததினாலேயே, கர்த்தருடைய வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து, உடனே புறப்பட்டுப் போனார். ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததினால் ஈசாக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்டான். அவன் மூலமாக கடற்கரை மணலத்தனையான சந்ததியார் பெருகினார்கள். விசுவாசிகளின் தகப்பன் என்றதான பெயரையும் பெற்றார். இவையெல்லாம் கீழ்ப்படிதலின் மூலம் உண்டானது.

### 4.3. மோசேயின் கீழ்ப்படிதல்:

> *மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். அவர்கள் பார்வோனோடே பேசும் போது, மோசேக்கு எண்பது வயதும், ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயதுமாயிருந்தது. (யாத்திராகமம் 7 : 6, 7).*

கீழ்ப்படிதல் என்றால் சொன்னதை அப்படியே செய்வதாகும். பார்வோன் மகா ராஜாவுக்குப் பயந்து, பாலைவனத்திற்கு தப்பியோடின மோசேயை கர்த்தர் மறுபடியும் அந்த பார்வோன் மகா ராஜாவினிடத்திற்குப் போகும்படியாக அனுப்பினார். ராஜாவினிடத்திற்குப் போகிறது மட்டுமல்ல, அங்கிருந்து இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக்கொண்டு வர வேண்டும் என்பதாகவும் சொன்னார். பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை வைத்து அநேக வேலைகளைச்

செய்துகொண்டுவந்ததால் அவன் அவர்களை விடமாட்டான் என்று மோசேக்குத்தெரியும். அப்படி அவர்களை விடும்போது அவர்களால் நடைபெற்றுக்கொண்டிருக்கிற வேலைகளும் தடைபட்டு போகும். இவையெல்லாம், மோசே அறிந்தும் கர்த்தர் போ என்று சொன்னதும், புறப்பட்டுப் போனார். மோசேக்கு தேவனைக் குறித்த சரியான அறிவு இல்லை. அவர் முட்செடியைப் பார்க்கும்போது அது அக்கினியால் எரிந்தும் வெந்து போகவில்லை. மோசேயின் கையிலிருந்த கோலை கர்த்தர் கீழே போடச்சொல்லி, அவர் அப்படியே போட்ட போது, அது பாம்பாக மாறினது. இவ்வளவு தான் மோசேக்குத் தெரியும். ஆனாலும், சர்வ வல்லமையுள்ள தேவன் என்னை அனுப்பினாரானால் என்னோடே கூட இருப்பார் என்ற அறிவு மோசேக்கு உண்டாயிருந்தது.

*அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை. (மத்தேயு 21 : 29, 30).*

கீழ்ப்படிதல் என்பது வார்த்தையினால் முடியுமேயானால் அது கீழ்ப்படிதல் அல்ல. சொன்ன வார்த்தையை நிறைவேற்றுவதே கீழ்ப்படிதல், அதாவது கேட்டு அவைகளை அப்படியே கைக்கொள்வதே கீழ்ப்படிதல். வார்த்தையினாலே முடியாது என்று சொன்னாலும் கூட கிரியையினாலே அதைச் செயல்படுத்துவது கீழ்ப்படிதல். வார்த்தையிலே செய்வேன் என்று சொல்லிக்கொண்டு செயலிலே அதை செய்யாமற் போவது கீழ்ப்படியாமை.

*யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். (மத்தேயு 3 : 14, 15).*

தேவ சித்தத்தின்படி செய்வதும் கீழ்ப்படிதலாகும். கர்த்தருடைய வேத புஸ்தகத்திலுள்ள சகல கற்பனைகளையும் கைக்கொண்டு ஜீவிப்பது கீழ்ப்படிதலாகும். உலகத்தில் அநேக காரியங்கள்

காணப்படுகிறது. அவற்றில் நீதியானது எது, அநீதியானது எது, என்பதைத் தெரிந்துகொண்டு, தேவ நீதியை நிறைவேற்றுவதே கீழ்ப்படிதலாகும், ஆண்டவராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை. என்றாலும், தேவநீதியை நிறைவேற்றும் படியாகவும் தம்மை பூரணமான கீழ்ப்படிதலுள்ளவரென்று காண்பிக்கும்படியாகவும் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார்.

## 4.4. யோசுவாவின் கீழ்ப்படிதல்:

*கர்த்தர் தமது தாசனாகிய மோசேக்கு எப்படிக் கட்டளையிட்டிருந்தாரோ, அப்படியே மோசே யோசுவாவுக்குக் கட்டளையிட்டிருந்தான்; அப்படியே யோசுவா செய்தான்; அவன், கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டதில் ஒன்றையும் செய்யாமல் விடவில்லை. (யோசுவா 11 : 15).*

யோசுவா கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில் உள்ள காரியங்களை அப்படியே செய்தான். யோசுவா தன்னுடைய குடும்பத்தை மாத்திரம் கவனித்தவர் அல்ல. மோசேக்குப் பின்பு இஸ்ரவேல் ஜனங்களாகிய திரளான ஜனங்களை கானானுக்கு நேராக வழிநடத்தினவர். என்றாலும், நியாயப்பிரமாண புஸ்தகத்தில் காணப்பட்ட எல்லாக் காரியங்களையும் கைக்கொள்ளக் கூடியவராகக் காணப்பட்டார்.

## 4.5. எசேக்கியா ராஜாவின் கீழ்ப்படிதல்:

*அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச்செய்தான். அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந் நாட்கள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை. அவன் கர்த்தரை விட்டுப்*

*பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று; அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான். (II இராஜாக்கள் 18 : 3 - 7).*

ஒரு ராஜா தேவனுக்கு கீழ்ப்படியும் போது, அவனுக்கு அநேகமான நெருக்கங்கள் உண்டாகும். ஆனாலும் அவைகளை வகை வைக்காமல் தேவனுடைய பிரமாணம், ஒரே தேவனாகிய கர்த்தரை மாத்திரம் வணங்கச் சொல்வதால், அவருக்குப் பயந்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, விக்கிரகத் தோப்புகளையெல்லாம் அகற்றி, சிலைகளையெல்லாம் தகர்த்து, கர்த்தருடைய கற்பனையின்படியே செய்தான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய யேகோவா மீது நம்பிக்கையுடையவனாய் இருந்தான். அவன் அவருக்குப் பயந்து, அவருடைய கற்பனைகளை கைக்கொண்டதினால், தனக்கு ஒன்றும் ஆகாது என்றும் அறிந்திருந்தான். ஆகவே, அவன் அதிகாரப்பூர்வமாக எல்லா காரியங்களையும் செய்தான். எசேக்கியா ராஜாவைப் போல தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே அவனுக்கு முன்னும், அவனுக்குப் பின்னும் இருந்த ராஜாக்கள் இருந்ததில்லை. அவ்வளவாய் அவன் கர்த்தருடைய கற்பனைக்கு கீழ்ப்படிந்திருந்தான். ஆகவே கர்த்தர் அவனோடிருந்தார். நாமும் கர்த்தருடைய வேதத்தை ஒவ்வொரு நாளும் வாசித்து, அதன்படி நடக்கவேண்டும். துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடக்கக்கூடாது. பாவிகளுடைய வழியில் நிற்கக்கூடாது. பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காரக் கூடாது என்று வேதம் சொல்லுகிறது. நாம் அந்த வேதத்திற்கு அப்படியே கீழ்ப்படியவேண்டும். நாம் அப்படியே வாழ்ந்தால் தேவன் நம்மோடிருப்பார். உலகப்பிரகாரமாக எல்லாம் நமக்கு இருந்தும் தேவன் மட்டும் நம்மோடில்லாதிருந்தால் சமாதானமாக வாழமுடியாது. தேவன் நம்மோடிருந்தால் எந்தச் சூழ்நிலையிலும் சந்தோஷமாகக் காணப்படலாம். ஏனென்றால் ஒருவேளை மரணம் தான் சம்பவித்து விட்டாலும் தேவனோடு சதாகாலமும் வாழலாம் என்ற சந்தோஷம் இருக்கும். எசேக்கியா ராஜாவுக்கு முன் இருந்த ராஜாக்கள் அசீரியா

ராஜாவுக்கு கப்பம் கட்டுகிறதான நிலைமையோடு காணப்பட்டார்கள். ஆனால் எசேக்கியாவோடு கர்த்தர் கூட இருந்ததால் அசீரியா ராஜாவுக்கு அவன் ஒன்றும் கொடுக்கவில்லை. அவனுடைய அதிகாரத்தையும் தள்ளிவிட்டான்.

ஒரு மனுஷன் தேவனுக்கு கீழ்ப்படியும்போது தேவன் அவனோடிருப்பார். தேவன் நம்மோடு கூட இருக்கும்போது, நம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது.

### 4.6. பவுல் அப்போஸ்தலரின் கீழ்ப்படிதல்:

*நாங்களெல்லாரும் தரையிலே விழுந்தபோது: சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று எபிரெயு பாஷையிலே என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன். அப்பொழுது நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன். அதற்கு அவர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே. இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும் படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். ஆகையால், அகிரிப்பா ராஜாவே, நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.*

*(அப்போஸ்தலர் 26 : 14 - 19).*

பவுல் அப்போஸ்தலருக்கு முதலாவது ஒரு தரிசனம் கொடுக்கப்பட்டு, இதுதான் உன் ஊழியம் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர் அதற்குக் கீழ்ப்படிந்தபோது அநேக காரியங்களை தியாகம் பண்ண வேண்டியதிருக்கிறது. என்றாலும் பவுல் அப்போஸ்தலர் அந்த பரம தரிசனத்திற்கு கீழ்ப்படியாமலிருக்கவில்லை. அதற்காக ரோம அந்தஸ்தை விட்டார். நாடோடி போல் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு போக வேண்டியிருந்தது. அடிகளையும், கல்லெறிகளையும் இன்னும் அநேக கஷ்டங்களையும், பரம தரிசனத்திற்கு கீழ்ப்படிந்ததினிமித்தம் அனுபவித்தார். அந்த கீழ்ப்படிதலினிமித்தம் யூதர்கள் அவரைக் கொலைச் செய்யும்படியாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியாக, அவர்கள் நினைத்தபடியே, அவரை சிரச்சேதம் பண்ணி கொலைசெய்தார்கள். அப்படியானால் கீழ்ப்படிதல் என்பது தன்னுடைய உயிரினும் மேலானதாகக் காணப்பட வேண்டும்.

### 4.7. நோவாவின் கீழ்ப்படிதல்:

> *அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப் போடுவேன். நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாகக் கீல்பூசு. (ஆதியாகமம் 6 : 13, 14).*

பூமியிலே மனுஷர்கள் சீர்கெட்டுப் போனதால் 300 முழ நீளமும், 50 முழ அகலமும், 30 முழ உயரமுமுள்ள ஒரு பேழையை உண்டுபண்ண வேண்டும் என்று தேவன் நோவாவிடம் சொன்னார். அக்காலத்தில் எந்த நவீன கருவிகளும் கிடையாது. இவ்வளவு பெரிதான ஒரு பேழையைக் கட்ட வேண்டுமானால் எத்தனை வருஷங்கள் ஆகியிருக்கும். தண்ணீரினால் அழிவுண்டாகும் என்று தேவன் சொன்னார். ஆனால் நோவாவுக்கு மழையென்றால் எதுவும் தெரியாது. இப்படி பேழையை உண்டுபண்ணும்போது, குடும்பத்தினர் முறுமுறுத்திருப்பார்கள். மற்றும் ஜனங்களும் பரிகாசம் பண்ணியிருப்பார்கள். இவ்வளவு பெரிதான பேழையை தண்ணீரில் மிதக்கவும், தண்ணீரினால் சேதப்படாதபடிக்கும் கவனமாகச் செய்ய வேண்டியதிருக்கிறது. அதற்கான மரங்களும் வெட்டப்பட வேண்டும்.

அதை அதற்கேற்றபடி பண்படுத்தவும் வேண்டும். அது எவ்வளவு கஷ்டமான வேலை. கர்த்தர் சொன்னபடியே, நோவா கீழ்ப்படிந்து அப்படியே செய்தார். பேழையை கட்டி முடிக்கும் வரைக்கும் நோவாவுக்கு வேறு எந்த சிந்தையும் கிடையாது. கீழ்ப்படிய வேண்டுமானால் அது நமக்கு கஷ்டமாகத் தான் இருக்கும். ஆனால் கீழ்ப்படிதலுடையவர்களாய் நாம் மாறுவோமானால் அது நமக்கு ஆசீர்வாதமானதாக இருக்கும்.

*அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணி: தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக் கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால், நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான். யெப்தா அம்மோன் புத்திரரின்மேல் யுத்தம்பண்ண, அவர்களுக்கு விரோதமாய்ப் புறப்பட்டுப்போனான்; கர்த்தர் அவர்களை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார். அவன் அவர்களை ஆரோவேர் துவக்கி மின்னித்திற்குப் போகுமட்டும், திராட்சத்தோட்டத்து நிலங்கள்வரைக்கும், மகா சங்காரமாய் முறிய அடித்து, இருபது பட்டணங்களைப் பிடித்தான்; இப்படி அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள். யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது, இதோ, அவன் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ்செய்து, அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள்; அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள்; அவளையல்லாமல் அவனுக்குக் குமாரனும் இல்லை குமாரத்தியும் இல்லை. அவன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மன மடியவும் கலங்கவும் பண்ணுகிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது என்றான். அப்பொழுது அவள்: என் தகப்பனே, நீர் கர்த்தரை நோக்கி உம்முடைய வாயைத் திறந்து பேசினீரல்லவோ? அம்மோன்*

*புத்திரராகிய உம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டும் ஜெயத்தைக் கர்த்தர் உமக்குக் கட்டளையிட்டபடியினால், உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும் என்றாள். பின்னும் அவள் தன் தகப்பனை நோக்கி: நீர் எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும்; நான் மலைகளின்மேல் போய்த் திரிந்து, நானும் என் தோழிமார்களும் என் கன்னிமையினிமித்தம் துக்கங்கொண்டாட, எனக்கு இரண்டுமாதம் தவணைகொடும் என்றாள். அதற்கு அவன்: போய்வா என்று அவளை இரண்டு மாதத்திற்கு அனுப்பிவிட்டான்; அவள் தன் தோழிமார்களோடும் கூடப்போய், தன் கன்னிமையினிமித்தம் மலைகளின்மேல் துக்கங்கொண்டாடி, இரண்டுமாதம் முடிந்தபின்பு தன் தகப்பனிடத்திற்குத் திரும்பிவந்தாள்; அப்பொழுது அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான்; அவள் புருஷனை அறியாதிருந்தாள்.*

*(நியாயாதிபதிகள் 11 : 30 - 39)*

யெப்தா கர்த்தரிடத்தில் ஒரு பொருத்தனை பண்ணுகிறான். அதை நிறைவேற்ற வேண்டுமானால் தனது மகளின் ஒத்துழைப்பு தேவையாய்க் காணப்படுகிறது. யெப்தா என்ன சம்பவிக்குமென்று அறியாமலே அம்மோன் புத்திரரிடத்திலிருந்து தனக்கு வெற்றி வேண்டுமென்பதற்காக, கர்த்தரிடத்தில் ஒரு பொருத்தனை பண்ணினான். யெப்தா அம்மோன் புத்திரரை ஜெயித்து, சந்தோஷத்தோடே வீட்டுக்கு வரும்போது, அவனுடைய மகள் அவனுக்கு எதிர் கொண்டு வந்தாள். அந்த நாட்டின் வழக்கப்படி இப்படிப்பட்ட சூழ்நிலையில் வீட்டில் உள்ளவர்கள் எதிர்கொண்டு வரமாட்டார்கள். வீட்டின் வேலைக்காரர்கள் கால்களையும், கைகளையும் கழுவுவதற்காக தண்ணீரைக் கொண்டு வருவார்கள். ஆனால் யெப்தாவை எதிர்கொண்டு வந்தது அவனுடைய ஒரே மகள், அவனுக்கு வேறு மகனோ, மகளோ கிடையாது. அப்பொழுது யெப்தா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, நான் பொருத்தனை பண்ணி விட்டேன். என் மகளானாலும் நான் அதற்குக் கீழ்ப்படிந்து தான் ஆகவேண்டுமென்று சொன்னான். நாமும் கர்த்தரிடத்தில் எவ்வளவோ பொருத்தனைகள் பண்ணியிருப்போம். அதை

நிறைவேற்றுகிறோமா என்பதை கவனிக்க வேண்டும். யெப்தா பொருத்தனை பண்ணினான். அதை மீற முடியாது என்றும் சொன்னான். அவனுடைய இருதயத்தை விடவும் அவன் மகளுடைய இருதயம் நல்ல இருதயமாக காணப்பட்டது. தகப்பன் பண்ணிக்கொண்ட பொருத்தனையின்படியே செய்ய அவள் தன்னை ஒப்புக்கொடுத்தாள்.

யெப்தா அம்மோன் புத்திரரை ஜெயித்து வரும்போது தனக்கு எதிராக வருவதை சர்வாங்க தகனபலியாகக் கொடுப்பேன் என்பதாக பொருத்தனை பண்ணினான். ஆனால் வேதாகமத்தில் பார்க்கும்போது மனுஷனை சர்வாங்க தகனபலியிடுவதை தேவன் விரும்பவில்லை. கர்த்தர் மோசேயைக் கொண்டு, எவன் தன் பிள்ளையை நர பலியாக ஒப்புக்கொடுப்பானோ அவன் கொல்லப்பட வேண்டுமென்று அறிவித்திருக்கிறார். அவள் அதன் பிறகு ஒரு குடும்ப வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியாது. காலம் வரையிலும் தேவாலயத்திலே தங்கி, அங்கு செய்யவேண்டிய காரியங்களை செய்யவேண்டும். அதற்காக துக்கம் கொண்டாட இரண்டு மாதம் தகப்பனிடம் தவணை மட்டும் கேட்டாள். இப்பொழுது பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிகிறார்களா. நம்மில் எத்தனை பேர் பூரணமான கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் காணப்படுகிறோம். கீழ்ப்படிதல் உங்களுக்குள் இருக்கிறதா என்பதை கண்டுபிடித்துக்கொள்ள வேண்டும்.

### 4.8. எதற்காக நாம் கீழ்ப்படிய வேண்டும்?

*ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.*

*(மத்தேயு 7 : 24, 25).*

இயற்கையான காற்றையும், மழையையும் குறித்து அவர் சொல்லவில்லை. எந்த மனுஷன் தேவனுடைய வார்த்தைக்கு பயந்து கர்த்தருடைய கற்பனையை கைக்கொண்டு ஜீவிக்கிறானோ, அவனுக்கு

நேராக நெருக்கங்கள், சோதனைகள் வரும். எவ்விதத்தினாலும் புயல் போன்றும், வெள்ளம் போன்றும் சோதனைகள் வரலாம். இவையெல்லாவற்றினின்றும் தேவன் நம்மை விசேஷமாக பாதுகாப்பார். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்குள் ஜீவிப்போமானால், கன்மலையாகிய தேவன்மேல் கட்டப்பட்டவர்களா யிருப்போம். கர்த்தருடைய வார்த்தையை கேட்டும், அதன்படி செய்யாதவன் புத்தியில்லாதவன். நாம் புத்தியில்லாதிருக்கும்போது நெருக்கங்களும், கஷ்டங்களும் நமக்கு நேரே வரும்போது தேவன் நம்மோடு கூட இருக்கமாட்டார். தேவன் நம்மோடு கூட இராவிட்டாலும் நமக்கு எந்த பாதுகாவலும் உண்டாகிறது இல்லை.

> *முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். (ரோமர் 6 : 17, 18).*

உபதேச சட்டத்திற்கு ஒரு மனுஷன் மனப்பூர்வமாய் கீழ்ப்படிவானானால் அவன் பாவத்திலிருந்து பூரணமான விடுதலையை சொந்தமாக்கிக் கொள்ள முடிகிறது.

> *ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களா யிருக்கும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களா யிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்; (I பேதுரு 1 : 22).*

நாம் வேத வசனத்திற்கு கீழ்ப்படியும் போது நம்முடைய ஆத்துமா சுத்திகரிப்படைகிறது.

> *தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, (எபிரெயர் 5 : 9).*

இயேசு கிறிஸ்துவுக்கும் அவரது கற்பனைகளுக்கும் கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டும் தான் இரட்சிப்பு கிடைக்கும்.

*இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவியும் சாட்சி என்றார்கள். (அப்போஸ்தலர் 5 : 32).*

கீழ்ப்படிகிறவர்களுக்கு தான் பரிசுத்தஆவியும் கிடைக்கிறது.

*அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். (I யோவான் 3 : 22).*

நாம் அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு, அவருக்கு பிரியமானவைகளைச் செய்யும்போது தான் நம்முடைய ஜெபமும் கேட்கப்படும். தானியேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய எல்லா கட்டளைகளையும் கைக்கொண்டபடியினால், அவர் வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7 : 21).*

கீழ்ப்படிகிறவர்களுக்கு தான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கும் பாக்கியம் கிடைக்கிறது.

### 4.9. கீழ்ப்படிதலுக்கான வழிகள்:

*அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழப்படிதலைக் கற்றுக்கொண்டு, (எபிரெயர் 5 : 8).*

இயேசுகிறிஸ்து தேவனாயிருந்தும், உபத்திரவத்தினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்.

*அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, (ரோமர் 5 : 3).*

உபத்திரவம் பொறுமையைத் தரும். பொறுமை பரீட்சையை உண்டாக்கும்(நம்முடைய குணத்தை விசேஷமான தன்மையுடைய தாக்கும்).

*அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். (I கொரிந்தியர் 10 : 5).*

கீழ்ப்படிதல் வேண்டுமாயின் தன்னைக் குறித்த உயர்வான எண்ணங்களை அகற்ற வேண்டும். அப்போது கீழ்ப்படிதல் உண்டாகும்.

*அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலிப்பியர் 2 : 8).*

நாம் நம்மை தாழ்த்தும்போது கீழ்ப்படிதல் உண்டாகும்.

### 4.10. நாம் ஏன் கீழ்ப்படிய வேண்டும்?

*பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.*

*(I பேதுரு 1:2 ).*

நாம் கீழ்ப்படிவதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

*நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்களைச் சோதித்தறியும்படி இப்படி எழுதினேன்.*

*(II கொரிந்தியர் 2 : 9).*

நாம் எல்லாவற்றிலும் கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருக்கிறோமா என்று ஒவ்வொரு நாளும் நம்மை சோதித்துப் பார்க்க வேண்டும்.

என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு

நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்.(எரேமியா 7:23).

நாம் அவருக்கு கீழ்ப்படிந்தால் அவர் நமக்கு தேவனாயிருப்பார்; நாம் அவர் பிள்ளைகளாயிருப்போம். ஆண்டவரே, என்று நாம் கூப்பிடும்போது பதிலளிப்பார்.

### 4.11. கீழ்ப்படியாமையின் விளைவுகள்:

*தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த*

*விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். (ஆதியாகமம் 1 : 27, 28; 2 : 16 -17; 3 : 1 - 6).*

ஆதிமனுஷனாகிய ஆதாமையும், ஏவாளையும் தேவன் தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியேயும் பூமியின் மண்ணினாலே சிருஷ்டித்தார். தேவனாகிய கர்த்தர் ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, அதைப் பண்படுத்தவும், காக்கவும் அங்கே அவர்களை வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனிடம், நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் நிற்கிற நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை நீங்கள் புசிக்க வேண்டாம்; அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவீர்கள் என்று கட்டளையிட்டார். அவர்கள் கர்த்தரால் கொடுக்கப்பட்ட கற்பனையை மீறி கீழ்ப்படியாமை காண்பித்தபோது, பயங்கரமான சாபத்தை தங்கள் மேல் வருவித்துக்கொண்டார்கள். அவர்கள் நிமித்தமாக பூமியே சபிக்கப்பட்டதாக மாறிப்போனது.

இஸ்ரவேல் ஜனங்களுடைய முதல் ராஜாவாகிய சவுல் கீழ்ப்படியாமையின் நிமித்தம் ராஜ்யபாரத்திலிருந்து தள்ளப்பட்டான். இன்னும் இஸ்ரவேல் ஜனங்களை அரசாட்சி செய்த பல்வேறு ராஜாக்களின் காலங்களில் கர்த்தர் தீர்க்கதரிசிகளைக் கொண்டு பேசி அறிவித்த அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் காணப்பட்டதால், பயங்கரமான தோல்விகளைக் கண்டடைந்தார்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒவ்வொரு படியும் ஆசீர்வாதங்களும் கீழ்ப்படிதலாகிய படியின் மூலம் தான் அருளப்படுகிறது. கர்த்தருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து சென்றவர்களை விட அழைப்பிற்கு கீழ்ப்படியாமல் தங்கிவிட்டோர் அநேகர். ஆகவே, நாம் ஒருவராகிலும் தேவனுடைய அழைப்பிற்கு கீழ்ப்படியாமல் காணப்பட்டு, தேவகோபத்தை சம்பாதித்துக் கொள்ளாமல், இவ்வுலக வாழ்வின் அற்பமான காரியங்கள் மீதிலுள்ள ஆர்வத்தைத் தள்ளிவிட்டு, தேவனுடைய ராஜ்யத்திற்காகப் புறப்படுவோமாக.

## 5. பூரணமான உண்மையுடையவர்கள்:

இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியான அநுபவங்களில் ஒன்று பூரணமான உண்மையுடையவர்களாய் காணப்பட வேண்டும் என்பதே.

> *இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான்; உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள். (சங்கீதம் 12 : 1).*

> *நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். (வெளிப்படுத்தல் 2 : 10).*

நாம் தேவபக்தியுள்ளவர்களாய் காணப்பட வேண்டுமானால் முதலாவது உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். உண்மை என்பது வெறும் பேச்சளவில் மட்டுமல்ல, நம்முடைய சகல காரியங்களிலும் உண்மையுடையவர்களாய் காணப்பட வேண்டும். அதாவது, பேச்சிலும், பார்வையிலும், நடக்கையிலும், சிந்தனையிலும், கிரியையிலும், நம்முடைய சகல காரியத்திலும் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். தேவனுக்கென்றும், அவருடைய நாமத்தின் மகிமைக்கென்றும், உத்தமமாய் கிறிஸ்துவைப் பின்பற்றுகிற வாழ்க்கையிலும் நமக்கு உபத்திரவம் உண்டு. அந்த உபத்திரவத்திலும் நாம் உண்மையாய் இருக்க வேண்டும். நாம் உண்மையுள்ளவர்களாய் காணப்படாவிட்டால் இரட்சிக்கப்பட்டோம் என்று சொன்னாலும் கூட பரலோகராஜ்யம் போகமுடியாது. ஜீவ கிரீடத்தை சொந்தமாக்கிக் கொள்ளமுடியாது.

### 5.1. யாரால் உண்மையாயிருக்க முடியும்?

தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிற மனுஷனால் மட்டுமே உண்மையுள்ளவனாய் காணப்படமுடியும்.

> *மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்,*

*நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட் பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோமர் 8 : 8, 9).*

மாம்சத்தின் கிரியைகள் ஒருவனுக்குள் இருக்குமேயானால், அவன் தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியாது. அப்படிப்பட்டவர்கள், சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் தங்களுக்கு நேராக வரும்போது உண்மைக்கு மாறான பொய்களைப் பேசி தங்களின் ஜீவியத்தை நஷ்டப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவின் ஆவி ஒருவனுக்குள்ளிருந்தால் தான் அவனால் மரண பரியந்தமும் உண்மையாயிருக்க முடியும். தேவன் அந்த மனுஷனை விசேஷமாக பாதுகாக்கிறவராக இருக்கிறார். மரணம் தான் தனக்கு நேரிடக்கூடியதாக இருந்தாலும் அவன் உண்மைக்கு மாறான காரியங்களுக்கு இடங்கொடுக்கமாட்டான். நம்மால் ஏன் உண்மையாயிருக்க முடியவில்லையென்றால், நாம் இன்னும் மாம்சத்துக்குட்பட்டவர்களாகவே இருக்கிறோம்.

*பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன். (I பேதுரு 3 : 11).*

தேவ ஆவியுடைய மனுஷன் எப்படி உண்மையுடையவனாக இருப்பான்? அவன் பொல்லாப்பான சகலவற்றையும் விட்டு நீங்கினவனாக இருப்பான். அதாவது தீமையானவைகளும், பிறருக்கு கேடையும், ஆபத்தையும், மனவேதனையையும் கொடுக்கக்கூடியதான காரியங்கள் எல்லாவற்றையும் விட்டு விலகினவனாக இருப்பான். ஒரு மனுஷனிடத்தில் உண்மை இருக்கிறதென்றால், அவன் சமாதானமுடையவனாக இருப்பான், மற்றவர்களுக்கு சமாதானத்தை கொடுக்கக்கூடியவனாகவும், செம்மையான வழியில் நடக்கிறவனாகவும் இருப்பான்.

*உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே. அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான். ஆகாதவன் அவன் பார்வைக்கு தீழ்ப்பானவன்; கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்;*

*ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான். தன் பணத்தை வட்டிக்குக்கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை. (சங்கீதம் 15 : 2 - 5).*

ஒரு மனுஷன் உண்மையுள்ளவனாய் இருப்பானானால், அவன் தான் பக்தியுள்ளவன். உண்மையுள்ளவன் தன் நாவினால் புறங்கூறமாட்டான். தன்னுடைய தோழனுக்குத் தீங்கு செய்யமாட்டான். ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதவனாயிருக்கிறான். நம்மில் அநேகர் பணத்தை வாங்கி விட்டு, இந்த நாளில் திருப்பி தருவேனென்று வாக்குக்கொடுத்தும், திருப்பிக் கொடுக்காதவர்களாக இருக்கிறோம். அநேகர் தேவனிடம் தனக்கும் தன்னுடைய குடும்பத்திற்கும் தேவையான ஆசீர்வாதங்களைக் கேட்கும்போது, ஆண்டவரே, நான் இன்னின்ன விதத்திலே உமக்குப் பிரியமாய் ஜீவிப்பேன் என்று ஆணையிட்டவர்கள் தங்களுடைய காரியங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டவுடன், தேவனை மறந்து தன் நாவினால் தேவனிடம் சொன்னதான உடன்படிக்கையை மறந்துவிடுகிறார்கள். அப்படியானால், நாம் உண்மையுடையவர்கள் தானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மையுள்ளவர்கள் பரிதானம் வாங்க மாட்டார்கள். நம்மில் அநேகர் சின்ன சின்னத் தொழில் செய்யக்கூடியவர்கள் கூட பரிதானம் வாங்கக்கூடிய வர்களாகவே இருக்கிறோம். ஒரு மனுஷன் உண்மையுள்ளவனாய் காணப்பட வேண்டுமானால், பொல்லாப்பான சகலவற்றையும் விட்டவனாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு தீங்கு செய்யாதவனாகவும் சத்தியத்தை மனதாரப் பேசுகிறவனாகவும் உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை இல்லாததென்று சொல்லுகிறவனாயும் இருக்க வேண்டும்.

*உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். (மத்தேயு 5 : 37).*

## 5.2. தேவனுடைய பார்வையில் ஏன் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்?

*என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.*

*(எண்ணாகமம் 12 : 7).*

மோசேயைக் குறித்து என் தாசனாகிய மோசே என்று தேவன் உரிமைபாராட்டுகிறார். அவர் தேவனுடைய வீட்டிலே எங்கும் உண்மையுள்ளவராக இருந்தார்.

*விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, (எபிரெயர் 11 : 24).*

இப்பொழுதுள்ள அமெரிக்கா போன்று வளர்ச்சியும், செல்வாக்கும் நிறைந்த நாடு தான் எகிப்து. அந்த நாட்டில் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்ற நிலையோடு இருந்தார் மோசே. சிலரிடம் நீ யார் என்று கேட்டால் தன் பெயரைச் சொல்லாமல், ஒருவேளை தன் தகப்பனார் கலெக்டராக இருந்தால், நான் அந்த கலெக்டருடைய மகன், என்று சொல்லுவார்கள். நீ என்ன படித்திருக்கிறாய் என்று கேட்டால் நான் கனடாவில் எம்.பி.ஏ படித்திருக்கிறேன் என்று சொல்லுவார்கள். இவ்விதமாக, தங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவார்கள். ஆனால் மோசேக்கு தன்னைக் குறித்துப் பெருமையாகச் சொல்வதற்கு ஏராளமான காரியங்கள் இருந்தது. அவர் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் ஆனதால், அந்த நாடு முழுவதும் அவருக்கு செல்வாக்கு உண்டு. அந்த நாட்டில் காணப்படுகிறவர்கள் எல்லாரும் அவரை மதித்துத் தான் ஆக வேண்டும். அந்த பெயரையும், புகழையும் அவர் அருவருத்தார்.

மோசே உலகத்திலுள்ள பெயர், புகழ் இவற்றிற்கு அடிமையாயிருக்கவில்லை. அநித்தியமான பாவ சந்தோஷங்கள் எல்லாவற்றையும் வெறுத்தார். ராஜ அரண்மனையில் எல்லா சௌபாக்கியங்களும் இருந்தும், அப்படிப்பட்டதான சந்தோஷமும், அதனால் ஏற்படக்கூடிய பாவமும் எனக்கு வேண்டாம் என்று சொல்லி, அவைகளுக்கு விலகினவர் தான் மோசே.

*அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். (எபிரெயர் 11 : 25, 26).*

மோசேக்குள் தெய்வீக ஞானம் இருந்தது. ஆகவே அநித்தியமான பாவ சந்தோஷங்களுக்கு விலகி ஜீவித்தார். தாவீது சாலொமோனிடம் நீ ஞானத்தை சம்பாதித்துக் கொள் என்று சொன்னார். ஆகவே, கர்த்தர் சாலொமோனிடம் உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டபோது, எனக்கு ஞானம் வேண்டும் ஆண்டவரே! என்று கேட்டான். பிறகு அவன் தனக்குக் கொடுக்கப்பட்ட தேவ ஞானத்தை விட்டு விலகினதினால் தான் நஷ்டமடைந்து போனான். நம்மிடத்தில் ஞானம் இல்லாததினாலே தான் அநித்தியமான பாவ சந்தோஷங்களுக்கு இடங்கொடுக்கிறோம். கண்களின் இச்சை தீரவில்லை; கால்கள் போகக்கூடாத இடங்களுக்கு போகிறது. செய்யக்கூடாத காரியங்களைச் செய்து அவைகளுக்கு நம்மை விற்றுவிட்டவர்களாகவே இருக்கிறோம். ஆனாலும் நான் உண்மையுள்ளவன், தேவ பக்தியுள்ளவன் என்று சொல்லுகிறோம். உண்மையுள்ள மனுஷன் தேவ பக்தியுள்ளதான ஜனங்களிடத்திலும், தேவ பக்தியினிமித்தம் துன்பப்படுகிற ஜனங்களோடும் தான் சேருகிறவனாக இருப்பான்.

உண்மையுள்ள மனுஷன் இந்த உலகத்தை எதிர்பார்த்து ஜீவிக்க மாட்டான். இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருப்பான். எல்லாவற்றையும் இழந்தாலும் நாம் தேவனோடு கூட இருக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுக்குள் இருக்கும். ஆகவே உண்மைக்கு மாறான எந்த ஒரு காரியத்திற்கும் தன்னை விற்று விடமாட்டான். மோசேக்கு எகிப்திலுள்ள பொக்கிஷங்களும் செல்வங்களும் எல்லா வாய்ப்புகளும் இருந்தும், அவைகளை விட்டு விலகக்கூடியவராக இருந்தார்.

*ஆகையால், அவர்களை நாசம்பண்ணுவேன் என்றார்; அப்பொழுது அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே,*

*அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலிலே நின்றான். (சங்கீதம் 106 : 23).*

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதான மோசே, தேவன் ஜனங்களை அழிக்காதபடிக்கு திறப்பின் வாயிலிலே நின்று, ஜனங்களுக்காக பரிந்து பேசுகிறவராக இருந்தார். இது தான் உண்மையுள்ள மனுஷன். சுயத்தை சிலுவையில் அறைந்த மனுஷனால் தான் உண்மையுள்ளவனாக ஜீவிக்க முடியும். அவன் தனக்கென்று வாழாதவன்.

*இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன்.*

*இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டான். (I நாளாகமம் 29 : 3, 9).*

தாவீது ராஜா தேவனுடைய ஆலயத்திற்கென்று சேகரித்து வைத்த பொன்னையும், வெள்ளியையும் தவிர, தனக்கென்றும், தன் குடும்பத்திற்கென்றும் சேர்த்து வைத்ததான பொன்னையும், வெள்ளியையும் கூடக் கொடுத்தான். அதன்பின் தன்னுடைய எல்லா அதிகாரிகள் மத்தியிலும் நீங்களும் தேவனுக்கென்று கொடுக்க வேண்டும் என்று அறிவித்தான். ஆகவே, இந்தக் காரியத்தை அவர்கள் உண்மையாய்ச் செய்தார்கள். ஜனங்கள் தங்களுக்கென்று வைத்திருந்த பொன்னையும், வெள்ளியையும் மட்டுமல்ல, விலையேறப்பெற்ற இரத்தினங்களையும்கூட கொடுத்தார்கள்.

இராப்போஜனத்திற்குரிய உபதேசங்களில் ஒன்று தசமபாகம் காணிக்கையை குறித்ததாகும். ஆனால் நாம் கர்த்தருக்கு கொடுக்கும்போது அதை நிறுத்துப் பார்த்துக் கொடுக்கிறவர்களாய்

காணப்படுகிறோம். ஒரு மனுஷன் உண்மையுள்ளவனாயிருப்பானாகில் கர்த்தருக்குக் கொடுக்கிற காரியத்திலும் உண்மையுடையவனாய் இருப்பான்.

> *இதோ, இருக்கிறேன்; கர்த்தரின் சந்நிதியிலும் அவர் அபிஷேகம்பண்ணி வைத்தவருக்கு முன்பாகவும் என்னை குறித்துச் சாட்சி சொல்லுங்கள்; நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ்செய்தேன்? யாருக்கு இடுக்கண்செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக்கொண்டு கண்சாடையாயிருந்தேன்? சொல்லுங்கள்; அப்படியுண்டானால் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பேன் என்றான். அதற்கு அவர்கள்: நீர் எங்களுக்கு அநியாயஞ் செய்யவும் இல்லை; எங்களுக்கு இடுக்கண் செய்யவும் இல்லை; ஒருவர் கையிலும் ஒன்றும் வாங்கவும் இல்லை என்றார்கள். அதற்கு அவன்: நீங்கள் என் கையில் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை என்பதற்குக் கர்த்தர் உங்களுக்கு எதிராகச் சாட்சியாயிருக்கிறார்; அவர் அபிஷேகம் பண்ணினவரும் இன்று அதற்குச் சாட்சி என்றான்; அதற்கு அவர்கள்: அவர் சாட்சி தான் என்றார்கள்.*
>
> *(I சாமுவேல் 12 : 3 - 5).*

சாமுவேல் தீர்க்கதரிசி இஸ்ரவேல் தேசத்தை 40 வருஷம் நடத்தினார். 2 ராஜாக்களை அபிஷேகம்பண்ணினவர், அவர் தனக்கு முதிர்வயதானபோது, இஸ்ரவேல் ஜனங்களெல்லாரையும் கூட்டிக்கொண்டு, அந்த ஜனங்களிடம், நான் உங்களிடத்தில் எதையாவது வஞ்சித்தது உண்டா? உங்கள் எருதுகளை எடுத்துக்கொண்டேனா? யாருக்காவது அநியாயமாக, எதையாவது செய்ததுண்டா? என்று அநேக கேள்விகளைக் கேட்டார். அவர் அந்த 40 வருஷமும் ஜனங்களிடத்தில் உண்மையுள்ளவராக இருந்தார். இது தான் உண்மையான ஒரு மனுஷனுடைய அநுபவம். நமக்கு ஒரு ஆளுக்குக் கீழே வேலைபார்க்கும்போது அந்த மனுஷனிடத்தில் உண்மையாயிருக்க முடியவில்லை. நாம் எந்தக் காரியத்திலேயும் உண்மையுடையவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

அதினால் எதாவது கஷ்ட நஷ்டங்கள் நமக்கு வந்தாலும்கூட முடிவில் நமக்கு தேவன் ஜீவகிரீடத்தைத் தருவார்.

*சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். (லூக்கா 19 : 8).*

சகேயு இரட்சிக்கப்படுவதற்கு முன் பண ஆசை உடையவனாக இருந்தான். இரட்சிக்கப்பட்ட பிறகு மனித நேயம் உடையவனாகவும், அடுத்தவர்களைக் குறித்த உணர்வுடையவனாகவும் மாறினான். இரட்சிப்புக்கு ஓர்அடையாளம் உணர்வு என்பதாகும். நாம் உண்மையிலேயே மனந்திரும்பினவர்களாய் இருப்போமானால், நமக்கும் உணர்வு இருக்கும். சகேயு மனந்திரும்பின பிறகு உணர்வுண்டானது. அந்த உணர்வு அவனுக்குள் இருந்ததினால் தான், நான் ஒன்றிற்கு நான்காக திருப்பிக்கொடுப்பேன் என்று சொன்னான்.

*பணத்தை இரட்டிப்பாய் உங்கள் கைகளில் கொண்டுபோங்கள், சாக்குகளின் வாயிலே திரும்பக் கொண்டுவந்த பணத்தையும் கொண்டுபோங்கள்; அது கைப்பிசகாய் வந்திருக்கும். (ஆதியாகமம் 43 :12).*

யாக்கோபு தன்னுடைய பிள்ளைகளை பஞ்சத்தினிமித்தம் எகிப்துக்கு தானியங்களை வாங்கும்படியாக அனுப்புகிறார். அவர்கள் தானியங்களை வாங்கிக் கொண்டு வரும்போது, யோசேப்பு தானியங்களுக்குரிய பணத்தை சாக்குகளின் வாயிலே போட்டு திரும்ப அனுப்பினார். அவர்கள் வீட்டிற்கு வந்து, தானியங்கள் வைக்கப்பட்டிருந்த சாக்குகளை அவிழ்க்கும்போது உள்ளே பணம் இருந்தது. நாமாக இருந்தால் அந்த பணத்தை அப்படியே வைத்துக் கொள்வோம். யாக்கோபு மறுபடியும் தன் பிள்ளைகளை தானியத்திற்காக அனுப்பும்போது, அவர்களிடம் பணத்தை இரட்டிப்பாய் உங்கள் கையில் கொண்டுபோங்கள் என்றும், சாக்குகளின் வாயில் வைக்கப்பட்டிருந்த பணத்தையும் கொண்டு போங்கள்; அது ஒருவேளை தெரியாமல் கைப்பிசகாய் வந்திருக்கும் என்று சொன்னார். நம்முடைய

வாழ்க்கை எப்படி இருக்கிறது? நாம் உண்மையுடையவர்களாக இருக்கிறோமா? தேவன் உண்மையுள்ள மனுஷனையே தேடுகிறவராக இருக்கிறார். நாம் அவருடைய ஜனங்களென்று சொல்லியும் உண்மையற்றவர்களாகவே இருக்கிறோம்.

> *இந்த இருபது வருஷகாலம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும், ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர். (ஆதியாகமம் 31 : 41).*

யாக்கோபு லாபானுக்குக்கீழே வேலை செய்யும்போது 10 முறை அவனுடைய சம்பளத்தை மாற்றினான். ஆனாலும் யாக்கோபு உண்மையை விட்டுவிடாமல், லாபானுக்கு உண்மையாயிருக்கக் கூடிய காரியத்தில் கொஞ்சமும் பிசகவில்லை. கடைசியாக, 6 வருஷம் லாபானுக்கு மந்தை மேய்க்கிற வேலை செய்தான். அதற்குக் கூலியாக யாக்கோபு மந்தையைக் கேட்டபோது, அதிலும் ஏமாற்றினான். பின்பு யாக்கோபு லாபானை விட்டுப் புறப்பட்டுப் போகும்போது, அவனுக்குத் தேவன் திரளான ஆடு, மாடுகளைக் கொடுத்தார். அதுபோல, ஒரு மனுஷன் கடைசிவரைக்கும் உண்மையாய் இருப்பானேயானால், தேவன் அந்த மனுஷனை நிச்சயமாக உயர்த்துவார்.

நாம் ஒரு தொழில் அல்லது ஒரு காரியத்தில் உண்மையாயிருக்கும்போது, நெருக்கடிகள் உண்டாகி, எல்லாவற்றையும் இழக்கக்கூடிய நிலைமை வரும்போது, உண்மைக்கு மாறான காரியங்களுக்கு இடம்கொடுத்து, உலகத்தில் வாழ்வதற்காக செல்வத்தை சம்பாத்தியம்பண்ணவேண்டுமென்ற எண்ணத்தை மாத்திரம் உடையவர்களாக காணப்படுவோம்.

## 5.3. என்னென்ன காரியங்களில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்?

♦ **நமக்கு நாமே உண்மையுடையவர்களாயிருக்க வேண்டும்:**

நாம், நமக்கு நாமே உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்மிடத்தில் உண்மையில்லாதிருக்குமானால், நாம் எந்தவொரு காரியத்திலும் பிறரிடத்தில் உண்மையாயிருக்க முடியாது. நம்முடைய

மனசாட்சி நான் நல்லவன், உத்தமன், உண்மையுள்ளவன், தேவனுக்கு பயந்து நடக்கிறவன், பொல்லாப்பை விட்டு விலகி ஜீவிக்கிறவன் என்று சொல்லுமானால், நமக்கு நாம் உண்மையுள்ளவர்கள். ஆனால் அநேகருடைய மனச்சாட்சி தாங்கள் உண்மையுள்ளவர்கள் என்று சொல்லும். ஏனென்றால்: அவர்கள் பொய் பேசியும், பாவங்களைப் பார்த்தும் அவர்களது மனசாட்சி செத்திருக்கும். அதன்பிறகு அது பாவத்தைக் குறித்து நமக்கு உணர்த்தாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமக்கு நாமே உண்மையாயிருக்க முடிவதில்லை.

*நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம். (புலம்பல் 3 : 40).*

நாம் நமக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டுமானால், முதலாவது நம்முடைய மனச்சாட்சி நீ நல்லவனென்று சொல்ல வேண்டும். ஒருவேளை அந்த மனச்சாட்சியை நாம் பாவஞ்செய்து கொன்று விட்டோமானால், நம்முடைய கிரியைகளை சோதித்துப் பார்க்க வேண்டும். அதாவது இந்த நாள் முழுவதும் என் கண்கள் எவைகளைப் பார்த்தது? என் நாவு எவைகளைப் பேசியது, என்னுடைய சிந்தனையில் என்னென்ன எண்ணங்கள் வந்தது? அடுத்தவர்களிடம் இடைபடும்போது என் கிரியைகள் எப்படிப்பட்டதாய் இருந்தது என்று சோதித்துப் பார்க்கவேண்டும்.

*இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன். (அப்போஸ்தலர் 24 : 16).*

பவுல் அப்போஸ்தலர், நான் தேவனுக்கு முன்பாகவும், மனுஷர்களுக்கு முன்பாகவும் குற்றமற்ற மனச்சாட்சியுடையவனாயிருக்க விரும்புகிறேன் என்று சொல்லுகிறார். நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டுமானால் முதலாவது நம்முடைய மனச்சாட்சியை ஒழுங்குபடுத்த வேண்டும். செத்த மனச்சாட்சி உயிரடைய வேண்டும். செத்த மனக்கண்கள் உயிரடைந்து, பிரகாசமான மனக்கண்கள் உண்டாகி, தன்னுடைய பேச்சு, ஜீவியம், மற்றும் காரியங்கள் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதற்கு ஒரே வழி நம்முடைய வழியை நாமே சோதித்தறிவதாகும். அப்பொழுது

நம்முடைய மனச்சாட்சி உயிரடையும், நல்மனச்சாட்சி உடையவர்களாயிருந்து, தேவனுக்கும், மனுஷருக்கும் முன்பாக குற்றமற்றவர்களாகவும் வாழ முடியும்.

*எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; நாங்கள் நல்மனச்சாட்சியுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயித்திருக்கிறோம். (எபிரெயர் 13 : 18).*

முதலாவது நமக்கு நாமே உண்மையுடையவர்களாகவும், நல்மனச்சாட்சியுடையவர்களாகவும் இருக்க வேண்டும். நல்மனச் சாட்சி நமக்குள் இருக்குமேயானால் நாம் நல்நடத்தை உடையவர்களாய் இருப்போம். நல்நடத்தை உடையவர்களாயிருந்தால் நம்முடைய கிரியைகள் நற்கிரியைகளாக இருக்கும். நம்மால் யோக்கியமானவைகளை மாத்திரம் செய்யக்கூடும்.

- **பிறரிடத்தில் உண்மையாயிருக்க வேண்டும்:**

*பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடித்து, சிறந்த பரிமளதைலங்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள்; ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற் போகிறார்கள். (ஆமோஸ் 6 : 6).*

யோசேப்பு விற்கப்பட்டு அவனுடைய காரியங்களெல்லாம் முடிந்து, எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்து விட்டது. ஆனால் தேவன் அவனைக் குறித்து கவலையுடையவராக இருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறரிடத்தில் உண்மையுடையவர்களாயிருக்க வேண்டுமாயின், அவர்களின் கஷ்டநஷ்டங்களை புரிந்து, அவர்களுக்காக அனுதாபப்படுகிறவர்களாகவும், நம்மால் முடிந்ததை அவர்களுக்குச் செய்கிறவர்களாகவும், ஒன்றுமே முடியாவிடில் அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறவர்களாகவும் காணப்பட வேண்டும். யோசேப்பு காணாமற்போனபோது அவனுடைய தகப்பன் கொஞ்ச நாள் துக்கம் கொண்டாடினார். அதன்பின் அவன் இறந்து போனான் என்ற எண்ணத்தோடு தன்னைத் தேற்றிக்கொண்டார். யோசேப்புக்காக அவனுடைய சகோதரர்களும் கவலைப்படவில்லை. ஆனால் தேவன் கவலைப்பட்டார். இந்தக் காரியத்தை அநேக நூற்றாண்டுகளுக்குப்

பின்பு ஆமோஸ் தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் சொல்ல வேண்டுமானால், இப்போதும் யோசேப்பைப் போல அநேக ஜனங்கள் தங்கள் வாழ்க்கையில் எந்தவிதமான நிலைமையுமற்று விற்கப்படுவதும், அவர்களுடைய சுதந்தரமெல்லாம் பறிக்கப்படுவதும், அடிமைகளாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதுமான நிலைமையோடு காணப்படுகிறார்கள் என்பதாகும். அப்படிப்பட்டதான ஜனங்களைக் குறித்ததான கவலை நமக்குத் தேவையானது என்று தேவன் சொல்லுகிறார்.

*யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தம் அவனை இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். (ஆதியாகமம் 37:5).*

யோசேப்பு ஒரு சொப்பனத்தைக் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தபோது, அவனுடைய சகோதரர் அவனைப் பகைத்தார்கள். ஒருவன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு முன்னேறினால் நமக்குள் பொறாமை குணம் உண்டாகிறது. அவர்களைப் பகைக்கிறவர்களாக இருக்கிறோம்.

*அவன் சகோதரர் அவன்மேல் பொறாமைகொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்.*

*அவனை எடுத்து, அந்தக் குழியிலே போட்டார்கள்; அது தண்ணீரில்லாத வெறுங்குழியாயிருந்தது. அந்த வர்த்தகரான மீதியானியர் கடந்துபோகிறபோது, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டுபோனார்கள்.*

*(ஆதியாகமம் 37 : 11, 24, 28)*

யோசேப்பின் மேல் அவனுடைய சகோதரர் பொறாமை கொண்டார்கள். அவனைக் குழியில் போட்டார்கள். அதன் பின் அவனை 20 வெள்ளிக்காசுக்காக விற்றுப்போட்டார்கள். நம்மில் அநேகரும் இப்படிப்பட்ட நிலையோடு காணப்படுகிறோம்.

♦ **தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்:**

*மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். (I கொரிந்தியர் 10 : 13).*

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

*இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். (சங்கீதம் 51 : 6).*

நம்மை உருவாக்கின தேவன் நம் உள்ளத்தில் உண்மையாயிருப்பதையே விரும்புகிறார். அவர் நம் உள்ளிருதயங்களையும் ஆராய்கிறவராக இருக்கிறார்.

*கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். (சங்கீதம் 139 : 1).*

வெளிப்படையானத் தோற்றத்தை ஆண்டவர் விரும்பவே இல்லை.

*அவர் அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. (லூக்கா 16 : 15).*

சிலர் தங்களை நீதிமான்போல் காட்டுகிறார்கள். ஆனால் தேவன் மனுஷருடைய உள்ளத்தை ஆராய்கிறார். அவர்களுடைய தோற்றத்திற்கு தக்கவாறு அவர்கள் இருதயம் காணப்படாவிட்டால் அவர்களை அருவருக்கிறார்.

*என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். (சங்கீதம் 139 : 2 - 4).*

தேவன் சகலவற்றையும் அறிந்திருக்கிறார். நாம் இருக்கிறதும் எழுந்திருக்கிறதும் அவருக்குத் தெரியும். நம்முடைய இருதயம் எதை யோசிக்கிறது என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். நம்முடைய நினைவுகளும், நினைவுகளின் விளைவால் வரக்கூடிய செயல்களும், அந்தச் செயல்களை நிறைவேற்றுவதற்காக நாம் நடக்கக்கூடிய நடக்கைகளும் தேவனுக்குத் தெரியும். நம்முடைய நாவிலிருந்து ஒரு வார்த்தை புறப்படும்முன்பே நாம் எதைப் பேசப்போகிறோம் என்பதை அறிகிறார். அப்படியானால் நாம் வணங்குகிற தேவன் எவ்வளவு பெரியவர், அவருக்கு முன் நாம் உண்மையாயிருப்பதையே விரும்புகிறார்.

அனனியா, சப்பீராள் என்பவர்கள் தங்கள் நிலத்தை விற்று, அதிலொருபங்கை வஞ்சித்து வைத்துக்கொண்டு ஒரு பங்கை மட்டும் பேதுரு அப்போஸ்தலரிடத்தில் கொடுத்தார்கள். அப்பொழுது பேதுரு அப்போஸ்தலர், பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்வதற்கு சாத்தான் உங்களைத் தூண்டினதென்ன?என்று கேட்டார். அனனியா, சப்பீராள் என்பவர்களுடைய உள்ளத்திலே உண்மையில்லை. ஆகவே, அவர்கள் உயிர்போனது.

## 5.4. நாம் எப்படி தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்க முடியும்?

முதலாவது பாவங்களை அறிக்கைபண்ணி, இரட்சிக்கப்பட வேண்டும். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக, நம்மை நாமே ஜீவபலியாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

*அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக*

*ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12 : 1, 2).*

நம்மை நாமே ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தால் மாத்திரம் தான் உண்மையுள்ளவர்களாக ஜீவிக்க முடியும். நமக்கென்று எதுவும் வைக்கக்கூடாது. மோசேயும், சாமுவேலும் உண்மையுள்ளவர்களாக இருக்கக்காரணம், தங்களுக்கென்று எதையும் அவர்கள் வைக்கவில்லை. நான், என்ற எண்ணம் நமக்குள்ளே இருக்குமேயானால் ஜீவியத்தில் பின்வாங்கிப்போய்விடுவோம். நாம் தேவனிடத்தில் உண்மையுடையவர்களாக இருக்கவேண்டுமானால் நம்முடைய மனம் புதிதாக வேண்டும். நம் மனதில் உலகம், உலகத்திலுள்ள பொருட்கள் மீதுள்ள ஆசைஇச்சைகள் இருக்குமானால், நாம் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாய் இருக்கமுடியாது. அடுத்ததாக நாம் தேவ சித்தம் மாத்திரம் செய்ய வேண்டும்; உலகத்திற்கேற்றபடி வாழக்கூடிய வாழ்க்கையை விடவேண்டும். உலகத்திற்கேற்றபடி வாழ்ந்து, மற்றவர்களைப் பிரியப்படுத்தும்போது உண்மையுள்ளவர்களாய் ஜீவிக்க முடியாது.

உண்மையாய் ஒரு மனுஷன் இருப்பானேயானால், தன் உயிர் போகிறதற்கும் இடமுண்டு.

*இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான்; கல்தேயரிடத்துக்குப் புறப்பட்டுப்போகிறவனோ உயிரோடிருப்பான்; அவனுடைய பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளையுடைமையைப்போலிருக்கும்; அவன் பிழைப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும், இந்த நகரம் பாபிலோன் ராஜாவினுடைய இராணுவத்தின் கையில்*

*நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படும்; அவன் அதைப் பிடிப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும்,*

*(எரேமியா 38 : 1, 2).*

யூத ஜனங்களைக் குறித்த தேவனுடைய வார்த்தை எரேமியா தீர்க்கதரிசிக்கு உண்டாகி, அவர் 70 வருஷம் இவர்கள் அடிமைகளாகிப் போவார்கள். இப்பொழுது யூத ஜனங்களை வழிநடத்துகிறதான ராஜாவால் பாபிலோன் ராஜாவை எவ்விதத்திலும் எதிர்த்து நிற்க முடியாது. ஆகவே, பக்கத்து நாடாகிய கல்தேயர் தேசத்துக்கு ஓடுகிறவன் மட்டும் தப்புவான். மற்றவர்களெல்லாரும் கொல்லப்படுவார்கள் அல்லது அடிமைகளாக்கப்பட்டுப் போவார்கள் என்று தீர்க்கதரிசனமாகச் சொன்னார். உடனே யூத ஜனங்கள் இந்த வார்த்தை யூதர்களான யுத்த வீரர்களுடைய மனதை பெலனற்றுப்போகச் செய்கிறது என்று புரளியை உண்டாக்கினார்கள். அப்பொழுது பிரபுக்கள் சேர்ந்து எரேமியா தீர்க்கதரிசியை அடித்து, காவல்கிடங்கிலே கொண்டுபோட்டார்கள். அதன்பிறகு அவர் கெஞ்சினதினிமித்தமாக, அங்கிருந்து வெளியே கொண்டுவந்தார்கள். அதன்பின்பு அவரைத் தண்ணீரில்லாத சேறு நிறைந்த ஒரு குழிக்குள் தூக்கிப்போட்டார்கள். அங்கே அவர் அமிழ்ந்த போது அதிலிருந்து திரும்பத் தூக்கினார்கள். இவையெல்லாம் எரேமியா தீர்க்கதரிசிக்கு சம்பவிக்கக்காரணம் உண்மையாய் இருந்ததினால் தான். நாமும் தேவ சித்தத்தைக் குறித்து அறிந்து, அதையே செய்து நிறைவேற்றும்போது, நம்முடைய உயிருக்கும் ஆபத்து உண்டாகும். எரேமியா தீர்க்கதரிசியும் இந்தக் கஷ்டங்களை அநுபவிக்க வேறெந்த தவறும் செய்யவில்லை.

*அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா, யோசபாத்தை நோக்கி: கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன் என்றான். அதற்கு யோசபாத், ராஜாவே, அப்படிச் சொல்லவேண்டாம் என்றான்.*

*(I இராஜாக்கள் 22 : 8).*

ஆகாப் என்ற இஸ்ரவேலின் ராஜாவுக்கு ராமோத் என்ற இடத்தைப் பிடிக்க வேண்டும். அதற்காக யோசபாத் என்ற ராஜாவிடம் நீர் எனக்கு உதவி செய்ய வருவீரோ என்று கேட்டான். அதற்கு யோசபாத் வரலாம் என்று சொல்லிவிட்டு, நாம் ராமோத்தை பிடிக்கிறது தேவனுக்குச் சித்தம்தானா, தேவன் அதை நமக்கு ஒப்புக்கொடுப்பாரோ என்று கேட்டான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா நானூறு தீர்க்கதரிசிகளை வரவழைத்து, அவர்களிடம் விசாரித்தான். அவர்கள், ராஜாவே, நீர் போம்; தேவன் அதை உம்முடைய கையில் ஒப்புகொடுப்பார் என்று சொன்னார்கள். அப்பொழுது யூதாவின் ராஜா ஆகாபிடம்: இவர்களைத் தவிர வேறு தீர்க்கதரிசிகள் உண்டா என்று கேட்டான். அப்பொழுது ஆகாப் மிகாயா என்னும் ஒருவன் இருக்கிறான்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன். ஆகவே, நான் அவனைப் பகைக்கிறேன் என்று சொன்னான்.

நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால் ராஜாவும் அதிகாரிகளும் மந்திரிகளும் நம்மைப் பகைப்பார்கள். மிகாயா ஆகாபுக்கு எந்த துரோகமும் பண்ணவில்லை. ஆகாப் பயங்கரமான துஷ்டன் ஆனதால், அவனைக் குறித்துக் கர்த்தர் அறிவிக்கிற உண்மையான வார்த்தைகளைச் சொல்லுவான். அதுவே, ஆகாப் மிகாயாவைப் பகைக்கக் காரணம்.

*அப்பொழுது கேனானாவின் குமாரனாகிய சிதேக்கியா கிட்டேவந்து, மிகாயாவைக் கன்னத்தில் அடித்து, கர்த்தருடைய ஆவி எந்தவழியாய் என்னை விட்டு உன்னோடே பேசும்படி வந்தது என்றான்.*

*இவனைச் சிறைச்சாலையிலே வைத்து, நான் சமாதானத்தோடே வருமளவும், இவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடக் கொடுங்கள் என்று ராஜா சொன்னார் என்று சொல்லுங்கள் என்றான்.*

*(I இராஜாக்கள் 22 : 24, 27).*

ஆகாப் அழைத்த 400 தீர்க்கதரிசிகளும் அவனிடம், நீங்கள் போனால் வெற்றியோடே திரும்பி வருவீர்கள் என்று சொன்னார்கள்.

ஆனால் மிகாயா சொன்னது: நான் ஒரு காட்சியைக் கண்டேன். மேய்ப்பனில்லாததினால் ஆடுகள் சிதறடிக்கப்படுகிறது. ஆனாலும், சமாதானத்தோடே திரும்பி வருகிறது என்று சொன்னான். அப்பொழுது ஆகாப், நான் உயிரோடே திரும்பி வருவேன், அதுவரைக்கும் மிகாயாவுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும், இடுக்கத்தின் தண்ணீரையும் கொடுக்க வேண்டும் என்பதாகச் சொன்னான். இடுக்கத்தின் அப்பம், இடுக்கத்தின் தண்ணீர் என்றால் சரீரத்தில் எப்போதும் பசியும், தாகமும் இருக்கும். உயிரைக் காப்பாற்ற ஒரு அப்பத்தில் பாதியும், கொஞ்சம் தண்ணீரும் கொடுப்பார்கள். மிகாயா உண்மையாயிருந்ததினால் வந்த வினை இது. பின்பு ஆகாப் ராமோத்தை பிடிக்கும்படியாகப் போனபோது, ஒருவன் நினைத்திராதபிரகாரமாக, வில்லை நாணேற்றி எய்தது இவனைக் குத்தினது; ஆகாப் மாத்திரம் செத்தான். ஜனங்கள் சிதறடிக்கப்பட்டு தங்கள் சொந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

தீர்க்கதரிசிகளாகிய எரேமியாவும், மிகாயாவும் உண்மையான காரியத்தைச் சொல்லும்போது தங்கள் உயிருக்கே ஆபத்தான நிலைமை உண்டானது என்றாலும், அவர்கள் பொய் சொல்லவில்லை. அவர்கள் தங்கள் உயிரைப் பெரிதாக எண்ணவில்லை. தங்களுக்கு கொடுக்கப்பட்டதான உத்தியோகத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். ஒரு தீர்க்கதரிசி எப்படி குறி சொல்லுகிறவனாக மாறுகிறான் என்றால் அதற்காகப் பணம் வாங்கும்போது அது குறி சொல்லுதல்.

> *அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை.*
>
> *(தானியேல் 6 : 4).*

தானியேல் தீர்க்கதரிசி எல்லாக் காரியத்திலும் உண்மையுள்ளவனாக இருந்ததினால் குற்றம்பிடிக்க வகைதேடினார்கள். நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போமானால், நிச்சயமாகவே மற்றவர்கள் நம்மைக் குற்றம்பிடிப்பார்கள். ஆனாலும், அப்படி குற்றம்

பிடிக்கிறதினால் நாம் பயப்படாமல் உண்மையிலே நிலைநிற்போமானால், சிங்கங்களே நமக்கெதிராக வந்தாலும் தேவன் நம்மைப் பாதுகாப்பார். இது தான் தேவனுடைய வல்லமையான செயல். நமக்கு இந்த உலகத்தில் நெருக்கமும், கஷ்டங்களும், வேதனைக்குரிய காரியங்களும் உண்டு, மரணமே நமக்கு நேரிடக்கூடிய காரியமாக இருந்தாலும் நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் பரலோகராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளலாம்.

> *இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவ வசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை. (II தீமோத்தேயு 2 : 9).*

பவுல் அப்போஸ்தலர் தன் வாழ்க்கையில் எந்தத் தவறும் செய்யவில்லை. ஆனால், தனக்கு ஒப்புவிக்கப்பட்டதான சுவிசேஷத்தினிமித்தம் பாதகன்போல் கட்டப்பட்டார்.

> *எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன.*
> *(II கொரிந்தியர் 7 : 5).*

அவர் தைரியமாய் சுவிசேஷத்தை அறிவிக்கும்போது எப்பக்கத்திலும் நெருக்கமும், உபத்திரவமும் உண்டானது. நீ அதைப் பற்றி பிரசங்கிக்காதே என்று துரத்தினார்கள், கல்லெறிந்தார்கள், அடித்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளே பயங்களோடும் காணப்பட்டார். நாம் உண்மையாய் ஜீவிப்போமானால் நமக்கு நிம்மதியான வாழ்க்கை இருக்காது. ஆனாலும் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளலாம், அதுவே முக்கியமானதாகும். பவுல் அப்போஸ்தலர் எப்பக்கத்திலும் உபத்திரவங்களை அநுபவித்தபின்பும் உண்மையாயிருக்கிறதை விடவில்லை. ஆகவே, கடைசியில் நான் நிச்சயமில்லாதவனாக ஒன்றையும் செய்யவில்லை. நான் நல்லதொரு போராட்டத்தைப் போராடினேன். நித்திய ஜீவனை நான் தேவனிடத்தினின்று பெற்றுக்கொள்வேன் என்று உறுதியாய்ச் சொன்னார். ஏனென்றால், அவருக்குக் கொடுக்கப்பட்டதான ஊழியத்தில்

அவர் உண்மையுள்ளவராக இருந்தார். எனவே, நாமும் உண்மையுள்ளவர்களாக காணப்படவேண்டியது அவசியமாகும்.

உண்மையுள்ள மனுஷன் பூரணம், பரிபூரணம், சம்பூரணமான நிறைவான ஆசீர்வாதங்களைப் பெறுவான். இது பொய்யுரையாத தேவனுடைய வார்த்தை.

> *உக்கிராண விசாரிப்பைவிட்டு நான் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்யவேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியவந்தது, என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு; (லூக்கா 16 : 4).*

ஒரு மனுஷனுக்கு நெருக்கம் வரும்போது, உண்மைக்கு மாறாகப் போகிறான். இந்த உக்கிராணக்காரன் அநீதியுள்ளவனாகவும், எஜமானுடைய ஆஸ்திகள் எல்லாவற்றையும் அழித்துப் போடுகிறான் என்றும் எஜமான் அறிந்தபோது, அவனுடைய பதவி போகும் என்ற நிலை உண்டாகிறது. அப்போது அவன் புத்தியுள்ளவனாகச் செயல்பட்டு, இனி கடன் வாங்கினவர்களுக்கு இரக்கங்காட்டினால் என்னை அந்த வீடுகளில் ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணி, 100 குடம் எண்ணெய் வாங்கினவனுக்கு 50 குடம் என்று எழுது என்றும், 100 கலம் கோதுமை வாங்கினால் அதை 80 கலம் என்று எழுது என்றும் சொன்னான். அப்படிச் செய்தால் அவர்கள் என்னைத் தங்கள் வீடுகளில் சேர்த்துக்கொண்டு, சாப்பாடு தருவார்கள் என்று நினைத்தான். ஆனால் நாம் என்ன செய்யவேண்டுமென்றால், பதவி போய் ஒன்றுமில்லாத நிலைமை வந்தாலும் நித்திய வீட்டில் நம்மை தேவன் சேர்த்துக் கொள்வதற்காக நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

> *கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதி யுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். (லூக்கா 16 : 10).*

சின்ன சின்ன காரியங்களில் நாம் உண்மையுள்ளவர்களாய் இல்லாமல் இருந்தால், ஒரு காலத்திலும் பெரிய காரியங்களிலும் உண்மையாயிருக்க முடியாது. தேவனுடைய மனுஷர்களென்று சொல்லுகிற அநேகர் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்களாக

இருக்கிறார்கள். நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமானால், மனுஷரை அல்ல தேவனைப் பிரியப்படுத்த வேண்டும். அவர் நம்மை நித்திய வீட்டிலே கொண்டு சேர்க்கும்படியாக பிரயாசப்பட வேண்டும்.

**6. பூரணமான அன்பு:**

இராப்போஜனத்தில் பங்குபெறத் தேவையான ஒரு முக்கியமான அனுபவம் பூரணமான அன்பு.

*கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள். (எபேசியர் 5 : 2)*

நாம் அன்பிலே நிலைகொண்டவர்களாகவும், அந்த அன்பிலே வேரூன்றி வளருகிறவர்களாகவும், அன்பை மற்றவர்கள் காணத் தக்கதாக நற்கந்தம் உடையதான அனுபவத்தோடும் காணப்பட வேண்டும். நாம் அன்பில் நிலைகொண்டிருக்க வேண்டும் என்பதைத் தேவன் நமக்கு மாதிரியாகக் காண்பித்திருக்கிறார்.

*அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.*

*(I யோவான் 3 : 16)*

அன்பு என்பது சுயநலமற்றது. பிறர் நலம் கருதக்கூடியதாயிருக்கிறது. தன்னையே தியாகம் பண்ணக்கூடிய வாழ்க்கை தான் அன்பு. ஒரு மனுஷனுக்கு உதவி செய்வதற்காக, ஒருவேளை நம்முடைய உயிரையே தியாகம் செய்ய வேண்டியதாக இருந்தாலும் அது கடன் தான். நம்மை இன்னொரு மனுஷனுக்கு தியாகம் செய்வதாக இருந்தாலும் கூட அதைச் செய்வதற்கு நாம் கடனாளிகளாயிருக்கிறோம். நாம் கிறிஸ்தவர்களாயிருக்கிறோம், ஆகவே நாம் கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தரித்துக்கொண்டவர்களாகவும், கிறிஸ்துவின் மாதிரியை கடைபிடிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். நம்முடைய தேவன் தம்மையேகொடுத்து நம்மை நேசித்திருக்கிறார். அதன் மூலம் அவர் நம்மிடத்தில் அன்பாயிருக்கிறாரென்று அறிந்திருக்கிறோம்.

*பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.*
*(எரேமியா 31 : 3).*

நாம் பாவஞ்செய்து தேவனை துக்கப்படுத்துகிறவர்களாகவும், வேதனைப்படுத்துகிறவர்களாகவும் இருக்கிறோம். நம்மால் அவருக்கு எந்தவொரு பிரயோஜனமும் இல்லை. ஆனால், அளவிடமுடியாத அளவு நம்மை சிநேகித்தேன் என்று சொல்லியிருக்கிறார். நாம் பாவிகளாயிருக்கிறோம். தேவன் மகா பரிசுத்தர். சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவர், பாவம் அவரது பக்கத்தில் கூட போக முடியாது. ஆகவே, பாவிகளான நாம் அவருடைய அருகாமையில் சேர முடியாதவர்களாக இருக்கிறோம். அப்படியானால் தேவன் நம்மை அவர் பக்கமாக எப்படி இழுத்துக்கொள்ள முடியும்?

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3 : 16).*

பாவத்தினால் கெட்டுப்போனவர்களாகிய நம்மைப் பாவத்தின் சகல கேடுகளிலிருந்தும் விடுவித்து, நம்மைப் பரிசுத்தப்படுத்தி, பரிசுத்த ஜாதியாராக மாற்றி, அவரை நம் தகப்பன் என்ற நிலைமைக்குக் கொண்டுவந்து, அவருடைய ஆவியை நமக்குள் வைத்து, அவரை அப்பா, பிதாவே என்று கூப்பிடக்கூடியதான நிலைமைக்குள் நம்மைக் கொண்டுவந்து, இவ்விதமாக அவரோடு நம்மை இழுத்துக் கொள்ளுகிறவராக இருக்கிறார். தேவன் தம்முடைய குமாரனை அடிக்கப்படுவதற்காகவும், இரத்தம் சிந்தப்படுவதற்காகவும், மரித்து உயிர்த்தெழுவதற்காகவும் மட்டுமல்ல; அவருடைய காயங்களால் நாம் குணமாகவும், அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்ட அநுபவத்தைச் சொந்தமாக்கவும், மரித்தாலும் உயிர்த்தெழுதல் உண்டு என்பதை நாம் விசுவாசிப்பதற்காகவும் இந்த உலகத்தில் அனுப்பினார்.

*தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே,*

*அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். (எபேசியர் 2 : 4, 5).*

தேவன் அன்புடையவராயிருக்கிறார். அந்த அன்பில் இரக்ககுணமும் நிறைந்திருக்கிறது. நாம் அன்புடையவர்களாயிருக்கிறோமென்று சொல்லுகிறோம். ஆனால் அதை நிரூபிப்பதற்கு நம்மில் எதுவுமே இல்லை. நாம் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டுமானால் இரக்ககுணம் அதனுடன் இருக்க வேண்டும். தேவன் நம்மில் அன்புகூர்ந்ததினால் இரட்சிப்பு என்ற அநுபவத்தை நமக்காக ஆயத்தம் பண்ணியிருக்கிறார். நாம் இரட்சிக்கப்பட்டு, சகல அசுத்தங்களினின்றும் விடுவிக்கப்பட்டு, பரிசுத்தவான்களாய் இந்த உலகத்தில் ஜீவனம் பண்ணுவதற்கு முக்கியமான ஒரு காரணம் தேவனுடைய அன்பு நம்மேல் இருந்ததினாலே தான். தேவனுடைய அன்பை ருசிபார்த்தவர்களாகிய நாம் அந்த அன்பை அவரிடத்திலும் பிறரிடத்திலும் காண்பிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஏனென்றால் பரிசுத்தவான்கள் என்கிற நிலைமையிலிருக்கிறவர்களாகிய நமக்கு அன்பென்பது அடிப்படையாக தேவையானதாக இருக்கிறது.

*நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும் அன்புகூருவாயாக. (உபாகமம் 6 : 5).*

இந்தக் கற்பனையை தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறவராக இருக்கிறார். இதுதான் இந்த உலகத்தில் இப்பொழுது இல்லை. நம்மிடத்திலும் அது பூரணமாக இல்லை. பரிசுத்த ஆவியை உடையவர்களாகிய நாமே இத்தகைய கற்பனையைக் கடைபிடிக்க முடியாதவர்களாக இருக்கிறோம். இதை தேவன் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே காணப்பட்ட ஜனங்களிடத்தில் எதிர்பார்த்திருக்கிறார். அக்காலத்தில் காணப்பட்ட ஜனங்களிடத்தில் இப்பொழுதிருக்கிறது போன்ற பரிசுத்தமும், விடுதலையும், அநுபவமும் இல்லை. ஆனால் தேவன் அதை அப்பொழுதே எதிர்பார்த்திருக்கிறாரென்றால், இப்பொழுது நாம் அதை எவ்வளவாய் வெளிப்படுத்த வேண்டும் என்பதே முக்கியமான காரணமாகும்.

## 6.1. நாம் தேவனை அன்பு செய்வது எப்படி?

முதலாவது நம்மிடத்தில் பாவம் இருக்கக்கூடாது.

> *பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே. (எபிரெயர் 12 : 4).*

பாவத்தை விட்டு விலகி ஜீவிக்கிறதற்காக, இரத்தம் சிந்துவது சாதாரணமான ஒரு காரியம் தான்.

> *இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான். (ஆதியாகமம் 39 : 9).*

> *அவர்களுக்கு முன்னாலே ஒரு புருஷனை அனுப்பினார்; யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான். அவன் கால்களை விலங்குபோட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது. (சங்கீதம் 105 : 17, 18).*

யோசேப்பின் பிராணன் இரும்பில் அடைபட்டிருக்கக் காரணம் என்ன? யோசேப்புக்கு பாவம் செய்யக்கூடிய எல்லாத் தருணமும் இருந்தும், என் தேவனுக்கு விரோதமாக நான் பாவஞ்செய்வது எப்படி என்று பாவத்திற்கு விலகியோடினான். அதற்குக் கிடைத்த தண்டனை ஜெயிலும், கையிலும்காலிலும் விலங்கும், அடியும், இரத்தஞ் சிந்தப்பட்டதான நிலைமையும் அங்கு உண்டானது. தன் எஜமானின் மனைவி பொய்ச்சொல்லிக் கொடுத்தாலும், அதனால் என் வாழ்க்கை முழுவதும் சிறைச்சாலையில் கைதியாக இருந்தாலும் ஒன்றுமில்லை. ஆனால் எக்காரணம் கொண்டும் என் ஆவியினாலோ, ஆத்துமாவினாலோ, சரீரத்தினாலோ நான் பாவஞ்செய்யமாட்டேன். பாவத்திற்கு இடங்கொடுக்கமாட்டேன் என்பது தான் யோசேப்பின் உறுதியான எண்ணம். இது தான் அவன் தேவனிடத்தில் வைத்திருந்த உண்மையான அன்பு. அநேகர் சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகளினிமித்தம்

பாவஞ்செய்துவிட்டேன்; ஆண்டவரே, என்னை மன்னியும் என்று சொல்லுகிறார்கள். இது போலியான பரிசுத்தமும், போலியான அன்புமாகும்.

நமக்காகத் தம்முடைய ஜீவனையே கொடுத்த தேவன் நாம் முழு பெலத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்பு செய்வதை நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். நாம் அவரை அன்பு செய்து தான் ஆகவேண்டும். ஏனென்றால், அவரிடத்திலிருந்து அவருடைய அன்பை நாம் நம்முடைய வாழ்க்கையில் ருசி பார்த்து விட்டோம். பாவக்கண்களை உடையவர்களாகிய நாம் அவருடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டு, கண்களின் இச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம். மாம்சத்தின் இச்சைகளிலிருந்தும், ஜீவனத்தின் பெருமையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு இருக்கிறோம். பாவத்தின் அடிமைத்தனத்தினின்றும் சாத்தானின் அடிமைத்தனத்தினின்றும் அவர் நம்மை விடுதலையாக்கி தேவனுடைய மகன், மகள் என்ற உயர்ந்த அந்தஸ்தை நமக்குத் தந்துவிட்டு அவர், நான் உனக்காக இவ்வளவான காரியங்களைச் செய்திருக்கிறேன்; நீ என்னை சிநேகி என்று சொல்லுகிறார். நாம் அவரை யதார்த்தமாய் சிநேகிப்பதை எப்படி அறிந்துகொள்வது? நாம் தேவனை அன்பு செய்கிறோம் என்பதை தேவனும் நம்முடன் உள்ளவர்களும் அறிந்து கொள்வதற்காக அவைகள் கிரியைகளினாலே விளங்க வேண்டும். அப்படியானால் பேச்சானாலும், பார்வையானாலும் எந்தவொரு கிரியையிலும் பாவம் இல்லாத அநுபவம் நமக்கு வேண்டும்.

அடுத்தபடியாக ஜெப ஜீவியம் நமக்குள் உண்டாக வேண்டும். ஜெப ஜீவியம் இருந்தால் தான் தேவனோடு உறவாட முடியும். ஜெப ஜீவியம் நமக்கு இல்லாவிடில் நான் தேவனை அன்புகூருகிறேன் என்று சொன்னாலும் அது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல.

### 6.2. நன்றியுணர்வோடு தேவனை ஸ்தோத்திரித்தல்:

*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். (I தெசலோனிக்கேயர் 5 : 17).*

ஜெப ஜீவியம் இருந்தால் தான் தேவனோடு உறவாடுகிற அநுபவம் உண்டாகும். ஜெப ஜீவியம் இல்லாவிட்டால் நான் தேவனை சிநேகிக்கிறேன் என்று சொன்னாலும், அது ஏற்றுக்கொள்ளப்படத்

தக்கதல்ல. தேவன் நமக்காக எல்லாவற்றையும் செய்துவிட்டு, அவருடைய சித்தத்தின்படி இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிற காரியத்தையே அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ண வேண்டுமென்று தேவன் கட்டளையிடக் காரணம் என்னவென்றால்: அவருடைய செவிகள் நம்முடைய ஜெபத்தின் சத்தத்தைக் கேட்க எதிர்பார்த்திருக்கிறது. நாம் அவரோடு பேசி இடைபட வேண்டுமென்பதை அவர் விரும்புகிறார். அதற்காகவே மனுஷனை உருவாக்கினார். ஆதியில் ஏதேனில் மனுஷனை உருவாக்கி வைத்து, அவனோடு பேசி இடைபடுகிறவராக இருந்தார். நாம் அவரோடு ஐக்கியமாக இருக்க ஜெபம் மிகவும் தேவையாகக் காணப்படுகிறது. அவர் நமக்குச் செய்கிற ஒவ்வொரு நன்மைகளுக்காகவும் நாம் அவரை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்துவதையும் எதிர்பார்க்கிறார். அதுவும் அவருடைய சித்தமாயிருக்கிறது. அநேகர் தங்களுக்குத் தேவையான நன்மைகளை தேவனிடத்தில் கேட்கிறவர்களாக மாத்திரம் காணப்படுகிறார்கள். ஆனால் தேவனோ நம்முடைய தேவைகளை நாம் கேட்கும் முன்னே அறிந்திருக்கிறார். ஆகவே, நாம் ஜெபம்பண்ணும்போது முதலாவது கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து, அவரை ஸ்தோத்திரித்து ஜெபம்பண்ணுகிறதான அனுபவத்தோடு காணப்படவேண்டும்.

## 6.3. காலையில் தேவனுடைய பிரசன்னத்தைத் தேடுதல்:

*கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்;*
*காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.*
*(சங்கீதம் 5 : 3).*

நாம் காலையில் எழும்பும்போதே அவருடைய பிரசன்னத்தை விரும்புகிறதான அனுபவத்தோடு காணப்பட வேண்டும். அவரோடு இருந்து, அவரை ஸ்தோத்திரித்துத் துதித்து, மகிமைப்படுத்தி, அவருக்குள்ளாகும் அனுபவத்தை அடைந்துகொள்ள வேண்டும். கர்த்தருடைய சாட்சிகள் காலையிலே எழும்பி, அவரை நோக்கி ஜெபம்பண்ணி, அவருடைய பிரசன்னத்தை அடைந்திருக்கிறார்கள். இவைகள் அன்பிற்கு ஓர் அடையாளம். நாம் அவருடைய பிரசன்னத்தை எதிர்பார்த்து அவரை நோக்கிக் கூப்பிடுவதை தேவன்

எதிர்பார்க்கிறார். நாமோ அவருக்கு நம்முடைய முதுகைக் காட்டுகிறவர்களாக, அவருடைய எதிர்பார்ப்பிற்கு ஏற்றவைகளை செய்யாதவர்களாக இருக்கிறோம்.

> *என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். (நீதிமொழிகள் 8 : 17).*

நம்முடைய தேவன் எல்லாருக்காகவும் பாடுபட்டார். அவர் எல்லாரையும் சிநேகிக்கிறவர் தான். ஆனாலும், பரம தகப்பனாகிய தம்மிடம் யார் அதிகமான தொடர்புடையவர்களாக காணப்படுகிறார்களோ, அவர்களை தான் அதிகமாக சிநேகிக்கிறார். அதிகாலையில் எழும்பி, அவருடைய பிரசன்னத்தைத் தேடி, தங்களுடைய தேவைகளை, அவரிடம் அறிக்கையிடுகிறவர்களுடைய தேவைகளையெல்லாம், அவர் நிறைவேற்றுகிறவராக இருக்கிறார்.

## 6.4. வேதத்தை தியானித்தல்:

> *கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்கீதம் 1 : 2).*

வேதத்தைத் தியானிப்பது எப்படி தேவனை சிநேகிக்கிறதற்கு சமமாகும்? வேதத்தைச் சும்மா வாசிப்பது அல்ல. அதை இரவும், பகலும் தியானிப்பது தேவனிடத்தில் அன்புகூருவதாகும். தியானிப்பது என்றால் வேதம் எனக்கு என்ன சொல்லுகிறது? நான் எந்த வழியில் நடக்க அது என்னை ஏவுகிறது என்று வேதத்தை தியானிக்கிற மனுஷன், தன்னுடைய வழியை அதற்கேற்றபடி மாற்றி, தேவன் விரும்புகிறபடி நடப்பான். வேதத்தை நாம் வாசிக்கும்போது, தேவனைக் குறித்த அறிவில் அதிகமாய் வளரலாம்.

> *இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவான் 20 : 31).*

கர்த்தருடைய வேதத்திலுள்ள வார்த்தைகள் இவ்விதமாக எழுதப்படக் காரணம்:

- தேவனை அறிந்துகொண்டு, அவரை அதிகமாய்ச் சிநேகிப்பதற்கு,
- நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வதற்கு.

கர்த்தருடைய வார்த்தைகள் ஜீவனுள்ள வார்த்தைகள், அவைகள் பரிசுத்த ஆவியானவரால், பரிசுத்த மனுஷர்களைக் கொண்டு எழுதப்பட்டது. வானமும், பூமியும் ஒழிந்து போகலாம். ஆனால், கர்த்தருடைய வார்த்தைகள் ஒன்றுமே ஒழிந்துபோவதில்லை.

இயேசு இந்த உலகத்திலிருந்தபோது அவரை அநேகர் கண்டார்கள். ஆனால், இவர்தான் தேவன் என்றும், இவர் தான் கிறிஸ்து என்றும் ஜனங்கள் விசுவாசிக்கவில்லை. இப்பொழுதும் யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. நமக்கு இயேசுவே தேவன் என்றும், நமக்காக இந்த உலகத்தில் வந்த இரட்சகர் என்றும் நம்மை உணர்த்தி, அவர் மேல் அதிகமான அன்பை நமக்கு அருளிச்செய்வதற்காகவே, வேதபுஸ்தகத்திலுள்ள வார்த்தைகள் நமக்காக எழுதப்பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள ஜனங்களுக்குப் பல காரியங்களைக் குறித்த அறிவு இருக்கிறது. ஆனால் தேவனைக் குறித்த அறிவு மனுஷர்களுக்குப் பிரதானமாக தேவையாகக் காணப்படுகிறது. இந்த அறிவில் நாம் வளர்ந்து, அவரை யதார்த்தமாக சிநேகிப்பதையே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார்.

> *நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. (1யோவான் 5 : 3).*

நான் தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொல்லியும், நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதிருப்போமானால், அது அவரை அன்புகூருவதல்ல. அவருடைய கற்பனைகள் பாரமானவைகள் அல்ல. மனுஷனால் எது முடியும், எது முடியாது என்பது தேவனுக்குத் தெரியும். தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்வது எளிதான காரியம். அதற்குப் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட யதார்த்தமான அநுபவம் தேவை. ஒரு மனுஷன்

பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுவானேயானால் அவனுக்கு இந்தக் கற்பனைகள் லேசானவைகளாக இருக்கும். தேவன் நம்மை சிநேகிக்கிறதாகச் சொல்லிவிட்டு, அந்த சிநேகத்தை நமக்காகத் தம்மை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்ததின் மூலம் வெளிப்படுத்தினார். அதுபோல நாமும் தேவனில் அன்புகூருகிறோமென்று சொல்வோமானால், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

> *நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். (யோவான் 13 : 34).*

இரண்டு முக்கியமான கற்பனை தான் பிரதானமானது.

♦ தேவனை அன்புகூருவது.

♦ நம்மிடத்தில் அன்புகூருவதுபோல மற்ற மனுஷர்களிலும் அன்புகூருவது.

நாம் காணாத தேவனில் அன்புகூருகிறோம் என்று சொல்லும்போது, நம்முடைய பக்கத்திலிருக்கிற சகோதரனுக்கு ஒரு தேவை வரும்போது, அவனுடைய தேவையை நிறைவேற்றாமலிருப்போமானால் அவர்கள் பொய்யர். அப்படிப்பட்டவர்கள் தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொல்லுவது பொய்யானது. ஏனென்றால், கிரியையிலே அன்பு வெளிப்படவில்லை.

> *இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. (மத்தேயு 22 : 39).*

நம்மிடத்தில் நாம் அன்புகூருவது போல, பிறரிடத்தில் அன்பு கூர வேண்டும்.

> *என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.*
> *(I யோவான் 3 : 18).*

அன்பு என்பது வெறும் வார்த்தையில் மட்டுமல்ல, கிரியையிலும் காணப்பட வேண்டும். உண்மையான இருதயத்தோடு, அடுத்தவர்களும் நன்றாயிருக்க வேண்டுமென்று அவர்களுடைய நிலைமையை அறிந்து செயல்படும் அநுபவமே உண்மையான அன்புகூருதலாகும்.

*எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்: அன்பு திரளான பாவங்களை மூடும். (I பேதுரு 4 : 8).*

நாம் உண்மையான அன்புடையவர்களாகக் காணப்பட வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே அடுத்தவர்களுடைய பாவங்களை மன்னிக்க முடியும். இயேசுகிறிஸ்துவின் பாடுகளை, சிந்தித்து, தியானித்து வாழ்கிற மனுஷனால் மட்டுமே அன்புடையவனாய் காணப்படமுடியும். இயேசுகிறிஸ்துவின் முகத்தில் காறி உமிழ்ந்தார்கள்; நீர் தேவனுடைய குமாரனானால் இறங்கி வாரும் என்றும், மற்றவர்களை இரட்சித்தார், தன்னை இரட்சிக்கத் திராணியில்லையென்றும் பலவாறாக நிந்தித்தார்கள். தேவன் அவர்கள் எல்லாரையும் மன்னித்தார். தேவனுடைய பிரசன்னத்துக்குள் காணப்பட்டு, தேவனோடு ஐக்கியமாக இருக்கிறதான மனுஷனால் மட்டுமே தேவனுடைய வசனங்களை நினைவுகூர முடியும். ஊக்கமான அன்பு தேவனிடத்திலிருந்தது; அவர் அதை வெளிப்படுத்திக் காண்பித்தார். நாம் அவருடைய பாடுகளை யதார்த்தமாய் தியானிக்கும்போது, தேவனே மன்னித்திருக்க நான் எம்மாத்திரம்? என்ற எண்ணம் உண்டாகும். அப்பொழுது ஒரு மனுஷனுடைய திரளான பாவங்களை மன்னிப்பது மட்டுமல்ல; நமக்கு எதிராக எத்தனை பேர், எவ்வளவு காரியங்கள் செய்தாலும் அவைகளை ஏழுமுறை அல்ல, ஏழு எழுபது முறை மன்னிக்கிறவர்களாய் காணப்படமுடியும். அந்த ஊக்கமான அன்பு இல்லாவிட்டால் வெறும் வசனத்தினாலும் நாவினாலும் மாத்திரம் அன்புசெய்கிறவர்களாகக் காணப்படுவோம். ஊக்கமான அன்பு நம்மிடத்தில் இருக்க வேண்டுமானால் முதலாவது அதிகமாக ஜெபம்பண்ணவேண்டும்; அந்த ஜெபமானது இயேசுகிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த உணர்வுடையதாய் காணப்படவேண்டும். தேவனே, அவரைப் பாடுகளுக்குட்படுத்தியவர்களை மன்னித்திருக்க, எனக்குத் தீமை

செய்தவர்களை நான் மன்னிக்கக் கடனாளியாயிருக்கிறேன் என்ற உணர்வோடு நாம் செய்யக்கூடியவர்களாயிருக்க வேண்டும்.

*பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். (ஏசாயா 58 : 7).*

ஒரு மனுஷனுக்குத் தேவையிருக்கும்போது, அதை நிறைவேற்றக்கூடியதான நிர்வாகம் நமக்கிருந்தும், அதை நிறைவேற்றாமல் போனால் நாம் தேவனிடத்திலும், பிறரிடத்திலும் அன்புள்ளவர்கள் அல்ல. ஒரு மனுஷன் பசியாயிருந்து, நம்மிடத்தில் ஆகாரத்தைக் கேட்டால் அவன் நமக்குச் சத்துருவாயிருந்தாலும், எப்படிப்பட்டவனாக இருந்தாலும், ஆகாரம் இருந்தால் கொடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் மற்ற மனுஷர்களுக்கு நம்மை மறைக்கக் கூடாது. அவர்களுடைய தேவைகளைக் குறித்து கர்த்தர் நம்மை உணர்த்தும்போது, நாம் அதைச் செய்கிறவர்களாகக் காணப்பட வேண்டும். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யாமல், இந்த உலகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தால், நாம் பரலோகராஜ்யம் போக முடியாது.

*தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? (I யோவான் 4 : 20).*

தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று சொல்லியும் மற்றவர்களைப் பகைக்கிறதான குணம், கண்டும் காணாமல் போகிறதான குணம் நம்மிடத்தில் இருக்கக்கூடாது.

*உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும். (கலாத்தியர் 5 : 14).*

*அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.*

*(I கொரிந்தியர் 13 : 4 - 7).*

அன்புக்கு பொறாமை இருக்கக்கூடாது. இறுமாப்பு(பதிலுக்கு பதில் செய்கிற குணம்). அயோக்கியமான காரியங்கள்(கீழ்த்தரமான காரியங்கள்) கூடாது. காரணமில்லாமல் கோபப்படுவது கூடாது. எதாவது காரியங்களுக்காகக் கோபப்பட்டுவிட்டாலும், சூரியன் மறைகிறதற்கு முன்னால் ஒப்புரவாகிவிடவேண்டும். அநேகர் சாகிறதுவரைக்கும் அந்தக் கசப்பை வைத்திருப்பார்கள். அதற்கு உதாரணமாக தாவீது ராஜா தன் மகன் அப்சலோமுக்கு தப்பியோடிப் போகும்போது சவுலின் மனுஷனான சீமேயி என்பவன் அவனை தூஷித்து, கற்களை அவன்மேல் எறிந்துகொண்டே வந்தான். அப்பொழுது தாவீதோடு காணப்பட்ட அபிசாய் என்பவன் தாவீதை நோக்கி: நான் அவனைக் கொன்று போடட்டுமா என்று கேட்டபோது, அப்படிச் செய்யவேண்டாம் என்று சொன்னான். தாவீது ராஜா மறுபடியும் ராஜ்யபாரத்திற்கு வந்தபோது, சீமேயி பயந்துபோய், தாவீதிடம் மன்னிப்பு கேட்டான். அப்பொழுது தாவீது: நான் உன்னை மன்னித்துவிட்டேன் என்று சொன்னான். ஆனால், அந்த கசப்பு தாவீது ராஜாவிடம் கடைசி வரைக்கும் இருந்தது. தாவீது ராஜா மரிப்பதற்கு முன்னே தன் மகன் சாலொமோனுடன் நீ அவனைக் கொல்லவேண்டும் என்று சொன்னான். அது போல் சாலொமோன் அவனைக் கொன்றான்.

I சாமுவேல் 16 : 5-13; 19 : 18-23; I இராஜாக்கள் 2 : 8, 9;
I இராஜாக்கள் 2 : 36-46 (வாசிக்க).

இந்தக் கோபமும் கசப்பும், அன்புடையவர்களின் அடையாளம் அல்ல. அன்பு நமக்குள் இருக்கிறதென்றால் நம்முடைய கிரியையின் மூலம் அதாவது நற்கிரியைகள் மூலம் வெளிப்படவேண்டும்.

*இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான். (லூக்கா 10 : 30 - 35).*

சமாரியன் காயப்பட்ட மனுஷனைக் கண்டபோது, தன் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டு போகவில்லை; அவன் இருதயம் இளகினது. ஒரு மனுஷன் அன்புள்ளவனாய் காணப்பட வேண்டுமானால் அவனுடைய இருதயம் முக்கியமானதாகக் காணப்படுகிறது. ஒரு மனுஷன் கஷ்டப்படுவதைக் குறித்து, தன் காதுகளால் கேட்டறிந்தும், இருயத்தைக் கடினப்படுத்தி வைத்திருக்கக் கூடாது. இருதயம் இரக்ககுணம் உடையதாக இருக்க வேண்டும். காயப்பட்ட மனுஷனை முதலாவது பார்த்த இரண்டு பேரும் தங்களுக்கு இன்னின்ன அலுவல்கள் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டுப் போய்விட்டார்கள். இந்த மனுஷனுக்கும் செய்யவேண்டிய பல்வேறு காரியங்கள் உண்டு. ஆனாலும் அவன் எல்லாக் காரியங்களையும் ஒதுக்கி வைக்கிறான். சமாரியனும் ஒரு நோக்கத்தோடு தான் பிரயாணமாக எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போய்க் கொண்டிருக்கிறான். காயப்பட்ட மனுஷனைக் கண்டபோது, தான் போன அந்த நோக்கத்தையும் தள்ளிவிட்டு அங்கே நின்றான். அதன்

பின் அவனிடத்திலிருந்தவைகளைக் கொண்டு, அவனுடைய காயங்களைக் கட்டி, தன்னுடைய சொந்த வாகனத்தின் மேல் ஏற்றி சத்திரத்திற்குக் கொண்டுபோய் பராமரித்தான். அவனுக்குக் குணமாகும் வரைக்கும் அந்த சமாரியனுடைய இருதயத்தில் இரக்ககுணம் நிலைத்திருந்தது, சுகமாகிற வரைக்கும் அவனை ஆதரித்தான்.

> *ஆதலால், நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன். (II கொரிந்தியர் 12 : 15).*

பவுல் அப்போஸ்தலர் ஆத்துமாக்களிடம் அதிகமாய் அன்புகூர்ந்தார். அந்த அன்பினால் கடிந்துகொண்டார்; கற்பனை கொடுத்தார். அது ஜனங்களுக்குக் கஷ்டமாக இருந்தது. அவர் ஜனங்களை அன்புகூர்ந்ததைப் பார்க்கிலும் குறைவாக அவர்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், இன்னும் அவர்களுக்காகத் தன்னைச் செலவுபண்ண பிரயாசப்படுகிறவராக இருந்தார். நாம் மற்றவர்களிடத்தில் எதையாவது எதிர்பார்த்து அன்புசெய்தால், அது யதார்த்தமான அன்பாகாது.

> *ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவுமில்லை; அவன் ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான்.*
> *( II தீமோத்தேயு 1 : 16, 17).*

ஓநேசிப்போர் எபேசு பட்டணத்தைச் சார்ந்த ஒரு விசுவாசி; பவுல் அப்போஸ்தலருடைய உபதேசத்தைக் கேட்டு இரட்சிக்கப்பட்டவன். பவுல் அப்போஸ்தலர் மூன்று வருஷம் எபேசு பட்டணத்திலே தங்கி ஊழியம் செய்தபோது அவருக்கு உதவியாக காணப்பட்டவன் தான் இவன். பவுல் அப்போஸ்தலர் கர்த்தருடைய நாமத்தில் அநேகக் கிரியைகளை நடப்பித்தார். ஓநேசிப்போர் அநேகந் தரம் பவுல் அப்போஸ்தலரை சந்தித்து அவருடைய தேவைகளைப்

புரிந்துகொண்டு, செய்யவேண்டிய உபகாரங்களைச் செய்தான். அவனுடைய குடும்பம், தொழில் எல்லாவற்றையும் விட்டு விட்டு பவுல் அப்போஸ்தலரைப் பார்ப்பதற்காகவும் அவருக்கு சரீரப்பிரகாரமாகத் தேவையான உதவிகளைச் செய்யும்படி போனான். அவர் சிறைச்சாலையிலிருக்கும்போது இனி அவரிடத்திலிருந்து எந்த நன்மையும் எதிர்பார்க்க முடியாது என்று அறிந்தும் அவரிடத்திலிருந்து தான் முன்னே பெற்றுக்கொண்ட நன்மையைக் குறித்து நன்றி உணர்வுள்ளவனாயிருந்தான். நம்மிடம் அன்பு இருக்கிறதா? என்பதை நாம் கவனிக்க வேண்டும். நாம் ஒரு ஆளுக்கு உதவி செய்தால் நாம் செய்கிறதை விட அதிகமான உதவியை அவர்களிடத்தினின்று எதிர்பார்க்கிறவர்களாயிருக்கிறோம். இப்படிப்பட்ட அன்பு தான் நம்மிடம் இருக்கிறது. ஆனால் பவுல் அப்போஸ்தலரும், ஓநேசிப்போரும், சமாரியனும் அப்படி அல்ல.

> *நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனா யிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. (I கொரிந்தியர் 13 : 1- 3).*

ஆவிக்குரியவர்களுக்குரிய சகல அநுபவங்களும் இருக்கிறது என்று சொன்னாலும், அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்யக்கூடியதான வரங்களும் வல்லமைகளும் இருந்தாலும், அன்பு மாத்திரம் இல்லாமல் இருந்தால் ஒரு பிரயோஜனமும் இல்லை. பரிசுத்தஆவியின் அபிஷேகம் என்பது பரலோகராஜ்யம் பிரவேசிப்பதற்கென்று கொடுக்கப்படும் விசேஷமான ஒரு முத்திரை. இந்த பரிசுத்தஆவியின் அபிஷேகத்தில் நிரம்பி வழிகிற அநுபவத்தோடு ஒரு மனுஷன் காணப்பட்டாலும் அன்பு இல்லாவிட்டால் ஒரு

பிரயோஜனமும் இல்லை. எல்லாவற்றைப் பார்க்கிலும் தீர்க்கதரிசன வரத்தை நாடவேண்டும் என்று பவுல் அப்போஸ்தலர் சொல்லியிருக்கிறார். ஆனால் தீர்க்கதரிசன வரமும் மற்ற சகல இரகசியங்களை அறிகிற அறிவும், பெரிதான விசுவாசமும் இருந்தாலும் அன்பு இல்லாவிட்டால் ஒரு பிரயோஜனமும் இல்லை. மற்றவர்கள் தன்னை மதிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு தனக்குள்ளதான எல்லாவற்றையும் மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டாலும் அன்பு இல்லாவிடில் பிரயோஜனம் இல்லை. தன்னுடைய ஜீவனை மற்றவர்களுக்காகத் தியாகம் செய்வது தான் அன்பு என்பதாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி தன் சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்துவிட்டாலும் யதார்த்தமான அன்பு இல்லாவிட்டால் ஒன்றுமில்லை. அப்படியானால், அன்பு என்பது எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

> *நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென். (எபேசியர் 6 : 24).*

இந்த உலகத்தில் நாம் நம்முடைய சுய பெலத்தால் யதார்த்தமான கிறிஸ்தவர்களாக ஜீவிக்கவோ பரிசுத்த ஜீவியம் செய்யவோ முடியாது. அதற்கு தேவனுடைய கிருபை தேவையாகக் காணப்படுகிறது. அவருக்குப் பயந்து அவரை சிநேகிக்கிற மனுஷர்களைச் சுற்றிலும் அவருடைய கிருபை சூழ்ந்து காணப்படுகிறது. அந்தக் கிருபை தேவனுடைய பாதையில் அவனை விசேஷமாய் வழிநடத்தும். பார்க்கக்கூடாத காரியங்களைப் பார்க்காமலும், பேசக்கூடாத காரியங்களைப் பேசாமலும் அவர் பாதுகாப்பார். அந்தக் கிருபை நமக்குக் கிடைக்க வேண்டுமானால் அன்பு தேவையாகக் காணப்படுகிறது. நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய கற்பனையைக் கைக்கொள்ளும்போது அவருடைய கிருபையை சொல்ல முடியாத அளவு நமக்குத் தருகிறவராக இருக்கிறார்.

> *தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். (IIபேதுரு 1: 7).*

நாம் அன்பினால் சகோதரர்களை சிநேகிக்கிறவர்களாகக் காணப்படவேண்டும். அப்பொழுது தான் தேவனுடைய கற்பனை நம்மில் நிறைவேறும்.

> *நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார். (யோவான் 13 : 35).*

நாம் மற்றவர்களுக்குச் சாட்சியாக ஜீவிக்கும்படியாக நம்மை தேவன் விடுவித்தார். நாம் அதை அறிந்துகொண்டு மற்றவர்களிடம் என்னை விடுவித்த தேவன் உன்னையும் விடுவிப்பார் என்று சாட்சியாகச் சொல்லுவதின் மூலம், வாழ்க்கையில் மாதிரியாகக் காண்பிக்கிறதின் மூலம் அவன் அதைப் பார்த்து நம்மிடமாகத் திரும்பி வருவான். நாம் அந்த மனுஷனை தேவனிடத்தில் கொண்டு சேர்க்கலாம். அதற்காக நாம் சீஷர்கள் என்கிறதான நிலைமைக்கு வரவேண்டியதிருக்கிறது. பெயரளவில் மட்டும் விசுவாசி என்று சொன்னால் மற்றவர்கள் நம்மால் தேவனைக் காணமுடியாது. நாம் சீஷர்கள் என்ற நிலைமையை அடைய வேண்டுமானால் அன்பு நமக்குத் தேவையாகக் காணப்படுகிறது. நாம் தேவனுடைய சீஷர்களாக இருக்க வேண்டுமானால் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளுகிறவர்களாக இருக்கவேண்டும். நாம் அன்பைக் கிரியையில் காண்பிக்கிறவர்களாக இருந்தால் நம்மைப் பார்க்கிறவர்கள் இவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அறிக்கையிடுவார்கள். ஆகவே, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூருகிற அனுபவத்தைச் சொந்தமாக்கிக்கொண்டு இந்த உலகத்திலே நாம் கர்த்தருக்குச் சாட்சிகளாக ஜீவிப்போமாக.

### 7. பூரணமான ஐக்கியம்:

இந்தப் பரிசுத்த பந்தியான இராப்போஜனத்தில் பங்கு பெறுவதற்கு தகுதியான அனுபவங்களில் ஒன்று, பூரணமான ஐக்கியம் ஆகும். அப்போஸ்தலர் 2:42 - வது வசனத்தை வாசிக்கும் போது, அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்நியோந்நியம் என்றால்

ஐக்கியம் அல்லது ஒற்றுமை என்பது பொருள். இது இராப்போஜனம் பண்ணுகிறவர்கள் அடைந்துகொள்ள வேண்டிய அனுபவங்களில் ஒன்றாகும். பூரணமான ஐக்கியம் உடையவர்கள் மூன்று வகையான ஐக்கியம் உடையவர்களாகக் காணப்படவேண்டும். அவையாவன,

♦ நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுடன் பூரணமான ஐக்கியமுடையவர்களாய் காணப்படவேண்டும்.

♦ கர்த்தருடைய சாட்சிகளுடன் அல்லது கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரர்களுடன் பூரணமான ஐக்கியமுடையவர்களாய் காணப்படவேண்டும்.

♦ இரட்சிக்கப்பட்ட சபையார் அல்லது விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஐக்கியமுடையவர்களாய் காணப்படவேண்டும்.

## 7.1. தேவனோடு பூரணமான ஐக்கியம்:

தேவன் பரிசுத்தமான தமது ஜனங்களோடு தங்கியிருக்கிறவராக இருக்கிறார். அவர் ஜனங்களுக்குள் தங்கி வாசம்பண்ண வேண்டுமானால் அவருக்கேற்ற பரிசுத்தம் அவர்களிடம் காணப்பட வேண்டும். மாறாக ஆவிக்குரிய அனுபவங்களை சொந்தமாக்கினவர்கள் மனம்போல வாழ்ந்தால் தேவன் அவர்களோடு இருக்கமாட்டார். இரட்சிக்கப்பட்டதான தேவனுடைய ஜனங்கள் தேவனோடு ஐக்கியமுடையவர்களாக காணப்பட, இவர்கள் ஜெபத்தின் மூலம் எப்போதும் தேவனோடு தொடர்புள்ளவர்களாக இருக்க வேண்டும். மனப்பூர்வமாக தங்களைத் தாழ்த்தி வாஞ்சையோடு தாகத்தோடு, பரலோகராஜ்யம் சென்று சேர்ந்து தேவனோடு சதாகாலங்களிலும் வாழ வேண்டும்; அவரோடு ஆளுகை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு ஜெபம்பண்ணி அவரோடு ஐக்கியமாக காணப்பட வேண்டும். ஒரே மனதோடு ஊக்கமாக ஒரே சிந்தையோடு ஜெபம் பண்ணுகிறவர்களாய் இருக்க வேண்டும். ஜெபம் இல்லாவிட்டால் அவரோடு ஐக்கியமாய் காணப்பட முடியாது.

ஆதி சபையில் காணப்பட்ட தேவனுடைய ஜனங்களோடு தேவன் இருந்தார். அவர்களும் தேவனோடிருந்தார்கள். அவர்கள் தேவனோடு நல்ல ஐக்கியமுடையவர்களாயிருந்தார்கள். தேவனும் அவர்களும் ஒன்றாயிருந்தார்கள். ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருந்து ஊக்கமாக

ஜெபம்பண்ணுகிறவர்களாகக் காணப்பட்டார்கள். இவ்விதமாக தேவனோடு ஐக்கியமாய் இருப்பவர்களுக்கு ஜெபம்பண்ண தடை ஏற்படுகிறதில்லை. இன்னும் இவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள். உபதேசங்களை அப்படியே கைக்கொண்டு நடந்தார்கள். கர்த்தருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படியாதவர்களால் தேவனோடு ஐக்கியமாய் காணப்படமுடியாது.

## 7.2. மனுஷர்கள் தேவனோடு ஐக்கியமாயிருப்பதெப்படி?

மனுஷர்களுக்கு தேவனைக் குறித்து அறிவு இருக்குமேயானால், அந்த அறிவினாலே அவர்கள் தேவன் எப்படிப்பட்டவர் என்பதைக் குறித்து அறிந்துகொள்கிறார்கள். தேவன் மகா பரிசுத்தர் என்று அறிந்து உணர்ந்து கொள்கிறதினாலே, அவர்கள் பாவத்திலிருந்து விடுதலை பெற்று பரிசுத்தத்தை சொந்தமாக்கிக் கொள்ளும்போது அவர்கள் தேவனோடு ஐக்கியமாக இடம் ஏற்படுகிறது. மட்டுமல்ல அவர்கள் தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிந்து அதன்படி செயல்படும்போது அவரோடு ஐக்கியமடைய முடிகிறது. இன்னும் அவர்கள் ஜெபத்தில் தேவனோடு பேசும்போது தேவனோடு ஐக்கியமடைய முடிகிறது. தேவன் செய்த நன்மைகளை அவர்கள் நினைவுக்குக் கொண்டுவந்து, தேவனை நன்றி நிறைந்த இருதயத்தோடு ஸ்தோத்திரித்துத் துதித்து மகிமைப்படுத்தும்போது தேவனோடு ஐக்கியமாக முடிகிறது.

மனுஷர்களாகிய நாம் தேவனோடு ஐக்கியமாயிருப்பதையே தேவன் விரும்புகிறார். அதற்காக அவர் இந்த உலகத்திலிருந்த நாட்களில் விண்ணப்பம் பண்ணினார்:

> *அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.*
>
> *(யோவான் 17 : 21)*

நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே சபையாகிய சரீரத்துக்கு தலையாயிருக்கிறார். சபையார் அந்த சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறார்கள். இந்தச் சபையார் தலையான

கிறிஸ்துவோடு பூரணமான ஐக்கியமுடையவர்களாகக் காணப்பட வேண்டும். இவ்விதமாகக் காணப்பட்டால்தான் மகா பரிசுத்தரான தேவனிடமிருந்து வருகிறதான தெய்வீக பரிசுத்தம், தெய்வீக வல்லமை, தெய்வீக மகிமை, தெய்வீக கிருபா வரங்கள், ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் யாவும் இந்த சரீரத்தின் உறுப்புகளாகிய சபையாருக்கு கடந்து வந்து இவர்களை நல்ல ஜீவனுள்ளவர்களாய் காணப்படச் செய்கிறது.

### 7.3. கர்த்தருடைய ஊழியக்காரர்களோடு பூரணமான ஐக்கியம்:

இரட்சிக்கப்பட்ட சபையார் தேவனுடைய வீட்டாரும் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாருமாயிருக்கிறார்கள். சபையார் யாவரும் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.

கிறிஸ்துவின் சாட்சிகள் இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாக ஏக ஐக்கியமாக காணப்படுகிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து அவருடைய வேதத்தின் இரகசியங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். அதை அவருடைய சாட்சிகள் அவருடைய ஜனங்களுக்கு அறிவிக்கிறார்கள்.

> *நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.*
>
> *(I யோவான் 1 : 3).*

இரட்சிக்கப்பட்ட சபையார் ஊழியக்காரர்களோடு ஐக்கியமாகக் காணப்படவேண்டும். ஏனென்றால் அந்த ஊழியக்காரர்கள் தேவனோடு ஐக்கியமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் விட்டு தேவனுக்கென்று புறப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கனமாக எண்ணக்கூடியவர்களாகக் காணப்படவேண்டும். பவுல் அப்போஸ்தலர்: நான் மிகவும் பலவீனமுள்ளவராய் வந்திருந்தும்

தேவதூதர்களை போல் ஏற்றுக்கொண்டீர்கள் என்று அறிவித்திருக்கிறார். இவ்விதமான ஐக்கியமான ஒரு அனுபவம் ஜனங்களுக்கு தேவை. இராப்போஜன பந்தியில் பங்குபெறுகிறவர்கள் இவ்விதமான ஐக்கியமுடையவர்களாய் காணப்படுவது அவசியம்.

கர்த்தருடைய சாட்சிகளோடு ஐக்கியமாகக் காணப்பட்டால் மாத்திரமே இந்த உலகத்தில் ஜெய ஜீவியம் செய்யமுடியும். பழைய ஏற்பாட்டு காலத்தில் கர்த்தருடைய தாசனாகிய மோசேயோடு ஐக்கியமாக அவருக்கு உதவியாகக் காணப்பட்டதின் மூலமாக இஸ்ரவேலர்கள் அடைந்த வெற்றியை குறித்து யாத்திராகமம் 17-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

> *அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான். யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரவேலர் மேற் கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழ விடுகையில், அமலேக்கு மேற்கொண்டான். மோசேயின் கைகள் அசந்து போயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டு வந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும் வரைக்கும் ஒரே நிலையாயிருந்தது. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான்.*
>
> *(யாத்திராகமம் 17 : 9 - 13).*

அமலேக்கியரோடே யுத்தம்பண்ண யோசுவாவும் இஸ்ரவேல் ஜனங்களும் போகிறார்கள்; அவர்கள் கையில் வாள் இருக்கிறது; கேடகமிருக்கிறது. அவர்கள் சரீரத்தில் பெலனிருக்கிறது. ஆனால் அந்த பெலனைப் பார்க்கிலும் கர்த்தருடைய சாட்சிகளின் பெலன்

தேவையாயிருக்கிறது. அதைப் புரிந்துகொள்ளவேண்டும். ஊழியக்காரர்கள் மூலம்தான் ஜெயம் உண்டாகிறது. யுத்தம் பண்ணுகிறவர்கள் பெலசாலிகளாயிருந்தாலும் இந்த ஊழியக்காரரின் கை தாழும்போது அங்கே மாம்சீக பெலன் எவ்வளவுதான் இருந்தாலும் தோல்வி அடைகிறார்கள். இதன்மூலமாக ஊழியக்காரர்கள் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்தச் சம்பவத்தின் மூலம் கர்த்தருடைய தாசனாகிய மோசேயோடு அவர்கள் வைத்திருந்த ஐக்கியத்தை குறித்தும் அறிந்து கொள்ளலாம். ஆரோனும் ஊரும் தாங்களாகவே கர்த்தருடைய தாசனாகிய மோசேயை ஒரு கல்லின்மேல் உட்கார வைத்துவிட்டு அவர்கள் இருவரும் இரு பக்கமாக நின்று கர்த்தருடைய தாசனாகிய மோசேயின் கையை சூரியன் அஸ்தமிக்கும் வரை நின்றுகொண்டே தாங்குகிறார்கள். தாங்களாகவே உதவிசெய்த ஆரோனுக்கும் ஊருக்கும் தான் அதிகக்கஷ்டம். இதுவே ஐக்கியம் என்பது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பார்க்கும்போதும் பவுல் அப்போஸ்தலர் ஊழியத்தைச் சிறப்பாக செய்து முடிப்பதற்கு அநேகருடைய உதவி தேவைப்பட்டது.

> *கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான்மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். (ரோமர் 16 : 3, 4).*

ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்பவர்கள் பவுல் அப்போஸ்தலருக்கென்று தங்களுடைய உயிரையே கொடுக்கத் துணிந்தார்கள். இக்கட்டுகள் நெருக்கங்கள் மத்தியில் பவுல் அப்போஸ்தலருடைய ஊழியத்தை அதிகமாய்த் தாங்கினார்கள்.

> *ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது. (பிலிப்பியர் 4 : 14).*

பவுல் அப்போஸ்தலருடைய உபத்திரவத்திலே உடன்பட்டவர்களாக உதவி செய்தவர்களாக பிலிப்பி பட்டணத்தார் காணப்பட்டார்கள்.

பவுல் அப்போஸ்தலர் எல்லா காரியங்களையும் தேவனிடத்திலிருந்து கற்றுக்கொண்ட பெரிய ஊழியக்காரராக காணப்பட்டார். எல்லா காரியங்களிலும் தேவன் அவரோடு கூட இருந்தார். ஆனாலும் இந்த உலகத்தில் தன்னுடைய ஊழியத்தைச் செய்வதற்கு அநேகருடைய உதவி தேவைப்பட்டது. அக்காலத்திலுள்ள ஜனங்கள் திறந்தஇருதயம் உடையவர்களாக இருந்தார்கள். தங்களுக்கென்று ஒரு எண்ணம் வைக்காதவர்களாகவும், சபை வளர்ச்சிக்காகவும் தேவநாமம் மகிமைப்படவேண்டும், ஜனங்கள் சாட்சிகளாக எழுப்பப்பட வேண்டும், ஜனங்கள் ஆவிக்குரிய மனுஷர்களாக மாற்றப்பட வேண்டும் என்பதற்காகத் தங்களை தியாகம் செய்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

> *என்னோடேகூடக் காவலிலிருக்கிற அரிஸ்தர்க்கு உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; பர்னபாவுக்கு இனத்தானாகிய மாற்கும் வாழ்த்துதல் சொல்லுகிறான், இவனைக்குறித்துக் கட்டளைபெற்றீர்களே; இவன் உங்களிடத்தில் வந்தால் இவனை அங்கிகரித்துக்கொள்ளுங்கள். (கொலோசெயர் 4 : 10).*

அரிஸ்தர்க்கு பவுல் அப்போஸ்தலரோடு கூடயிருந்தார். அவருடைய ஊழியத்தில் துணையாய் இருந்ததின் காரணமாக பவுல் அப்போஸ்தலர் காவல்பண்ணப்படும்போது அரிஸ்தர்க்குவும் காவல்பண்ணப்பட்டார். இவ்விதமாய் அநேகர் அவருக்கு அநுகூலமாய் இருந்தார்கள். அதை அவர் விரும்பவும் செய்திருக்கிறார்.

> *ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள். லூக்காமாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடேகூட கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன். (II தீமோத்தேயு 4 : 10, 11).*

உபத்திரவத்திலேயும், கஷ்டத்திலேயும், கைதிகளாய் இருக்கும் போதும், தங்களுடைய உயிரே போகும் சூழ்நிலையிலும்கூட பவுல் அப்போஸ்தலரோடு ஐக்கியமாயிருந்தார்கள். தேமா போய்விட்டான்; லூக்கா மாத்திரம் இருக்கிறான்; மாற்குவை கூட்டிக்கொண்டு வர

வேண்டும் என்பதாக பவுல் அப்போஸ்தலர் கூறியிருக்கிறார். உடன் ஊழியக்காரர்கள் தம்முடன்கூட இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். பல காரியங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். தம்முடைய கவலைகளை பகிர்ந்துகொள்ளவும் ஒரு மனுஷன் தேவையாயிருக்கிறது. தேவனோடு ஐக்கியமாயிருக்கிறதான மனுஷன், இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார் என்று சொன்னதான மனுஷன், என் பிராணனையும் அருமையாக எண்ணேன் என்று சொன்னதான தேவ ஊழியக்காரரான பவுல் அப்போஸ்தலருக்கும் இன்னும் ஒரு ஊழியக்காரருடைய துணை தேவையாயிருக்கிறது.

> *சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்.; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். (எபிரெயர் 10 : 25).*

சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள் என்று சொல்லக் காரணம் என்ன? அதுவே ஐக்கியத்திற்கு அடையாளம். ஒரே இடத்திலிருந்து சுவிசேஷத்தைக் கேட்பதின் மூலமும் ஜெபம் பண்ணுவதின் மூலமும் தேவனோடு ஐக்கியம் ஏற்படுகிறது, ஊழியக்காரர்களோடு ஐக்கியம் ஏற்படுகிறது; மட்டுமல்ல ஒருவரோடொருவர் ஐக்கியமுடையவர்களாய் காணப்பட இடமுண்டாகிறது. மற்றபடி வலைஒளி (U-tube) மற்றும் இணையதளம் மூலமாக சுவிசேஷத்தைக் கேட்பதின் மூலமாக இவ்விதமான ஐக்கியத்திற்கு இடம் உண்டாகிறதில்லை. எனவே கர்த்தருடைய சபையார் சபை கூடிவருதலுக்கு ஒத்துழைக்கக்கூடியவர்களாக, அதின்மூலம் தங்களுக்கு தேவனோடும் ஊழியக்காரர்களோடும் சபையாரோடுமுள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறவர்களாகக் காணப்படவேண்டும்.

## 7.4. ஒருவரோடொருவர் பூரணமான ஐக்கியம்:

கிறிஸ்தவர்கள் அல்லது தேவனுடைய ஜனங்கள் என்று சொல்லுகிற ஜனங்களுக்குள் ஐக்கியம் காணப்பட வேண்டும். அதற்காக நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நாட்களில் விண்ணப்பம் பண்ணினார்.

*....பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். (யோவான் 17 : 11).*

தேவன் நாம் ஒன்றாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூவரும் ஒன்றாயிருப்பது போல அவருடைய ஜனங்களாகிய நாமும் ஒன்றாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அப்படி ஒன்றாயிருந்து அதில் நிலைத்திருப்பதற்காக நம்மை ஒன்றாகக் காத்துக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பமும்பண்ணினார்.

தேவன் ஆதாம் ஏவாளை உருவாக்கினபோது அந்த இரண்டு பேரிடத்திலிருந்து மாத்திரம்தான் ஒரு சந்ததியை உருவாக்க வேண்டுமென்று தேவன் விரும்பினார். காரணம்தான் என்ன? அது தேவபக்தியுள்ள சந்ததியாயிருக்க வேண்டும்; அவர்கள் ஒன்றாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே.

*...கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே... (I கொரிந்தியர் 6: 20).*

என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே தேவன் தமது மகா பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி ஜனங்களுக்கு மீட்பை உண்டுபண்ணி வைத்திருக்கிறார். அந்த இரத்தத்தினாலே கிரயத்திற்குக் கொள்ளப்பட்டு, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து பாவமன்னிப்பை சொந்தமாக்கிக் கொண்டதான ஜனங்களாகிய நாம், அவருடைய இரத்தத்தினாலே கழுவப்பட்ட ஜனங்களாகிய நாம், அவருடைய ஆவியை பெற்றுக்கொண்ட ஜனங்களாகிய நாம், அவரிடத்திலிருந்து விடுதலையை சொந்தமாக்கிக் கொண்ட ஜனங்களாகிய நாம் ஒற்றுமையாயிருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

(கொலோசெயர் 1:18) அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்.... சபையை சரீரத்திற்கு ஒப்பிட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். தலை மாத்திரம் சரீரம் ஆகாது. சரீரமானால் வேறு உறுப்புகள் தேவையாய் இருக்கிறது; அவயவங்கள் தேவையாயிருக்கிறது. இரட்சிக்கப்பட்டு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதான ஜனங்கள் இந்தச் சபையின் அவயவங்களாகவே

இருக்கிறார்கள். இவ்விதமாய் சபையின் அவயவங்களாய் காணப்படுகிறதான சபையாராகிய நாம் ஒற்றுமையாக ஐக்கியமாகக் காணப்படவேண்டும்.

ஆனால் ஐக்கியமானது தற்போது ஜனங்களுக்குள் இல்லாமல் இருக்கிறது. பிரிவினையின் ஆவி அவர்களைப் பிடித்திருக்கிறது. மனுஷர்கள் தங்களைப் பார்ப்பதற்கு மறந்தவர்களாக, மற்றவர்களை குறைசொல்லுகிறவர்களாக, ஐக்கியத்திற்கு தூரப்பட்டவர்களாகவே மாறிப்போனார்கள்.

ஒருவராய் இருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் என்பதாகவும்; ஒருவன் விழுந்தால் மற்றவன் தூக்கிவிடுவான் என்பதாகவும் பிரசங்கி 4:9,10 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

பல்லுக்கு பல் என்று சொல்லக்கூடியதான பழைய ஏற்பாட்டு காலத்தில் கூட அதாவது சகிப்புத்தன்மை இல்லாத, பரிசுத்த ஆவியின் பெலன்இல்லாத அந்தக் காலத்தில்கூட ஜனங்கள் பிறருடைய நலனுக்காக தங்களை தியாகம்செய்து ஐக்கியமாக இருந்திருக்கிறார்கள். ரூத்தின் சரித்திரத்தை வாசிப்போமானால், ரூத்தின் மாமியாராகிய நகோமி இஸ்ரவேல் தேசத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டதின் காரணமாக மோவாபிய தேசத்துக்குப் போகிறாள். அங்கே தன்னுடைய புருஷனையும், தன்னுடைய இரண்டு மகன்களையும் நகோமி இழக்கிறாள். பின்பு இஸ்ரவேல் தேசத்தில் பஞ்சம் மாறினபோது நகோமியானவள் தனது சொந்த தேசத்திற்கு போக மனதாய் தன்னைப் போல தன்னுடைய இரண்டு மோவாபிய மருமகள்களும் விதவைகளாய் காணப்படாதபடி, அவர்களைத் தங்கள் தாய் தகப்பன்மாரிடம் போய் மறுவாழ்க்கை அமைக்கும்படி கூறுகிறாள். அப்போது அவர்கள் இரண்டு பேரும், ஓர்பாளும் ரூத்தும் அழுதுகொண்டு தங்கள் மாமியாருடன் வருவதாகக் கூறுகிறார்கள். ஆனாலும் ஓர்பாள் தனது மாமியாரை விட்டுவிட்டாள். ரூத்தோ நகோமியிடம், நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்;

மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்று சொல்லி தனது மாமியாருடன் போகிறாள். இதிலிருந்து ரூத்தின் உத்தம இருதயம் வெளிப்படுகிறது.

ரூத் தன்னுடைய சுகத்தை அப்படியே சிலுவையில் அறைந்து தனது மாமியாருடன் வாழ்க்கையை நடத்துகிறாள். பிற்பாடு ஆண்டவர் அவளை ஆசீர்வதிக்கிறார். ஒர்பாளைக் குறித்து அதன்பின் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ரூத்தைக் குறித்து அதன்பின் புதிய ஏற்பாடு வரைக்கும் கூறப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாறைப் பார்க்கும்போது, இயேசுகிறிஸ்து தாவீதின் வம்சத்தில் தாவீதின் மகனாக பிறந்தார். தாவீதின் தகப்பன் ஈசாய்; ஈசாயின் தகப்பன் ஓபேத்; இந்த ஓபேத்தை போவாஸ் ரூத்தினிடத்தில் பெற்றான்.

இவ்விதமாக ஐக்கியமாக இருக்க வேண்டுமென்றால் இழக்க வேண்டியவைகள் வரலாம். ஆனால் பரலோக ராஜ்யத்திற்கென்று, மற்றவர்களுக்கென்று, இனியொரு மனிதனுடைய நன்மைக்கென்று இழக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அப்படியென்றால் மாத்திரம்தான் ஐக்கியமுடையவர்களாயிருக்கமுடியும். இன்னும் ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக பழைய ஏற்பாட்டிலிருந்து யோனத்தானையும் தாவீதையும் எடுத்துக் கொள்ளலாம்.

> *யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப்போலச் சிநேகித்ததினால், அவனும் இவனும் உடன்படிக்கைபண்ணிக் கொண்டார்கள். யோனத்தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும், தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையும்கூடத் தாவீதுக்குக் கொடுத்தான். தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும் தன் ஊழியக்காரர் எல்லாரோடும் பேசினான். சவுலின் குமாரனாகிய யோனத்தானோ, தாவீதின்மேல் மிகவும் பிரியமாயிருந்தான்; அதனால் யோனத்தான் தாவீதுக்கு அதை அறிவித்து: என் தகப்பனாகிய சவுல் உம்மைக் கொன்றுபோட வகைதேடுகிறார்;*

*இப்போதும் நாளைக்காலமே நீர் எச்சரிக்கையாயிருந்து, மறைவான இடத்தில் ஒளித்துக்கொண்டிரும்.*

*(I சாமுவேல் 18 : 3, 4; 19 : 1, 2).*

யோனத்தானும் தாவீதும் நண்பர்களாக இருக்கிறார்கள். ஒருகாலமும் நாம் பிரியக்கூடாது என்று தங்களுக்குள்ளே உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகிக்கிறான். தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் யோனத்தான் தாவீதிடம் கொடுக்கிறான். தன்னிடம் இருந்த ஆயுதங்களையும் கொடுக்கிறான். ஒரு மனுஷனிடம் ஐக்கியமாகும்போது தன்னுடையது அந்த மனுஷனுக்கும் அந்த மனுஷனுடையது தனக்குமாக பங்கிடப்படுகிறது. தனக்கென்று எதுவுமே வைக்கப்படவில்லை.

*தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும் தன் ஊழியக்காரர் எல்லாரோடும் பேசினான். (I சாமுவேல் 19 : 1).*

சவுல் தாவீதைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினபோது அது யோனத்தானுக்கு தெரியவருகிறது. யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலிடம் தாவீதுக்காகப் பேசுகிறான். சவுல் இருக்கும்போதே சவுலுக்கு அடுத்தபடி ராஜாவாக சாமுவேல் தீர்க்கதரிசி தாவீதை அபிஷேகம் பண்ணிவிட்டார் என்பதும்; தாவீது கொல்லப்பட்டால் தான் ராஜ்யபாரத்தில் வரலாம் என்பதும் யோனத்தானுக்கு தெளிவாகத் தெரியும். ஆனாலும் அவன் ராஜ்யபாரத்தைப் பெரிதாக எண்ணவில்லை. அவனுக்குத் தாவீதோடு ஐக்கியமாயிருக்க வேண்டும் என்பதற்காக தன்னுடைய சுயத்தை சிலுவையில் அறைகிறான்.

## 7.5. பூரணமான ஐக்கியமுடையவர்களாய் காணப்பட அவசியமானவை:

**♦ ஒளியில் நடக்கும் அனுபவம்:**

ஐக்கியமாக நாம் இந்த உலகத்தில் ஜீவிக்க வேண்டுமேயானால் அடிப்படையாக நமக்கு ஒளியில் நடக்கக்கூடியதான ஒரு அனுபவம் தேவையாயிருக்கிறது.

*அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். (I யோவான் 1: 7).*

ஒளியென்று சொல்வோமேயானால் பாவமற்ற அநுபவமாகும். எந்த மனுஷனுக்குள்ளே பாவம் அற்றதான ஒரு அனுபவம் இருக்கிறதோ அந்த மனுஷனால் மட்டுமே தேவனோடு ஐக்கியமாய் காணப்படமுடியும். அந்த மனுஷனால் மட்டுமே தன்னுடைய சகோதரர்களாகிய இந்த உலகத்தில் காணப்படுகிறதான ஜனங்களோடு ஐக்கியமாகக் காணப்பட முடியும்.

நாம் ஒளியினிடத்தில் அதாவது தேவனிடத்தில் அதாவது ஒளியாகிய தேவனிடத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் பாவமற்ற அநுபவம் தேவையாயிருக்கிறது. ஏனென்றால் தேவன் ஒளியாயிருக்கிறார் என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது; அவரிடத்தில் பாவமே கிடையாது.

*உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசாயா 59 : 2).*

பாவமும் அக்கிரமமும் தான் தேவனுக்கும் மனுஷர்களுக்கும் இடையிலே ஐக்கியம் ஏற்படமுடியாதபடி பிரிவினையை ஏற்படுத்துகிறது. ஒளியிலே நடந்தால் மாத்திரம் தான் ஐக்கியமுள்ளவர்களாகக் காணப்பட முடியும். இருளின் குணங்களை உடையவர்களாக, நமக்குள்ளே சாத்தானை உடையவர்களாகக் காணப்படுவோமேயானால் சாத்தானின் கிரியைகளாகிய பாவம் நமக்குள் இருந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். இவைகள் இருக்கிற வரையிலும் நம்மால் ஐக்கியமாயிருக்க முடியாது. எனவே ஐக்கியமுடையவர்களாய் காணப்பட பாவமற கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட அனுபவத்தை அடைந்துகொள்ள வேண்டும்.

*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (I யோவான் 1: 9).*

சமாதானத்தின் தேவன் நம்மோடுகூட இருந்தால் மட்டுமே சமாதானத்திற்கு இடம் இருக்கும்; ஐக்கியத்திற்கும் இடமுண்டாகும். இதற்கு தடையான பாவத்தை நம்மை விட்டு அகற்ற வேண்டுமானால் பாவ அறிக்கைபண்ணி கண்ணீரோடு ஜெபம்பண்ணவேண்டும். அப்படி ஜெபம்பண்ணும்போது அவருடைய இரத்தத்தினால் வருகிறதான பாவமற கழுவப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட அநுபவத்தை தேவன் இலவசமாக நமக்குத் தருகிறவராக இருக்கிறார்.

- **ஒரு மனம்:**

> *இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ? (ஆமோஸ் 3 : 3).*

ஐக்கியமுடையவர்களாய் காணப்பட ஒருமனம் மிகவும் தேவையாய் காணப்படுகிறது. ஒருமனம் என்றால் ஒரே சிந்தையாய் இருக்கக்கூடியதான ஒரு அனுபவம். ஒரு மனுஷன் சந்தோஷமாயிருக்கும்போது அவனோடுகூட சந்தோஷப்படக்கூடியதான அநுபவம்.

> *சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள். ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்.*
> *(ரோமர் 12 : 15, 16).*

மற்றவர்களை குறைசொல்லுகிறவர்களாக இல்லாமல் ஒரு நபரின் மனநிலமைக்கு ஏற்றவாறு ஒத்துபோகக் கூடியவர்களாக காணப்பட வேண்டும். அதற்கு ஏக சிந்தை தேவையாயிருக்கிறது; ஒருமனம் தேவையாயிருக்கிறது. ஒருமனம் இல்லையென்றால் அங்கே பிரிவினை வருகிறது; கருத்து வேறுபாடு வருகிறது; வாக்குவாதம் வருகிறது.

நம்முடைய ஆவியில் ஒருமனப்பட்டவர்களாய் அன்பினால் கட்டப்பட்ட ஒரு அனுபவம் தேவையாயிருக்கிறது. இது இருக்குமானால் ஐக்கியமாகக் காணப்படமுடியும். இந்த அனுபவம் இருந்தால் தான் ஒரு மனுஷன் சந்தோஷப்படும்போது நாம் துக்கப்படுகிறவர்களா யிருந்தாலும் அந்த மனுஷனின் ஆறுதலுக்காக அந்த மனுஷனோடு

சந்தோஷப்படக்கூடியவர்களாயிருப்போம். ஒரு மனுஷன் துக்கப்படும்போது நாம் சந்தோஷமாயிருந்தாலும் அந்தச் சந்தோஷத்தைக் குப்பைபோல் அகற்றிவிட்டு, அந்த மனுஷனின் துக்கத்தில் பங்குபெறுகிறவர்களாய் காணப்படவேண்டும்.

இன்னும் ஐக்கியமாகக் காணப்பட வேண்டுமேயானால் மேட்டிமையான சிந்தையுடையவர்களாய் தங்களை உயர்வாக எண்ணும் எண்ணம் உடையவர்களாய் இருக்கக் கூடாது. தான் சொல்வது தான் சரி என்றதான எண்ணமுடையவர்களாய் இல்லாமல், தங்களையே புத்திமான்களென்று எண்ணாமல் மற்றவர்கள் கருத்தையும் அது சரியாயிருக்குமேயானால் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாய், தாழ்ந்து போகும் மனநிலை உள்ளவர்களாய் காணப்படவேண்டும்.

♦ **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கக்கூடிய அநுபவம்:**

*ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். (கலாத்தியர் 6 : 2).*

ஐக்கியமாகக் காணப்பட வேண்டுமேயானால் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கிறவர்களாகக் காணப்பட வேண்டும். மற்றவர்களை வார்த்தையினாலும் மற்றெவ்விதத்தினாலும் துக்கப்படுத்துகிறவர்களாய் காணப்படாமல், மற்றவர்கள் பாரத்தை தாங்கக்கூடியவர்களாயிருக்க வேண்டும். மற்றவர்கள் கஷ்டப்படும்போது அவர்கள் கஷ்டத்தில் அவர்களுக்கு உதவி செய்கிறவர்களாக, மற்றவர்கள் துக்கப்படும்போது அவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறவர்களாக காணப்பட வேண்டும். வார்த்தைகளைக் கொண்டு ஒருவரையொருவர் தேற்றக்கூடியவர்களாக மற்றவர்கள் பாரத்தை தாங்கக்கூடியவர்களாக காணப்பட வேண்டும்.

♦ **சுயத்தை சிலுவையில் அறைந்த அநுபவம்:**

மற்றவர்களோடு ஐக்கியமாயிருப்பதற்கு தங்களுடைய சுயத்தை விடவேண்டும். சுயநலமில்லாமல் பிறர் நலன் கருதுகிறவர்களாய் காணப்பட வேண்டும். அமலேக்கியரை முறியடிப்பதற்காக, இஸ்ரவேலரின் வெற்றிக்காக ஆரோனும் ஊரும் தங்கள் கஷ்டத்தை பொருட்படுத்தாமல் கர்த்தருடைய தாசனாகிய மோசேயை தாங்கினவண்ணமாக தாங்களும் தங்கள் குடும்பங்களும் என்றில்லாமல் மற்றவர்களுக்காகப் பிழைக்கக்கூடியவர்களாகக் காணப்படவேண்டும்.

இன்னும் தாவீதோடு ஐக்கியமாயிருப்பதற்காக தனது சுய உயர்வையும் ராஜமேன்மையையும் அற்பமாய் எண்ணினதான யோனத்தானைப் போல சுயத்தை சிலுவையில் அறைந்தவர்களாய் காணப்பட வேண்டும்.

- **தியாக மனப்பான்மை:**

தியாகம் செய்யக்கூடிய மனநிலை இருந்தால் தான் ஐக்கியமாக காணப்படமுடியும். ரூத் என்பவள் தனது மாமியாரோடு ஐக்கியமாயிருப்பதற்காக, தனது மாமியாரின் நலன் கருதி தன்னையே தியாகம் செய்தாள்.

## 7.6. ஐக்கியமாய் ஜீவிப்பதற்கு தடையானவை:

தங்கள் இருதயத்தை உயர்த்தக்கூடிய நிலைமை இருக்கிறது. இருதயத்தை தேவனுக்கு ஒப்பாக நினைக்கக்கூடியதான நிலைமை இருக்கிறது. மற்றவர்களைக் காட்டிலும் நாம் உயர்ந்தவர்கள் என்று உயர்வாக நம் இருதயத்தில் நினைக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் என்று கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு மாறாக நான் எந்த விதத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் குறைந்தவன் அல்ல என்ற மேட்டிமையான எண்ணம் வருமேயானால் ஐக்கியமாய் இருக்க முடியாது. நான் படிப்பில் குறைந்தவனா, வசதியில் குறைந்தவனா என்ற எண்ணம் இருக்குமேயானால், நான் மூத்த விசுவாசி அவன் தற்போதுள்ள விசுவாசி அவன் சொல்வதை நான் கேட்க வேண்டுமோ என்ற எண்ணம் இருக்குமேயானால் அங்கே ஐக்கியமாக போக முடிகிறதில்லை. நம் நிலைமை எவ்விதமாகக் காணப்படுகிறது என்பதை நாம் சோதித்துப் பார்க்கவேண்டும்.

> *முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையை அவன் தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்து தன் சமுகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனைபண்ணி, (I இராஜாக்கள் 12 : 8).*

ராஜாவாகிய சாலொமோனுக்கு அடுத்தபடியாக அவன் மகனாகிய ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகிறான். அவன் தன் தகப்பனோடு கூட இருந்த ஆலோசனைக்காரர்களாகிய முதியோருடைய ஆலோசனையை கேட்காததினாலே ராஜ்யபாரம்

இரண்டாகப் பிரிகிறது. பன்னிரண்டு கோத்திரத்தை ஆட்சி செய்த அவன், முதியோருடைய ஆலோசனையை அற்பமாய் எண்ணினதினால் வெறும் இரண்டு கோத்திரத்தை மட்டும் உடையவனாக மாறுகிறான். இவ்விதமாக நல் ஆலோசனைகளை நாம் தள்ளும்போது அங்கே ஐக்கியமாக காரியங்களைச் செய்ய முடிகிறதில்லை. ஐக்கியமாகக் காணப்பட வேண்டுமேயானால் ஊழியக்காரருடைய ஆலோசனையைக் கேட்க வேண்டும்; வயதில் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்க வேண்டும்; அவைகளைச் சோதித்துப்பார்த்து, அவை சரியாக இருக்குமேயானால் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இதற்கு மாறாக பிறர் ஆலோசனைகளுக்கு செவி கொடுக்காமல், அவை நன்மைக்கு தான் என்ற மனநிலை இல்லாமல் காணப்பட்டு நல்ஆலோசனைகளை அசட்டை பண்ணுவோமானால் ஐக்கியமாகக் காணப்பட முடிகிறதில்லை.

*அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றான். பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான். இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமுண்டானபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான். பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு, சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான். (அப்போஸ்தலர் 15 : 37 - 41).*

பவுல் அப்போஸ்தலருக்கும் பர்னபாவுக்கும் இடையே மாற்குவை குறித்து கருத்துவேறுபாடு உண்டாகிறது. பர்னபா மாற்குவை கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்று சொல்கிறான். ஆனால், பவுல் அப்போஸ்தலர் இதற்குமுன் மாற்கு, அவர்களை விட்டும் ஊழியத்தை விட்டும் பிரிந்துபோனபடியால் அவனை கூட்டிக் கொண்டு போகவேண்டாம் என்கிறார். அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு

உண்டாகி, இருவரும் பிரிந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு நபரை கூட்டிக்கொண்டு ஊழியத்திற்குப் போகிறார்கள்.

*சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள். அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.*
*(அப்போஸ்தலர் 15 : 1, 2).*

இங்கேயும் கருத்து வேறுபாடைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. சிலர் கர்த்தருடைய தாசனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி விருத்தசேதனம் பெற்றால் மாத்திரம்தான் அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்கிறார்கள். ஆனால் பவுல் அப்போஸ்தலரும் பர்னபாவும் அந்தக் கருத்தை அப்படியே நிராகரிக்கிறார்கள். அங்கே வாக்குவாதம் உண்டானது, தர்க்கம் உண்டானது என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாகக் கருத்து வேறுபாடு இருக்குமேயானால் அங்கே ஐக்கியமாகக் காணப்பட முடியாது.

ஆனால் தேவசித்தத்திற்கு மாறான கருத்துக்களை சொல்லுவார்களானால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வாக்குவாதங்களுக்கும் தர்க்கங்களுக்கும் இடங்கொடுக்கக்கூடாது. அவ்விடத்தைவிட்டுப்போய், செய்யவேண்டிய காரியங்களை மட்டும் செய்யவேண்டும்.

### 7.7. பரிசுத்தவான்கள் யாரோடு ஐக்கியமாயிருக்கக் கூடாது?

II கொரிந்தியர் 6:14 முதல் 18 வரை

விசுவாசிகள் அவிசுவாசிகளோடு பிணைக்கப்படக்கூடாது. அவர்களோடுகூட பரிசுத்தவான்களின் ஐக்கியம் இருக்கக்கூடாது என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருக்குமேயானால்

அவர்கள் பேசும் தேவையில்லாத வார்த்தைகள் இவர்கள் இருதயத்தில் இருந்து கசப்பைத் தரும். இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக பாவத்திற்கு உள்ளாகிறார்கள். இதினிமித்தமாக வேத வசனத்தின் மேலுள்ள நம்பிக்கையை இழந்து, அநேகர் நாஸ்திகர்களாக மாறுகிறார்கள். ஏனென்றால், இவர்கள் ஐக்கியமெல்லாம் இரட்சிக்கப் படாதவர்களோடும் குடிப்பழக்கம் உள்ளவர்களோடுமாக இருக்கிறது.

பாவத்துக்கும் பரிசுத்தத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமே கிடையாது. பரிசுத்தமாய் காணப்படும்படியாக அழைக்கப்பட்டதான ஜனங்கள் தேவன் தங்களுக்காக இந்த உலகத்தில் வந்து பாடுபட்டு இரத்தம் சிந்தினார் என்று அறிந்தும் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறதான, இருளில் இருக்கிறதான ஜனங்களோடே ஐக்கியம் வைக்கக் கூடாது. அவர்கள் சுவிசேஷத்தை அறிந்தும், தேவனுடைய இரத்தத்தினாலே கழுவப்படுவதை விரும்பாமல் தேவனுடைய இரத்தத்தை அசுத்தமாக எண்ணி, அவரைக் காலின் கீழ் மிதிக்கக் கூடியதான ஜனங்கள். அவர்களுக்கு ஆண்டவரை குறித்ததான எண்ணமோ, அவர் பாடுபட்டதைக் குறித்ததான எண்ணமோ கிடையாது. அவர்கள் பாவத்தையே செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு ஐக்கியம் வைத்தால் இவர்களால் தேவனை அதிகமாய் சிநேகிக்க முடிகிறதில்லை. இதனால் இவர்கள் தேவனை மறுதலிக்கிறவர்களாக மாறுகிறார்கள்; தேவனுக்கு அந்நியர்களாகவும், பகைஞர்களாகவும் மாறுகிறார்கள்; இதன்மூலம் இவர்கள் தேவனை மறுபடியும் மறுபடியும் சிலுவையில் அறைகிறார்கள்; வேத வசனத்துக்கு மாறான ஒரு வாழ்க்கை வாழ்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் செவிக்கு இன்பமான உலக காரியங்களைச் சொல்லுவார்கள்; கண்களுக்குப் பிடித்தமான காரியங்களைச் சொல்லுவார்கள். அவர்களுடைய ஆலோசனைகள் பேச்சுகள் நடக்கைகள் எல்லாம் இவர்களுக்குள் பதிந்து, இரத்தத்தோடே கலந்து கிரியையாக மாறிவிடும். எனவே அவர்களோடு ஐக்கியம் வைக்காமல் அவர்களை விட்டுப் புறப்பட்டுப் பிரிந்துபோங்கள் என்று தேவன் உரைக்கிறார்.

> *துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், (சங்கீதம் 1 : 1).*

பரிசுத்தவான்கள் இப்படி இப்படி தான் இருக்கவேண்டும் என்று கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இரட்சிக்கப்படாத மனுஷனுடைய ஆலோசனையை கேட்கக் கூடாது; பரிகாசக்காரன் உட்காருமிடத்தில் உட்காரக்கூடாது. இவ்விதமான காரியங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு ஜெபம்பண்ண நேரமிருக்காது; கர்த்தருடைய வேதாகமத்தை வாசிக்க நேரமிருக்காது. வீணாக சிரிக்கிறதிலும் பேசுகிறதிலுமே தங்கள் நேரத்தையெல்லாம் போக்குகிறவர்களாகக் காணப்படுவார்கள்.

> *ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள். (I தீமோத்தேயு 5 : 22).*

பாவம் செய்கிறதான ஜனங்களோடே சேருகிறவர்கள் அவர்கள் செய்யும் பாவங்களுக்குத் தாங்கள் உடன்பங்காளிகளாய் மாறுகிறார்கள்; என்றாலும் தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். எனவே இரட்சிக்கப்பட்டோம் நாங்களும் கர்த்தருடைய ஜனங்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறதான ஜனங்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய நிலைமைகளை உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். கர்த்தருடைய கற்பனைக்கு மாறான, தங்களுக்குக் கேடுண்டாக்குகிறதான சகலவிதமான ஐக்கியங்களையும் விட்டுவிட்டு தேவனோடும், தேவ ஊழியக்காரர்களோடும் விசுவாசிகள் ஒருவரோடொருவரும் ஐக்கியமுடையவர்களாய் காணப்பட்டு, மற்ற ஜனங்களுக்கு ஒளி கொடுக்கிறவர்களாய் தேவனுடைய நாமத்திற்கு மகிமையான ஜீவனுள்ள சாட்சிகளாய் காணப்படவேண்டியது அவசியமாகும். கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்குபெற இவ்விதமான தகுதியின் அனுபவம் மிகவும் அவசியமாகும்.

## 8. பூரணமான தேவ சித்தம்:

பூரணமான தேவசித்தம் செய்கிறவர்கள் இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியானவர்கள். தேவசித்தம் என்பது இவர்கள் எப்போதும் விரும்பக்கூடியதாக மாத்திரம் காணப்படாது. இவர்களது விருப்பத்திற்கும், எதிர்பார்ப்பிற்கும் மாறாக காணப்படும். தேவனுடைய ஜனங்கள் எப்படியானாலும் தேவ சித்தத்திலே நிலைத்திருந்து, அதையே

நடப்பிக்கிற அநுபவத்தோடு காணப்படுகிறார்கள். தேவ சித்தத்தை நடப்பிக்கும்போது அதினால் அவர்களுக்கு எவ்விதமான பாக்கியங்கள் வரப்போகிறது என்றும் அறிந்திருக்கிறார்கள்.

> *அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து, எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர்.*
>
> *இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப் பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம். (எபிரெயர் 10 : 7, 6, 10).*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு தம்மைக் குறித்த பிதாவின் சித்தம் என்ன என்பது தெரியும். அவைகள் கடுமையானவைகள், வேதனைக்குரியவைகள் என்று அறிந்தும், முழுமனதோடும், முழு பலத்தோடும், முழு ஆத்துமாவோடும் சொன்ன வசனம் தான் இது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்த தேவனுடைய நோக்கம் தான் என்ன? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மரிக்கும்வரையிலும் ஓர் யூதனாகவே தான் காணப்பட்டார். அப்பொழுது பிரதான ஆசாரியர்கள் என்பவர்கள் இருந்தார்கள். ஜனங்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காக ஒரே பலியை தான் ஒவ்வொரு முறையும் ஜனங்களுக்காகச் செலுத்துகிறவர்களாகக் காணப்பட்டார்கள். அந்த பலியானது ஜனங்களுக்குப் பூரணமான பாவ நிவிர்த்தியைக் கொடுக்காததினாலே, ஒரே பலியை செலுத்தும்படியாக ஒவ்வொரு தடவையும் ஜனங்கள் அங்குப் போகவேண்டியதும், ஆசாரியர்கள் அதைச் செலுத்த வேண்டியதுமாயிருந்தது. அப்படியிருக்க, பூரணமான ஒரு பலி தேவையாயிருக்கிறது. அது என்னவென்றால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே ஜனங்களுடைய பாவ நிவிர்த்திக்காக பூரணமான பலியாகத் தம்மை ஜனங்களுக்காக ஒப்புக்கொடுக்கிறதான காரியம் ஆகும். பழைய ஏற்பாட்டின் காலத்தில் செலுத்தப்பட்டு வந்த இளங்காளை, வெள்ளாட்டுக்கடா இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியப்படவில்லை. இயேசுகிறிஸ்து மனப்பூர்வமாக தேவ

சித்தத்தை செய்ததினாலேயே இந்த நாளில் நாம் பாவமறக் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். தேவ சித்தத்தை பூரணமாய் செய்து நிறைவேற்றின இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையானது கஷ்டங்களும், பாடுகளும், நெருக்கமும், புறக்கணிக்கப்படுவதுமாக இருந்தது. அவர் தேவசித்தத்தை நிறைவேற்றினதால், உலகத்தில் காணப்படுகிற சகல ஜனங்களுக்கும் அது பிரயோஜனமாகக் காணப்படுகிறது. பிதாவாகிய தேவனும் அதினால் மகிமைப்பட்டார். நாமும் நம்முடைய வாழ்க்கையில் தேவசித்தம் செய்வோமானால் அது ஒருவேளை கஷ்டமாக இருக்கலாம்.

இப்பொழுது நாம் தேவசித்தம் செய்யாமலிருக்கக் காரணம்: கஷ்டப்படவோ கீழ்ப்படியவோ யாருக்கும் மனம் கிடையாது. ஆனால் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவர், நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். இயேசுகிறிஸ்து தமக்கென்று வாழாதவராக, தம்மை இந்த உலகத்தில் அனுப்பின பிதாவாகிய தேவனுக்குப் பூரணமாய் கீழ்ப்படிந்து, நமக்கு மாதிரியாக வாழ்ந்தார். அப்படி வாழ்ந்ததினால் இரண்டு முக்கியமான காரியங்கள் நடந்தது.

- நாம் பரிசுத்தமாக்கப்பட்டோம்.
- தேவன் மகிமைப்பட்டார்.

நாமும் இந்த உலகத்தில் தேவசித்தம் செய்வோமானால் அது மற்றவர்களுக்கு பிரயோஜனமானதாகவும், நம்மை சிருஷ்டித்த தேவனுடைய நாமம் மகிமைப்பட ஏற்றதாகவும் காணப்படும்.

> *பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை. அப்பொழுது நான்: இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்.*
>
> *(சங்கீதம் 40 : 6, 8).*

இந்த வசனத்தில் இரண்டு காரியங்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

- என் செவிகளைத் திறந்தீர்.
- உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்.

இந்த இரண்டு காரியமும் ஒரு மனுஷன் தேவசித்தம் செய்வதற்கு மிக முக்கியமாக தேவையானதாகும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவன், ஆனதால் அவருக்கு இவைகள் தேவையில்லை. இவைகள் சொல்லப்படக்காரணம் மனுஷர்களாகிய நமக்கு அவைகள் தேவையானதாகக் காணப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தைகளைக் கருத்தாய்க் கேட்டு அவைகளின்படியே செய்து நிறைவேற்றுகிற மனுஷனால் மட்டுமே பூரணமான தேவசித்தத்தைச் செய்ய முடியும். நாம் உபதேசத்தைக் கருத்தாய்க் கேட்டாலும், அதன்படி செய்வது கடினமானது. அது நம்மால் முடியாது என்ற எண்ணங்கள் நமக்குள் காணப்படுமேயானால் நம்மால் தேவசித்தத்தை செய்து நிறைவேற்ற முடியாது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்மைக்குறித்த தேவசித்தத்தை அறிந்து, அதை அப்படியே செய்து நிறைவேற்றினார். மனுஷர்களாகிய அநேகரோ தங்களைக்குறித்த தேவ சித்தத்தை அறிந்தும் அதன்படி செய்யாமல், வழி விலகிப்போகிறவர்களாக இருக்கிறார்கள்.

> *பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்குமுன்பாக முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்னசெய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார். அதற்கு அவன்: போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக் கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு அவனைப் பார்த்து,*

*அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான். (மாற்கு 10 : 17 , 22).*

அந்த மனுஷன் தேவசித்தம் செய்ய ஆவலும், தாகமும் உடையவனாகவும் பணிவுடையவனாகவும் இருக்கிறான். இவன் நல்ல முறையில் வளர்க்கப்பட்ட குணசாலியான ஓர் வாலிபன். இவன் தேவ சித்தத்திற்கென்று அழைக்கப்பட்டவன். ஆகையால் அவனிடத்தில் காணப்பட்ட மற்ற நற்குணங்களோடு அவன் தன்னுடைய ஆஸ்திகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு, அவரைப் பின்பற்றும்படியாக அறிவித்தார். அவன் இயேசுகிறிஸ்துவால் அறிவிக்கப்பட்ட வார்த்தைகளைக் கேட்டும் தன்னுடைய ஆஸ்திகளை அநுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, தேவசித்தம் செய்ய மனமற்றவனாக அவரை விட்டுப் புறப்பட்டுப் போனான். தேவன் நம் ஒவ்வொருவரையும் என்ன நோக்கத்தோடு உருவாக்கினாரோ அது நம் ஒவ்வொருவரிலும் நிறைவேறவேண்டும்.

*யெரொபெயாம் தூபங்காட்ட பலிபீடத்தண்டையிலே நிற்கையில், இதோ, தேவனுடைய மனுஷன் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே, யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வந்து, அந்தப் பலிபீடத்தை நோக்கி: பலிபீடமே பலிபீடமே, இதோ, தாவீதின் வம்சத்தில் யோசியா என்னும் பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான்; அவன் உன் மேல் தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன்மேல் பலியிடுவான்; மனுஷரின் எலும்புகளும் உன்மேல் சுட்டெரிக்கப்படும் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறி; அன்றையதினம் அவன் ஒரு அடையாளத்தையும் சொல்லி, இதோ, இந்தப் பலிபீடம் வெடித்து, அதின்மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோம்; கர்த்தர்*

*உரைத்ததற்கு இதுவே அடையாளம் என்றான். பெத்தேலில் இருக்கிற அந்தப் பலிபீடத்திற்கு எதிராகத் தேவனுடைய மனுஷன் கூறின வார்த்தையை ராஜாவாகிய யெரொபெயாம் கேட்டபோது, அவனைப் பிடியுங்கள் என்று தன் கையைப் பலிபீடத்திலிருந்து நீட்டினான்; அவனுக்கு விரோதமாய் நீட்டின கை தன்னிடமாக முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று. தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையால் குறித்திருந்த அடையாளத்தின்படியே பலிபீடம் வெடித்து, சாம்பல் பலிபீடத்திலிருந்து கொட்டுண்டுபோயிற்று. அப்பொழுது ராஜா, தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வேண்டிக்கொண்டு, என் கை முன்போலிருக்கும்படிக்கு எனக்காக விண்ணப்பம்பண்ண வேண்டும் என்றான்; அப்பொழுது தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பம் செய்தான், ராஜாவின் கை முன்னிருந்தபடி சீர்பட்டது. அப்பொழுது ராஜா தேவனுடைய மனுஷனை நோக்கி: நீ என்னோடேகூட வீட்டுக்கு வந்து இளைப்பாறு; உனக்கு வெகுமானம் தருவேன் என்றான். தேவனுடைய மனுஷன் ராஜாவை நோக்கி: நீர் எனக்கு உம்முடைய வீட்டில் பாதி கொடுத்தாலும், நான் உம்மோடே வருவதுமில்லை, இந்த ஸ்தலத்தில் அப்பம் புசிப்பதுமில்லை, தண்ணீர் குடிப்பதுமில்லை. ஏனென்றால் நீ அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்று சொல்லி, அவன் பெத்தேலுக்கு வந்தவழியாய்த் திரும்பாமல், வேறுவழியாய்ப் போய்விட்டான்.*
*(I இராஜாக்கள் 13 : 1 - 10).*

எந்தவொரு ராஜாவும் ஆசாரியப்பணி செய்யக்கூடிய தகுதியுள்ளவன் அல்ல. யெரொபெயாம் பலி செலுத்தின பலிபீடமும் தேவசித்தத்தின்படியானது அல்ல. அது பொன்னால் செய்யப்பட்ட கன்றுக்குட்டிகளுக்கென்று செய்யப்பட்ட பலிபீடம். ராஜாவாகிய யெரொபெயாம், இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை ஆராதிக்கும்படியாக

எருசலேமுக்குப் போகாதபடி, தன்னுடைய தேசத்திலே பொன்னினால் கன்றுக்குட்டிகளை உண்டாக்கி வைத்தான். அது தேவனுக்குப் பிரியமில்லாத காரியமாக இருந்தது. அதனால் தான் தேவன் யூதேயாவிலிருந்த தீர்க்கதரிசியை அனுப்பினார். இந்த தீர்க்கதரிசியைக் கர்த்தர் அனுப்பும்போது, அவனிடம்: நான் அறிவிக்கிற வார்த்தைகளை நீ சொல்ல வேண்டும். ஆனாலும் நீ அந்த இடத்திலிருந்து சாப்பிடவோ, தண்ணீர் குடிக்கவோ, போகிற வழியாய் திரும்பி வரவோ செய்யக் கூடாது என்று சொல்லியிருந்தார். இந்தத் தீர்க்கதரிசியைக் கொண்டு சொன்னபடியே, ஏறக்குறைய 300 வருஷம் கழிந்து, யோசியா என்னும் ராஜாவைக் கொண்டு அந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை அப்படியே நிறைவேற்றினார். தீர்க்கதரிசியால் சொல்லப்பட்ட வார்த்தைகள் உண்மையானவை; அது அப்படியே நிறைவேறும் என்பதற்கு அடையாளமாக ஒரு காரியத்தைச் சொன்னார். அதுவும் அப்படியே நடந்தது. அந்தத் தீர்க்கதரிசியைக் கொண்டே, யெரொபெயாமின் மரத்துப்போன கை மறுபடியும் சொஸ்தமாகக் கிரியை செய்தார். அதன்பின், தேவனுடைய மனுஷனைக் கொண்டு கர்த்தர் நடப்பித்த கிரியைகளைக் கண்டு, ராஜாவாகிய யெரொபெயாம் அந்த தேவனுடைய மனுஷனைப் புசித்துக்குடிக்கும்படி அழைத்த பின்பு அவன் போகவில்லை. நாம் தேவனுடைய மனுஷர்கள் என்று சொல்லிக் கொண்டாலும் தேவசித்தம் செய்கிறது வரைக்கும் தான் நாம் தேவனுடைய மனுஷர்கள். எந்த நிமிஷத்தில் நாம் தேவசித்தத்தைச் செய்யத் தவறுகிறோமோ அந்த நிமிஷத்திலிருந்து நாம் தேவனுடைய மனுஷர்கள் அல்ல.

> *அதற்கு அவன்: உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான்; அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவா என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான் என்று அவனிடத்தில் பொய் சொன்னான். அப்பொழுது அவன் இவனோடே திரும்பிப்போய், இவன் வீட்டிலே அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தான். அவர்கள் பந்தியில் உட்கார்ந்திருக்கிற போது, அவனைத் திருப்பிக்கொண்டு வந்த தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டானதினால், அவன்*

*யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷனைப் பார்த்துச் சத்தமிட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி, அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால், உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அவன் போஜனபானம்பண்ணி முடிந்தபின்பு, அந்தத் தீர்க்கதரிசியைத் திருப்பிக்கொண்டுவந்தவன் அவனுக்குக் கழுதையின்மேல் சேணம்வைத்துக் கொடுத்தான். அவன் போனபிற்பாடு வழியிலே ஒரு சிங்கம் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொன்றுபோட்டது; அவன் பிரேதம் வழியிலே கிடந்தது; கழுதை அதினண்டையிலே நின்றது; சிங்கமும் பிரேதத்தண்டையிலே நின்றது. (I இராஜாக்கள் 13 : 18 -24).*

கிழவனான தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனிடம் தன் வீட்டில் வந்து சாப்பிடச் சொன்னபோது, அவன் தேவனிடம் அதைக் குறித்து விசாரித்திருக்க வேண்டியது. ஏனென்றால், அநேகர் பார்வைக்கு நல்லவர்கள் போலவும், அநுபவமுள்ளவர்கள் போலவும் தங்களைக் காண்பிப்பார்கள். அவர்களுடைய வார்த்தையை நம்பி நாம் ஏமாந்து போகக் கூடாது. கிழவனான தீர்க்கதரிசி சொன்னதை தேவனுடைய மனுஷன் நம்பினதினிமித்தம் அவனுடைய ஜீவியத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆகவே நாம் எவ்வளவு பயந்து காணப்பட வேண்டுமென்பதை புரிந்துகொள்ள வேண்டும். நம்மால் மற்ற மனுஷர்களுக்கு இடறல் உண்டாகக் கூடாது. அப்படி இடறல் உண்டாக்குவது தேவனுடைய நாமத்திற்கு மகிமைக் குலைச்சலை உண்டாக்குகிறது. தேவனுடைய நாமமும் தூஷிக்கப்படுகிறது.

*சீப்புருதீவைக் கண்டு, அதை இடதுபுறமாக விட்டு, சீரியாநாட்டிற்கு ஓடி, தீருபட்டணத்துறையில் இறங்கினோம்; அங்கே கப்பலின் சரக்குகளை இறக்கவேண்டியதாயிருந்தது. அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, அங்கே ஏழுநாள் தங்கினோம். அவர்கள் பவுலை நோக்கி: நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே*

*சொன்னார்கள். அந்த நாட்கள் நிறைவேறினபின்பு, நாங்கள் புறப்பட்டுப்போகையில், அவர்களெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூடப் பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழிவிட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையிலே நாங்கள் முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினோம். (அப்போஸ்தலர் 21 : 3, 4, 5).*

மனுஷனுக்குச் சோதனை என்பது எல்லாக் காலங்களிலும் உண்டு. ஆனால் தேவனோடு அதிகமான தொடர்பு வைத்திருக்கிற மனுஷன் மட்டுமே அதற்குத் தப்புவான். நாம் தேவ ஆவியைப் பெற்றவர்களாயிருந்தாலும் தேவ ஆவியினால் வழிநடத்தப்படும் அநுபவத்தை இழந்ததால் நமக்கு நேராக பல சூழ்நிலைகள் வரும்போது நாம் கலங்குகிறவர்களாகவும், குழம்புகிறவர்களாகவும் இருக்கிறோம். பவுல் அப்போஸ்தலரோடு தேவன் கூட இருந்ததால் தீரு பட்டணத்தார் சொன்ன வார்த்தையை அவர் வகைவைக்கவில்லை.

*மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம். தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள். நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான். இவைகளை நாங்கள் கேட்டபொழுது, எருசலேமுக்குப் போகவேண்டாமென்று, நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக்கொண்டோம். அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப் பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும்*

*ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். அவன் சம்மதியாதபடியினாலே, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம். (அப்போஸ்தலர் 21 : 8 - 14).*

தீர்க்கதரிசியாகிய அகபு, பவுல் அப்போஸ்தலருக்குச் சம்பவிப்பதைக் குறித்துச் சொல்லியிருந்தாலும், அவர் தேவனோடு ஒன்றாக இருந்ததால் பவுல் அப்போஸ்தலருக்குத் தன்னைக் குறித்த தேவசித்தம் என்ன என்பது தெரிந்திருந்தது. நமக்கு நம்மைக் குறித்த தேவசித்தம் என்ன என்ற அறிவு தேவையாய் காணப்படுகிறது. அதைத் தெரிந்துகொண்டு, அதையே நிறைவேற்றும்போது தேவன் நம்மிடத்தில் பிரியப்படுவார். பவுல் அப்போஸ்தலருக்குச் சம்பவிக்கப் போவதைக் குறித்து தீர்க்கதரிசியால் அறிவிக்கப்பட்டபோது, அவர் தன்னைக் குறித்த தேவசித்தத்தை அறிந்துகொண்டதால் கர்த்தருக்காகக் கட்டப்பட மாத்திரமல்ல மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்று சொல்லி, அந்தப் பாதையிலே தொடர்ந்து முன்னேறிச் சென்றார். பவுல் அப்போஸ்தலர் தனக்கு வாழ்வானாலும், சாவானாலும் எதுவானாலும் தேவசித்தமே பாக்கியமென்று இருதயத்தில் உறுதியோடு காணப்பட்டார்.

*அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்க வேண்டும் என்றார். (அப்போஸ்தலர் 23 : 11).*

ஜனங்கள் சொன்னபடி பவுல் அப்போஸ்தலர் செய்திருப்பாரானால் தேவன் பக்கத்தில் போகமாட்டார். அடுத்தவர்கள் என்ன சொன்னாலும் பவுல் அப்போஸ்தலர் தனக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பைக் குறித்து அறிந்து, முன்னேறிச் சென்றதால் தேவன் அவருடைய அருகில் நின்று பேசினார். அநேகர் மற்றவர்களுடைய அனுதாபமான ஆறுதலான வார்த்தைகளைக் கேட்டு, ஆவிக்குரிய ஜீவியத்தில் வீழ்ச்சி அடைகிறார்கள்.

*நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதி*

*யாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். (II தீமோத்தேயு 4 : 7, 8).*

நாம் முதலாவது நம்மைக் குறித்த தேவசித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதன் பின் அதற்குத் தடையாக எத்தனை பேர் வந்தாலும் அதை வகைவைக்கக்கூடாது. பவுல் அப்போஸ்தலர் ஜனங்களுடைய அழுகைக்கும், ஆவியின் ஏவுதலுக்கும் இடங்கொடுக்காமல் இருந்தது தேவசித்தமாகவே காணப்படுகிறது. இது ஒரு போராட்டமான வாழ்க்கை. பலவிதமான தீர்க்கதரிசனங்கள் குறுக்கிட்டாலும், நம்மைக் குறித்த தேவசித்தத்தை அறிந்து காணப்படுவோமானால், எந்தத் தடையுமில்லாமல் நல்ல போராட்டம் போராடி ஜெயம்பெற்று வாழலாம். பவுல் அப்போஸ்தலர் தான் மரிக்கப் போகிறதைக் குறித்து அறிந்தும் அவர் அதுவரைக்கும் தேவசித்தத்தைப் பூரணமாய்ச் செய்து நிறைவேற்றினதால், நான் எனக்குள்ளதான ஓட்டத்தை ஓடி முடித்தேன் என்று தைரியமாகச் சொல்லுகிறார். தேவசித்தம் செய்யும்படி அழைக்கப்பட்ட நாம் தேவசித்தம் தானா செய்கிறோம் என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

### 8.1. தேவசித்தத்தை அறிந்துகொள்வது எப்படி?

தேவனிடத்தில் நம்முடைய காரியங்களையெல்லாம் ஒப்புவித்து, அவர் நிச்சயமாகவே எனக்கு ஆலோசனை தருவார், அவர் என்னை வழி நடத்துவார் என்று அவரை நம்ப வேண்டும். கர்த்தர் நம்மை அழைத்த அழைப்பிலே நாம் நிலைநிற்க, நம்மைக் குறித்த தேவசித்தம் என்ன என்பதைக் காத்திருந்து கண்டுபிடிக்க வேண்டும். அதைக் கண்டுபிடித்துக் கொள்வோமானால் நம்முடைய ஓட்டம் பவுல் அப்போஸ்தலரைப் போன்று நெருக்கமானாலும், கஷ்டமானாலும் தேவன் நமக்கு ஆலோசனை அளிக்கிறவராக இருப்பார். நம்மைத் திடப்படுத்துவார்.

*நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். (சங்கீதம் 32 : 8).*

கர்த்தர் நமக்கு இப்படிச் சொல்லியிருக்க நம்மில் அநேகருக்குள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சியற்றுப் போகக் காரணம் தங்களுடைய சந்தேகமான எண்ணங்களினால் தான்.

> *கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய். (ஏசாயா 58 : 11).*

நாம் கர்த்தருக்குக் காத்திருப்போமானால் எத்தனை வழிகள் இருந்தாலும் நாம் எப்படி நடக்க வேண்டும், நம்மைக் குறித்த தேவசித்தம் என்ன என்பது நம் காதுகளில் கேட்கும். கர்த்தர் நித்தமும் நம்மை நடத்துவார்.

> *உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம் 119 : 105).*

நாம் வேதத்தைத் தினமும் வாசிக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் அந்த வேதவசனத்தைக் கொண்டே, வேதம் இன்னபடி சொல்லுகிறது நீ இதிலே நடக்க வேண்டும் என்பதைப் போதிப்பார்.

## 8.2. தேவசித்தத்தை நிறைவேற்றுவது எப்படி?

> *அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12 : 1, 2).*

தேவசித்தம் நம்மில் நிறைவேற வேண்டுமானால் 3 காரியங்கள் தேவையாக இருக்கிறது.

♦ நம்முடைய மனம் புதிதாக வேண்டும்.

அதாவது நாம் விரும்புகிற காரியமாக இருந்தாலும், விரும்பாத காரியமானாலும் தேவசித்தத்தையே பூரணமாய்ச் செய்து நிறைவேற்றுகிறதாக நம்முடைய மனம் காணப்படவேண்டும்.

♦ புதிதான மனம் நம்மில் உண்டானபின்பு, பூரணமாய் நம்மை தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

ஏனென்றால் மனம் புதிதாகியும் நம்மைத் தேவனிடத்தில் ஒப்புக்கொடாமலிருப்போமானால் சுயம் வெளிப்படும். தேவசித்தத்தின்படி ஜீவிக்க வேண்டுமானால் நம்மை முழுதுமாய் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டும். அதன்பின் நாம் என்னென்ன உடன்படிக்கைகள் பண்ணினால் தேவசித்தத்தின்படி ஜீவிக்க முடியும் என்றறிந்து கர்த்தரிடத்தில் உடன்படிக்கை பண்ணவேண்டும்.

♦ உலகத்திற்கு ஒத்த வேஷமும், உலக சிநேகமும் நமக்குள் இருக்கக்கூடாது.

நாம் கர்த்தரிடம் உடன்படிக்கை பண்ணி, அந்த உடன்படிக்கைக்குள் நம்மைக் கொண்டு வருவோமானால், அது நம்மை உலகத்திற்கொத்தபடியோ உலக மனுஷரைப் போன்றோ நடக்கவொட்டாது. அப்பொழுது பூரணமான கீழ்ப்படிதலோடு தேவசித்தத்தை நம்மால் செய்து நிறைவேற்ற முடியும்.

> *இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும் படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத்*

*திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். ஆகையால், அகிரிப்பா ராஜாவே, நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை. (அப்போஸ்தலர் 26 : 16 - 19).*

பவுல் அப்போஸ்தலரைக் குறித்த தேவசித்தத்தை தேவன் முன்னமே அவரிடம் அறிவித்துவிட்டார். ஆகையால் அந்தத் தரிசனத்துக்கு கீழ்ப்படியாமலிருக்க என்னால் முடியாது என்று பவுல் அப்போஸ்தலர் அகிரிப்பா ராஜாவிடம் சொன்னார். பவுல் அப்போஸ்தலர் தன்னைக் குறித்த தேவசித்தத்தை அறிந்த பின்பு அவர் சப்பாணியாகவோ ஊமையாகவோ இருக்கவில்லை. தேவசித்தத்தை நிறைவேற்றுகிற தற்காக ஓடிக்கொண்டே இருந்தார். கர்த்தருடைய வார்த்தைகளைப் பேசிக்கொண்டும் இருந்தார். அவர் ஒருமுறை கல்லெறியப்பட்டு மரித்துத் திரும்பவும் உயிர்பெற்றபோது, தன்னுடைய சரீரத்திலுள்ள கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் உடனே மறுபடியும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யத் தொடங்கினார், பிரசங்கம் பண்ணினார். இது தான் தேவசித்தத்தை அறிந்து அதன்படி செய்கிற அநுபவம்.

*சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். (மத்தேயு 26 : 39).*

தேவசித்தத்திற்கு அப்படியே கீழ்ப்படிகிற அநுபவமும் நமக்குத் தேவை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு தம்மைக் குறித்த தேவசித்தத்தைக் குறித்து தெளிவாகத் தெரியும்; தெரிந்தபின்பும் பிதாவின் சித்தமே தனக்கு பாக்கியம் என்று எண்ணினார். மரணமே தேவசித்தமானாலும்கூட அதைச் செய்து நிறைவேற்றுபவன் தான் கிறிஸ்தவன், கிறிஸ்துவை உடையவன். அநேகர் தேவசித்தம் செய்வது கடினமாக இருந்தால் அதைக் கர்த்தர் மாற்றும்படியாக கர்த்தரிடத்தில் அழுகிறவர்களாக இருப்பார்கள். நம்முடைய மனக்கடினத்தினிமித்தம் கர்த்தர் அதை மாற்றினாலும் அது தேவசித்தமாக இராது. அப்படிச் செய்கிறவர்கள் பரலோகராஜ்யம் போக முடியாது. ஆகவே, தேவசித்தம்

செய்ய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் இருந்தது போன்றும், பவுல் அப்போஸ்தலரிடம் இருந்தது போன்றும் பூரணமான கீழ்ப்படிதல் நமக்கு வேண்டும். இரண்டு பேருடைய கீழ்ப்படிதலின் முடிவும் மரணம். நாம் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறோமா, சுயசித்தத்தை நிறைவேற்றுகிறோமா என்பதை சிந்திக்க வேண்டும்.

## 8.3. கிறிஸ்தவர்களாகிய நம்மைக் குறித்த தேவசித்தம் என்ன?

*எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.*
*(I தீமோத்தேயு 2 : 4).*

எல்லா மனுஷரும் பூரணமான இரட்சிப்பின் அநுபவத்தை அடைய வேண்டும். சத்தியத்தைக் குறித்த அறிவை அடைந்து கொள்ள வேண்டும். அந்த சத்தியம் நமக்கு தேவனைக் குறித்தும், அவருடைய அன்பு, பரிசுத்தம் எப்படிப்பட்டது என்றும் தெளிவாகச் சொல்லுகிறது. நீ எந்த சூழ்நிலையில் எப்படி எப்படி இருக்க வேண்டுமென்பதையும் தெளிவாக அறிவிக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் ஏறக்குறைய 2000-க்கும் மேற்பட்ட பாவங்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் அவைகளைக்குறித்து அறிந்துகொள்ளும்போது அவைகளுக்கு விலகி ஜீவிக்கலாம். அதனால் தான் சத்தியத்தைக் குறித்த அறிவு நமக்குத் தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பு நமக்குள் நிறைவேற வேண்டுமானால் சத்தியத்தைக் குறித்த அறிவின் மூலமாகத் தான் பாவமானவைகளும் தீமையானவைகளும் எவை என்று அறிந்து அவைகளுக்கு விலகி ஜீவிக்கமுடியும். இல்லாவிட்டால் பாவத்தைக் குறித்த அறிவற்று ஜீவியத்தில் வீழ்ச்சி அடைவதற்கேற்ற நிலையுண்டாகும்.

*நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, (I தெசலோனிக்கேயர் 4 : 3).*

இரட்சிப்பின் அநுபவம் மட்டுமல்ல, பரிசுத்தமும் நமக்குத் தேவையானதாகக் காணப்படுகிறது. பரிசுத்தம் வேண்டுமானால் பரிசுத்தத்தை நமக்குள் கொடுக்கக்கூடிய பரிசுத்த ஆவியானவர்

தேவை. அவர் ஒருவர் மட்டுமே மனுஷருக்குள் வாசம்பண்ணி, பரிசுத்த ஆவியினால் மனுஷர்களை வழிநடத்துகிறவராகவும் இருக்கிறார். அதற்காக நாம் கர்த்தரிடத்தில் அழுது புலம்பி, பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயமாக நாம் ஒவ்வொருவரும் மாறியே ஆகவேண்டும். அதுவும் நம்மைக் குறித்த தேவசித்தமாயிருக்கிறது.

> *இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (I தெசலோனிக்கேயர் 5 : 17, 18).*

நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பையும், பரிசுத்தமாகுதலையும் காப்பாற்றவேண்டுமானாலும் சோதனைக்காரனாகிய சாத்தானுடைய கண்ணிக்கு நாம் தப்பவேண்டுமானாலும் வேலை செய்யும்போதானாலும் எப்பொழுதானாலும் இடைவிடாமல் ஜெபம்பண்ண வேண்டும். ஜெபம்பண்ண முடியாவிடில் ஸ்தோத்திரமாவது பண்ண வேண்டும். ஏனென்றால் அந்த இடத்தில் தேவனுடைய பிரசன்னம் காணப்படும். நம்முடைய வாழ்விலும், தாழ்விலும், கஷ்டநஷ்டத்திலும் எல்லாவற்றிலும் நாம் ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். நாம் கர்த்தரை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்துவது நம்மைக் குறித்த தேவசித்தமாயிருக்கிறது.

> *நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. (யோவான் 15 : 12).*

தேவசித்தத்தில் ஒன்று அன்பு செய்வது. நாம் எல்லா அனுபவங்களை உடையவர்களாக இருந்தாலும் அன்பு இல்லாவிட்டால் பிரயோஜனமில்லை, அநேகரிடத்தில் அன்பில்லாதிருந்தும், தான் தேவசித்தப்படி நடக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளவில்லை.

> *நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. (I பேதுரு 2 : 15).*

நாம் நன்மை செய்கிறவர்களாகவும் இருக்கவேண்டும்.

## 8.4. தேவசித்தம் செய்கிறதினால் வரும் ஆசீர்வாதங்கள்:

*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார். (மத்தேயு 12 : 50).*

தேவசித்தத்தை செய்கிறவர்கள் மட்டுமே பரலோகத்திலிருக்கிற பிதாவுக்குச் சொந்தமானவர்கள்.

*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7 : 21).*

நாம் இந்த உலக வாழ்க்கையை முடித்தபின்பு பரலோக ராஜ்யம் போகவேண்டுமென்பதற்காகவே இந்த வேஷத்தை உடையவர்களாக இருக்கிறோம், அதற்காகவே புறப்பட்டோம். நாம் நம்மைக் குறித்த தேவசித்தத்தை அறிந்தும் அதை நிறைவேற்றாமல் போவோமானால் பரலோகராஜ்யம் போக முடியாது. அநேகர் தங்களுடைய மனதில் தோன்றுகிறதை தேவசித்தமென்று எண்ணி, சாத்தானுடைய வஞ்சகத்திற்கு அடிமைப்பட்டு தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாமல் தங்கள் சுயசித்தம் செய்கிறவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் பரலோகராஜ்யம் பிரவேசிக்க முடியாது.

*பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். (யோவான் 17 : 4).*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவசித்தத்தை செய்து நிறைவேற்றினதினாலே, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் என்று சொன்னார். தன்னை தேவனுக்கென்று முழுதுமாக ஒப்புக்கொடுத்து, தேவசித்தமே தனக்கு போதுமானதென்ற எண்ணத்தோடு காணப்படுகிற மனுஷனால் மட்டுமே தேவனை மகிமைப்படுத்த முடியும். இயேசுகிறிஸ்துவைக் குறித்துத் தீர்க்கதரிசிகளைக்கொண்டு பேசிஅறிவிக்கப்பட்ட சகல தீர்க்கதரிசனங்களின்படியான காரியங்களை, பிதாவின்

சித்தத்தின்படியே அவர் பூரணமாய்ச் செய்துமுடித்தார். எல்லாவற்றையும் செய்து முடித்துத் தன் ஜீவனையும் விட்டார். நாமும் கர்த்தரால் அடைந்துகொள்ள வேண்டிய எல்லா அநுபவங்களையும் அடைந்து தேவசித்தம் மாத்திரம் செய்து, நம்முடைய ஜீவனை விட்டால் மட்டுமே பரலோகராஜ்யம் போகமுடியும்.

### 9. பூரணமான ஜெபஜீவியம்:

இராப்போஜனத்தில் பங்குபெறுகிறவர்கள் பூரணமான ஜெபஜீவியம் உடையவர்களாகக் காணப்பட வேண்டும். ஜெபஜீவியம் இல்லாதவர்கள் இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியற்றவர்கள். இவர்கள் தேவனிடத்தில் தொடர்பில்லாதவர்கள்; ஆகவே, அவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் போஜனபானம்பண்ண எந்தவிதத்திலும் தகுதியற்றவர்கள். தேவனுடைய ஜனங்கள் எவ்விதமான ஜெபஜீவியம் உடையவர்களாய் காணப்பட வேண்டுமென்று கர்த்தர் கற்பனை கொடுத்திருக்கிறாரோ அவ்விதமாக ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்கிற அநுபவத்தோடு காணப்படவேண்டும். அநேகர் பலவிதமான பாவங்களோடு காணப்படுகிறதினாலும், சாத்தானோடு இவர்களுக்கு ஐக்கியமிருப்பதினாலும் இவர்களுக்கு ஜெபம்பண்ண முடிகிறதில்லை.

ஜெபம் என்பது நம்முடைய ஆண்டவராகிய இயேசுவிடம் பேசி உறவாடுவதும், நமக்குத் தேவையானவற்றை அவரிடம் கேட்பதுமே ஆகும். நாம் ஜெபம்பண்ணாவிட்டால் நம்முடைய பரம தகப்பனாகிய இயேசுவிடம் நாம் பேசவில்லை என்பது பொருளாகும். ஜெபத்திற்கு கெஞ்சுதல், கூப்பிடுதல், முறையிடுதல், கேட்குதல், தட்டுதல் இப்படிப் பலப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

> *அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,*
>
> *(எபிரெயர் 5 : 7).*

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது பகல் வேளையில் தம்முடைய ஊழியத்தைச் செய்து இரவு முழுவதும் ஜெபம்பண்ணி மாதிரி காண்பித்தார்.

## 9.1. தேவன் எப்படிப்பட்டவர்?

*மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால். அவனுக்குக் கல்லை கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைப் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.*

*(லூக்கா 11 : 9 - 13).*

இந்த வசனத்தின் மூலம் கேட்கிறவர்களுக்கு தேவன் கொடுக்கிறவராக இருக்கிறார் என்று அறிந்துகொள்ளுகிறோம். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கிறார். அதைவிட அதிகமாக நமது பரம தகப்பனாகிய இயேசுகிறிஸ்து நமக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கச் சித்தமுள்ளவராக இருக்கிறார். இந்த உலகத்திலுள்ள தகப்பன்மாரை அவர் பொல்லாதவர்கள் என்று சொல்லியிருக்கிறார். அப்படி இருந்தாலும் தன் சொந்தப் பிள்ளையைக் கவனிக்கக்கூடிய கவனம் உடைவனாக இருக்கிறான். தகப்பனிடத்தில் கேட்கவேண்டிய பிரகாரம் கேட்டால் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிள்ளைகளுக்கு இருக்கிறது. அதுபோல பரம தகப்பனிடத்தில் நாம் பேசிப் பழகுகிறவர்களாக இருக்க வேண்டும். அநேகருக்கு ஜெபம் என்றாலே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. விசுவாசத்தோடு நாம்

நம்முடைய காரியங்களை அவரிடம் மனப்பூர்வமாய்ச் சொல்லுவோமானால் அதை அவர் கேட்கிறவராக இருக்கிறார்.

## 9.2. தேவனிடம் எப்படி கேட்க வேண்டும்?

*அப்பொழுது காலேப்: கீரியாத்செப்பேரைச் சங்காரம்பண்ணிப் பிடிக்கிறவனுக்கு என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக்கொடுப்பேன் என்றான். அப்பொழுது காலேபுடைய தம்பியாகிய கேனாசின் குமாரன் ஒத்னியேல் அதைப் பிடித்தான்; ஆகையால் தன் குமாரத்தியாகிய அக்சாளை அவனுக்கு விவாகம்பண்ணிக்கொடுத்தான். அவள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியைக் கேட்க வேண்டும் என்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கழுதையின்மேலிருந்து இறங்கினாள். காலேப் அவளை நோக்கி: உனக்கு என்னவேண்டும் என்றான். அப்பொழுது அவள்: எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்; வறட்சியான நிலத்தை எனக்குத் தந்தீர்; நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்; அப்பொழுது காலேப்: மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான்.*

*(நியாயாதிபதிகள் 1 : 12 - 15).*

*யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான்; அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார். (I நாளாகமம் 4 : 10).*

அக்சாள் தன் தகப்பனிடம் ஆசீர்வாதத்தைக் கேட்கிறாள், கேட்டது போல் பெற்றுக்கொள்ளவும் செய்கிறாள். அதுபோல, யாபேஸ் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கேட்கிறான். அவனும் பெற்றுக்கொள்கிறான், அக்சாளுக்கு தன் தகப்பனிடம் நம்பிக்கையும் விசுவாசமும் இருந்ததினாலே செழிப்பான நிலங்களைக் கேட்டாள். அவன் அவள் கேட்டுக்கொண்டது போல் கொடுத்தான். அதுபோல

நாமும் நம்முடைய தேவன், நாம் கேட்கிற ஆசீர்வாதங்களை நமக்குத் தருவார் என்ற விசுவாசத்தோடு கேட்கவேண்டும். இதற்கு மாறாக முறுமுறுத்தல் கூடாது. தகப்பனிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்கிறது போல, இந்த உலகத்திலும் பரிசுத்தவான்கள் விசுவாசத்தோடு தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொண்டார்கள். அதுபோன்ற பாக்கியங்களை நாமும் இந்த உலகத்தில் சுதந்தரித்துக்கொள்ள சில நிபந்தனைகள் இருக்கிறது. தகப்பன் தானே என்று சும்மா எல்லாவற்றையும் கேட்டாலும் கிடைக்காது.

தகப்பனாருக்கு தன் பிள்ளைகளுக்கு எதைக் கொடுக்க வேண்டுமென்று தெரியும். அதுபோல, நாமும் தேவனிடத்தில் கேட்டால் அவர் நமக்குத் தருகிறவராக இருக்கிறார். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். நாம் தட்டிக்கொண்டே இருந்தால் நிச்சயமாகவே நமக்குத் திறப்பார். எப்பேர்ப்பட்ட பாவிகளாக இருந்தாலும் பலவந்தமாகக் கேட்கிறவர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்கள். பரலோகராஜ்யம் போகவேண்டுமென்ற எண்ணம் ஒரு மனுஷனுக்குள் இருக்குமானால் அவன் தன் நிலைமைகளையெல்லாம் தேவனிடம் அறிக்கைபண்ணி, தேவனிடத்தில் வைராக்கியமாகக் கேட்பானானால், அவனுக்கு நிச்சயமாகவே பரலோகராஜ்யம் கிடைக்கும் என்பதாகவும் தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார். அதுபோலவே, யோவான்ஸ்நானன் காலத்திற்கு பிறகு ஏராளமான ஜனங்கள் தங்களுடைய பழைய வாழ்க்கை எப்படிப்பட்டதாகக் காணப்பட்டாலும், புதுப்பிக்கப்பட்டவர்களாக மாறி தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க ஏற்றவர்களாக இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஜெபமும் கேட்கப்படும், ஆனால் சில நிபந்தனைகளுடன் தான் அது கேட்கப்படும். நிபந்தனைகள் நமக்குத் தேவையான ஒன்றாக இருக்கிறது. நான் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறேன், ஆனால் கிடைக்கவில்லை என்று அநேகர் சொல்லுகிறார்கள். நாம் நிபந்தனைகளின்படி விடவேண்டியவைகளை விட்டு ஜெபம்பண்ணினால் மட்டும் தான் கேட்கப்படும். ஏனென்றால், கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்று சொன்ன அதே தேவன் தான் சில நிபந்தனைகள் தருகிறார். கர்த்தருடைய வேத சத்தியத்திற்கு

மாறாக நம்முடைய ஜீவியம் இருக்குமானால் நாம் எவ்வளவு தான் ஜெபம்பண்ணினாலும் அந்த ஜெபம் கேட்கப்படாது.

## 9.3. நம்முடைய ஜெபம் கேட்கப்படும்படியான நிபந்தனைகள்:

- **தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபம்பண்ண வேண்டும்:**

*சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். (மத்தேயு 26 : 39).*

இயேசுகிறிஸ்து என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். அதையே அவர் அநுபவிப்பது பிதாவின் சித்தமாயிருந்தபடியினால் அதையே ஏற்றுக்கொண்டு அநுபவித்தார்.

*நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாம லிருக்கிறீர்கள். (யாக்கோபு 4 : 3).*

அநேகர் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளாமலிருக்கக் காரணம், தங்கள் இச்சைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற தகாதவிதமான எண்ணத்தோடு அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணுவதினாலே ஆகும்.

- **விசுவாசத்தோடு ஜெபம் பண்ண வேண்டும்:**

*ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. (யாக்கோபு 1 : 6, 7).*

நாம் எவ்வளவாய்க் கர்த்தரிடம் ஜெபம்பண்ணினாலும் எனக்குக் கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்காது என்ற சந்தேகம் நமக்குள் இருக்குமானால் அந்த ஜெபத்தினால் பிரயோஜனமில்லை. தேவன் எனக்கு விடுதலை தருவார் என்கிற விசுவாசம் நமக்கு வேண்டும். அந்த விசுவாசத்தை மையமாக வைத்து ஜெபம்பண்ணவேண்டும். சந்தேகத்தோடு காணப்படுகிறவர்கள் தேவனிடத்திலிருந்து எதையாவது பெற்றுக்கொள்ளலாமென்று நினைக்கவே வேண்டாம். கிடைக்கவே செய்யாது. அப்படிப்பட்டவர்கள் முதலாவது சந்தேகம் மாற ஜெபம்பண்ண வேண்டும்.

♦ **மற்றவர்களுடைய குற்றங்களை மன்னித்து ஜெபம்பண்ண வேண்டும்:**

> *நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். (மாற்கு 11 : 25).*

இரட்சிப்பையும் பூரணமாக்கப்பட்ட பரிசுத்தமான அநுபவத்தையும் விரும்புகிற நமக்கு அந்த அநுபவம் கிடைக்க வேண்டுமானால் தேவன் நம்மைப் பூரணமாய் மன்னிக்கவேண்டும். தேவன் நமக்கு அந்த மன்னிப்பைத் தரவேண்டுமானால் நாம் நமக்கு விரோதமாகக் குற்றம் செய்த அடுத்தவர்களுடைய குற்றங்களை மன்னிக்கவேண்டும். அநேகரிடம் இதைச் சொல்லும்போது நியாயம் பேசுவார்கள். நம்முடைய குற்றங்களையும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவாரானால் நமக்கு மன்னிப்பு கிடைக்கிறதில்லை. நாம் மற்றவர்களுடைய குற்றங்களை மனப்பூர்வமாய் மன்னிப்போமானால் தைரியமாய் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் சேரலாம். அப்படி நாம் ஜெபம்பண்ணும்போது நம்முடைய இருதயம் உடைந்து ஜெபம்பண்ண நல்ல தாகமும் வாஞ்சையும் உண்டாகும். நாம் கர்த்தருடைய பார்வையில் ஒன்றுமற்றவர்கள். அப்படி நாம் நம்முடைய நிலைமைகளை உணர்ந்து ஜெபம்பண்ணும்போது நம்முடைய ஜெபம் கேட்கப்படும்.

> *என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார். (சங்கீதம் 66 : 18).*

முதலாவது நம்முடைய இருதயத்தில் இருக்கிற கெட்ட எண்ணங்கள் மாற ஜெபம்பண்ண வேண்டும்.

*என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்தி லிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்.*

*(II நாளாகமம் 7 : 14).*

நாம் ஜெபம்பண்ணும்போது நம்மைத் தாழ்த்தி ஜெபம்பண்ண வேண்டும். அதன்பின் நம்முடைய பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பவேண்டும். அப்பொழுது தான் நம்முடைய ஜெபமும் கேட்கப்படும். நாம் நம்மை அருவருத்து நம்மைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும்போது எப்பேர்ப்பட்ட சூழ்நிலையையும் அவர் மாற்ற வல்லவராயிருக்கிறார்.

- **விட வேண்டியவைகளை விட்டு ஜெபம் பண்ண வேண்டும்:**

*இதோ, சீயோனில் கர்த்தர் இல்லையோ? அதில் ராஜா இல்லையோ? என்று, என் ஜனமாகிய குமாரத்தி தூர தேசத்திலிருந்து கூப்பிடும் சத்தம் கேட்கப்படுகிறது; ஆனால், அவர்கள் தங்கள் சுரூபங்களினாலும் அந்நியரின் மாயைகளினாலும் எனக்குக் கோபமுண்டாக்கினது என்ன என்கிறார். அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை. (எரேமியா 8 : 19, 20).*

ஜனங்கள் ஆண்டவரே, ஆண்டவரே என்று கூப்பிட்டும் பதில் கிடைக்காததால், அவர் இங்கு இல்லையோ என்று கேட்கிறார்கள். நம்முடைய தேவன் ஜீவனோடிருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இப்பொழுதும் கர்த்தர் நாம் கூப்பிடுவதைக் கேட்டுக்கொண்டேதான் இருக்கிறார். ஆனாலும் அநேகர் விட வேண்டியவைகளை விடாததினிமித்தம் பதில் கிடைக்கிறதில்லை. கர்த்தர் மனந்திரும்பும்படியாய் அறிவித்தும் மனந்திரும்பினதும் இல்லை. அவருக்குக் கோபமுண்டாக்கும் கிரியைகளோடு காணப்படுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் கர்த்தர் காலங்களையும், வேளைகளையும் கட்டளையிட்ட பின்பும் தங்கள் பாவங்களினிமித்தமாக தேவனை

மறுபடியும் மறுபடியும் சிலுவையில் அறைகிறதான நிலைமையோடு காணப்படுகிறார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கிறவர்கள் அவைகளைக் கர்த்தரிடத்திலிருந்து சொந்தமாக்கிக்கொள்ள தாங்கள் விடவேண்டியவைகளை விட வேண்டும்.

- **கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்:**

> *அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். (I யோவான் 3 : 22).*

கர்த்தருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்வோமானால், நான் தேவனைப் பிரியப்படுத்தி வாழ்கிறேனென்று தைரியமாய்ச் சொல்லலாம். நாம் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாம லிருக்கும்போது அவரைப் பிரியப்படுத்த முடியாது. நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவரைப் பிரியப்படுத்தி ஜீவிக்கும்போது, நாம் வேண்டிக்கொள்ளுவதெதுவோ அதை தேவன்அப்படியே தந்தருளுவார், மாற்றமே இல்லை.

> *நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்க வந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்.*
>
> *(தானியேல் 9 : 23).*

நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருக்குப் பிரியமானவைகளைச் செய்வோமானால், நாம் முழுமையாய் ஜெபம்பண்ணி முடிக்கும்முன்பே நம்முடைய இருதயத்தை அறிகிறவராக இருக்கிற தேவன், நம்முடைய தேவைகளைக் கட்டளையிடுகிறவராக இருக்கிறார். தானியேல் தேவனுக்கு மிகவும் பிரியமானவராகவும் நெருக்கடியான காரியங்களின் மத்தியிலும் தினமும் மூன்று வேளை ஜெபம்பண்ணுகிறவராகவும் இருந்தார். ஆகவே, அவர் ஜெபம்பண்ணத் தொடங்கினபோதே பதில் கிடைத்தது.

## 9.5. ஜெபத்திற்குத் தடை வராமலிருக்க என்ன செய்யவேண்டும்?

*அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாய் இருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.*

*(I பேதுரு 3 : 7).*

ஜெபத்திற்கு தடைவராமலிருக்க புருஷனானவன் தன் மனைவியின் காரியங்களை நிறைவேற்ற வேண்டும்; மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும். தாயும், தகப்பனும் தன் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும். இந்தக் கடமைகளைச் செய்ய தவறினால் நமக்கு ஜெபம்பண்ணமுடியாது. ஜெபத்திற்குத் தடை உண்டாகும். இந்தக் கடமைகளைத் தவறிவிட்டு நாம் ஜெபம்பண்ணினாலும் கூட அந்த ஜெபம் கேட்கப்படாது. நாம் செய்ய வேண்டிய இவ்விதமான கடமைகளை ஒழுங்காகச் செய்யும்போது அந்தக் குடும்பத்தில் அன்பும், ஐக்கியமும், சமாதானமும் உண்டாகும். தேவனும் நம்மோடிருப்பார். நம் ஜெபத்திற்கும் பலன் உண்டாகும். அதுபோல, நாம் ஒரு எஜமானின் கீழ் வேலை செய்யும்போது நாம் வாங்குகிற சம்பளத்திற்கேற்றபடியான வேலை செய்யாவிட்டாலும் நம் ஜெபத்திற்குத் தடை உண்டாகும். அப்படியானால், நாம் கடமைகளைச் செய்வதில் கவனமாக இருக்கவேண்டும்.

## 9.6. கர்த்தரிடம் வருந்திக் கேட்பது:

*பின்னும் அவர் அவர்களை நோக்கி: உங்களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்கிறவனிடத்தில் பாதிராத்திரியிலே போய்: சிநேகிதனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான், அவன்முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை, நீ மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். வீட்டுக்குள் இருக்கிறவன்*

*பிரதியுத்தரமாக: என்னைத் தொந்தரவுசெய்யாதே, கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னோடேகூடப் படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து, உனக்குத் தரக் கூடாது என்று சொன்னான். பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினித்தம் எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (லூக்கா 11 : 5 - 8).*

நாம் கர்த்தரிடத்தில் கேட்கிறதான ஜெபம் கேட்கப்படும். இந்த உவமையில் சொல்லப்பட்ட அந்த மனுஷன் தன் சிநேகிதனிடத்தில் போய், தன் வெட்கத்தையும் பொருட்படுத்தாமல், தன் சிநேகிதன் முன் வைக்கத் தனக்கு ஒன்றுமே இல்லை, ஏதாவது தா என்று கேட்டதுபோல, நாமும் நம் தேவனிடம் நம்மிடம் ஒன்றுமில்லை என்ற எண்ணத்தோடு கேட்போமானால் கர்த்தர் கொடுக்கிறவராக இருக்கிறார்; நம்மிடம் ஏதோ இருக்கிறதுபோல நினைத்துக் கேட்டால் எந்த ஆசீர்வாதமும் கிடைக்கிறதில்லை. நம்மில் ஒன்றுமில்லாதிருந்தும் நம்மை ஒரு பொருட்டாக நாம் எண்ணுவோமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம். நாம் நம் தேவனிடம் நம்மில் ஒன்றுமில்லை என்ற எண்ணத்தோடு, நீர் தந்தால் தான் எனக்கு உண்டு, நீர் விடுவித்தால் தான் பரிசுத்தமாக ஜீவிக்க முடியும் என்று தன்னை அப்படியே தேவனுக்கு முன்பாகப் படைக்கிறதான அநுபவம் ஏற்படுமானால் நம் ஜெபம் கேட்கப்படும்.

*இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்ய வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்*

*செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார். (லூக்கா 18 : 5 - 8).*

நாமும் நம் தேவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளக்கூடியதான நிலைமையுள்ளவர்கள் அல்ல. நாம் தேவனிடம் எதுவும் கொடுத்து வைக்கவில்லை. நாம் கேட்கிற காரியம் நமக்குக் கிடைக்கிறது வரையிலும் அவரைத் தொந்தரவு செய்கிறவிதமாக திரும்பத் திரும்ப இரவும், பகலும் அவரை நோக்கி நாம் கூப்பிடுகிறவர்களாக இருந்தால் நாம் கேட்கிற காரியம் அவரால் கிடைக்கும்.

## 9.7. கர்த்தரிடம் போராடி ஜெபம்பண்ணுவது:

*யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப் படும்படிக்கும், நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குச் செய்யப்போகிற தர்மசகாயம் அவர்களால் அங்கிகரிக்கப் படும்படிக்கும், நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவி யானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். (ரோமர் 15 : 31, 32).*

பவுல் அப்போஸ்தலரின் ஊழியமானது கொடூரமான ஜனங்கள் மத்தியில் தேவனை சுவிசேஷமாய் அறிவிக்கக் கூடியதான ஊழியம். தான் செய்து கொண்டிருக்கிற ஊழியத்தில் தேவனை விசுவாசியாததான அவிசுவாசிகளான ஜனங்களுக்குத் தான் தப்புவிக்கப்படும்படிக்கும், தான் செய்கிற தர்மசகாயமாகிய காரியம் நிறைவேற்றப்படும்படிக்கும் அவரும் ஜெபத்திலே போராடினார்; மற்றவர்களும் தனக்காக ஜெபம்பண்ணும்படி கேட்டுக்கொண்டார். இந்தப் போராட்டமான ஜெபத்தைக் கர்த்தர் கேட்டு அவருடைய காரியங்களை வாய்க்கப்பண்ணினார்.

## 9.8. பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணுவது:

*அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (ரோமர் 8 : 26, 27).*

நாம் நம்முடைய எல்லாத் தேவைகளையும் அறிந்து நமக்காக ஜெபம்பண்ணுவதற்கேற்ற அறிவற்றவர்களாக இருக்கிறோம். ஆகவே நமக்கு பரிசுத்தஆவியானவருடைய உதவி தேவையாகக் காணப்படுகிறது. அவர் ஜெபம்பண்ணும்போது தம்முடைய சுய சித்தத்தின்படி ஜெபம்பண்ணமாட்டார். நாம் ஜெபம்பண்ணும்போது முதலாவது நம்மைத் தாழ்த்தி வெறுமையாக்க வேண்டும். அதன்பின், அதுவரையிலும் நம் ஜீவியத்தில் வந்துபோன குற்றங்குறைகளை கர்த்தரிடம் அறிக்கைபண்ணி அவைகளிலிருந்து விடுதலைபெற வேண்டும். அதன் பிறகு பரிசுத்த ஆவியானவருடைய கிரியைக்கு இடங்கொடுத்து ஜெபம்பண்ணும்போது ஆவியின் நிறைவுண்டாகும். தேவ ஆவியானவர் பேசுவார். இவைகளெல்லாம் நம் ஜெபம் கேட்கப்பட நாம் செய்ய வேண்டியதான காரியங்கள் ஆகும்.

## 9.9. நாம் ஏன் முழங்காலில் நின்று ஜெபம்பண்ண வேண்டும்?

*பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை. முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக்கொண்டே ஆணையிட்டிருக்கிறேன்; இந்த நீதியான வார்த்தை என் வாயிலிருந்து புறப்பட்டது; இது மாறுவது இல்லையென்கிறார். (ஏசாயா 45 : 22, 23).*

நம்முடைய தேவன் சர்வ வல்லமையும், சர்வ அதிகாரமுமுடையவர். அவர் தீவுகளை அணுபோல் தூக்குகிறவர். அப்படியானால், தனிப்பட்ட

ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக என்ன உண்டு? முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்க வேண்டும் என்பதாக அவரைக்கொண்டே ஆணையிட்டுச் சொல்லியிருக்கிறார். இது நீதியான வார்த்தை, இது நம்மால் முடியும். ஒரு வயதான பிரசங்கியார் இரவு நேரத்தில் முழங்காலில் நின்று ஜெபம்பண்ணிக்கொண்டிருப்பார். அப்படி ஜெபம் பண்ணுகிற வேளைகளில் முழங்கலிலிருந்து கொண்டே சிறிது நேரம் தூங்குவது தான் அவரது தூக்கம். ஒரு வயதான ஆளுக்கு இப்படிப்பட்ட கிருபையைக் கொடுக்கிற தேவன் நமக்கும் தருவார். நாம் நீதியான வார்த்தையாகிய தேவனுடைய வார்த்தையை மதிக்காமல், நம் சரீரத்தை மதிக்கிறவர்களாக இருக்கும்போது நம்மால் முழங்காலில் நின்று ஜெபம்பண்ண முடிகிறதில்லை.

> *அவர்களை விட்டுக் கல்லெறி தூரம் அப்புறம்போய், முழங்கால்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். (லூக்கா 22 : 41, 42).*

இயேசுகிறிஸ்துவும் முழங்காலில் நின்றிருக்கிறார். அவர் தேவனாயிருக்கிறபடியால், அவர் முழங்காலில் நிற்கத் தேவையில்லை. ஆகிலும், அவர் மனுஷகுமாரனாய் இந்த உலகத்தில் வந்ததினால் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாய் அறிவிக்கப்பட்ட வார்த்தை என்னிலும் நிறைவேறவேண்டும். என்னிமித்தம் அந்த வார்த்தைக்கு மாற்றம் ஏற்படக் கூடாது என்பதாக அவரும் முழங்காலில் நின்று ஜெபம்பண்ணினார்.

> *தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல்அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்த படியே, தினம் மூன்றுவேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான். (தானியேல் 6 : 10).*

தானியேலைக் குறித்து நீ மிகவும் பிரியமானவனென்று தேவதூதன் ஒருமுறை சொன்னான். இந்த பெயர் சும்மா வருவதில்லை. அவர் தினமும் 3 வேளையும் முழங்காலில் நின்று ஜெபம்பண்ணுகிறவராக இருந்தார். அவர் இப்படி ஜெபம்பண்ணினதினால் தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாக முடிந்தது.

*இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்காற்படியிட்டு, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். (எபேசியர் 3 : 14, 15, 19).*

பவுல் அப்போஸ்தலர் விசுவாசிகளுக்காகவும் அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலப்படவும், முழங்காலில் நின்று ஜெபம்பண்ணினார்.

*அந்த நாட்கள் நிறைவேறினபின்பு, நாங்கள் புறப்பட்டுப்போகையில், அவர்களெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூடப் பட்டணத்துக்குப் புறம்பே எங்களை வழிவிட்டனுப்பும்படி வந்தார்கள். அப்பொழுது கடற்கரையிலே நாங்கள் முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினோம். (அப்போஸ்தலர் 21 : 5).*

பவுல் அப்போஸ்தலர் கடற்கரையிலும் வெட்கப்படாமல் முழங்காலில் நின்று ஜெபம்பண்ணினார்.

### 9.10. அதிகாலை ஜெபம்:

*என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். ஐசுவரியமும், கனமும், நிலையான*

*பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு; என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப் பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாயபாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன். (நீதிமொழிகள் 8 : 17, 18, 20, 21).*

அதிகாலை என்றால் 3 மணி முதல் 5 மணி வரை உள்ள நேரம். அதிகாலை நேரம் 3 மணி ஆகும் போது எழும்பி, தூக்கத்தை வெறுத்து, எந்த மனுஷன் அல்லது மனுஷி ஜெபம்பண்ணுவார்களோ அவர்கள் தான் தேவனை சிநேகிக்கிறேன் என்று சொல்ல இடமுண்டு. எத்தனை பேர் அதிகாலை வேளையில் எழும்பி ஜெபம்பண்ணி, நான் தேவனை சிநேகிக்கிறேன் என்று சொல்லமுடியும். நமக்கு தேவனுக்கென்று பக்தி வைராக்கியமாக இருக்கக்கூடிய நிலைமை இல்லை. நமக்காக இரத்தஞ்சிந்தி பாடுபட்டு, தம்முடைய ஜீவனையும் கொடுத்து, அவரது இரத்தப்புண்ணியத்தினால் நம்மை ஒரு புதுமனுஷனாக மாற்றின என் தேவனை சிநேகிப்பேன் என்ற வைராக்கியத்தோடு நாம் காணப்படும்போது தேவன் நம்மேல் பிரியப்படுவார். ஒரு மனுஷனுக்கு என்னென்ன தேவையோ அவை எல்லாம் தேவனிடத்தில் உண்டு. அவனுடைய தேவைக்கும் அதிகமான ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறவர். அந்த மனுஷன் பேதையாக இருந்தாலும் பரிசுத்த ஆவியானவர் அவனோடு கூட இருந்து அவனுக்குத் தேவையான ஞானம், புத்தி எல்லாவற்றையும் கட்டளையிட்டு, நீதியின் பாதையில் அவனை விசேஷமாக வழிநடத்துகிறவராக இருக்கிறார். அதிகாலை ஜெபத்தினால் இப்படிப்பட்ட மேன்மையான பாக்கியங்கள் உண்டாகிறது.

*அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம் பண்ணினார். (மாற்கு 1: 35).*

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்மெல்லாருக்கும் மாதிரியாக அதிகாலையில் இருட்டோடே எழுந்து ஜெபம்பண்ணினார்.

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய*

*அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். (I பேதுரு 2 : 21).*

அவர் தேவன், ஆகவே, அவர் முழங்காற்படியிடத் தேவையில்லை. அதிகாலையில் எழும்பத் தேவையில்லை. அவர் தேவன், ஆகையால் அவருடைய ஜெபம் கேட்கப்பட நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது போன்ற நிபந்தனைகள் அவருக்குத் தேவையில்லை. நாம் அவருடைய மாதிரியைக் கடைபிடித்து அதன்படி ஜீவிக்கும்படியாக நமக்கு மாதிரியாகவே இவைகளைச் செய்தார். மேற்குறிப்பிட்ட வசனங்களின்படி நாம் நம்முடைய ஜீவியத்தை மாற்றிக்கொள்வோமானால் நம்முடைய வாழ்க்கை மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும். தானியேலைப் போல நீ மிகவும் பிரியமானவன் என்று அழைக்கப்பட ஏற்றவர்களாக இருக்கலாம். நாம் கர்த்தரிடத்தில் கேட்கும் காரியங்கள் வாய்க்கும். நம்முடைய சகல காரியங்களும் ஜெயமாக இருக்கும்.

## 10. பூரணமான நற்சாட்சியின் ஜீவியம்:

இராப்போஜனத்தில் பங்குபெற நற்சாட்சியின் ஜீவியம் மிகவும் தேவையாயிருக்கிறது. ஏன் நாம் நற்சாட்சி உள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும்? கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய இரத்த புண்ணியத்தினால் விடுவிக்கப்பட்டதினால் அவருக்குச் சாட்சிகளாய் நாம் ஜீவனம்பண்ண நம் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது. நாம் அவருக்குச் சாட்சிகளாய் ஜீவிக்க வேண்டுமானால், நம்மைக் குறித்து மற்றவர்கள் நற்சாட்சி சொல்ல வேண்டும். துன்மார்க்கமாய் ஜீவிக்கிற ஒரு மனுஷன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி சொன்னால் அந்தச் சாட்சியை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகவே, நாம் நற்சாட்சியுடையவர்களாய் இந்த உலகத்தில் ஜீவிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. நம்மைக் குறித்து மற்றவர்கள் நற்சாட்சி சொல்ல இடமில்லாவிட்டால் நாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுவதில் அர்த்தமில்லை. நாம் எவ்விதத்திலும் தேவனுக்கு சாட்சிகளாக இந்த உலகத்தில் ஜீவிக்க முடியாது.

### 10.1. இயேசுகிறிஸ்துவைக் குறித்த நற்சாட்சி:

> *அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத்தேயு 3 : 17).*

> *எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள். (லூக்கா 4 : 22).*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த முப்பத்து மூன்றரை வருஷ காலத்தில் நற்சாட்சியுள்ளவராக வாழ்ந்தார்.

- தேவனே அவரைக் குறித்து நற்சாட்சி கொடுத்தார்.

இயேசுகிறிஸ்துவுக்கு பரமபிதா கொடுத்த சாட்சியின்படி நாமும் இந்த உலகத்தில் ஜீவிக்க வேண்டும். நம்முடைய கிரியைகள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் நமக்கு வைத்துச் சென்றதான மாதிரியின்படி இருக்குமேயானால் தேவன் நம்மைக் குறித்தும் சாட்சி சொல்லுவார். அதற்கு எந்தச் சந்தேகமும் இல்லை. தேவன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து, நான் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லக் காரணமென்னவென்றால், இந்த உலகத்தில் அவர் தன் சுயசித்தம் செய்யாமல், தன்னை அனுப்பினவருடைய சித்தத்தைச் செய்து நிறைவேற்றினார்.

> *என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன். (யோவான் 6 : 38).*

அவர் தன்னை அனுப்பின பரமபிதாவின் சித்தத்தைச் செய்து நிறைவேற்றுவதற்காகவே வானத்திலிருந்து இறங்கி வந்தார். நமக்கு நற்சாட்சி தேவனிடத்திலிருந்து கிடைக்கவேண்டுமானால் சுயநலமற்றவர்களாக நாம் காணப்பட வேண்டும். நம்முடைய மனசும், மாம்சமும் விரும்பினபடி நடக்கிறவைகளை விடவேண்டும். நான் இந்த நாளில் தேவசித்தம் செய்தேனா? அல்லது என்னுடைய சுயசித்தம் செய்தேனா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடுத்தவர்கள்

நம்மைப் பார்த்து தவறாகச் சொல்லும்போது அதை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாதவர்களாகக் காணப்படுகிறோம். நான் என்னைப் பாவமறக் கழுவி, சுத்திகரித்த தேவனுடைய சித்தம் செய்கிறேனா அல்லது என் சுயசித்தத்தைச் செய்துகொண்டு தேவசித்தம் செய்கிறதாக நினைத்துக்கொண்டிருக்கிறேனா என்று நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும்.

♦ எல்லாரும் இயேசுகிறிஸ்துவைக் குறித்து நற்சாட்சி கொடுத்தார்கள்.

ஒரு மனுஷன் எப்படி எல்லாருடைய நற்சாட்சியையும் பெற முடியும் என்பதாக நாம் சொல்லுவோம். இயேசுகிறிஸ்துவைக் குறித்து தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்திலுள்ள ஜனங்கள் எல்லாரும் நற்சாட்சி கொடுத்தார்கள். ஏனென்றால், அவருடைய ஜீவியம் நற்சாட்சிக்கு ஏற்றதாகவே காணப்பட்டது. நம்மோடு அதிகமாக இடைபடுகிறவர்கள், நம்மைக் குறித்து நற்சாட்சி கொடுக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். நம்முடைய ஜீவியம் நற்சாட்சிக்கு ஏற்றதாகக் காணப்படாததால் நம்மோடு நெருங்கி இடைபடுகிறவர்கள் நம்மைக் குறித்து துர்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவே காணப்படுகிறார்கள்.

*நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். (யோவான் 10 : 15).*

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது, நாசரேத் ஊராரால் நற்சாட்சி பெற்றார். இந்நாள் வரைக்கும் மனுஷர்களால் தேவனுக்கு நற்சாட்சி கொடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஏனென்றால் அவர் தமக்காக வாழாமல், கெட்டுப்போன மனுஷர்களாகிய நமக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்ததினாலே ஆகும். மனுஷர்களானாலும் தனக்கென்று வாழாமல் பிறருக்காக யார் வாழ்கிறார்களோ அவர்களுக்கே பூரணமான நற்சாட்சி கிடைக்கும். கிறிஸ்தவர்களாகிய நமக்கு, பிறருக்காக வாழ்கிறதான வாழ்க்கைத் தேவையாகக் காணப்படுகிறது.

### 10.2. யோபுவைக் குறித்த நற்சாட்சி:

*கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போலப் பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.*

*(யோபு 1 : 8).*

கர்த்தர் யோபுவைக் குறித்து என் தாசன் என்று உரிமை பாராட்டுகிறார். அவன் உத்தமன் அதாவது குற்றமற்றவன்; கள்ளம் கபடற்றவன்; உண்மையுள்ளவன். சன்மார்க்கன் அதாவது நீதியான கிரியைகளைச் செய்யக்கூடியவன். தேவனுக்குப் பயந்து, அதாவது தேவன் ஒருவர் உண்டு என்பதை யதார்த்தமாக விசுவாசித்து வாழ்ந்த மனுஷன்; தேவன் என் பக்கத்திலும் என்னைச் சுற்றிலும் இருக்கிறார் என்று அறிந்து யதார்த்தமான தேவபயத்தோடு வாழ்ந்த மனுஷன். அப்படியிருந்ததினால் பாவமானாலும், தீமையானாலும், தேவனுக்குப் பிரியமில்லாதவை எவைகளோ அவைகளை விட்டு விலகி ஜீவித்த மனுஷன். நான் தவறாக ஏதாவது பேசினாலும் தேவனுடைய பார்வையில் அது பொல்லாப்பானதாக இருக்குமென்றறிந்து அதிக ஜாக்கிரதையோடு காணப்பட்ட மனுஷன். கர்த்தர் யோபுவின் சகல காரியங்களையும் கவனித்ததினால் நான்கு விதத்தில் அவரைக் குறித்து நற்சாட்சி கொடுத்தார். அநேகர் நானும் தேவனுக்குப் பயப்படுகிறேன் என்று சொல்லுகிறார்கள்; ஆனால் பாவம் செய்யக்கூடிய இடம் வரும்போது, அதற்கு அடிமையாகிவிட்டு, பிறகு ஐயோ! என்று சொல்லுகிறவர்கள், உண்மையாக தேவனுக்கு பயப்படுகிறவர்கள் அல்ல. தேவனுக்குப் பயப்படுகிறவர்கள் பொல்லாப்பான காரியங்களுக்கு விலகி, பாவிகளான மனுஷர்களிடத்தில் அதிகத் தொடர்பு வைத்தால் என்னுடைய ஜீவியம் நஷ்டமடைந்து விடும் என்று மற்றவர்களிடம் இடைபடுகிற காரியங்களில் அதிக ஜாக்கிரதையோடும் கருத்தோடும் காணப்படுவார்கள். நாமும் இவ்விதமான அனுபவத்தோடு ஜீவிப்போமானால் தேவனால் நற்சாட்சி பெற்ற அனுபவத்தோடு காணப்படலாம். நற்சாட்சியின் அனுபவம் தான் இந்த உலகத்தில் இப்பொழுது இல்லை. நாம் நம்முடைய ஜீவியத்தைத் திரும்பிப்

பார்க்காதவர்களாக நம்மை நாமே தேற்றிக்கொண்டிருப்பதினால் தான் இந்த உலகத்தில் நற்சாட்சி அற்ற அநுபவத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

### 10.3. ரூத்தைக் குறித்த நற்சாட்சி:

> *இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டியபடி யெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள். (ரூத் 3 : 11).*

ரூத் அந்நிய ஸ்திரீயாக இருந்தும் அவள் குணசாலி என்று போவாஸ் என்ற மனுஷன் கேள்விப்படவேண்டுமானால் அவள் தங்கியிருந்த இடத்தில் அந்த ஊராரால் அவள் எவ்வளவாய் குணசாலி என்று பேசப்பட்டிருப்பாள்.

> *அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்.*
>
> *(ரூத் 1 : 16, 17).*

எதினால் அவளைக் குணசாலி என்று சொல்லுகிறார்கள்? அவள் தன்னுடைய தெய்வத்தையும், இனத்தையும், சொந்த பெந்தங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, வயதான தன்னுடைய மாமியாருக்காக தன்னுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்ததினாலே தான். ரூத்தின் மாமியாகிய நகோமி வயதானவள் ஆனதால், திடீரென்று அவள் மரணமடைந்துவிட்டால் ரூத்திற்கு அநுகூலமாக யாருமில்லை. ஆனால் ரூத் அதைக்குறித்து சற்றும் கவலைப்படவில்லை. தனக்குத் தெரியாத ஓரிடத்திற்கு நகோமியோடு கூடப் போனாள். குணசாலி என்ற பெயரில் எவ்வளவு நற்கிரியைகள் இருக்கிறது. நாமும் குணசாலி என்ற பெயரைப் பெறவேண்டுமானால் எவ்வளவு குணம் நமக்கு வேண்டுமென்பதை

புரிந்துகொள்ள வேண்டும். நாம் சுயநலவாதிகளாகக் காணப்படுவதால் குணமற்றவர்களாக இருக்கிறோம். நம்மைப் பார்த்து ஏன் குணசாலி என்று சொல்ல இயலவில்லை. முதலாவது, தியாக ஜீவியம் இல்லை; சுயநலத்தை விட்ட அநுபவம் இல்லை. நமக்காகவே வாழ்கிறோம், அதினாலே குணமற்றவர்களாக ஜீவிக்கிறோம்.

## 10.4. தீமோத்தேயுவைக் குறித்த நற்சாட்சி:

*அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான்.*
*(அப்போஸ்தலர் 16 : 2).*

தீமோத்தேயு ஒரு ஊழியக்காரன். அவன் வாழ்ந்ததான ஊரிலுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாக இருந்தான்.

*கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். (II தீமோத்தேயு 3 : 15).*

தீமோத்தேயு நற்சாட்சி பெறக் காரணமென்னவென்றால், சிறுவயதிலேயே பரிசுத்த வேதஎழுத்துக்களைக் கற்று அறிந்தது மாத்திரமல்ல; அவைகளின்படியே தன் ஜீவியத்தை மாற்றியமைத்துக் கொண்டவன் தான் இந்த தீமோத்தேயு, நாம் நற்சாட்சி பெற நமக்கு அஸ்திபாரமாகக் காணப்படுவது வேதஎழுத்துக்கள். நமக்கும் நற்சாட்சி உண்டாக வேண்டுமானால், வேதத்தைப் படித்து, அவைகளைத் தன் இருதயத்திலே பதித்து, அவைகளின்படியே, தன் வாழ்க்கையை மாற்றியமைத்து ஜீவிக்க வேண்டும். அப்படி இருந்தால் சகோதரரால் மட்டுமல்ல மற்றும் ஜனங்களாலும் நற்சாட்சி பெற்றவர்களாகவும் காணப்படமுடியும்.

*இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிறபிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்.*
*(I கொரிந்தியர் 4 : 17).*

தீமோத்தேயு சகோதரரால் மட்டுமல்ல பிரதான அப்போஸ்தலராகிய பவுல் அப்போஸ்தலராலும் நற்சாட்சி பெற்றவனாகவும் இருந்தான். பவுல் அப்போஸ்தலருக்கு தேவன் அநேக காரியங்களை வெளிப்படுத்தி இருந்தாலும், அநேக காரியங்களினால் அவர் வேதனைப் படுகிறவராகவும், கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அநுபவிக்கிறவராகவும் இருந்தார். அதில் ஒன்று கள்ளச்சகோதரரால் அநுபவித்த கஷ்டம் ஆகும். ஆனால், இந்தத் தீமோத்தேயுவினால் அவர் ஆறுதலடைந்தார். அப்படியானால், கர்த்தருடைய பிரதானமான ஊழியக்காரரிடத்தில் ஐக்கியமாகவும் அவருக்கு உதவியாகவும் காணப்படும்போதும் நற்சாட்சி உண்டாகிறது. தீமோத்தேயு கர்த்தருக்குள் உண்மையுள்ளவனாகக் காணப்பட்டான். அதாவது கர்த்தருக்குப் பயந்து, அவருடைய வார்த்தையைத் தன் இருதயத்தில் வைத்து, அதன்படியே தன் ஜீவியத்தை மாற்றியமைத்த மனுஷன். மேலும் பவுல் அப்போஸ்தலரோடு நெருங்கிய தொடர்புடையவனாகவும் அவருக்கு ஆறுதல் கொடுக்கக்கூடியவனாகவும் காணப்பட்டான். அதினால் தான் இப்படிப்பட்ட நற்சாட்சி உண்டானது. நாம் நம்முடைய சொந்தக் காரியங்களுக்கு மட்டும் பிரதானமான ஊழியக்காரரிடத்தில் தொடர்புடையவர்களாகவும், மற்றபடி அவரிடத்தில் எந்தத் தொடர்பற்றவர்களாகவும் காணப்படுகிறோமா என்பதைக் கவனிக்க வேண்டும். ஏனென்றால் எல்லாருடைய எல்லாவிதமான ஒத்துழைப்பும் பிரதானமான ஊழியக்காரருக்குத் தேவையாய்க் காணப்படுகிறது. நாம் அப்படி காணப்படுவோமானால் நற்சாட்சி உடையவர்களாகக் காணப்படலாம்.

## 10.5. தேமேத்திரியுவைக் குறித்த நற்சாட்சி:

*தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சிபெற்றவன்; நாங்களும் சாட்சி கொடுக்கிறோம், எங்கள் சாட்சி மெய்யென்று அறிவீர்கள்.*

*(III யோவான் 12).*

தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல் சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன். அதாவது சத்திய வேத எழுத்துக்களின்படி தன்னுடைய வாழ்க்கையை சீரமைத்துக் கொண்டவன். ஒரு மனுஷனுக்கு நற்சாட்சி உண்டாகவேண்டுமானால்

அவன் முதலாவது வேத எழுத்துக்களை, இவைகள் தேவனுடைய வார்த்தைகளென்று விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசம் நமக்குள் இருக்குமானால் அவைகள் நம்முடைய இருயத்தில் எழுதப்பட்டிருக்கும்; இருதயத்திலே எழுதப்பட்டிருக்குமேயானால் அவைகள் நம்முடைய செயலிலும் வெளிப்படும். அதாவது நம்முடைய பேச்சிலும், பார்வையிலும், நடக்கையிலும் வெளிப்படும். தேமேத்திரியுவைக் குறித்து யோவான் அப்போஸ்தலரும், அவருக்கு உதவியாகக் காணப்பட்டவர்களும், நற்சாட்சி கொடுக்க ஏற்ற அநுபவத்தோடு காணப்பட்டான். நாமும் இந்த உலகத்தில் எல்லாராலும் நற்சாட்சி பெற்றவர்களாக ஜீவிக்கமுடியும் என்பதற்காக யோவான் அப்போஸ்தலர் இதை உறுதிப்படுத்தியும் சொல்லியிருக்கிறார்.

## 10.6. எப்பாப்பிராவைக் குறித்த நற்சாட்சி:

> *எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறானென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன். (கொலோசெயர் 4 : 12, 13).*

எப்பாப்பிரா நற்சாட்சி பெறக் காரணமென்னவென்றால், கிறிஸ்தவர்களுக்கு நெருக்கங்கள் நிறைந்த அக்காலத்தில், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஜனங்கள், அவர்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் அநுபவத்தில் நிலைநிற்பதற்காகவும், தேறினவர்களாகக் காணப்படவும், மற்றவர்களுக்குச் சாட்சிகளாகக் காணப்படவும் அவர்களுக்காக போராடி ஜெபம்பண்ணக்கூடிய ஜெப வீரனாகக் காணப்பட்டான். பவுல் அப்போஸ்தலர் அதைக் குறித்துத் தெளிவாக அறிந்தபடியினால், அதைத் தன் நிருபத்திலும் எழுதி வைத்திருக்கிறார். அந்த மனுஷன் மரித்து எத்தனையோ ஆண்டுகள் ஆன பின்பும், இன்றைக்கும் அது சாட்சி கொடுத்துக்கொண்டே இருக்கிறது. ஜனங்களுக்காகவும், தேவ ஊழியக்காரர்களுக்காகவும் போராடி ஜெபம்பண்ணுகிற அநுபவம்

நமக்குத் தேவையானதாகக் காணப்படுகிறது. அதைத் தேவன் எதிர்பார்க்கிறவராக இருக்கிறார். அப்படி நாம் காணப்படுவோமானால் தேவன் நமக்கு நற்சாட்சி கொடுக்கிறவராக இருக்கிறார்.

### 10.7. கொர்நேலியுவைக் குறித்த நற்சாட்சி:

*அதற்கு அவர்கள்: நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூதஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார் என்றார்கள்.*

*அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான். (அப்போஸ்தலர் 10 : 22, 2).*

கொர்நேலியு ஓர் புறஜாதியான். அவனைக் குறித்து பேதுரு அப்போஸ்தலரிடம் கொர்நேலியுவினால் அனுப்பப்பட்ட மனுஷர்கள் நற்சாட்சி சொன்னார்கள். பொதுவாக போலீஸ் வேலை, இராணுவ வேலையிலுள்ள மனுஷர்கள் கடுமையானவர்களாக இருப்பார்கள். கொர்நேலியு நூறுபேருக்கு அதிபதியான மனுஷனாக இருந்தாலும் கூட, அந்த நூறு பேருக்கும், தன் குடும்பத்தாருக்கும் அந்த மனுஷனை அறிந்த மற்ற மனுஷருக்கும் நீதி செய்கிறவனாகவும் இருந்தான். எந்த மனுஷனுக்கும் சும்மா நீதிமான் என்ற பெயர் வராது. கொர்நேலியு தேவனுடைய பார்வையில் நீதியும் நியாயமுமான காரியங்களையே செய்கிறவனாகவும் இருந்தான். யூதர்கள் புறஜாதியாரை மதிக்கவே மாட்டார்கள். ஆனால் கொர்நேலியுவைக் குறித்து யூதர்களெல்லாரும் நற்சாட்சி கொடுத்தார்கள். அவன் தேவபக்தி உள்ளவனாகவும் இருந்தான். இப்படிப்பட்ட உத்தியோகத்தை உடைய ஒரு மனுஷன் இவ்வளவு தேவபக்தியாய் வாழ முடியுமா என்று யாரும் நம்பமாட்டார்கள். எந்தவொரு தொழிலும் ஒரு மனுஷனுக்கு தேவபக்தியாய் ஜீவிப்பதற்கு தடையாக இல்லை என்பதை இது நிரூபிக்கிறது. கொர்நேலியு தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப்

பயந்தவனாகவும் இருந்தான். உண்மையாகவே ஒரு மனுஷன் தேவபக்தியுள்ள மனுஷனாக இருந்தால், அவன் முதலாவது தன் வீட்டாரை இரட்சிக்கப் பிரயாசப்பட வேண்டும். இப்பொழுது விசுவாசிகளாகிய நமக்கு நம்முடைய பிள்ளைகளை வளர்க்க முடியவில்லை. காரணம் என்னவென்றால், பிள்ளைகளின் பெற்றோர் நற்சாட்சி பெற்றவர்களாக இல்லை. பெற்றோர் நற்சாட்சி உள்ளவர்களாக இருந்தால் அந்தப் பிள்ளை ஒருவேளை தவறான வழியில் நடந்தால் கூட பெற்றோரின் நல்நடக்கையைப் பார்த்து, தவறான வழியை விட்டுத் திருந்தும். அந்த பிள்ளைகளுக்காக இவர்கள் கண்ணீர் விட்டு ஜெபம்பண்ணும்போது நிச்சயமாகவே தேவன் அவர்களைத் திருத்துவார். அதில் மாற்றமே இல்லை. கொர்நேலியு தானதர்மங்களைச் செய்கிறவனாகவும் இருந்தான். நம்மில் அநேகருக்கு மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மனநிலைமையே இல்லை. கொர்நேலியு எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுகிறவனாகவும் இருந்தான். அதனால் தான் தேவனே தம்முடைய தூதனை அனுப்பி: கொர்நேலியுவே, உன் ஜெபங்களும், உன் தானதர்மங்களும் தேவனுடைய சந்நிதியில் வந்து எட்டினது என்பதாகச் சொன்னார். நம்முடைய ஜெபம் ஏன் கேட்கப்படவில்லை? தேவனிடத்திலிருந்து இப்படிப்பட்டதான நற்சாட்சி ஏன் கிடைக்கவில்லை? நாம் கடமைக்காகவும், நம்முடைய காரியங்களுக்காகவும் ஜெபம்பண்ணிவிட்டு, அதில் திருப்தி அடைந்து விடுகிறோம். அப்படியானால் எந்தவித நற்சாட்சியும் நமக்குக் கிடைக்கிறதில்லை.

## 10.8. நற்சாட்சி உடையவர்களாகக் காணப்பட எப்படி ஜீவிக்க வேண்டும்?

- **விசுவாசமுடையவர்களாய் காணப்பட வேண்டும்:**

  *உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே, முதலாவது நான் உங்களெல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். (ரோமர் 1: 8).*

கிறிஸ்தவர்களுக்கு மிகவும் நெருக்கடியாக காணப்பட்ட காலக்கட்டத்தில் ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்கள் தேவனுக்கென்று வைராக்கியமுடையவர்களாகவும், விசுவாசத்தைக் காத்துக்கொள்ளக்

கூடியவர்களாகவும், சாட்சிகளாகவும் ஜீவித்ததினால் அவர்களுடைய விசுவாசத்தைக் குறித்து ரோமாபுரியிலுள்ள மற்றும் ஜனங்கள் மத்தியிலும் உலகமெங்கும் பரம்பியது. நாம் விசுவாசத்தில் ஊன்றக் கட்டப்பட்டவர்களாகவும் என்ன வந்தாலும் விசுவாசத்திற்கு துரோகம் செய்யாமலும் காணப்படும்போது நற்சாட்சி உண்டாகிறது.

*அவன் வந்துநின்று, இஸ்ரவேல் சேனைகளைப் பார்த்துச் சத்தமிட்டு, நீங்கள் யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறது என்ன? நான் பெலிஸ்தன் அல்லவா? நீங்கள் சவுலின் சேவகர் அல்லவா? உங்களில் ஒருவனைத் தெரிந்துகொள்ளுங்கள்; அவன் என்னிடத்தில் வரட்டும். அவன் என்னோடே யுத்தம்பண்ணவும் என்னைக் கொல்லவும் சமர்த்தனானால், நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராயிருப்போம்; நான் அவனை ஜெயித்து அவனைக் கொல்வேனானால், நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து, எங்களைச் சேவிக்கவேண்டும் என்று சொல்லி, பின்னும் அந்தப் பெலிஸ்தன்: நான் இன்றையதினம் இஸ்ரவேலுடைய சேனைகளை நிந்தித்தேன்; நாம் ஒருவரோடு ஒருவர் யுத்தம்பண்ண ஒருவனை விடுங்கள் என்று சொல்லிக்கொண்டுவருவான். சவுலும் இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ்தனுடைய வார்த்தைகளைக் கேட்டு, கலங்கி மிகவும் பயப்பட்டார்கள். (I சாமுவேல் 17 : 8 - 11).*

*அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம்பண்ண உன்னால் ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறு வயதுமுதல் யுத்தவீரன் என்றான். தாவீது சவுலைப்பார்த்து: உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒரு சிங்கமும் ஒரு விசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன். அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய*

*அடியானாகிய நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான். பின்னும் தாவீது: என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்; அப்பொழுது சவுல் தாவீதைப் பார்த்து: போ, கர்த்தர் உன்னுடனேகூட இருப்பாராக என்றான்.*

*(I சாமுவேல் 17 : 33 - 37).*

இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக பெலிஸ்தர் யுத்தம்பண்ண அணிவகுத்து நின்றபோது, கோலியாத் என்பவன் பெலிஸ்தியப் படையிலிருந்து வெளியே வந்துநின்று இஸ்ரவேலின் சேனைகளைப் பார்த்துச் சத்தமிட்டு, உங்களில் ஒருவனை என்னிடத்தில் அனுப்புங்கள். நாங்கள் இருவரும் யுத்தம்பண்ணி, எவன் தோற்கிறானோ அவனுடைய படை வீரர்களும் அவர்கள் ஜனங்களும் எங்களுக்கு வேலைக்காரராக இருக்கவேண்டும் என்று சொன்னான். கோலியாத்தைக் கண்டபோது, சவுலும் அவனுடைய யுத்த மனுஷர் எல்லாரும் அவனை எதிர்கொண்டு நிற்கத் திராணியில்லாததால் கலங்கினார்கள். அப்படியிருக்க, தாவீதின் தகப்பனார் அவனிடம் அப்பங்களையும் பயிறையும் கொடுத்து யுத்தத்திலிருக்கிற உன் மூன்று சகோதரர்களையும் விசாரித்துக் கொண்டுவா என்று அனுப்பினான். அப்பொழுது கோலியாத் இறுமாப்பாய்ச் சொன்ன வார்த்தைகள் தாவீதின் காதுகளில் விழுந்தது. அதை அறிந்ததும் தாவீதுக்கு இவன் சவுலின் சேனைகளை நிந்திக்கவில்லை. இவன் இஸ்ரவேலின் சேனைகளை நிந்திக்கிறான்; இஸ்ரவேலின் தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறான் என்ற வைராக்கியம் உண்டானது. ஆகவே அவன் சவுலிடம் போய், நான் இந்தப் பெலிஸ்தனை ஜெயிக்கலாம் என்று சொன்னான். அப்பொழுது சவுல் தாவீதின் ரூபத்தைப் பார்த்து, நீ யுத்தத்திற்கு பழக்கமுடையவன் அல்ல. நீ போகவேண்டாம் என்று சொன்னான்.

மனுஷர்களாகிய நாம் விசுவாசமுடையவர்களாக இருந்தாலும், நமக்கு நேரே சோதனைகள் வரும்போது அந்தச் சூழ்நிலையில் விசுவாசத்தில் குன்றிப்போகிறவர்களாக மாறிவிடுகிறோம். ஆனால், நாம் அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்முடைய பரமதகப்பனாகிய

இயேசுகிறிஸ்து நம் அருகாமையிலிருந்து நம்மைக் காப்பாற்றினதான காரியங்களை நினைவுகூர வேண்டும்.

தாவீது விசுவாசத்தில் ஆரோக்கியசாலியாக மாறக் காரணம், தன் பழைய காரியங்களைத் திரும்பிப் பார்த்தான். அதாவது அவன் ஒருமுறை கரடியை ஜெயித்தது தன்னுடைய மாம்ச பெலத்தால் அல்ல; சிங்கத்தை ஜெயிக்க முடிந்ததும் தன்னுடைய மாம்ச பெலத்தினால் அல்ல; என் தேவனே என்னோடு கூட இருந்தார்; அதை அவன் ஞாபகப்படுத்தினான். நாமும் நமக்கு நேராக நெருக்கங்கள் சோதனைகள் வரும்போது, விசுவாசத்தை மறுதலிக்காமல் இருக்க, கடந்த காலங்களில் தேவன் நம்மோடுகூட இருந்து நம்மை வழிநடத்தினதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அன்று வழிநடத்தின தேவன் இன்னும் என்னை வழிநடத்துவார் என்ற விசுவாசத்தோடு தொடர்ந்து முன்னேற வேண்டியது அவசியமாயிருக்கிறது. தாவீதின் வைராக்கியம் என்னவென்றால், விருத்தசேதனமில்லாத இந்த மனுஷன் என் தேவனை, என் தேவனுடைய சேனைகளை எப்படி நிந்திக்க முடியும் என்பது தான். அடுத்ததாக, மனுஷனையே அடித்துக் கொலைச் செய்யக்கூடிய சிங்கத்துக்கும், கரடிக்கும் என்னைத் தப்புவித்த தேவன், மிருகத்தைப் போன்ற தோற்றத்தோடு காணப்படுகிற இந்த மனுஷனிடத்திலிருந்தும் என்னை விடுவிப்பார் என்ற விசுவாசம் அந்த மனுஷனை எதிர்த்துப்போகக் காரணமாக இருந்தது.

> *அதற்குத் தாவீது: பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்: நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டு மிருகங்களுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள்.*
>
> *(I சாமுவேல் 17 : 45, 46).*

தாவீது பெலிஸ்தனை நோக்கி, நீ உன்னிடத்திலிருக்கிற பட்டயத்தையும், ஈட்டியையும் நம்பி நிற்கிறாய். நான் வானத்தையும், பூமியையும் படைத்தவரும், இஸ்ரவேலின் இராணுவங்களுக்கு தலைவருமாயிருக்கிற சேனைகளின் கர்த்தருடைய நாமத்தில் வருகிறேன். அவரால் கூடாத காரியம் எதுவுமில்லை என்ற விசுவாசத்தோடு தாவீது காணப்பட்டான். அவன் விசுவாசத்தில் நன்கு தேறினவன். தாவீது தேவனுடைய நாமத்தின்மேல் அதிகமான விசுவாசம் வைத்திருந்தான். நாமும் விசுவாசத்தில் ஊன்றக் கட்டப்பட்ட அநுபவத்தோடு காணப்பட்டு தேவனுக்குச் சாட்சிகளாய் ஜீவிக்க விசுவாசம் மிகவும் தேவையாகக் காணப்படுகிறது.

- **கீழ்ப்படிதல் தேவை:**

*உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால் உங்களைக்குறித்துச் சந்தோஷப்படுகிறேன்; ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.*
*(ரோமர் 16 : 19).*

நாம் கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருந்தால் நற்சாட்சி பெற்றவர்களாய் ஜீவிக்க முடியும்.

*இந்த காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடியேன் என்றான். அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார். (ஆதியாகமம் 22 : 1, 2).*

ஆபிரகாமைக் குறித்து விசுவாசிகளின் தகப்பன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதைப்பார்க்கிலும் விசேஷமாக தேவன் ஆபிரகாமை குறித்துச் சாட்சியாக நான் ஆபிரகாமின் தேவன் என்று சொல்லியிருக்கிறார். ஏனென்றால், தேவன் தனக்குச் சொன்ன

காரியங்களில் வள்ளியோ, புள்ளியோ தவறாது அப்படியே செய்ததினால் தான்.

> *நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். (ஆதியாகமம் 22 : 18).*

கர்த்தர் ஆபிரகாமிடம் சொன்னதற்கு மாறாக ஆபிரகாம் எதையும் நினைக்கவில்லை. முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அப்படியே செய்யத் துணிந்தார். கத்தியை எடுத்து ஓங்கினார். கொல்லுவதற்கு முன் தேவன் தடுத்தார். அதுவரைக்கும் தேவன் சோதித்தார். ஆபிரகாமை தேவன் ஏன் அவ்வளவாய் சோதித்தார் என்று நாம் கேட்கத் தகுதியற்றவர்கள். ஆனால் நம்முடைய கடமை என்னவென்றால், அவர் என்ன சொன்னாலும், என்ன கட்டளையிட்டாலும் செய்யவேண்டும். அப்படியிருந்தால் மட்டும் தான் நாம் அவருடையவர்கள். நம்முடைய கீழ்ப்படிதல் எப்படி இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குக் கீழ்ப்படிகிறவர்களாக இருக்கிறார்கள். அது கீழ்ப்படிதல் அல்ல. அது தன்னுடைய சுய விருப்பத்தை நிறைவேற்றுவது ஆகும். ஆனால் நம்மை உருவாக்கி, நமக்குத் தேவையான யாவும் தந்து, நம்மைப் பாதுகாத்து வழிநடத்துகிற தேவனுக்கு முழு இருதயத்தோடும் கீழ்ப்படிகிற அநுபவம் தான் உண்மையான கீழ்ப்படிதல் ஆகும்.

- **தீமைக்கு தீமை செய்யக்கூடாது:**

நாம் தீமைக்குத் தீமை செய்யாதிருந்தால், பழிக்குப்பழி வாங்காதிருந்தால் நற்சாட்சி பெற்றவர்களாய் ஜீவிக்கலாம். தீமைக்குத் தீமை செய்வது மனுஷர்களுடைய குணம். அந்த குணம் கிறிஸ்தவர்களுக்கு, கிறிஸ்துவை உடையவர்களுக்கு, கிறிஸ்துவின் ஆவியுடையவர்களுக்கு இருக்கக்கூடாது.

> *பின்பு தன் சகோதரர் யாவரையும் முத்தஞ்செய்து, அவர்களையும் கட்டிக்கொண்டு அழுதான். அதற்குப்பின் அவன் சகோதரர் அவனோடே சம்பாஷித்தார்கள்.*
>
> *(ஆதியாகமம் 45 : 15).*

யோசேப்பின் சகோதரர்களில் பென்யமீனைத் தவிர மற்ற அனைவரும் கொலைகாரர்கள். பொறாமையினாலே எல்லாரும் சேர்ந்து அவனை விற்றார்கள். அடிமையாகக் கொண்டு போகப்பட்டான். துன்பங்களையும், சிறைவாசத்தையும் அனுபவித்தான். இவையெல்லாவற்றிலும் அவன் கசப்போ, வாசியோ, வைராக்கியமோ வைக்கவில்லை. இவையெல்லாவற்றிற்கும் ஒரு நாள் நான் அவர்களை பழி தீர்ப்பேன் என்று யோசேப்பு சொல்லவில்லை. கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றுக்கொள்ளாத பழைய ஏற்பாட்டின் காலத்திலுள்ள மனுஷனாகிய யோசேப்பு தன் சகோதரர்கள் செய்த தீமைக்குப் பதிலாக அவர்களை அன்பு செய்தான். அவர்களைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டான்.

> *அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்.*
>
> *எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி: கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார். (எண்ணாகமம் 12 : 13, 1, 2).*

மோசே சாந்தகுணமுள்ள மனுஷனாக இருந்தாலும், இஸ்ரவேல் ஜனங்களால் பல எதிர்ப்புகளை சந்திக்கக்கூடியவராக இருந்தார். அவர்கள், மோசே எதைச் செய்தாலும் முறுமுறுத்துக்கொண்டே இருந்தார்கள். அவர்களை நடத்துகிறதே கஷ்டமான காரியமாக காணப்பட்டது. அப்படியிருக்க, மோசேக்கு அநுகூலமாக இருக்கும்படியாக ஏற்படுத்தப்பட்ட ஆரோனும், மிரியாமும் கூட அவருக்கு விரோதமாய்ப் பேசினார்கள். கர்த்தரால் அதிகாரப்படுத்தப்பட்ட கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகப் பேசுவதை அவர்கள் கேட்காவிட்டாலும், அதை தேவன் கேட்கிறவராக இருக்கிறார். தேவ மனுஷனாகிய மோசேயைக் குறித்துப் பேசியதால் உடனே தண்டனையும் கிடைத்தது. மோசேயைக் குறித்து அவர்கள் முறுமுறுத்த காரியம் அவருக்குத் தெரிந்திருந்தும், மிரியாமுக்கு

குஷ்டரோகம் ஏற்பட்டதும் மோசே தன் இருதயம் இளகி கர்த்தரை நோக்கிக் கெஞ்சினார். இது தான் ஒரு ஊழியக்காரனுடைய அநுபவம். இது தான் நமக்கும் தேவையாகக் காணப்படுகிறது. நாம் தீமைக்குத் தீமைச் செய்யக் கூடாது. பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களாகிய நாம் பழைய ஏற்பாட்டின் காலத்திலுள்ளவர்களைப் பார்க்கிலும் அதிகமாக சாட்சியாக ஜீவிக்கும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் தீமைக்குத்தீமை செய்யாதவர்களாய் இருப்போமானால் நமக்கு நற்சாட்சி உண்டாகும்.

> *சவுல் பெலிஸ்தரைப் பின்தொடர்ந்து திரும்பிவந்தபோது, இதோ, தாவீது என்கேதியின் வனாந்தரத்தில் இருக்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது சவுல்: இஸ்ரவேல் அனைத்திலும் தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு, தாவீதையும் அவன் மனுஷரையும் வரையாடுகளுள்ள கன்மலைகளின்மேல் தேடப் போனான்.*
>
> *இதோ, கர்த்தர் இன்று கெபியில் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்தார் என்பதை இன்றையதினம் உம்முடைய கண்கள் கண்டதே, உம்மைக் கொன்றுபோடவேண்டும் என்று சிலர் சொன்னார்கள்; ஆனாலும் என் கை உம்மைத் தப்பவிட்டது; என் ஆண்டவன் மேல் என் கையைப் போடேன்; அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவராமே என்றேன். என் தகப்பனே பாரும்; என் கையிலிருக்கிற உம்முடைய சால்வையின் தொங்கலைப் பாரும்; உம்மைக் கொன்று போடாமல், உம்முடைய சால்வையின் தொங்கலை அறுத்துக்கொண்டேன்; என் கையிலே பொல்லாப்பும் துரோகமும் இல்லை என்றும், உமக்கு நான் குற்றம் செய்யவில்லை என்றும் அறிந்துகொள்ளும்; நீரோ என் பிராணனை வாங்க, அதை வேட்டையாடுகிறீர்.*
>
> *(I சாமுவேல் 24 : 1, 2, 10, 11).*

சவுல் தாவீதைக் கொலைசெய்ய தேடிக்கொண்டிருந்தபோது, சவுல் மாத்திரம் தனியாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வந்தது. அப்பொழுது, தாவீதுடன் இருந்தவர்கள் சவுலைக் கொலை செய்ய

சொன்னபின்பும், தாவீது நான் அவரைக் கொல்லமாட்டேன் அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றான். ஆனால் தாவீது, தான் சவுலைக் கொலை செய்யக்கூடிய எல்லா சூழ்நிலையும் இருந்தது என்பதை சவுல் அறிந்துகொள்வதற்காக, சவுலின் சால்வையின் தொங்கலை மெதுவாக அறுத்துவிட்டுச் சென்றான்.

> *தாவீது இந்த வார்த்தைகளைச் சவுலோடே சொல்லி முடித்தபின்பு, சவுல்: என் குமாரனாகிய தாவீதே, இது உன்னுடைய சத்தமல்லவா என்று சொல்லி, சத்தமிட்டு அழுது, தாவீதைப் பார்த்து: நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்கு தீமைசெய்தேன். நீ எனக்கு நன்மைசெய்ததை இன்று விளங்கப்பண்ணினாய்; கர்த்தர் என்னை உன் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், நீ என்னைக் கொன்றுபோடவில்லை. ஒருவன் தன் மாற்றானைக் கண்டுபிடித்தால், அவனைச் சுகமே போகவிடுவானோ? இன்று நீ எனக்குச் செய்த நன்மைக்காகக் கர்த்தர் உனக்கு நன்மை செய்வாராக. நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன். (I சாமுவேல் 24 : 16 - 20).*

நீதிமானென்ற நற்சாட்சி சும்மா வராது, சவுலைக் கர்த்தர் தாவீதின் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும் தாவீது: பழி வாங்குகிறது என்னுடையதல்ல அது தேவனுடையது என்று விட்டுவிட்டார். தேவனுடைய பழிவாங்குதல் வித்தியாசமானது. நாம் அதற்கு எத்தனம் பண்ணக்கூடாது; விட்டுவிட வேண்டும், சகிக்க வேண்டும், பொறுக்க வேண்டும். தேவன் ஒரு கணக்கு வைத்திருப்பார், அவர் செய்வார்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தபின்பும், அவர்களுக்காக பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்று வேண்டிக்கொண்டார். பேதுரு அப்போஸ்தலர் போர்ச்சேவகரில் ஒருவனைக் காதற வெட்டினபோது, அதை அப்படியே எடுத்து வைத்து சொஸ்தமாக்கினார். இயேசுகிறிஸ்துவுக்கு எப்பொழுது சமயம் கிடைத்தாலும் நன்மை செய்கிறவராக இருந்தார். கிறிஸ்தவர்களாகிய நாமும் எல்லா சூழ்நிலைகளிலும் நன்மை செய்கிறவர்களாகக் காணப்பட வேண்டும். அப்படி காணப்படுவோமானால் நமக்கு எதிரிகளானவர்கள்

வாயிலிருந்தே நமக்கு நற்சாட்சி உண்டாக இடமுண்டு. தாவீது சவுலுக்கு தீமைக்கு நன்மை செய்ததினாலே தாவீதைக் குறித்து நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான் என்று சவுல் சாட்சி கொடுத்தான். நாம் நற்சாட்சி உள்ளவர்களாய் காணப்படவேண்டுமானால் நன்மை செய்கிறவர்களாகவும் தானதர்மம்பண்ணுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். அது ஒரு பலி என்று வேதம் சொல்லுகிறது.

♦ **நன்மை செய்து, தானதர்மம் செய்ய வேண்டும்:**

*அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். (எபிரெயர் 13 : 16).*

*யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு, மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான்; அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.*

*(அப்போஸ்தலர் 9 : 36 - 40).*

இந்த உலகத்தில் இப்பொழுதுள்ள மனுஷர்கள், ஒரு மனுஷன் எப்பொழுது மரிப்பான்? அவனுடைய பொருட்களை அபகரித்துக் கொள்ளலாம் என்ற எண்ணமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆனால் தொற்காள் மரித்தபோது, அங்குள்ள சீஷர்கள் இவள் இன்னும் உயிரோடிருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு காணப்பட்டார்கள். ஏனென்றால், அவள் நன்மை செய்து தானதர்மங்களைப் பண்ணினபடியினால் இன்னும் உயிரோடிருந்தால் இன்னும் அநேகருக்கு நன்மைசெய்வாளே என்ற எண்ணம் தான். அவளுடைய பெயர் இப்பொழுதும் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவள் நற்சாட்சி பெற்றவளாகவும் காணப்படுகிறாள். காரணம் என்னவென்றால்: அவள் மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மனநிலையோடு காணப்பட்டாள். நம்முடைய சபையாரில் ஏதோ சிலரைத் தவிர மற்றவர்களுக்கு கொடுக்கக்கூடிய மனநிலை இல்லை. தானதர்மங்களை கொடுக்கவேண்டும் என்று பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் இறந்தாலும் நம்முடைய பேரைச் சொல்லத்தக்கவர்களாகக் காணப்படலாம். இது நற்சாட்சியின் அநுபவத்திற்கு மிகவும் அவசியமாகக் காணப்படுகிறது.

> *பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்ல வேண்டுமானால் காலம் போதாது. இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும்; வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்.*
>
> *(எபிரெயர் 11 : 32, 39).*

எபிரெயர் 11-ம் அதிகாரத்தில் அநேக சாட்சிகளைக் குறித்தும் அவர்கள் எப்படி நற்சாட்சி பெற்றார்கள் என்பதைக் குறித்தும் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதில் தீர்க்கதரிசிகளைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது.

> *கீரியாத்யாரீம் ஊரானாகிய செமாயாவின் குமாரன் உரியா என்னும் ஒரு மனுஷனும் கர்த்தருடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனாயிருந்தான்; அவன் எரேமியாவின் வார்த்தைகளுக்குச் சரியாக இந்த நகரத்துக்கும்*

*இந்தத் தேசத்துக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொன்னான். யோயாக்கீம் ராஜாவும் அவனுடைய சகல பராக்கிரமசாலிகளும் பிரபுக்களும் அவன் வார்த்தைகளைக் கேட்டபோது, ராஜா அவனைக் கொன்றுபோடும்படி எத்தனித்தான்; அதை உரியா கேட்டு, பயந்து, ஓடிப்போய், எகிப்திலே சேர்ந்தான். அப்பொழுது யோயாக்கீம் ராஜா அக்போரின் குமாரனாகிய எல்நாத்தானையும் அவனோடேகூட வேறே சிலரையும் எகிப்துவரைக்கும் அனுப்பினான். இவர்கள் உரியாவை எகிப்திலிருந்து கொண்டுவந்து, அவனை யோயாக்கீம் ராஜாவினிடத்தில் விட்டார்கள்; அவன் பட்டயத்தாலே அவனை வெட்டி, அவன் உடலை நீச ஜனங்களின் பிரேதக்குழி களிடத்திலே எறிந்துவிட்டான் என்றார்கள். ஆகிலும் எரேமியாவைக் கொல்ல ஜனங்களின் கையில் ஒப்புக்கொடாதபடி, சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காம் அவனுக்குச் சகாயமாயிருந்தான். (எரேமியா 26 : 20 -24)*

தீர்க்கதரிசிகளுக்கு, ராஜாக்களுக்கும் ஜனங்களுக்கும் அறிவிக்கக்கூடிய தேவ அறிவிப்பு கிடைத்தது. அவைகள் சுகசெய்தி அல்ல, விரோதமான செய்திகள். அதை அப்படியே அறிவிக்கும்போது தாங்கள் கொலை செய்யப்படக்கூடிய நிலை உண்டாகிறது. அதை அறிந்தும் அவர்கள் நல்மனச்சாட்சியோடு தேவனுக்கு ஊழியம் செய்தார்கள். ராஜாவால் வாளால் வெட்டப்பட்டு மரித்தார்கள். தன் வாழ்க்கையைப் பொருட்படுத்தாதவர்களும் இன்னும் வாழவேண்டும் என்று விரும்பாமல் தேவன் சொன்ன வார்த்தையை அப்படியே நிறைவேற்ற வேண்டுமென்ற கடமை உணர்வு, வைராக்கியம் யாருக்கு இருக்கிறதோ அந்த மனுஷரால் மட்டும் தான் நற்சாட்சி பெற்றவனாக ஜீவிக்கமுடியும். நம்மை ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தால் நற்சாட்சி உண்டாகும். மனுஷரைப் பிரியப்படுத்துவோமானால் துர்ச்சாட்சி தான் உண்டாகும்.

*ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். (I கொரிந்தியர் 10 : 31).*

நம்முடைய பேருக்காகவும், புகழுக்காகவும் எதையாவது செய்வோமானால் நமக்கு ஐயோ! ஆனால் நாம் தேவனுக்காக எதைச் செய்தாலும் நமக்கு நற்சாட்சி உண்டு.

*சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது. (I கொரிந்தியர் 14 : 40).*

அநேகர் நன்மையான பல காரியங்களைச் செய்துவிட்டு கடைசியில் எதாவது பிரச்சனையை உண்டாக்குவார்கள். அப்பொழுது நற்சாட்சியை அநுபவிக்கக்கூடாதபடி துர்ச்சாட்சி உண்டாகும். சகலவற்றையும் நல்லொழுக்கத்தோடும், கிரமத்தோடும், பரிசுத்தத்தோடும், தேவபக்தியோடும், மனத்தாழ்மையோடும் செய்யும்போது, மற்றவர்களால் நற்சாட்சி பெறுவதற்கேற்ற இடம் உண்டாகும்.

*உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது. (I கொரிந்தியர் 16 : 14).*

நாம் எதைச் செய்தாலும் பரிசுத்தமான மாயமற்ற அன்போடு அடுத்தவர்கள் நன்றாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு செய்யும்போது நமக்கு நற்சாட்சி உண்டாகும்.

*கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுய வாகனத்தின் மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். (லூக்கா 10 : 34).*

நாம் ஒரு ஆளுக்கு உதவி செய்யும்போது, அதைக் கடமைக்காகச் செய்யக்கூடாது. அன்போடு செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

*மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன்*

*நாவையும், கபடத்துக்கு தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன். (I பேதுரு 3 : 8 -11).*

நற்சாட்சியின் அநுபவம் உண்டாக இப்படிப்பட்ட குணங்கள் எல்லாம் தேவையாய் இருக்கிறது.

*திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.*
*(யாக்கோபு 1: 27).*

அநாதைகளுக்கும், விதவைகளுக்கும், உபத்திரவத்திலிருக்கிறவர்களுக்கும் உதவிசெய்யவேண்டும். அவர்கள் திருப்பித் தரமாட்டார்கள். ஆனால் அதன்மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படும். உலகத்தை அநுபவிக்க விரும்புகிறவர்களால் நற்சாட்சியோடு ஜீவிக்கமுடியாது.

*தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்.*
*(I தீமோத்தேயு 3 : 4).*

நற்சாட்சி உண்டாக விசுவாசிகள் முதலாவது தங்கள் சொந்த குடும்பத்தை நன்றாக நடத்த அறிந்திருக்க வேண்டும். புருஷனையும், மனைவியையும், பிள்ளையையும் பழிபோடக்கூடாது. நம்முடைய சபையில் தகப்பனும் தாயும் நற்சாட்சி உடையவர்களாய் இல்லாதபடியினால், அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு புத்தி சொன்னாலும் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

## 10.9. நற்சாட்சியின் ஜீவியம் ஏன் நமக்குத் தேவை?

*அப்பொழுது வேதப்பிரமாணத்தின்படியே பக்தியுள்ளவனும், அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் நல்லவனென்று சாட்சிபெற்றவனுமாகிய அனனியா என்னும் ஒருவன், என்னிடத்தில் வந்துநின்று சகோதரனாகிய சவுலே,*

*பார்வையடைவாயாக என்றான்; அந்நேரமே நான் பார்வையடைந்து, அவனை ஏறிட்டுப்பார்த்தேன். அப்பொழுது அவன்: நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார். நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய். (அப்போஸ்தலர் 22 : 12 - 15).*

நம்மை தேவன் அவருடைய கரத்தில் எடுத்து உபயோகப்படுத்த வேண்டுமானால், நமக்கு நற்சாட்சியின் ஜீவியம் தேவை. கர்த்தர் பவுல் அப்போஸ்தலரைக் குறித்து முன்குறித்த காரியங்களை அறிவிக்கும்படி அனனியா என்ற மனுஷனைத் தெரிந்தெடுக்கக் காரணம் என்னவென்றால், அவன் நற்சாட்சியுடையவனாகக் காணப்பட்டான். ஒரு மனுஷன் உலகத்தில் நற்சாட்சி பெற்றவனாகக் காணப்படவேண்டுமானால், அவன் தேவனாலும் நற்சாட்சி பெற்றவனாகவும் இருப்பான். அனனியா என்பவன் கர்த்தருடைய வேதக் கற்பனைகளின்படி ஜீவிக்க வேண்டுமென்ற வாஞ்சையும் தாகமும், வைராக்கியமும் உள்ளவன். ஆகவே, தன்னுடன் குடியிருக்கிற யூத ஜனங்களால் நற்சாட்சி பெற்றவனுமாயிருந்தான். அந்த மனுஷனையே தேவன் பார்த்து, பவுல் அப்போஸ்தலரை வழிநடத்த தெரிந்தெடுத்தார். வேதக் கற்பனைகளின்படி ஜீவிக்கக்கூடிய அநுபவம் நம்மில் காணப்படுமானால் தேவன் நம்மை நிச்சயமாகவே அவருடைய கரத்திலெடுத்து உபயோகப்படுத்துவார்.

*இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5 : 16).*

தேவன் நம்மை அவருடைய சாயலாகப் படைக்கக் காரணம் என்னவென்றால்: அவருடைய நாமம் மகிமைப்படும்படியாக, அவருக்கென்றே நம்மைச் சிருஷ்டித்தார். நம்மால் அவருடைய நாமம் மகிமைப்படவேண்டுமானால், நாம் நற்கிரியைகளைச்

செய்கிறவர்களாகக் காணப்படவேண்டும். அப்பொழுது நாம் நற்சாட்சி உள்ளவர்களாய் காணப்படலாம். நம்மால் தேவனுக்கும் மகிமை உண்டாகும்.

*பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1: 8).*

நாம் தேவனுக்குச் சாட்சிகளாக இருக்கவேண்டுமென்று அவர் நமக்கு கட்டளையைக் கொடுத்திருக்கிறார். நாம் நற்சாட்சி உள்ளவர்களாக இருந்தால், தேவனுக்குச் சாட்சிகளாய் ஜீவிக்கலாம். நம்மால் தேவனுடைய நாமம் மகிமைப்படும்.

*ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். (அப்போஸ்தலர் 6 : 3).*

கிறிஸ்தவ ஜீவியத்தில் நம்மை சின்ன ஒரு பொறுப்பில் வைக்கவேண்டுமானாலும் அறிவும், புத்தியும், பட்டப்படிப்பும் முக்கியமல்ல. தேவையானது ஞானமும், பரிசுத்தஆவியினால் வழிநடத்தப்படும் அநுபவமும், நற்சாட்சி நிறைந்த அநுபவமும் ஆகும். சாதாரணமான பந்திவிசாரணை செய்வதற்கே அநுபவம் மிகவும் தேவையாய் இருக்கிறது. நற்சாட்சி இல்லாமல் நம்மை தேவனோ, சபையை நடத்துகிறவர்களோ எடுத்து பிரயோஜனப்படுத்தமுடியாது.

*ஆனாலும் தேவ அநுக்கிரகம் பெற்று, நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சிகூறி வருகிறேன்.*
*(அப்போஸ்தலர் 26 : 22).*

பவுல் அப்போஸ்தலர் வயது சென்ற பின்பும் சிறியோருக்கும் பெரியோருக்கும் தேவனைக் குறித்துச் சாட்சி கூறினார். அவர் இப்படி சாட்சி கூறினபோது அவரைக் குறித்து மற்றவர்கள் குற்றம் சொல்ல இடமில்லாதிருந்தது போல, நாமும் தேவனுக்குப் பயந்து காணப்பட்டால் மட்டுமே சிறியோர்களுக்கும், பெரியவர்களுக்கும் சாட்சி கூறமுடியும்.

நற்சாட்சி இல்லாவிட்டால் நம்முடைய சாட்சியையும் யாரும் கேட்க மாட்டார்கள். நம்முடைய ஜீவியம் துர்ச்சாட்சி நிறைந்ததாய் இருக்கும்போது நாம் தேவனுக்குச் சாட்சிகளாக ஜீவிக்கமுடியாது. நாம் நற்சாட்சி உடையவர்களாய் காணப்பட்டு சகல காரியத்திலும் தேவனுக்குச் சாட்சிகளாய் ஜீவிக்க வேண்டியது அவசியமாகும்.

இவ்விதமான 10 அநுபவங்களையும் உடையவர்கள் இராப்போஜனம் பண்ணத் தகுதியானவர்கள்.

## 3. பழைய ஏற்பாட்டு பஸ்கா மற்றும் புதிய ஏற்பாட்டு பஸ்கா

*நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். (I கொரிந்தியர் 5 : 6 8).*

*கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக. நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள். ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியை புசிக்கிறதற்குப் போதுமானபேர்களாயிராமற்போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல்வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும்; அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும். ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்கவேண்டும்; செம்மறியாடுகளிலாவது வெள்ளாடு களிலாவது அதைத் தெரிந்துகொள்ளலாம். அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும்*

*நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவர்கள். பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல; அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக. அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக. அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா. அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருக ஜீவன்கள்மட்டும், முதற்பேறா யிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்; நானே கர்த்தர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும். (யாத்திராகமம் 12 : 1-13).*

I கொரிந்தியர் 5-ம் அதிகாரத்தில் புதிய ஏற்பாட்டின் பஸ்காவைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் 12-ம் அதிகாரத்தில் பழைய ஏற்பாட்டின் பஸ்காவைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்திலுள்ள அநேக நியமங்களும் சட்டங்களும் புதிய ஏற்பாட்டின் காலத்தில் உள்ளவைகளுக்கு நிழலானவை.

பழைய ஏற்பாட்டின் பஸ்கா என்பது நிழலான ஒரு காரியம். புதிய ஏற்பாட்டின் பஸ்கா என்பது பொருளாகிய பஸ்கா. அதாவது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்மையே பலியாகக் கொடுப்பதற்கு

நிழலாக அவர்கள் கடைபிடித்ததான பஸ்கா தான் பழைய ஏற்பாட்டு பஸ்கா. பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஆசரிக்கப்பட்ட பஸ்கா பண்டிகைக்கு பழுதற்றதும், ஆணும், ஒரு வயதுள்ளதுமான ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டின் காலத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பழுதற்றவராக குற்றமில்லாதவராக மனுஷகுமாரனாக வெளிப்பட்டார். அதனால் தான் பழைய ஏற்பாட்டு பஸ்கா என்பது புதிய ஏற்பாட்டு பஸ்காவுக்கு நிழலான சம்பவம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

### 1. பழைய ஏற்பாட்டு பஸ்கா:

பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூதர்களுக்கு அநேகப் பண்டிகைகள் இருந்தது. எல்லாப் பண்டிகைகளிலும் பஸ்கா பண்டிகையே பிரதானமானது. இந்த பஸ்காவை கண்டிப்பாக கடைபிடிக்கவேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறார்.

> *ஆபிப் மாதத்தைக் கவனித்திருந்து, அதில் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கக்கடவாய்; ஆபிப்மாதத்திலே இராக்காலத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினாரே. (உபாகமம் 16 : 1).*

ஆபிப் மாதம் யூதர்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாகும். இந்த மாதம் எப்பொழுது வரும் என்று ஆவலோடு காத்திருந்து அவர்கள் பஸ்கா பண்டிகையை ஆசரிக்க வேண்டும். அவர்கள் அவ்விதமாகவே எதிர்பார்த்திருந்து இரவு நேரத்தில் இந்த பஸ்கா பண்டிகையை ஆசரித்தார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைப்பட்டிருந்தபோது, எகிப்தியர் இஸ்ரவேலரை அதிகமாகக் கஷ்டப்படுத்தினார்கள். ஆகவே இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் ஜீவனையும் கசப்பாக எண்ணி, உலகத்திலே ஒருநாளாகிலும் ஜீவிக்க மனமற்ற நிலைமையில் காணப்பட்டார்கள். அப்படியிருக்க, கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணினபடியே அவர்களை விடுதலையாக்கி, வாக்குத்தத்த நாடாகிய கானான் தேசத்தில் அவர்களைச் சேர்க்கும்படியாக, கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களாகிய மோசேயையும், ஆரோனையும் அங்கே அனுப்பினார். அவர்களைக் கொண்டு கர்த்தர் பலமாய்க்

கிரியைச்செய்தும், பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை விடுதலை பண்ணவில்லை. கடைசியாக, கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் அழைத்து, உங்கள் சொந்த தேசத்திற்கு செல்ல அனுமதிக்காத பார்வோன், இனி நிச்சயமாக அனுமதி கொடுப்பான். ஆனால் அதற்கு முன் இந்த பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று கட்டளை கொடுத்தார்.

யாத்திராகமம் 12:1-13-ல் சொல்லப்பட்டபடியே இஸ்ரவேல் சபையார் ஆபிப் மாதம் 10-ம் தேதியில் வீட்டுத் தலைவர்கள் வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். அது வெள்ளாடாகவோ, செம்மறி ஆடாகவோ இருக்கலாம். அது ஒரு வயதுள்ளதாகவும், ஆண் ஆடாகவும் பழுதில்லாததாகவும் இருக்க வேண்டும். அந்த வீட்டிலுள்ளவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்கு போதுமானவர்களாய் இராமலிருந்தால், சமீபத்திலுள்ள அயல் வீட்டுக்காரர்களுடன் சேர்ந்து தங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத் தக்கதாக ஒரு ஆட்டைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த ஆட்டுக்குட்டியை 10-ம் தேதியிலே தெரிந்தெடுத்து, அதை நான்கு நாள் வரைக்கும் நன்றாக பராமரித்து 14-ம் தேதி சாயங்காலத்தில் அதை அடித்து(கொலை செய்து), அதின் இரத்தத்தை கிண்ணியில் எடுத்து, ஈசோப்புக்(ஈசோப்பு என்பது ஒரு செடி) கொழுந்தை எடுத்து, கிண்ணியிலிருக்கும் (பாத்திரத்திலிருக்கும்) இரத்தத்தில் தோய்த்து, இந்த இரத்தத்தை தங்கள் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் மேல்சட்டத்திலும் தெளிக்க வேண்டும். அன்று இராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் அதைச் சாப்பிடவேண்டும். புளிப்பில்லாத அப்பமென்றால் தாழ்மையையும் பரிசுத்தத்தையும் குறிக்கிறது.

*நீ எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாளை நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் நினைக்கும்படி, பஸ்கா பலியுடனே புளிப்புள்ள அப்பம் புசியாமல், சிறுமையின் அப்பமாகிய புளிப்பில்லாத அப்பங்களை ஏழுநாள்வரைக்கும் புசிக்கக்கடவாய்; நீ தீவிரமாய் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபடியினால் இப்படிச் செய்யவேண்டும். (உபாகமம் 16 : 3).*

சிறுமை என்றால் தாழ்மை. புளிப்பு என்பது பாவத்தைக் குறிக்கிறது. இவ்வாறு பாவமில்லாத அநுபவத்தோடு புசிக்கவேண்டும். கசப்பான கீரை என்றால் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்தபோது அவர்கள் நாட்கள் மிகவும் கசப்பாக இருந்தது. நான் எதற்காக ஒரு எபிரெயனாக அல்லது ஒரு இஸ்ரவேலனாக அல்லது ஒரு யூதனாக பிறந்தேன் என்று சொல்லத்தக்க அளவில் கசந்துபோன நாட்கள் தான் அந்த அடிமைத்தன நாட்கள். அதை நினைவுகூரும்படியாகத்தான் கசப்பான கீரை கொடுக்கப்பட்டது.

### 1.1. இஸ்ரவேலர் பஸ்காவை புசித்த விதம்:

பஸ்காவைப் புசிக்கும்போது அவர்கள் அரையில்(இடுப்பில்) கச்சை கட்டியிருக்கவேண்டும். கால்களில் பாதரட்சை(செருப்பு) போட்டுக்கொண்டும், கையில் ஒரு தடியைப் பிடித்துக்கொண்டும் தீவிரமாய்ப் புசிக்கவேண்டும். அது கர்த்தருடைய பஸ்கா ஆகும். கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் நோக்கி, அன்று இராத்திரியிலே நான் ஒவ்வொரு வீடுகளையும் கடந்துபோவேன் என்று சொன்னார். அப்பொழுது எகிப்து தேசத்திலுள்ள மனிதர் முதல் மிருக ஜீவன்கள் மட்டும் முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களுக்கு நீதியைச் செலுத்துவேன் என்றும் கூறியிருந்தார். அது வரையிலும் எகிப்தியர்களுக்குள் அனுப்பின வாதைகளொன்றும் இஸ்ரவேலர்கள் வாசம்பண்ணின பகுதிக்குள் வரவில்லை. ஆனால் எகிப்தியரின் வீடுகளைக் கர்த்தர் கடந்துபோகும்போது அங்கே சங்காரம் உண்டாகும். அப்பொழுது அவர் இஸ்ரவேல் ஜனங்களுடைய வீடுகளையும் கடந்துபோவார். அப்பொழுது மோசே, ஆரோன் என்பவர்களால் அறிவிக்கப்பட்டபடி, வீட்டுவாசல் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்பட்டிருந்தால் மட்டும் தப்புவீர்கள். இப்படிச் செய்யாமலிருந்தால் அவர்கள் இஸ்ரவேலராயிருந்தாலும் அந்த வீட்டிலுள்ளவர்களுக்கும் சங்காரம் உண்டாகும் என்று சொன்னார்.

நாமும் கர்த்தருடைய இராப்போஜனப் பண்டிகையைக் குறித்து நிர்விசாரமாக நினைத்து, அதை அசட்டைபண்ணினால் பரலோக ராஜ்யம் போகமுடியாது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மாம்சத்திலும்,

இரத்தத்திலும் பங்குபெறுகிற மனுஷனுக்குள்தான் ஜீவன் உண்டாயிருக்கும். அவனோடு கர்த்தரும் நிலைத்திருப்பார். அந்த மனுஷனையே கடைசி நாளில் எழுப்புவேன் என்பதாகவும் சொல்லியிருக்கிறார்.

*அப்பொழுது மோசே இஸ்ரவேல் மூப்பர் யாவரையும் அழைப்பித்து: நீங்கள் உங்கள் குடும்பங்களுக்குத் தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, பஸ்காவை அடித்து, ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்துக் கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்; விடியற்காலம்வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலைவிட்டுப் புறப்பட வேண்டாம். கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார். இந்தக் காரியத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நித்திய நியமமாகக் கைக்கொள்ளக்கடவீர்கள். (யாத்திராகமம் 12 : 21 - 24).*

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் அழைத்து: நீங்கள் இன்னின்ன விதத்தில் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்ற கட்டளை கொடுத்தவுடனே, அவர்கள் தாமதியாமல் தீவிரமாய் இஸ்ரவேலின் மூப்பர் யாவரையும் அழைத்து, கர்த்தர் சொன்ன காரியத்தை எந்தவொரு வித்தியாசமுமில்லாமல் அப்படியே சொன்னார்கள்.

*முதலாம் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலந்தொடங்கி மாத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம்வரைக்கும் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள். ஏழுநாளளவும் உங்கள் வீடுகளில் புளித்த மா காணப்படலாகாது; எவனாகிலும் புளிப்பிடப்பட்டதைப் புசித்தால், அவன் பரதேசியானாலும் சுதேசியானாலும், அந்த ஆத்துமா இஸ்ரவேல் சபையில் இராமல் அறுப்புண்டுபோவான். புளிப்பிடப்பட்ட*

*யாதொன்றையும் நீங்கள் புசிக்கவேண்டாம்; உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள் என்று சொல் என்றார்.*

*(யாத்திராகமம் 12 : 18 - 20)*

ஏழுநாள் வரையிலும் வீடுகளில் புளிப்புள்ள ஒன்றும் இருக்கக்கூடாது. நஷ்டப்பட்டுப் போகுமென்றாவது கொஞ்சம் புளிப்புள்ள மாவு வைத்தாலும் அந்த மனுஷன் இஸ்ரவேல் ஜனங்களுக்குள் இருக்கக்கூடாது. அவனைத் துரத்திவிட வேண்டும். அவ்வளவாய் கருத்தாய் செயல்பட வேண்டும் என்பதாகச் சொன்னார்.

*அப்பொழுது மோசே: கர்த்தர் நடுராத்திரியிலே நான் எகிப்தின் மத்தியில் புறப்பட்டுப்போவேன். அப்பொழுது சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் எந்திரம் அரைக்கும் அடிமைப் பெண்ணுடைய தலைப்பிள்ளைவரைக்கும், எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேறனைத்தும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தும் சாகும் என்று உரைக்கிறார் என்று சொன்னதுமன்றி, அதினால் எகிப்து தேசம் எங்கும் முன்னும் பின்னும் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாகும். ஆனாலும் கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை நீங்கள் அறியும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும் மனிதர்முதல் மிருகஜீவன்கள் வரைக்கும் ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை. அப்பொழுது உம்முடைய ஊழியக்காரராகிய இவர்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து, பணிந்து, நீயும் உன்னைப் பின்பற்றுகிறவர்கள் யாவரும் புறப்பட்டுப்போங்கள் என்று சொல்லுவார்கள்; அதின்பின் புறப்படுவேன் என்று சொல்லி, உக்கிரமான கோபத்தோடே பார்வோனை விட்டுப் புறப்பட்டான்.*

*(யாத்திராகமம் 11 : 4 - 8).*

பார்வோனுடைய இருதயம் நாளுக்கு நாள் கடினப்பட்டுக் கொண்டிருந்தது. தேவன் சொன்னபடியெல்லாம் செய்தபோதும் பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டதினிமித்தம் மோசேயும்

ஆரோனும் மிகவும் சோர்ந்துபோனார்கள். ஆகவே உக்கிர கோபத்தோடே பார்வோனின் முன் போய்நின்று, இதுவரையிலும் நீ என்னுடைய ஜனங்களை விடவில்லை. இனி எங்களைப் போகச் சொல்லுவாய். அப்படிப்பட்டதான ஒரு சம்பவம் இன்று இராத்திரியில் நடக்கும் என்று சவால் விட்டுக்கொண்டு அவனைவிட்டுப் புறப்பட்டுப் போனார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு அறிவிக்கப்பட்டபடியே பஸ்காவை ஆசரித்துக்கொண்டிருக்கையில் நடுராத்திரியாகும்போது, கர்த்தர் எகிப்திலே கடந்துவந்தார்.

*நடுராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார். அப்பொழுது பார்வோனும் அவனுடைய சகல ஊழியக்காரரும் எகிப்தியர் யாவரும் இராத்திரியிலே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை. இராத்திரியிலே அவன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எழுந்து, என் ஜனங்களைவிட்டுப் புறப்பட்டுப்போய், நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள். நீங்கள் சொன்னபடியே உங்கள் ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டு போங்கள்; என்னையும் ஆசீர்வதியுங்கள் என்றான். எகிப்தியர்: நாங்கள் எல்லாரும் சாகிறோமே என்று சொல்லி, தீவிரமாய் ஜனங்களைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை மிகவும் துரிதப்படுத்தினார்கள். பிசைந்தமா புளிக்குமுன் ஜனங்கள் அதைப் பாத்திரத்துடனே தங்கள் வஸ்திரங்களில் கட்டி, தங்கள் தோள்மேல் எடுத்துக்கொண்டு போனார்கள். மோசே சொல்லியிருந்தபடி இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியரிடத்தில் வெள்ளியுடைமைகளையும் பொன் னுடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டார்கள். கர்த்தர் ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கும்படி செய்ததினால், கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள்;*

*இவ்விதமாய் அவர்கள் எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் ராமசேசை விட்டுக் கால்நடையாய்ப் பிரயாணம் பண்ணி, சுக்கோத்துக்குப் போனார்கள்; அவர்கள், பிள்ளைகள்தவிர ஆறுலட்சம் புருஷராயிருந்தார்கள். அவர்களோடே கூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று. (யாத்திராகமம் 12 : 29 -38)*

அப்பொழுது கர்த்தருடைய பயங்கரமான கடும் கோபமான கிரியை பார்வோனுடைய கொட்டாரம் முதல் சகல வீடுகளிலும் எல்லாக் குடும்பங்களிலும் உண்டானது. அப்பொழுது நித்திரை பண்ணிக்கொண்டிருந்த முதற்பேறனைத்தும் அலறி, துடித்து, கூக்குரலிட்டு செத்தது. கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் கொண்டு எவ்வளவோ சொல்லியும் பார்வோன் கேட்கவில்லை. ஆகவே அவர்கள் நன்றாய்ச் சாப்பிட்டுவிட்டு பெற்றோர்களும் பிள்ளைகளுமாக சுகமாகத் தூங்கினார்கள். நடுராத்திரியில் நல்ல நித்திரை சமயத்தில் கர்த்தருடைய கடுங்கோபம் அங்கே பிரவேசித்ததினால் பிள்ளைகளெல்லாம் நித்திரை கலைந்து, மிகுந்த சத்தத்தோடு கூக்குரலிட்டு துடிதுடித்து கதறி, தலையை அடித்து அடித்து சாக ஆரம்பித்தது. உடனே எல்லாருடைய நித்திரையும் கலைந்தது. எல்லாக் குடும்பத்திலும் கர்த்தருடைய மகா பயங்கர கிரியை நடந்ததினாலே அவர்கள் நடுங்கி விறைத்து பயங்கரமாய்க் கூக்குரலிட்டார்கள். எகிப்தில் அதற்கு முன்னும் பின்னும் நடந்திராத மகா பயங்கரமான கூக்குரல் உண்டானது. ஒருவருக்கும் வீடுகளில் இருக்கமுடியாது. அதுமட்டுமல்ல ஆட்டுத் தொழுவத்திலும், மாட்டுத் தொழுவத்திலுமுள்ள தலையீற்றனைத்தும் நடுராத்திரியிலே தங்கள் தலைகளைப் போட்டு அடித்து, துடிதுடித்து அலறி சத்தம்போட்டுக் கொண்டு சாக ஆரம்பித்தது. மற்றும் ஆடுகளும் மாடுகளும் எல்லாம் மிகவும் சத்தமிட்டுக் கொண்டு தங்கள் கோட்டை வாசல்களையெல்லாம் உடைத்துவிட்டு வெளியே ஓடி இஸ்ரவேல் ஜனங்களுடைய மிருக ஜீவன்களோடு வந்து சேர்ந்துகொண்டது. அநேக ஜாதியான மனுஷர்களும் பயந்து வீடுகளை விட்டோடி இஸ்ரவேல் ஜனங்களோடு சேர்ந்துகொண்டார்கள். எகிப்தியர் எல்லாரும் பார்வோன் மகா

ராஜாவால் எங்களுக்கு இப்படிப்பட்டதான ஆபத்து உண்டானது; இஸ்ரவேல் ஜனங்களை அவன் விடாததினாலேதான் இந்த பயங்கரம் சம்பவித்தது; இஸ்ரவேல் ஜனங்கள் மூலம் சாகிறோமே என்று கூக்குரலிட்டுப் புலம்பினார்கள். பார்வோனும், மோசேயையும் ஆரோனையும் அழைத்து: நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும் எங்களை விட்டுப்புறப்பட்டுப்போய் கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள். உங்கள் ஆடு, மாடுகளையும் கொண்டுபோங்கள், என்னையும் ஆசீர்வதியுங்கள் என்று சொன்னான். எகிப்தியர், இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேசத்திலிருந்து புறப்பட்டுப்போக மிகவும் துரிதப்படுத்தினார்கள். ஆகையினாலே பிசைந்த மா புளிப்பதற்கு முன்னே துணிகளில் கட்டி எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்தியர் கண்களிலே தயைகிடைக்கும்படி செய்ததினால் இஸ்ரவேலர் எகிப்தியரிடம் வெள்ளி உடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் கேட்டார்கள். கேட்டதை அவர்களுக்குக் கொடுக்கவும் செய்தார்கள்.

## 1.2. பஸ்காவை ஆசரித்ததின் மூலம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு உண்டான ஐந்து வகையான ஆசீர்வாதங்கள்:

- **அடிமைத்தனத்திலிருந்து விடுதலை:**

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் 430 வருடம் வாழ்ந்தார்கள். அதில் 30 வருஷம் யோசேப்பு இருந்ததினால் அடிமைத்தன வாழ்வு இல்லை. யோசேப்பின் காலத்திற்கு பிறகுள்ளதான 400 வருஷங்களும் அவர்கள் அடிமைகளாகத் தான் வாழ்ந்தார்கள். இந்த பஸ்காபண்டிகையின் நாளில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றார்கள்.

- **சங்காரத்திலிருந்து விடுதலை:**

எகிப்து ஒரு பெரிய நாடு. அந்த நாடு முழுவதும் அழுகையும், நாசமும், துடிதுடிப்பும், துக்கமும், வேதனையும், கூக்குரலுமாகக் காணப்பட்டது. யூத ஜனங்களுக்குள்ளே அப்படிப்பட்ட எதுவும் ஏற்படவில்லை. தேவகோபமாகிய சங்காரத்திலிருந்து ஒரு பெரிய விடுதலையையும் பஸ்கா கொண்டாட்டத்தின் மூலமாகப் பெற்றுக்கொண்டார்கள்.

♦ **எகிப்திய ஜனங்களுக்கும் யூத ஜனங்களுக்குமிடையே பெரிய வேறுபாடு உண்டானது:**

இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்கா ஆசரித்ததின் மூலமாக அவர்களுக்கு தேவனுடைய பாதுகாவல் இருந்தது. தேவன் அவர்களோடு கூட இருந்தார். எவ்விதத்திலும் எந்தவிதமான குறைவும் அவர்களுக்கு இல்லை. அப்படியாக பெரிய ஒரு வித்தியாசத்தைக் காண முடிந்தது.

♦ **சந்தோஷமும், மகிழ்ச்சியும், ஆனந்தமுமான பண்டிகைக் கொண்டாட்டம்:**

எகிப்தியர்களுக்குள் பயங்கரமான துக்கமும் வேதனையும் உண்டானது. ஆனால் யூத ஜனங்களுக்கு பயங்கரமான சந்தோஷமும், மகிழ்ச்சியுமாக நிறைந்து பஸ்காவை ஆசரித்து புசித்துக் குடித்தார்கள்.

♦ **வாக்குத்தத்தமான நாட்டிற்கு நேராக பிரயாணம்:**

பஸ்கா ஆசரிப்பின் மூலமாக யூதஜனங்கள் விடுதலையின் பயணமாக வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதான கானான் தேசத்துக்கு நேராகப் பிரயாணம் புறப்பட்டார்கள்.

## 2. புதிய ஏற்பாட்டு பஸ்காவாகிய இராப்போஜனப் பண்டிகை:

புதிய ஏற்பாட்டின் காலத்தில் காணப்படுகிற நமக்கு அநேகப் பண்டிகைகள் இருந்தாலும் இராப்போஜனப் பண்டிகை மிகவும் விசேஷமானது. ஏனென்றால் தகுதியான அநுபவத்தோடு இராப்போஜனப் பண்டிகையை ஆசரிக்கிற எந்த மனுஷனும் நிச்சயமாக பரலோகராஜ்யத்தில் தேவனோடு வாழும் பாக்கியத்தை சொந்தமாக்கிக் கொள்ளமுடியும்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் ஆபிப் மாதம் எப்பொழுது வருமென்று எதிர்பார்த்திருந்து பஸ்கா பண்டிகையை ஆசரித்ததுபோல நாமும் இராப்போஜனப் பண்டிகை எப்பொழுது வரும் என்று ஆவலோடு காத்திருந்து தகுதியான அநுபவத்தோடு அதை ஆசரிக்க வேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து இராத்திரியில் புறப்படப்பண்ணினார். எனவே அவர்கள்

இரவு நேரத்தில் பஸ்காவை ஆசரித்தார்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் முடிப்பதற்காக வராமல் நிறைவேற்றவே வந்தேன் என்று சொன்னார். ஆகவே, இயேசுகிறிஸ்து இந்த இராப்போஜனத்தை மிகவும் கருத்தாக இராத்திரியிலே ஆசரித்தார்.

## 2.1. இராப்போஜனம் பண்ணுகிறதினால் உண்டாகும் ஐந்து வகையான ஆசீர்வாதங்கள்:

♦ **பாவ அடிமைத்தனத்தினின்று விடுதலை:**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிறதான இவ்விதமான தெய்வீக ஆசீர்வாதங்களை பெற்று தேவனுடைய பிள்ளைகளாய் வாழ்கிறதான தேவனுடைய ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, அவருடைய ஆவியினால் நிறைக்கப்பட்ட அவருடைய சொந்த ஜனங்கள். சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்தும், பாவ அடிமைத் தனத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டவர்கள்.

♦ **சங்காரத்திலிருந்து விடுதலை:**

மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்ற கர்த்தருடைய வார்த்தையின்படி நாம் நரகம், பாதாளம், மரணம் என்ற சகலக் கட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டவர்கள்.

♦ **தேவனுடைய ஜனங்களுக்கும் உலக ஜனங்களுக்குமிடையே பெரிய வித்தியாசம்:**

உலகத்திலுள்ள மற்றும் ஜனங்களைப் பார்க்கிலும் இரட்சிக்கப்பட்ட ஜனங்களுக்குள் பெரிய ஒரு வித்தியாசத்தைக் காணலாம். உலகத்திலுள்ள ஜனங்கள் பாவிகளாக, துஷ்டர்களாக, துன்மார்க்கர்களாகக் காணப்படுகிறார்கள். தேவனுடைய ஜனங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக, தேவனைக் காண்பிக்கிறவர்களாக, அவருக்குச் சாட்சிகளாக, நற்கந்தங்களாகக் காணப்படுவார்கள்.

♦ **தேவனுடைய ஜனங்களுக்குள்ளே பெரியதான சந்தோஷம் காணப்படும்:**

இராப்போஜனத்தில் பங்குபெறுகிறதான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தை பானம் பண்ணுகிறதினால், அவருடைய ஜீவனால் நிறைக்கப்படும் பாக்கியம் கர்த்தரால் தங்களுக்கு கொடுக்கப்பட்டதென்ற சந்தோஷம் இவர்களுக்கு உண்டாகும்.

♦ **பரலோகராஜ்யமாகிய பரம கானானைக் குறித்த நிச்சயம்:**

தாங்கள் பூரணமான ஆயத்தத்தோடு இந்த இராப்போஜனத்தில் பங்குபெறுவதால் பரலோகராஜ்யம் தங்களுக்கு நிச்சயமாகவே கிடைக்கும் என்ற சந்தோஷத்தோடு காணப்படுவார்கள்.

இப்படிப்பட்ட மகிமையான பாக்கியங்களை புதிய ஏற்பாட்டின் காலத்தில் காணப்படுகிற நமக்கு தேவன் இராப்போஜனத்தின் மூலம் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார்.

> *நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். (I கொரிந்தியர் 5 : 6 - 8).*

இராப்போஜனத்தில் பங்குபெறும் ஜனங்கள் புளிப்பில்லாதவர்களாய் இருக்க வேண்டும். நம்முடைய ஜீவியம் துப்புரவான அநுபவத்தோடு காணப்படவேண்டும். உண்மையும், நீதியும், நேர்மையும் நிறைந்த அநுபவத்தோடு காணப்படவேண்டும். கொஞ்சம் புளித்த மா என்றால் நம்முடைய பார்வையில் சின்னச் சின்ன பாவங்கள் நம்மை முழு பாவியாக்கிவிடும். பழைய புளித்தமா

என்றால் பழைய பாவம். கொஞ்சம் பாவங்களையும் வைத்துக்கொண்டு மேன்மைபாராட்டுவது ஆபத்துக்கேதுவானது. அநேகர் சிறிய சிறிய குற்றங்குறைவுகளை வைத்துக்கொண்டு நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன், ஆவிக்குரியவனாயிருக்கிறேன் என்று மேன்மைபாராட்டுகிறார்கள். ஆனால் அது ஆபத்தான மேன்மை பாராட்டுதல் என்று பரிசுத்தஆவியானவர் அறிவித்திருக்கிறார். இந்த சிறிய பாவங்கள் ஜீவியம் முழுவதையும் கெடுத்துவிடும். பூரணமான விடுதலையின் அநுபவத்தை அடைந்து மேன்மைபாராட்டவேண்டும். எக்காலத்திலும் நாம் பரிசுத்தவான்களாக இருக்கும்படியாக பழைய பாவக்கேடுகள் என்னென்ன இருந்தாலும் அவைகளைப் புறம்பே கழித்துப் போடவேண்டும். அதிலிருந்து பூரணமான விடுதலையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நாம் மகிமையான ஆவிக்குரிய அநுபவங்களை அடைந்து விசேஷமான மேன்மை பாராட்டல் உடையவர்களாய் காணப்படும்படியாக நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறார்.

### 3. இராப்போஜனப் பண்டிகை எப்படி கொண்டாடவேண்டும்?

பண்டிகை கொண்டாட பழைய பாவம் ஒன்றும் இருக்கக்கூடாது. பழைய புளித்த மா என்றால், விட்டபாவத்தை எடுத்துக்கொள்வது. அதாவது இரட்சிக்கப்படும்முன் என்னென்ன பாவங்கள் இருந்ததோ அவைகளில் சிலதைத் திரும்பவும் எடுத்துக்கொள்வதாகும். கர்த்தரிடம் பண்ணிக்கொண்ட பொருத்தனையில் உண்மையற்ற அநுபவத்தோடு ஒருவரும் காணப்படக்கூடாது. (துர்குணம்)கெட்ட குணமான அநுபவத்தோடு பண்டிகை ஆசரிக்கக்கூடாது. (பொல்லாப்பு) ஒருவருக்கொருவர் பிரிவினையும், தேவனோடுள்ள பிரிவினையும் வைத்துக்கொண்டு பண்டிகையை ஆசரிக்கக்கூடாது. ஜீவியத்தில் சகல பாவங்களும் நீங்கி துப்புரவான உண்மையான ஜீவியமுடையவர்களாகக் காணப்படவேண்டும். ஆவிக்குரிய ஜீவிய அநுபவத்தில் உண்மையற்ற அநுபவத்தோடு இருந்துகொண்டு பண்டிகையை ஆசரிக்கக்கூடாது. பேச்சு மற்றும் சகல காரியங்களிலும் உண்மையான அநுபவத்தோடு காணப்படவேண்டும். துப்புரவும் உண்மையுடையவர்கள், பரிசுத்தமும் தாழ்மையுமுடைய

அப்பமாக இவர்களே மாறிவிடுகிறார்கள். அவ்விதமான அநுபவத்தோடு இந்த பஸ்காவை ஆசரிக்க வேண்டும்.

### 3.1. பாதம் கழுவுதல்:

கால்களைக் கழுவுவது என்பது வேலைக்காரர்கள் அல்லது அடிமைகளின் கடமை. அது ஒரு தாழ்ந்த வேலையாகக் கருதப்பட்டது. நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவரால் சிருஷ்டிக்கப்பட்ட தமது சீஷர்களின் கால்களைக் கழுவினார். இத்தகைய ஒரு தாழ்ந்த வேலையைச் செய்து அவருடைய தாழ்மையான பண்பையும், தாழ்மையான ஊழியத்தையும் காண்பித்தார். சாத்தானுடைய தீயகுணமாகிய பெருமையால் பிடிக்கப்பட்ட மனுஷர்களை அந்தப் பெருமையிலிருந்து விடுவிக்கும்படியாக அவர் இவ்விதமாக ஒரு அடிமையைப்போல இதைச் செய்து மாதிரி காண்பித்தார். ஒரு நியமத்தைக் கண்டிப்பாக நிலைநிறுத்தவேண்டுமென்பதற்காகவே அவர் இப்படிச் செய்தார். முதல் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்கள் ஒரு எளிமையான ஊழியமாக நினைத்து இதைப் பின்பற்றினர். இது ஒரு தாழ்மையின் சின்னமாகிய கிரியையாயிருந்தது. இதைச் சபையின் சட்டமாகவும் அவர்கள் கடைபிடித்தனர். கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையில் நாங்கள் கட்டாயமாக பின்பற்றவேண்டிய சட்டமாகவே இதை வைத்திருக்கின்றோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

> *போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். (யோவான் 13 : 4, 5).*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மேல்வீட்டறையிலே இராப் போஜனத்தை ஏற்படுத்தும் முன்பாக, பஸ்கா விருந்துக்கு தயார் ஆவதைப்போல் இருந்த அவரது மேல் வஸ்திரத்தை எடுத்து, தம்முடைய இடுப்பில் கச்சையாகக் கட்டிக்கொண்டார். அதன்பின் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, சீஷரின் கால்களைக்

கழுவத்தொடங்கினார். பின்பு தாம் கட்டிக்கொண்டிருந்த அந்தத் துணியினால் அவர்களுடைய கால்களைத் துடைத்தார். இது அவருடைய உண்மையான தாழ்மையைக் குறிக்கிறது. இத்தகைய தாழ்மை இராப்போஜன பந்தியில் பங்கெடுக்கிறவர்களுக்கு மிக மிக அவசியம் ஆகும். இராப்போஜன பந்தியில் பங்கெடுக்கிறவர்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவி ஆண்டவராகிய இயேசுவின் மாதிரியைப் பின்பற்றவேண்டும். இத்தகைய மாதிரியைக் கடைபிடிப்பவர்களை ஆண்டவராகிய இயேசு அதிகமதிகமாய் ஆசீர்வதிப்பார்.

*அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிற படியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். (யோவான் 13: 12 - 17).*

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்தப் புதிய ஏற்பாட்டு பஸ்காவாகிய இந்த விருந்தை ஏற்படுத்தி, பழைய ஏற்பாட்டு பஸ்காவுக்கு ஒரு முடிவை ஏற்படுத்தினார்.

### 3.2. இராப்போஜனத்தை ஆசரிக்க வேண்டிய விதம்:

*அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி*

*பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா. (யாத்திராகமம் 12 : 11).*

யாத்திரை பண்ணுகிற விதமாக துரிதமாக புசிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

*சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினி யாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.*

*(எபேசியர் 6 : 14 - 16).*

சத்தியம் என்னும் கச்சையை அரையில் கட்டிக்கொண்டவர்களாய் இருக்கவேண்டும். சத்தியம் என்றால் தேவனுடைய வசனம், உலகப்பிரகாரமாக அரையில்(இடுப்பில்) கச்சை(பெல்ட்) கட்டிக்கொள்வார்கள். அப்பொழுது இடுப்பிற்கு நல்ல பெலம் உண்டாகும். நல்ல சுமை எடுத்துக்கொண்டு ஓட வேண்டுமானால் இடுப்பில் கச்சை கட்டவேண்டும். ஆத்மீகப் பிரகாரமான கச்சை இடுப்பில் கட்டப்படும்போது அவன் பராக்கிரமமாகக் கிரியைசெய்ய ஆரம்பிப்பான். இந்தக் கச்சை இல்லாவிடில் பரம கானானுக்கு நேராக பிரயாணம்பண்ண முடியாது. சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தமென்னும் பாதரட்சையையும் கால்களில் தொடுத்திக்கொண்டவர்களாயும் இருக்கவேண்டும். பொல்லாங்கன் எய்யும் அக்கினி அஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நிற்கவேண்டும். அப்பொழுது இவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் சரியான பராக்கிரமசாலிகளான போர்வீரர்கள். இவர்கள் தாங்கள் அழைக்கப்பட்டதான பரம கானானாகிய பரலோகராஜ்யத்திற்கு நேராக யுத்தம்பண்ணி, யுத்தம்

பண்ணி பிரயாணம்பண்ணுகிறார்கள். சாத்தானையும், அவனுடைய சேனைகளையும் உலகத்தையும் மற்றும் சகல காரியங்களையும் மடங்கடித்து ஜெயித்து, மிதித்துக்கொண்டு முன்னேறிப் போய்க் கொண்டிருப்பார்கள். இவர்கள்தான் இந்த இராப்போஜனத்தில் பங்கு பெற ஆயத்தமானவர்கள்.

### 3.3. யார் இந்த இராப்போஜனத்தை ஆசரிக்கலாம்?

*இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அதை ஆசரிக்கக்கடவர்கள். (யாத்திராகமம் 12 : 47).*

கர்த்தருடைய சபையார் மட்டுமே இதை ஆசரிக்கத் தக்கவர்கள். கர்த்தருடைய சபையார் என்றால், பூரணமான இரட்சிப்பின் அநுபவத்தை அடைந்து, ஞானஸ்நானத்தினால் இயேசு கிறிஸ்துவின் திருசரீரமாகிய சபையோடு ஐக்கியமானவர்கள்.

*கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். (எபேசியர் 5 : 27).*

பாவத்தையும் அசுத்தத்தையும் வைத்துக்கொண்டு நானும் சபையார் என்று சொல்வது அல்ல. கர்த்தருடைய சபை பாவமற்றது. பாவத்தின் ஒரு கறைகூட இருக்கக்கூடாது. தேவனுக்கும் இவர்களுக்கும்(சபையாருக்கும்) எந்த ஒரு மறைவும் இருக்கக்கூடாது. எவனிடத்தில் பாவமும், அக்கிரமமும் இருக்கிறதோ அவர்களுக்கும் தேவனுக்கும் இடையே திரை(மறைவு) காணப்படுகிறது. இது தேவ பிரசன்னம் அற்ற அநுபவமாகும். கர்த்தருடைய சபையார் பாவத்தின் எந்த மறைவும் இல்லாதவர்களாக தேவபிரசன்னத்தோடு, தேவனும் இவர்களும் ஒன்றாய் வாசம்பண்ணுகிறவர்களாய் இருக்கவேண்டும். பரிசுத்தமும், பிழையற்றவர்களுமாய் தேவமகிமையினால் நிறைக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறவர்களே கர்த்தருடைய சபையார். இவர்கள் இந்த இராப்போஜனத்தில் பங்குபெறலாம்.

## 3.4. இராப்போஜனம் பண்ணுகிறவர்களுக்கு தேவையான விருத்தசேதனங்கள்:

*அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்து விட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். (கொலோசெயர் 2 : 11).*

கையால் செய்யப்படாத விருத்தசேதனம் என்றால் மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து விடுகிற அநுபவமாகும். மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதியமனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறவன் விருத்தசேதனமுடையவன்.

*அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். (எபேசியர் 4 : 22 - 24).*

இவர்கள் தான் விருத்தசேதனமுள்ளவர்கள். இவர்களே இந்த இராப்போஜனத்தில் பங்குபெறத் தகுதியானவர்கள்.

*ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதன மல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது. (ரோமர் 2 : 28, 29).*

ஒரு மனுஷன் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு வாழ்வதால் மட்டுமே உள்ளான சுத்திகரிப்பை அடையமுடியும். அப்படிப்பட்டவர்களே வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதான யூதர்கள்.

இவர்கள் பரிசுத்த ஆவியினாலே இருதயத்திலுண்டாகும் விருத்தசேதனத்தைப் பெற்றவர்கள்.

> *மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.*
>
> *(ரோமர் 8 : 13).*

இவர்கள் பாவ சரீரத்தைக் களைந்துவிட்டவர்கள். அதாவது தங்கள் கண்கள், இருதயம், நாவு மற்றும் சகல அவயவங்களும் விருத்தசேதனம்பண்ணப்பட்டு புதிதாக்கப்பட்ட புது சிருஷ்டியின் அநுபவத்தை உடையவர்கள். இப்படிப்பட்டவர்கள் இந்த இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியானவர்கள்.

- **இருதயம் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்:**

> *ஆகையால் நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம்பண்ணுங்கள். (உபாகமம் 10 : 16).*

மனுஷனுடைய இருதயம் என்பது திருக்கும், மகா கேடுமுள்ளது. அதை அநேகரால் கண்டுபிடிக்க முடியாமல் தாங்களும் பரிசுத்தவான்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இருதயத்திலுள்ள பாவ அழுக்குகளும் கசடுகளுமெல்லாம் நீங்கி, கர்த்தரால் விருத்தசேதனம்பண்ணப்பட்ட அநுபவத்தை அடைந்து கொள்ளவேண்டும்.

> *யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம் பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள். (எரேமியா 4 : 4).*

இருதயம் விருத்தசேதனம்பண்ணப்படாத ஒவ்வொருவர் மேலும் தேவனுடைய உக்கிரகோபம் பற்றிஎரியும், கெட்ட எண்ணங்களும், நினைவுகளும் பாவ இச்சைகளும், கசப்புகளும், வாசி,

வைராக்கியங்களும் இருதயத்திற்குள் நிறைந்து காணப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட இருதயத்திற்குள் கர்த்தருடைய சுவிசேஷம் பிரவேசிக்கிறதில்லை. அடைக்கப்பட்ட இருதயத்தோடு காணப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கென்று தங்களை விருத்தசேதனம்பண்ணி தங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடவேண்டும். அதாவது, தங்கள் இருதயம் கர்த்தரால் சுத்தமாக்கப்படும்படியாக, கர்த்தரை நோக்கிக் கண்ணீர்விட்டு அழுது, அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதாகும். இதுவே கையால் செய்யப்படாத விருத்தசேதனம் ஆகும். இருதயம் விருத்தசேதனம் பண்ணப்படாத யாரும் இந்த இராப்போஜனத்தில் பங்குபெறக்கூடாது.

♦ **நாவு விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்:**

*உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். (மத்தேயு 5 : 37).*

கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குபெற நாவடக்கம் மிகவும் முக்கியமானதாகும். நாவடக்கம் இல்லாத மனுஷனிடத்தில் எந்த தெய்வபக்தியும் காணப்படுகிறதில்லை. நாம் உள்ளதை உள்ளபடி சொல்லவேண்டும். அதற்கு மேலாக என்ன பேசினாலும் அது தீமையானதாகவே காணப்படும். விருத்தசேதனம் பண்ணப்பட்ட நாவில் பொய்யோ, உருட்டோ, புரட்டோ வராது.

♦ **கண்கள் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்:**

*விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. (மத்தேயு 5 : 27, 28).*

அநேகருடைய கண்கள் தங்களுக்குச் சாவை வருவிக்கிறதாயிருக்கிறது. கண்கள் விருத்தசேதனம்

பண்ணப்படும்போது பரிசுத்தமான பார்வை உண்டாகும். அசுத்தமான பார்வை எதுவும் அதில் காணப்படாது.

*விபசாரமயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தைவிட் டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடைவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள். (II பேதுரு 2 : 14).*

மனுஷனுடைய கண்கள் பார்க்கிறதினால் திருப்தியாகிறதே இல்லை. ஆகவே, நாம் நம்மைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, இயேசுகிறிஸ்துவின் பாடுகளைத் தியானித்து ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் எந்த நிலைமையிலிருந்தும் நம்மை விடுவிக்கிறவராக இருக்கிறார். கண்கள் விருத்தசேதனம் பண்ணப்படும்போது ஜீவனுக்கேதுவான பார்வை உண்டாகிறது. கர்த்தருடைய தாசனாகிய பேதுரு பிறவிச்சப்பாணியை உற்றுப் பார்த்தார். அவனுக்கு ஜீவன் உண்டானது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கூர்ந்து பார்க்கும்போது, அதினால் ஜீவன் உண்டாகும், மரணம் உண்டாகிறதில்லை.

- **செவிகள் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்:**

விருத்தசேதனம் பண்ணப்படாத செவிகளுக்குள் கர்த்தருடைய சுவிசேஷம் நுழைகிறதில்லை. விருத்தசேதனம் பண்ணப்பட்ட செவிக்குள் கேட்கக்கூடிய காரியங்கள் மட்டும் கேட்குமே தவிர வேறொன்றும் அவன் செவியில் ஏறாது. ஆகவே, கர்த்தர்: நான் அவனுடைய செவிகளைத் திறந்தாலும் கேளாதவனைப் போல் இருக்கிறான் என்று சொல்லியிருக்கிறார்.

## 3.5. இராப்போஜனப் பண்டிகையை இரவில் ஆசரிக்க வேண்டும்:

*ஆபிப் மாதத்தைக் கவனித்திருந்து, அதில் உன் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கக்கடவாய்; ஆபிப்மாதத்திலே இராக்காலத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினாரே. (உபாகமம் 16 : 1).*

*கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினதினால், இது அவருக்கென்று முக்கியமாய்*

*ஆசரிக்கத்தக்க ராத்திரியாயிற்று; இஸ்ரவேல் சந்ததியார் எல்லாரும் தங்கள் தலைமுறை தோறும் கர்த்தருக்கு முக்கியமாய் ஆசரிக்கவேண்டிய ராத்திரி இதுவே. (யாத்திராகமம் 12 : 42).*

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் இராக்காலத்தில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். அதனால் இந்த பண்டிகையை இரவில்தான் ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறார். அதுபோலவே, இஸ்ரவேலர் பஸ்கா பண்டிகையை இரவில்தான் ஆசரித்தார்கள்.

*நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.*

*(I கொரிந்தியர் 11 : 23 - 25).*

பவுல் அப்போஸ்தலர் இராப்போஜனம் நடத்த கர்த்தரிடத்திலிருந்து கற்றுக்கொண்டதாகக் கூறினார். அதென்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு என்று மேற்குறிப்பிட்ட வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

*வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான். பின்பு ஏறிப்போய், அப்பம் பிட்டுப் புசித்து,*

*விடியற்காலமளவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து, பின்பு புறப்பட்டான். (அப்போஸ்தலர் 20 : 7, 11).*

இங்கு அப்பம் பிட்டு என்று சொல்லும்போது அது இராப்போஜனத்தைக் குறிக்கிறது. இராப்போஜன ஆராதனையை பிரதான அப்போஸ்தலர்கள், அப்போஸ்தலர்கள், மற்றும் அப்போஸ்தல வகுப்பைச் சேர்ந்த ஊழியக்காரர்கள் தான் நடத்த வேண்டும். அதுவும் இராத்திரி காலத்தில் தான் கடைபிடிக்க வேண்டும். நடுராத்திரிமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துவிட்டு அப்பம்பிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக இராத்திரி காலத்தில் தான் இராப்போஜனத்தை ஆசரிக்கவேண்டும். இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்னவென்றால்: பவுல் அப்போஸ்தலர் இராப்போஜனத்தை இராத்திரி நேரத்தில் தான் ஆசரித்தார் என்பதாகும். ஆகவே இராத்திரிகாலத்தில் தான் இராப்போஜனத்தை ஆசரிக்கவேண்டும்.

*இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே. (I கொரிந்தியர் 11 : 21).*

அதாவது மேற்குறிப்பிட்ட அனுபவங்களுக்கு மாறாக எது பண்ணினாலும் இராப்போஜனம் அல்ல. தங்கள் மனம்போல் நடந்துவிட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் வந்து இராப்போஜனம் என்ற பெயரில் நடக்கிறதான நிகழ்வில் தங்கள் நாவை நீட்டி அப்பத்தை வாங்கிவிட்டு, நாங்களும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்றோம் என்று சொல்லுவார்கள். எந்த அநுபவமும் இல்லாமல் எடுத்துவிட்டு எங்களுக்குத் தினந்தோறும் இராப்போஜனம் இருக்கிறது அல்லது வாரத்திற்கு ஒரு நாள் இருக்கிறது என்று சொல்லுவார்கள்; ஆனால் பகலில் ஆசரித்துவிட்டு இராப்போஜனம் என்பார்கள். அநேக சபைகளில் கால் கழுவுதல்(பாதம் கழுவுதல்) என்ற ஒன்று கிடையாது. அதாவது கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையில் செய்யப்படுகிற அநுபவங்களுக்கு மாறாக செய்யப்படுவது எதுவும் இராப்போஜனம் ஆகாது.

பழைய ஏற்பாட்டின் பஸ்காவை இராத்திரியில் ஆசரிக்கும்படியாகவே கர்த்தர் உறுதியாய்க் கட்டளை

யிட்டிருக்கிறார்; நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் இரவில் தான் அப்பம் பிட்குதலாகிய இராப்போஜனத்தை ஸ்தாபித்தார்; புதிய ஏற்பாட்டின் காலத்திலுள்ள பிரதானமான ஊழியக்காரராகிய பவுல் அப்போஸ்தலரும் இரவில்தான் அப்பம் பிட்குதலாகிய இராப்போஜனத்தை ஆசரித்திருக்கிறார். ஆகவே, ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையாராகிய நாங்களும், கர்த்தருடைய கட்டளையின்படியேயும், தேவதீர்மானத்தின்படியேயும் இந்த இராப்போஜனத்தை இரவில்தான் ஆசரிக்கிறோம்.

## 3.6. யாரை நினைவுகூருவதாக இந்தப் பண்டிகை ஆசரிக்கப்படுகிறது?

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவருடைய மகா பரிசுத்த இரத்தத்தை உலகத்தின் மனுமக்களுக்காக கெத்செமனே தோட்டத்திலிருந்து சென்ற வழியிலெல்லாம் சிந்தினார். அவருடைய பரிசுத்த இரத்தமாகிய புதுஉடன்படிக்கையின் இரத்தம் உலகம் முழுவதிலுமுள்ள பாவிகளுடைய பாவமன்னிப்புக்காகவும் சிந்தப்பட்டது. அவர் இந்த முழுஉலகத்திற்காகவும் மரணத்தை ஏற்றுக்கொண்டார். அவருடைய பரிசுத்த மாம்சம் பிட்கப்பட்டதையும், அவருடைய பரிசுத்த இரத்தம் கெத்செமனேயிலிருந்து கல்வாரிமலை வரையிலும் சிந்திக்கொண்டே இருந்ததை நினைவுகூருவதற்காகவே இராப்போஜனப் பண்டிகை ஆசரிக்கப்படுகிறது. நமது பாவங்களுக்கான பரிகாரத்தை அவர் சிலுவையில் செலுத்தினார் என்பதை இது உறுதிப்படுத்துவதாக உள்ளது.

> *அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப் புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*
>
> *(மத்தேயு 26 : 26 - 28).*

*கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத் தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். (I கொரிந்தியர் 11: 23 -26).*

இவ்விதமாக ஒன்றான மெய்த்தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்களுடைய இருதயத்தில் பதித்து நினைவுகூருகிற வர்களுக்கு அவர் அதிகமான ஆசீர்வாதங்களை அருளிச்செய்கிறார் இந்த இராப்போஜன ஆராதனையில் கர்த்தர் அவருடைய வல்லமையான கிரியையின் மூலமாக, அநேக கோதுமை மணிகளாலான அப்பத்தை அவருடைய மகா பரிசுத்த சரீரமாகவும், புது இரசமாகிய திராட்சரசத்தை அவருடைய மகா பரிசுத்த இரத்தமாகவும் மாற்றி ஆசீர்வதித்துத் தருகிறார்; ஆகவே, I கொரிந்தியர் 11 : 29, 30 ல் சொல்லப்பட்டபடியே அபாத்திரமாய் (தகுதியில்லாமல்) இதில் பங்குபெற்றவர்கள், தீராத வியாதி மற்றும் தீராத பெலவீனத்தால் பிடிக்கப்பட்டார்கள். தகுதியான அநுபவத்தோடு பங்குபெறுகிறவர்கள் அளவில்லாமல் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். ஆகவே யாவரும் தகுதியின் அநுபவத்தோடு இந்த இராப்போஜனத்தை ஆசரித்து, அளவில்லாமல் ஆசீர்வதிக்கப்பட்டு, நித்திய ஜீவனைப் பெற்று பரலோகராஜ்யம் பிரவேசிக்க ஏற்றவர்களாய் காணப்படும்படியாக கர்த்தருடைய நாமத்தில் யாவரையும் அன்பாய் கேட்டுக்கொள்கிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## 4. இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியில்லாதவர்கள்

### 1. அந்நிய புத்திரன்:

*மேலும், கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: பஸ்காவின் நியமமாவது, அந்நிய புத்திரன் ஒருவனும் அதைப் புசிக்கவேண்டாம். (யாத்திராகமம் 12 : 43).*

அந்நியன் என்றால் கர்த்தருடைய உபதேசம், கட்டளைப் பிரமாணங்களுக்கு அந்நியன். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் அந்நியன். இரட்சிக்கப்பட்டும் கர்த்தருடைய உபதேசங்களைக் கைக்கொள்ளாமல் அவைகளை அந்நிய காரியமாக எண்ணிக்கொண்டு நடக்கிறவன் கர்த்தருக்கு அந்நியன். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைக் குறித்த விசுவாசமில்லாமல் அவிசுவாசத்தோடு காணப்படுகிறவன் அந்நியன். கர்த்தர் ஏராளமான ஆசீர்வாதங்களை ஆயத்தம்பண்ணியும் அவைகளை பெற்றுக்கொள்ள நிலையற்று ஆசீர்வாதத்திற்கு அபாத்திரமாய் காணப்படுகிறவர்கள் கர்த்தருக்கு அந்நியர்கள். இப்படிப்பட்டவர்கள் இதில் புசிக்கக்கூடாது. கர்த்தர் ஒவ்வொரு சமயத்திலும் அருளிச்செய்கிற ஆசீர்வாதங்களை அடைந்து நிறைவான ஆசீர்வாதங்களோடு காணப்படுகிறவர்களே கர்த்தருக்குச் சொந்தமானவர்கள். அவர்களே இந்த இராப்போஜன பந்தியில் பங்குபெறத் தகுதியானவர்கள்.

### 2. கூலியாள்:

*அந்நியனும் கூலியாளும் அதிலே புசிக்கவேண்டாம்.*
*(யாத்திராகமம் 12 : 45).*

கூலியாள் என்றால் ஒருமுறை தேவனுடைய ஈவுகளை ருசிபார்த்தும், பின்பு பரலோகராஜ்யத்தையும் தேவனுடைய மகிமையான பாக்கியங்களையும் மறந்து உலகத்திற்காக மாத்திரம் பிழைக்கிறவர்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்ட ஆரம்பத்தில் எப்பொழுதும் பரலோகராஜ்யத்தைக் குறித்த வாஞ்சையோடு, அந்த சந்தோஷத்தோடே காணப்படுவார்கள். சிலகாலம் கழியும்போது தங்களுக்குள் காணப்பட்டதான பரலோகத்தின் சந்தோஷத்தை

தங்கள் பாவத்தினால் இழந்துபோனதால், பின்பு பரலோக ராஜ்யத்தையே மறந்து உலகத்தையும் அனுபவிக்கவேண்டும். இரட்சிக்கப்பட்டவன் என்று சொல்லிக்கொள்ளவும் வேண்டும் என்றதான நிலைமையோடு காணப்படுகிறவர்கள்தான் கூலியாள். இவர்களுடைய நிலைமை மற்ற எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதாபமான நிலைமை என்று வேதம் சொல்லுகிறது.

*இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.*
*(I கொரிந்தியர் 15 : 19).*

மற்ற எல்லா மனுஷரைப் பார்க்கிலும் என்றால் பாவிகளும், துஷ்டர்களும், துன்மார்க்கர்களுமாகிய ஜனங்களைப் பார்க்கிலும் என்பதாகும். இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லிக்கொண்டு, உலக நன்மைகளுக்காக மாத்திரம் கிறிஸ்துவை நம்பி ஜீவிக்கிறதான ஜனங்களுடைய நிலைமை மிகவும் பரிதாபமாக இருக்கும்.

### 3. விருத்தசேதனமில்லாதவர்கள்:

*அந்நியன் ஒருவன் உன்னிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று இருந்தால், அவனைச் சேர்ந்த ஆண்பிள்ளைகள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; பின்பு அவன் சேர்ந்து அதை ஆசரிக்கவேண்டும்; அவன் சுதேசியைப்போல் இருப்பான்; விருத்தசேதனம் இல்லாத ஒருவனும் அதில் புசிக்கவேண்டாம்.*
*(யாத்திராகமம் 12 : 48).*

விருத்தசேதனமில்லாதவர்கள் தேவனுடைய பயங்கரமான கடுங்கோபத்திற்கு ஏற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் கண்களாலும், நாவினாலும், இருதயத்தினாலும் செய்கிற கிரியைகள் பயங்கரமான தேவகோபத்திற்கேற்றவை. பழைய ஏற்பாட்டின் காலத்தில் கையால் செய்யப்பட்டதான விருத்தசேதனமுடையவர்கள் தான் பஸ்காவை ஆசரிக்க வேண்டும். அந்த விருத்தசேதனம்

ஆண்களுக்கு மட்டும் உரியது. புதிய ஏற்பாட்டின் காலத்தில் கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை கர்த்தர் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். அது எப்படியென்றால், பாவ சரீரத்தை களைந்து, பரிசுத்தமான புதிதான ஒரு மனுஷனாக மாற்றப்பட்ட அநுபவமே இந்த விருத்தசேதனம் என்பதாகும். இந்த விருத்தசேதனத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் இராப்போஜனம் பண்ண தகுதியில்லாதவர்கள்.

## 5. இராப்போஜனத்தை அசட்டைப்பண்ணாதீர்கள்

*என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். (யோவான் 6 : 54).*

நாம் இந்த உலக வாழ்க்கையை முடிக்கும்போது நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே பிரயாசப் படுகிறோம். நாம் கிறிஸ்தவர்களாய் இருப்பதால் அநேகவிதமான நெருக்கங்கள் வந்திருந்தும் கிறிஸ்துவை உறுதியாய் பற்றிக்கொண்டு நித்தியஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்காக பிரயாசப்படுகிறோம். ஆனால் நித்தியஜீவனை யார் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பதை தேவன் தெளிவாக அறிவித்திருக்கிறார். அநேகர் இராப்போஜனம் என்றால் எளிதாக அசட்டைபண்ணி விடுகிறார்கள். இரட்சிக்கப்பட்ட மனுஷன் அந்த இரட்சிப்பின் அநுபவத்தில் நிலைநின்று இராப்போஜனத்தில் பங்குபெற வேண்டும். இராப்போஜனத்தில் பங்குபெற்று இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை உட்கொண்டு அவருடைய இரத்தத்தை பானம்பண்ணுகிற மனுஷனுக்கு நித்தியஜீவன் உண்டென்று தேவன் வாக்குப் பண்ணியிருக்கிறார். அப்படியானால் அதை அசட்டைபண்ணுகிறவர்களுக்கு நித்தியஜீவன் கிடையாது. இரட்சிக்கப்பட்டு பரிசுத்தவான் என்ற நிலையை அடைந்த மனுஷன் இயேசுகிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிக்க தகுதியுள்ளவனாகிறான். அவருடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுகிற மனுஷனுக்குள் நித்தியஜீவனுக்குரிய சகல அநுபவங்களும் அமைந்திருக்கும். முடிவில் அவன் நித்தியஜீவனாகிய பரலோக ராஜ்யத்தையும் சுதந்தரித்துக்கொள்வான். அப்படியானால் இராப்போஜனத்தைக் குறித்து நாம் எவ்வளவு கருத்தாய் இருந்து அந்த அநுபவத்தை கர்த்தரிடம் கேட்டு சொந்தமாக்கி அதில் பங்குபெற வேண்டும் என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

*இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அதை ஆசரிக்கக்கடவர்கள். (யாத்திராகமம் 12 : 47).*

இராப்போஜனம் என்பது இரட்சிக்கப்பட்ட சபையாருக்குரியது. ஆனால் மிகவும் சொற்பமான ஜனங்களே அதில் பங்குபெறு கிறார்கள். அநேகர் தங்களுக்குத் தாங்களே பல தடைகளை உருவாக்கி அதில் பங்குபெறாமல் இருக்கிறார்கள். அப்படியிருந்து கொண்டும் முடிவிலே பரலோகராஜ்யம் போய்விடலாம் என்று நினைத்து தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறார்கள். அநேகர் இராப்போஜனத்தில் பங்குபெறக்கூடிய அநுபவம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த அநுபவத்தை கொடுக்கக்கூடிய தேவன் தங்கள் முன் இருந்தும் அவரைக் குறித்த விசுவாசம் இல்லை. அப்படிப்பட்டவர்களின் இருதயம் உலகத்தை அநுபவிக்க வேண்டுமென்று விரும்புவதால் அவர்கள் இருதயம் சகல பாவ இச்சைகளாலும் நிறைந்திருக்கிறது. நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் கர்த்தருடைய விடுதலையை பெறவேண்டும் என்று முயற்சி பண்ணும்போது அவர் விடுவிக்கிறவராக இருக்கிறார். மீனின் மேல் இருக்கிற செதிலை நாம் எடுத்துப்போடுவது போல விடுதலையை அடைந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு கர்த்தர் இரங்குகிறவராக இருக்கிறார். நம்மை விடுவிப்பதற்காக நமக்காக திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கிறது.

> *அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும். (சகரியா 13 : 1).*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாடுபட்டு மரித்தபின் நம் பாவ அழுக்கை நீக்க நமக்காக ஒரு ஊற்று உண்டாயிருக்கிறது. நாம் முழங்காலில் நின்று அந்த ஊற்றினால் உண்டாக்கப்பட்டிருக்கிற விடுதலைகளை சொந்தமாக்கிக் கொள்வதற்காகவும், அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப் படுவதற்காகவும் அவரை நோக்கி ஜெபம்பண்ணவேண்டும். இவ்விதமாக நாம் பிரயாசப்படும்போது தேவன் நிச்சயமாகவே சுத்திகரிக்கப்பட்ட அநுபவத்தை தருகிறவராக இருக்கிறார். ஆனால் கொடுக்கப்படுகிற உபதேசங்களுக்குக் கீழ்ப்படியாமலும், அநுபவங்களை அடைய பிரயாசப்படாமலும் இருந்துகொண்டு இராப்போஜனத்தில் பங்குபெற தகுதியில்லை என்பதாக சொல்லிக்

கொண்டே இருந்தால் தகுதியின் அநுபவத்தை அடைந்து கொள்ளவும் முடிகிறதில்லை; பரலோகராஜ்யம் போகவும் முடிகிறதில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து கர்த்தரால் தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டதான கானான் தேசத்திற்கு நேராகப் பிரயாணம் பண்ணும்போது கர்த்தர் மோசேயை நோக்கி: அவர்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாக பன்னிரண்டு பேரை அனுப்பும்படி கட்டளையிட்டார். அந்த பன்னிரண்டு பேரும் கானான் தேசத்தை சுற்றிப்பார்த்து அங்குள்ள கனிகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தார்கள். அதில் பத்து பேர் தாங்கள் போய்வந்த அந்த தேசத்தைக் குறித்து இஸ்ரவேல் சபையாரிடம் துர்ச்செய்தி பரப்பினார்கள். அதைக் கேட்டு ஜனங்கள் எல்லாரும் கூக்குரலிட்டார்கள். மேலும் அவர்கள் வேறொரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்குத் திரும்பிப்போவோம் என்றும் சொன்னார்கள். தேசத்தைச் சுற்றிப்பார்க்கப் போனவர்களில் யோசுவாவும் காலேபும் அந்த தேசத்தைக் குறித்த உண்மையான செய்தியை அறிவித்தபோது இஸ்ரவேல் சபையார் அவர்களைக் கல்லெறியப் பார்த்தார்கள். கர்த்தர் அவர்கள் மத்தியில் அநேக அடையாளங்களையும் அதிசயமான காரியங்களையும் செய்திருந்தும் அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. ஆகவே கர்த்தரைப் பரீட்சைப் பார்த்ததான இஸ்ரவேல் சபையார், கர்த்தரால் அவர்களுக்கென்று வாக்குப்பண்ணப்பட்டதான கானானுக்குள் பிரவேசிப்பதில்லை என்று கர்த்தர் அறிவித்தார். (எண்ணாகமம் 13;14 அதிகாரங்கள் வாசிக்க).

நமக்கும் பரம கானானாகிய பரலோகராஜ்யம் கர்த்தரால் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் இஸ்ரவேல் சபையார் கர்த்தரை விசுவாசியாதது போல இக்காலத்திலும் இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லுகிற அநேகருக்கு விசுவாசம் என்பதே இல்லை. தாங்கள் இரட்சிக்கப்படுவது வரையிலும் கர்த்தருக்கு விரோதமாகச் செய்த எல்லா துரோகங்களையும் அநியாயங்களையும் ஒரு நொடிப் பொழுதில் கிருபையாய் மன்னித்த

தேவன், தாங்கள் இரட்சிக்கப்பட்ட பின்பு தங்கள் ஜீவியத்தில் வந்த சகல பாவ அசுத்தங்களையும் மன்னிப்பார் என்ற விசுவாசம் இல்லை. இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தது போல அநேகர், நான் ஜெபம்பண்ணியும் எனக்கு விடுதலை கிடைக்கவில்லை என்று முறுமுறுக்கிறார்கள். இது பயங்கரமான அக்கிரமம் ஆகும். எந்த மனுஷனானாலும் தன் பாவங்களை அறிக்கைப்பண்ணினால் அவனுக்கு விடுதலை உண்டு என்றும், அவர்களை பரம கானானுக்குள் கொண்டு சேர்ப்பேன் என்றும் கர்த்தர் உடன்படிக்கைபண்ணி, அதினிமித்தம் நமக்காகப் பாடுபட்டு புது உடன்படிக்கையின் இரத்தத்தையும் சிந்தியிருக்கிறார். என்றாலும் அநேகருடைய அவிசுவாசத்தினால் அந்த இரத்தம் அவர்களைக் கழுவி சுத்திகரிக்க இடமில்லாமல் போகிறது. ஆகவே அவர் பண்ணின உடன்படிக்கைக்கு மாறுதல் உண்டாகிறது. அந்த மாறுதல் எப்படியென்றால் இரட்சிக்கப்படாதவர்களுக்கு இருக்கிற சமாதானம் கூட இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லுகிறவர்களுக்கு இருக்காது.

இஸ்ரவேல் ஜனங்களுக்குள் துர்ச்செய்தியை பரப்பினதான பத்து பிரபுக்களாகிய வாலிபர்களும் வாதையினால் கொல்லப்பட்டார்கள். இஸ்ரவேலர் துர்ச்செய்தியை நம்பினதால் அவர்களுக்குள் அவிசுவாசம் உண்டானது. அதையும் வைத்துக்கொண்டு நாங்களும் வாக்குப்பண்ணப்பட்ட கானானுக்குள் போவோம் என்று தங்கள் மாம்ச பலத்தினால் சொன்னார்கள். இக்காலத்திலும் அதுபோல் அநேகர் அவிசுவாசமாகிய பாவத்தையும் வைத்துக்கொண்டு, கர்த்தரிடம் குற்றங்களை அறிக்கைபண்ணி விடுதலையடைய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் மாம்ச பெலத்தால் நாங்களும் பரலோகம் போவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் போகமுடியாது. அப்படிப்பட்டவர்களுடன் கர்த்தர் கூட இருக்க மாட்டார். இஸ்ரவேல் ஜனங்களில் கர்த்தரைப் பரீட்சை பார்த்தவர்கள் ஒருவரும் கானானுக்குள் போகமாட்டார்கள் என்று தேவன் சொன்னபடி அவர்களால் போகமுடியவில்லை. நமக்கும் தேவன் இந்த இராப்போஜனத்தை ஆயத்தம்பண்ணித் தந்து, இந்தப் பந்தியில் பங்குபெற ஏற்ற அநுபவத்தோடு காணப்படுகிறவர்களுக்கு நித்தியஜீவன் உண்டு; அவர்களைக் கடைசி நாளில் எழுப்புவேன்

என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆகவே இஸ்ரவேல் ஜனங்களைப் போல மாம்ச பெலத்தால் பிரயாசப்படாமல், கர்த்தருக்கு முன்பாக நம்மை அருவருத்து வெறுத்து, எனக்கும் கர்த்தர் இந்த இராப்போஜனத்தில் பங்குபெறுவதற்கேற்ற அநுபவத்தை தருவார் என்று விசுவாசித்து அதற்காக ஜெபம்பண்ணும்போது கர்த்தர் அதற்கேற்ற அநுபவங்களைத் தந்து இராப்போஜனப் பந்தியில் பங்குபெறவும் கிருபை செய்கிறவராக இருக்கிறார்.

## 6. தசமபாகம் காணிக்கை செலுத்துவது

இது அப்போஸ்தல உபதேசத்தில் ஒரு பகுதி ஆகும். தசமபாகம் காணிக்கைகளைக் குறித்து அநேக வசனங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. லேவியராகமம் 27:26; நீதிமொழிகள் 3:9.

தசமபாகத்தை செலுத்தாவிடில் 5 வகையான பாவங்கள் ஏற்படுகிறது.

- கர்த்தருடைய கட்டளையை மீறுகிறதான பாவம்.
- தேவனை விட்டு தூரம் போகிற அநுபவம்
- தேவனை வஞ்சிக்கிறதான பாவம்
- சாபத்தை வருவிக்கும் தன்மை
- தசமபாக காணிக்கை என்பது கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு ஆகாரமாக கர்த்தரால் ஒதுக்கப்பட்டது. அதைப் பறித்துக் கொள்ளுதலாகிய பாவம்.

தசமபாகம் என்பது பத்தில் ஒருபங்கு ஆகும். நிலத்தின் வரத்திலும், விருட்சங்களின் கனியிலும், ஆடு மாடுகளிலும் மற்றும் தனக்கு உள்ள எல்லாவற்றிலும், தான் சம்பாதிக்கும் எல்லா பலனிலும் தசமபாகம் கர்த்தருடையது. அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது. அதை நாம் கர்த்தருக்கென்று அவருடைய ஊழியக்காரர்களிடத்தில், அவருடைய பரிசுத்த ஆலயத்தில் செலுத்தவேண்டும்.

> *அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். (I கொரிந்தியர் 9 : 14).*

வேலை செய்கிறவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுவதுபோல, சுவிசேஷத்தை அறிவிக்கிற கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்குத் தசமபாகத்தை சுதந்திர சம்பளமாகக் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். ஆகவே தசமபாகம் கட்டாயமாக சபையார் கொடுக்கவேண்டும். தேவனுடையதை தேவனுக்குச் செலுத்துகிறவர்களாய்க் காணப்பட்டால், ஏராளமான ஆசீர்வாதங்கள் உண்டாகும்.

*அப்படியிருந்தும், சகோதரரே, புறஜாதியாராகிய பலி பரிசுத்தஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதிகளுக்கு இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும்பொருட்டு, தேவன் எனக்கு அளித்த கிருபையினாலே உங்களுக்கு ஞாபகப்படுத்தும்படிக்கு இவைகளை நான் அதிக தைரியமாய் எழுதினேன். (ரோமர் 15 : 15,16).*

பழைய ஏற்பாட்டின் காலத்தில் காணப்பட்ட ஆசாரியர்கள் ஆடுமாடுகளை பலிசெலுத்தும் ஊழியத்தை உடைய ஆசாரியர்கள். புதிய ஏற்பாட்டின் காலத்திலுள்ள ஊழியக்காரர்கள், கர்த்தருடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஊழியக்காரர்கள்.

### 1. தசமபாகம் செலுத்தாமல் இருப்பது தேவனை வஞ்சிப்பது:

*மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதா யிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

*(மல்கியா 3 : 8 - 12).*

கர்த்தருக்குச் செலுத்தவேண்டியதைச் செலுத்தாதிருக்கும்போது ஒருபக்கம் வருமானம் வந்துகொண்டிருந்தாலும், ஒருபக்கம் கஷ்டமும் தரித்திரமுமாக இருக்கும். ஆனால் இந்த வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும்போது ஆசீர்வாதம் பெருகும். தானியங்களை எந்த பூச்சியும் அழிக்காதபடி பூச்சிகளைக் கர்த்தர் கண்டிப்பார், அவைகள் தொடமுடியாது. அப்பொழுது எல்லா ஜாதிகளும் பாக்கியவான்கள் என்பார்கள், தேசமும் இவர்களை விரும்பும். தசமபாகம் செலுத்தாதவர்கள் கர்த்தரைவிட்டுத் தூரம்போனவர்களாய்க் காணப்படுகிறார்கள். அவர்களுக்கும் கர்த்தருக்கும் எந்தவித ஐக்கியமும் கிடையாது. இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது, அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்புகிறார்கள், கர்த்தரும் அவர்களிடத்தில் திரும்புவதாகச் சொல்லியிருக்கிறார்.

## 2. தசமபாகம் செலுத்தியதால் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு சாட்சி:

ஒரு குடும்பத்தில் கடனின்மேல் கடன், கஷ்டத்தின்மேல் கஷ்டம், நிலைநிற்கமுடியாத அளவு ஏற்பட்டது. அப்பொழுது ஒரு கர்த்தருடைய ஊழியக்காரர், அந்த வீட்டிலுள்ள மனுஷனிடம்: நீ கடன்பட காரணம் என்னவென்று தெரியுமா? நீ கர்த்தரை வஞ்சித்தாய்; ஆகவே, நீ கர்த்தரிடத்தில் கடன்பட்டிருக்கிறதினால் மனுஷரிடத்திலும் கடன்பட்டிருக்கிறாய் என்று சொன்னார்; அது என்ன என்று அந்த மனுஷன் கேட்டபோது, உன்னுடைய சகல வருமானத்திலும் பத்தில் ஒருபங்கு கர்த்தருடையது; அதை நீ செலுத்தாமல் கர்த்தரை வஞ்சித்ததால் ஆசீர்வாதத்திற்குப் பதிலாக உனக்குச் சாபம் ஏற்பட்டிருக்கிறது என்றும், நீ கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து, கர்த்தருக்குச் செலுத்தவேண்டியதை செலுத்து என்றும் உபதேசம் பண்ணினார். முதலாவது அந்த மனுஷன் பயந்து, நான் இப்படி கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கும்போது, இனி பத்தில் ஒன்று கொடுத்தால் அதிகம் கஷ்டப்படவேண்டியது வந்துவிடுமே என்று நினைத்தான். அதன்பின், கர்த்தருடைய வசனம் மகா சத்தியம் தானே, இது பைபிளிலுள்ள வார்த்தையும்தானே என்று உணர்ந்து, முதலாவது தன்னுடைய கஷ்டத்தோடு, சகல வருமானத்திலும் பத்தில் ஒன்று கொடுக்க ஆரம்பித்தான்; அதன்பின் அவன் கையிட்டுச் செய்யும்

வேலைகள் எல்லாவற்றிலும் அளவில்லாத ஆசீர்வாதம் பெருகி, திடீரென கடனும் தீர்ந்து, உலகப்பிரகாரமாக அளவில்லாமல் ஆசீர்வதிக்கப்பட்டான்.

## 3. முதற்பலன்கள் கர்த்தருடையது:

*சகலவித முதற்கனிகளில் எல்லா முந்தின பலனும், நீங்கள் காணிக்கையாய்ச் செலுத்தும் எவ்விதமான பொருள்களும் ஆசாரியர்களுடையதாயிருப்பதாக; உங்கள் வீட்டில் ஆசீர்வாதம் தங்கும்படிக்கு நீங்கள் பிசைந்தமாவில் முதற்பாகத்தையும் ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவீர்கள். (எசேக்கியேல் 44 : 30).*

இஸ்ரவேல் ஜனங்களுக்கு கோதுமை பிரதானமான தானியம். அதை அவர்கள் மாவாக்கி அப்பமாகச் செய்வார்கள். நம் நாட்டில் முக்கியமான ஆகாரம், அரிசி போட்டு சோறு பொங்குவது. இஸ்ரவேல் ஜனங்கள் பிசைந்த மாவில் முதற்பலனை ஆசாரியனுக்குக் காணிக்கையாகச் செலுத்துவதுபோல, நாம் தினமும் சமையலுக்குப் பயன்படுத்தும் அரிசியிலிருந்து எடுத்து காணிக்கையாகச் செலுத்தவேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் இவ்விதமாக பிடி அரிசி காணிக்கைச் செலுத்தி, இதன்மூலம் தங்கள் வீடுகளில் ஆசீர்வாதம் தங்கும் என்று அறிந்திருக்கிறார்கள். இவ்விதமாக முதற்பலனை கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்குக் கொடுப்பதினால் விசேஷமான ஆசீர்வாதம் வீட்டில் தங்கும். மனவருத்தத்தோடு கர்த்தருக்குக் கொடுப்பதினால் அதிகக்கேடு உண்டாகும்; ஆகவே, அப்படி கொடுப்பதைவிட கொடுக்காமல் இருப்பது நல்லது. கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்கிறவர்கள் சந்தோஷமாய்க் கொடுக்கிறார்கள். உன் பொருளாலும் விளைவின் எல்லா முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். கர்த்தரைக் கனம்பண்ணுகிறவர்களுடைய களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்.

*தலையீற்றானவைகள் கர்த்தருடையது, ஆகையால் ஒருவரும் தலையீற்றாகிய மிருகஜீவனைப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொள்ளலாகாது; அது மாடானாலும் ஆடானாலும்*

*கர்த்தருடையது. தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும், தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது. ஒருவன் தன் தசமபாகத்திலே எவ்வளவாவது மீட்டுக்கொள்ள மனதாயிருந்தானானால், அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கக்கடவன். கோலின் கீழ்ப்பட்ட ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது. அது நல்லதோ இளப்பமானதோ என்று அவன் பார்க்கவேண்டாம்; அதை மாற்றவும் வேண்டாம்; மாற்றினால், அதுவும் அதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டதுமாகிய இரண்டும் பரிசுத்தமாகும்; அது மீட்கப்படக்கூடாதென்று அவர்களோடே சொல் என்றார். (லேவியராகமம் 27 : 26, 30 - 33).*

தலையீற்று (முதலில் பிறந்தது) கர்த்தருடையது. அதை நேர்ந்துகொள்ளக்கூடாது. தசமபாகத்தில் கொஞ்சத்தை எடுத்துச் செலவுசெய்ய விரும்பினால் அதனுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக்கொடுக்க வேண்டுமாம். அதாவது இரண்டாகக் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

இஸ்ரவேல் ஜனங்கள் இவ்விதமான கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, விசேஷமான காணிக்கைகளைச் செலுத்தினது மட்டுமல்லாமல், ஆசாரியர்களுடைய பரிசுத்த வஸ்திரங்களுக்குத் தேவையானவைகளையும் செலுத்தினார்கள். மனப்பூர்வமுள்ள ஸ்திரீகள் புருஷர் யாவரும் தங்களிடமிருந்த விலையுயர்ந்த பொருட்கள், ஆபரணங்கள், விலையுயர்ந்த இரத்தாம்பரநூல்கள் மற்றும் வெள்ளி, வெண்கலம், மரம் ஆகியவற்றையும் தங்கள் திராணிக்குத்தக்கதாக மனப்பூர்வமாய்க் கொடுத்தார்கள். ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் தேவாலய வேலைகளில் தங்களால் முடிந்த அளவு உதவிகளைச் செய்தார்கள். மேலும் அவர்கள் தேவாலயக் கட்டுமானப் பணிக்காகவும், மறுசீரமைப்புப் பணிக்காகவும் மனப்பூர்வமாய் காணிக்கைகளைக் கொடுத்தார்கள்.அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்ததால் கர்த்தர் அவர்களை அளவில்லாமல் ஆசீர்வதித்தார்.

## 4. எசேக்கியா ராஜாவின் காணிக்கை:

*ராஜா கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிற படியே அந்திசந்திகளில் செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும், ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் பண்டிகைகளிலும் செலுத்தவேண்டிய சர்வாங்கதகன பலிகளுக்கும் தன் ஆஸ்தியிலிருந்தெடுத்துத் தன் பங்கைக் கொடுத்தான். ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை உற்சாகமாய்க் கைக்கொள்ளும்படி, அவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கட்டளையிட்டான். இந்த வார்த்தை பிரசித்தமானபோது, இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும், திராட்சரசத்திலும், எண்ணெயிலும், தேனிலும், நிலத்தின் எல்லா வரத்திலும் முதற்பலன்களைத் திரளாகக் கொண்டுவந்து, சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுத்தார்கள். யூதாவின் பட்டணங்களில் குடியிருந்த இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும், மாடுகளிலும் ஆடுகளிலும் தசமபாகத்தையும், தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தம்பண்ணப்பட்டவைகளில் தசம பாகத்தையும் கொண்டுவந்து குவியல் குவியலாக வைத்தார்கள். மூன்றாம் மாதத்தில் குவியல் செய்யத்தொடங்கி ஏழாம் மாதத்தில் முடித்தார்கள். எசேக்கியாவும் பிரபுக்களும் வந்து, அந்தக் குவியல்களைக் காணும்போது, கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலைப் புகழ்ந்தார்கள். அந்தக் குவியல்களைக் குறித்து எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் விசாரித்தபோது, சாதோக்கின் சந்ததியானாகிய அசரியா என்னும் பிரதான ஆசாரியன் அவனை நோக்கி: இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரத் தொடங்கினதுமுதல் நாங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தோம்; இன்னும் மிச்சமும் இருக்கிறது; கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்றான்.*

*அப்பொழுது எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னான்.*
*(II நாளாகமம் 31 : 3 - 11).*

யூதா ஜனங்கள், தாங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமல் முடங்கிக் கிடந்த காணிக்கைகளையெல்லாம், உண்மையாகச் செலுத்தினார்கள்.

*இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம். (I நாளாகமம் 29 : 14).*

ஆகவே, மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதினால் இராப்போஜனத்தில் பங்குபெற தகுதி உண்டாவது மட்டுமல்ல, அது அதிக ஆசீர்வாதத்திற்கேற்றதாகும்.

## 5. யாருடைய காணிக்கை அங்கிகரிக்கப்படும்:

*வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். கொலைசெய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. (மத்தேயு 5 : 20 - 24).*

காரணமில்லாமல் சகோதரனிடம் கோபப்படக்கூடாது. ஒருவருக்கொருவர் மனக்கசப்புகள் இருந்தால் அவர்களிடம் மன்னிப்பு எடுக்கவேண்டும். அக்கிரமத்தோடே நாம் காணிக்கை செலுத்தினால் அது வீண்காணிக்கை ஆகிவிடும். நாம் காணிக்கை செலுத்த வரும்போது, நமக்கு மனக்கசப்பு உள்ளவர்களிடம்போய் ஒப்புரவாகிவிட்டு வந்து காணிக்கை செலுத்தவேண்டும். நம் இருதயத்தில் அக்கிரம சிந்தை இருந்தாலும், அதை தேவனிடத்தில் அறிக்கைபண்ணி, அவற்றிலிருந்து விடுதலைபெற்று தேவனோடு ஒப்புரவாகி, பின்பு காணிக்கை செலுத்தவேண்டும். அப்பொழுது நம் காணிக்கைகள் தேவனால் அங்கீகரிக்கப்படும்.

இப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் அநுபவங்களை உடையவர்கள் இராப்போஜனம் பண்ண தகுதியானவர்கள். மேற்கூறிய அநுபவங்களில் ஏதாவது குறைவுபட்டிருந்தால் ஜெபம்பண்ணி அநுபவங்களைச் சொந்தமாக்கிக் கொண்டு இராப்போஜனத்தில் பங்குபெற வேண்டும். கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## எமது பிற வெளியீடுகள்

*******

1. மரணத்துக்குப்பின்...

2. மனுஷருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது பாவம்.

3. ஒன்றே குலம்! ஒருவரே தேவன்!!

4. கிறிஸ்தவப் பண்டிகைகளைக் கொண்டாடுவது பாவமல்ல.

5. **One GOD!! One People!! An Invaluable Compendium Of GOD's Secrets.**